ஸ்ரீ:

# ஆழ்வார்கள் காலநிலை

[முதற்பகுதி]

சென்னை யூனிவர்ஸிடி
தமிழ் லெக்ஸிகா ஆபீஸ் தலைமைப்பண்டிதர்
இராமநாதபுரம்
மு. இராகவையங்கார்
எழுதியது

[தமிழர் கல்விச்சங்கப் பிரசுரம்]

சென்னை
லா ஜர்னல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1929

[விலை ரூ. 1—4—0]

6A95a

# பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| நான்முகம் ... ... ... | 1—22 |
| முதலாழ்வார்கள் ... ... ... | 23—33 |
| திருமழிசையாழ்வார் ... ... | 34—53 |
| பெரியாழ்வார் ... ... ... | 53—74 |
| ஸ்ரீ ஆண்டாள் ... ... ... | 74—94 |
| திருமங்கைமன்னன் ... ... | 94—170 |
| தொண்டரடியாழ்வார் ... ... | 171—174 |
| திருப்பாணாழ்வார் ... ... ... | 175—176 |
| குலசேகரப் பெருமாள் ... ... | 177—200 |

ஸ்ரீ:

# முகவுரை

மதுரைமாநகரில் 1926ஆு பிப்ரவரியில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரும் 'ஒய்.-யெம்.-ஸி.-ஏ.' சங்கத்தாரும் சேர்ந்து நடத்திவந்த உபந்நியாசத் தொடர்களிலே—மதுரைப் பிரபலவக்கீல் ஸ்ரீமாந்: எஸ். சேஷ ஐயங்கார் அவர்கள், M. L. A., தலைமையின்கீழ் ஆழ்வார்கள் காலநிலை என்ற விஷயம் என்னால் உபந்நியசிக்கப்பெற்றது. அப்போது யான் கூறியவை யாவும் அச்சில் வெளிவருவதை அன்பர் பலரும் விரும்பினமையின், மயிலாப்பூர்த் தமிழர் கல்விச்சங்கத்தில் நடைபெறும் தமிழர்நேசன் பத்திரிகையில் முறையே அவற்றை எழுதிவெளியிட்டு வரலானேன். அவ்வுபந்நியாசப்பிரதி பெறவிரும்பிய பலரும் அடுத்தடுத்து எனக்கு எழுதி வருகின்றமையால் புதிய திருத்தங்களும் கீழ்க்குறிப்புக்களுமிட்டுக் குலசேகரப்பெருமாள்சரிதம் முடியவுள்ள பாகத்தை ஆழ்வார்கள் காலநிலையின் முதற் பகுதியாக இப்போது வெளியிடுகின்றேன். இந்நூலைத் "தமிழர் கல்விச்சங்கப்" பிரசுரங்களுள் ஒன்றாகக்கொண்டு அச்சுக்குரியவற்றை யெல்லாம் அன்புடன்செய்து உதவியவர்—அக்கல்விச் சங்கத்தின் காரியதரிசியும் சென்னை அட்வொகேட்டுகளுள் ஒருவருமான நண்பர்: ஸ்ரீமாந் பி. என். அப்புஸாமி ஐயரவர்கள் பி. ஏ., பி. எல். இவர்கள் பேருதவி என்னால் என்றும் மறக்கற்பாலதன்று. இந்நூலின் இரண்டாம் பகுதியையும் ஞானபரிபூர்ணர்களான ஆழ்வார்கள் திருவருளை முன்னிட்டு விரைந்து முடிக்கக் கருதியுள்ளேன்.

திருவல்லிக்கேணி,
13—2—1929.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

ஸ்ரீ

# ஆழ்வார்கள் காலநிலை.

இன்று உபந்யசிக்கும்படி இச்சங்கத்தாரால் எனக்கு நியமிக்கப்பெற்ற விஷயம் "ஆழ்வார்கள் காலநிலை" என்பது. அவதார புருஷர்களும் ஞானபரிபூரணர்களுமான பழைய திருமாலடியார்களைப்பற்றிப் பேசும்படி நான் நியமிக்கப் பெற்றது எனது பெரும்பேறேயாகும். அப்பேற்றை நான் பெறினும் அப்பெரியார்களுடைய மாட்சிகளை அறிஞர்களான நீங்கள் மதிக்கும்படி உபந்யசிக்கக்கூடிய திறமை என்னிடஞ் சிறிதுமில்லை. ஆயினும், உங்கள் நியமனப்படி நான் கூறப்புகும் சிறுவார்த்தைகளும் அப்பெரியாரைப் பற்றியனவே யாதலால், எவ்வகையும் நீங்கள் அவற்றை விருப்பாய் ஏற்றுக் கொள்வீர்களென்ற உறுதியுடன் தெரிந்த சிலவற்றை கூறத்தொடங்குகின்றேன்.

இன்று உபந்யசிக்கப் புகும் 'ஆழ்வார்கள் காலநிலை' என்ற விஷயத்தில், அவர்கள் வாழ்ந்த காலங்கள் இன்னவென்பதையும் அக்காலத்து வைணவசமயமிருந்த நிலைமை இன்னதென்பதையும் விளக்க விரும்புகிறேன். இவற்றைக் கூறப் புகுமுன், அவ்வாழ்வார்கள்காலநிலைக்குக் காரணமாயமைந்த முன்செய்திகளையும், அப்பெரியார் புரிந்த திருத்தொண்டுகளின் காரியமான நிகழ்ச்சிகளையும் நாம் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும். ஆதலால் நான் இன்று எடுத்துக்கொண்ட விஷயத்தை (1) ஆழ்வார்கள் காலத்துக்கு முன்னிருந்த தென்னாட்டு வைஷ்ணவநிலை, (2) அவர்கள் காலத்துவிளங்கிய நிலை, (3) அவர்கட்குப் பின் இருந்த நிலை என்ற மூன்று பகுதிகளாக வகுத்துக்கொண்டு கூறுவேன்.

## i ஆழ்வார்கள் காலத்துக்கு முன்னிருந்த வைஷ்ணவசமயநிலை.

பழமை பெருமைகள் வாய்ந்த இப் பரதகண்டத்தில் அநாதியாக நிலைபெற்றுள்ள மதங்களிலே, திருமால் சமயமும் ஒன்றென்பதற்கு, வைதவேதாங்கங்களும் இதிகாச புராணாதிகளுமே தக்க சான்றாக உள்ளன. இதனை விரித்து விளக்கற்குரிய வடமொழிதென்மொழி நூல்கள் மிகுதியாக உள்ளமையால், அதுபற்றி நாம் ஆராய வேண்டியதில்லை. அதனால்,வடவேங்கடம் தென்குமரிக் கிடைபட்ட தமிழ் நாட்டில் வைஷ்ணவசமயத்தின் பூர்வநிலைமை எத்தகைய தென்பதே இங்கு நோக்கற்குரியது. தென்னாட்டின் சமய சரித்திரங்களை நீள ஆராய்ந்து செல்லுமிடத்து திருமாலைப் பரதெய்வமாகக் கொண்டு வழிபட்டுவருங் கொள்கை, அந் நாட்டு மக்கள் தோன்றிய காலத்திலேயே உடன்தோன்றியது என்ற முடிபு பெறப்படத் தடையில்லை. முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று நான்காகப் பகுத்துக் கொண்டு இஞ்ஞாலத்துக்குத் தமிழர் நானிலம் என்ற பெயரை இட்டு வழங்கியபோதே, திருமால் வணக்கமும் இங்கு உண்டாகி விட்டது. தமிழ்ப் பெருமுனிவரான அகத்தியனாரது தலைமை மாணாக்கராகச் சொல்லப்படும் ஆசிரியர் தொல்காப்பியனார், அந்நான்கு நிலங்களையும் அவற்றுக்குரிய தெய்வங் களுடன் பாகுபடுத்துமிடத்தே—

> "மாயோன் மேய காடுறை யுலகமும்
> சேயோன் மேய மைவரை யுலகமும்
> வேந்தன் மேய தீம்புன லுலகமும்
> வருணன் மேய பெருமண லுலகமும்
> முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

(பொருளதி. அகத்திணை, 5)

என்று கூறுகின்றார். இதனால், மாயோனாகிய திருமால்—முல்லை என்ற காடும் காட்டுச்சார்புமான நிலத்திற்கும், சேயோனாகிய முருகன்—குறிஞ்சி என்ற மலையும் மலைச்

சார்புமான நிலத்திற்கும், வேந்தனாகிய இந்திரன்—மருதம் என்ற ஊரும் ஊர்ச்சார்புமான நிலத்துக்கும், வருணன்—நெய்தலாகிய கடலும் கடற்சார்புமான நிலத்துக்கும் உரிமைபூண்ட தெய்வங்களென்பதும், அத்தெய்வ வழிபாடுகள் தொல்காப்பியர்க்கு மிகவும் முற்பட்ட காலத்திலேயே தமிழ்மக்களாற் கைக்கொள்ளப்பட்டவை என்பதும் நன்கு விளங்கும். இந்நான்கு நிலங்களோடு 'முல்லையும் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து — நல்லியல் பழிந்த' பாலையை ஐந்தா நிலமாகக் கொண்டு, அதற்குக் கொற்றவை[1] தேவதையாகப் பிற்பட்ட ஆசிரியர் கூறினர். இத்தெய்வங்களுள்ளே, இந்திரவருணர்களுக்கு, அவ்வவர் நிலவுரிமை பற்றியமைந்த தனிக் கோயில்களேனும்[2] அவரைவழிபட்டு வந்த கொள்கைகளேனும் இருந்தனவென்று தெரிய வரவில்லை. ஆனால் திருமால், முருகக்கடவுள், கொற்றவை என்பவர்க்கு அவ்வாறு அமைந்த கோயில்களும் கொள்கைகளும் பழங்காலமுதல் இன்றுவரை உள்ளன. எனவே வைணவம், கௌமாரம், சாத்தம் போன்ற கொள்கைகள், தமிழகத்தில் விளங்கிய ஆதிசமயங்கள் என்று கொள்ளத் தடையில்லை. இத்தெய்வங்களின் கோயில்கள் தொல்காப்பியர்காலத்துக்கு முன்பே பெருகிவிளங்கின வென்பதும், இவற்றின் அறப்புறங்களை அரசர் நேரிற்சென்று பாதுகாத்துவந்தனரென்பதும்,

> "மேவிய சிறப்பி னேனோர் படிமைய
> முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
> பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
> இழைத்த வொண்பொருள் முடியவும் பிரிவே"
>
> (தொல். அகத். 30)

---

1. தொல். அகத்திணை, 30—இளம்பூரணருரை.

2. 'வருணராஜா, இந்திர ராஜா'வின் கோயில்கள் தஞ்சையிலிருந்தன வென்று சாஸனமும் (S. I. I. i, p, 414.) இந்திராயுதமுள்ள 'வச்சிரக் கோட்டம்' என்ற கோயில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்ததாகச் சிலப்பதிகாரமும் (9, 12) கூறும்; ஆயினும், அவை திக்குப்பாலக வணக்கம்பற்றியும், அவ்வவ்விடத்துக்கமைந்த சிறப்பியல்பு பற்றியும் நிருமிக்கப்பட்டனவேயன்றி, நிலவுரிமைபற்றியவை யல்ல என்க.

என்ற சூத்திரத்துள்[3] அவ்வாசிரியர் கூறுதலால் அறியலாம். இங்ஙனம் கோயில்கொண்ட கடவுளரில் திருமால் முல்லை நிலத் தெய்வமாதலின், அப்பெருமான் மேவிய கோயில்கள், காடும் காட்டுச்சார்புமான இடங்களிற்றான் ஆதியில் அமைந்திருந்தனவாக வேண்டும். இப்பொழுதுள்ள பழைய திருமால்திருப்பதிகள் பெரும்பாலும் அவ்வாறமைந்திருந்தவை என்றே கருதலாம். முல்லைக்குரிய தமிழ்மக்கள் ஆயர் என்று தொல்காப்பியர் கூறுவர்[4]. அதனால், அவ்வாய்க்குலத்துள் ஒளித்துவளர்ந்த கண்ணபிரானே, முல்லை நிலத்து மக்கள்தம் தொழுகுலமாக வணங்கிவந்த திருமாலவதார மூர்த்தியாயினர். இப்பெருமானது பால சரித்திரங்களாகத் தமிழாயர்கள் வழங்கிவந்தவை பலவாம்[5]. அவற்றுள், அப்பெருமான் நப்பின்னை என்ற ஆயர்குலவணங்கை — அவ்வாய்க்குல வழக்கப்படி கன்யாசுல்கமாக விடுக்கப்பட்ட எழுவிடைகளையுந் தழுவியடர்த்து[6] — மணம்புரிந்த சரிதம், தமிழ்நாட்டிற் பிரபலம் பெற்றதோடு நாடகமாக நடிக்கப் பெற்றும் வந்தது.

---

3. இச் சூத்திரத்திற்கு, உரையாசிரியரான இளம்பூரணவடிகள் கூறிய பொருளே கொண்டுக் கொள்ளப்பட்டது. அவர், 'மேவிய சிறப்பி னேனோர் படிமைய' என்பதற்கு—'நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவாது படிமையவாகிய பொருள்கள்' என்று பொருளும், "சிறப்பினேனோர்' என்றதனால், சிறப்புடையார் மக்களுந் தேவருமாகலின் மக்களல்லாதாரோ தேவரென்று பொருளாயிற்று; படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித் திரிபு; அது தேவர்க்கொப்புமையாக நிலத்தின்கட் செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலாயின' என்று விசேடமும் எழுதியிருத்தல் பெரிதும் பொருத்தமுடையதாதல் காண்க. நச்சினார்க்கினியர், இச் சூத்திரத்துக்கு வேறு பொருள் கூறுவர்.

4. தொல். அகத்திணை, 23, இளம்.

5. 'தமிழ் நாட்டில் வழங்கிய கண்ணபிரான் சரிதங்கள்' என்ற தனிவியாசத்துள், இதனை விரித்து விளக்கியுள்ளேன். (செந்தமிழ், தொகுதி 8, பகுதி. 4.)

6. தமிழ் நூல்களில், 'ஏறுகோடல்' எனப்படும்.

"ஆயர்பாடியி லெருமன்றத்து
மாயவனுடன் றம்முனாடிய
வாலசரிதை நாடகங்களில்
வேனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய
குரவையாடுதும் யாமென்றாள்
கறவைகன் றுதுயர் நீங்குகவெனவே."

(சிலப். ஆய்ச். குரவை.)

"மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையிஃ தாமென நோக்கியும்"

(மணிமே. 19, 65-6).

என்று இளங்கோவடிகளும் சாத்தனாரும் கூறுவனவற்றானும் இச்செய்தி விளங்கும். வடநாட்டார் இராதாதேவியைக் கண்ணன்காதலியருட் சிறந்தவளாகக் கொண்டாடுதல்போலத் தென்னாட்டவரால் பண்டைக்காலமுதலே பாராட்டப்படுந்தேவி இந்நப்பின்னைப்பிராட்டியே என்பதும் அறியத்தக்கது.

முல்லை நிலத்தவர் வணங்கிவந்த இக்கண்ணபிரான் வழிபாடு, தொல்காப்பியர்காலத்தே ஏனைநிலத்துக்கடவுளர் வழிபாடுகளினும் சிறப்புடையதாயிருந்ததென்றே சொல்லலாம். அகத்திணையொழுக்கந் தொடங்குதற்கிடமான குறிஞ்சியை ஏனைப்புலவர்போலத் தாமும் முதலில் வைத்துக் கூறாது திருமால் வாழும் முல்லையை முதலாகக் கொண்டு தொல்காப்பியர் எண்ணுதல்7 ஒரு விசேடம் பற்றியதென்றே கருதத்தகும். இவ்வாறே மன்னர்க்குத் திருமாலை உவமைகூறும் பூவைநிலையென்னும் புறத்துறையைக் கூறுமிடத்து—

---

7. அகத்திணை முறையில் அமைக்கப்பட்ட சங்க நூல்களிலே தொல்காப்பியமும் ஐந்திணையைம்பதும் ஒழிய ஒழிந்தனயாவும், முல்லையல்லாத திணைகளுள் ஒன்றை முதலாகக் கொண்டனவாம். தொல்காப்பியரைப்போலவே, மாறம்பொறையனாரும் "மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து" எனத் திருமாலைக் கூறி முல்லைத்திணை தொடங்குதலை அவரியற்றிய ஐந்திணையைம்பதால் அறிக.

8"மாயோன் மேஎய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்." (தொல். அகத். 60.)

என்று புருடோத்தமனது இறைமைக்குணம் புலப்படுமாறு பலபட விசேடித்து அவ்வாசிரியர் கூறுதலுங் காணலாம். இப்பெருந்தலைமைபற்றியே மால்* என்ற சொல், பிறர்க்கு ரித்தாகாத நாராயண நாமம்போலத் தனித்த தமிழ்த் திருப்பெயராக மாயோனுக்குத் தொன்றுதொட்டு வழங்கி வருதலும் காண்க.

இவ்வாறு தமிழகந் தோன்றியகாலத்தே உடன் தோன்றித் தலைமைபெற்றுநின்ற திருமாலின் கோயில்களுங் கொள்கையும் அக்கடவுளது பேரடியார்களாற் பெருகியிருக்கவேண்டும் என்பது சொல்லவேண்டியதில்லை. திருமால் தலங்களிலே, திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவெஃகா போன்றவை மிகப் பழைமை பெற்றனவாகும். திருமாலை முற்பட வைத்துக் கூறும் பரிபாடலிலும், சிலப்பதிகாரமுதலியவற்றிலும் இத்தலங்களிற் கோயில் கொண்டருளும் அர்ச்சாவதார மூர்த்திகளின் திருக்கோலங்கள் மிகவழகாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

"நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்று திருவரங்கத்துத் திருமாலையும்,

... ... ... ...

8. "மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய கெடாத விழுமிய புகழைப் பொருந்திய பூவைநிலை என்பது இளம்பூரணருரை. இத்தொடர்க்கு வேறுபொருளொன்றை நச்சினார்க்கினியர் நவின்றுகொள்வர்.

* திருமாலின் சகச்சிர நாமங்களுள், ப்ருஹத், மஹான் என்ற திருப்பெயர்கள் இச்சொல்லுடன் ஒப்பிடத்தக்கன.

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலயத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்"

என்று திருவேங்கடத்துத் திருமாலையும் இளங்கோவடிகளும் (சிலப், 11, 35—51)

"புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருண் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்துந் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்...
நலம்புரீஇ யஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென வுரைத்தனெ முள்ளமர் திசைத்திறை
இருங்குன்றத் தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே"

என இளம்பெருவழுதியாரும் (பரிபாடல், 15)

"நீடுகுலைக், காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்"

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் (பெரும்பாண். 371—74) கூறுதல் காண்க.

ஆதியில் முல்லைநிலத்துக்கு உரியவாயிருந்த திருமால் கோயில்கள், பிற்காலத்தே குறிஞ்சி மருத முதலிய நிலங்களினும் பரவுவனவாயின. இவற்றினும், கண்ணபிரான் வழிபாடே மிகுதியும் வழக்குப்பெற்றிருந்த தென்னலாம். கண்ணபிரானை அப்பிரானது காதற்றேவியான நப்பின்னைப் பிராட்டியுடனும் தமையனரான பலதேவருடனும் சேர வணங்கிச் சிறப்பித்துவந்த செய்தி சங்கநூல்களால் நன்கறியப்படும். இவைதன்றிப் பலதேவர்க்குத் தனிக்கோயில்களும் அக்காலத்திருந்தன.

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்" (சிலப். 5, 171—2)

"உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்" (ஷ 14, 8—9.)

எனப் புகாரிலும் மதுரையிலும் இருந்த அத்தகைய கோயில்களை இளங்கோவடிகள் குறிப்பிடுவதுங் காண்க. இப்பலதேவர் கோயில், 'வெள்ளை நாகர் கோட்டம்' 'வெள்ளை நகரம்'[9] என்ற பெயர் பெற்றிருந்தது. இவ்வாறு தனிக்கோயிலில் பலதேவரை வணங்கிவந்த வழக்கு, கடைச்சங்கத்துக்குப் பிற்பட்டகாலத்தில் இருந்ததில்லையென்றே சொல்லலாம். கண்ணனும் பலதேவரும் சேர்ந்துள்ள நிலையை, அக்காலத்துப் புலவர் வணக்கமுகத்தானும்[10] உவமைமுகத்தானும் பலபடப் பாராட்டுவர். அழகர் கோயிலென்ற திருமாலிருஞ்சோலையில் அவ்விருவர் திருவுருவங்களுஞ் சேர விருந்தன வென்று பரிபாடல் (15) கூறும். இத்தகைய கோயில்களும் பிற்காலத்தே அருகிவிட்டன[11]. இப்பலராமகிருஷ்ணர்களை சங்கர்ஷண வாசுதேவர் என்ற திருநாமத்தால் 2000-ஆண்டுகட்கு முற்பட்ட வடநாட்டாரும்வணங்கி வந்தனரென்பது பழைய வடநூல்களாலும் சாஸனங்களாலும்[12] அறியப் படுகின்றது.

---

9. சிலப். 5, 171—2; 9, 10.

10. 'பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்று, சக்கரத் தானை மறப்பின்று' (இன்று. 1) "மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்—கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ" (திணை மாலை. 58) என்பன முதலியன காண்க.

11. கண்ணன், தம்முனாகிய பலதேவருடனும் நப்பின்னைப் பிராட்டியுடனும் எழுந்தருளியுள்ளநிலை பழைய திருப்பதிகளி லொன்றான திருவல்லிக்கேணியில் இன்றும் காணப்படுதல் அறியத்தக்கது.

12. இராஜபுதனத்து உதயபுர ஸம்ஸ்தானத்துள்ள கஸுண்டி (Ghasundi) என்ற கிராமத்திலுள்ள சாஸன மொன்று, பகவத் சங்கர்ஷண வாஸுதேவர்களுக்கு அங்குள்ள விஷ்ணுவினாலயத்தே பாகவதரொருவர் செய்துள்ள கற்றிருப்பணியையும், தக்ஷிண தேசத்து (Deccan) நாநகட்டத்துக் (Nanaghat) குகையிற் கண்ட சாஸனம், அவ்விருதெய்வங்களும் பிரதிஷ்டை பெற்ற செய்தியையும் கூறுவன என்றும், இவ்விரண்டும் 2100-வருஷங்கட்கு முற்பட்ட சாஸனங்களென்றும் தெரிய வருகின்றன. (Quarterly Journal of the Mythic Society, Banglore, Vol. XI, p. 87.)

இங்ஙனம் தமிழ் நாட்டிற் சிறப்புற்றிருந்த திருமால் கோயில்களும் வழிபாடுகளும் ஆரிய நன்மக்களது வைதிக முறைக் கேற்பவும் வைணவாகமமுறைக் கேற்பவும் அமைந்திருந்தன. வைணவாகமங்களாவன — பாஞ்சராத்திரமும் வைகானசமுமாம்.

"மலைமிசைநின்றோன்...புள்ளணி நீள்கொடிப்
புணர்நிலை தோன்றும் (சிலப், 11, 136)
"செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை செங்கண் மாஅல் (பரிபா.3, 81—82.)

என, கோயில்களிற் கருடத்துவச அமைப்பும், சங்கருடண வாசுதேசப் பிரத்தியும்ந அநிருத்தர்களென்னும் வியூகாவதாரங்களும், பிறவும் சங்கச் செய்யுள்களிற் பயிலுதலினின்றும் அவ்வாகமவழியே கோயில்களும்* கொள்கைகளும் பண்டைக் காலத்தில் அமைந்து வழங்கிவந்தன என்பது பெறப்படும்.

திருமால் வழிபாட்டிற் சிறந்த பெரியாரைப் 'பாகவதர்' என்ற பெயராற் பழையோர் வழங்கலாயினர். "பாகவதர் நாராயண சமயத்தோர்" என்பது திவாகரம். 'பகம் எனப் பெயரிய ஷட்குண[13] பரிபூர்ணனை திருமாலின் சம்பந்த முடையார்' என்பது இதன் பொருள். திருமாலடிமையிற் சிறந்த இல்லறத்தாரை அடியார் என்றும், உலகப்பற்றற்ற அத்தகைய துறவிகளைப் பகவர் என்றும் முன்னோர் வழங்கிவந்தனர். இச்செய்தி—

"...அச்சுதன் றன்னை ஞானவிதி பிழையாமே
மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே"
"நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்"
"விரும்பிப் பகவரைக் காணின் வியலிடமுண்டானே
(திருவாய்மொழி) [பென்னும்"

* 'செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்' என்று திருமங்கைமன்னனாற் பாடப்பெற்ற திருநறையூர் என்ற நாய்ச்சியார் கோயிலில், இவ்வியூகாவதார மூர்த்திகளனைவரும் ஒருங்கெழுந்தருளியிருத்தல் அறியத்தக்கது.

13. ஷட்குணங்களாவன—அறிவு, திரு, ஆட்சி, ஆற்றல், அவாவின்மை, புகழ் என்பவை (விஷ்ணு புராணம்).

"பத்தர்களும் பகவர்களும்...தொழுதிறைஞ்ச" (பெரியாழ். என்வரும் பெரியார் திருவாக்குக்களால் அறியப்படும். இப் பகவர் என்ற பெயர் சிவன் முதலிய கடவுளர்க்குப் பொது வாக வழங்குவதேனும், விஷ்ணுபத்தியில் மேம்பட்ட துறவிகட்கன்றி வேறுசமயத்தடியார்க்குப் பழைய தமிழ் நூல்களிற் பயிலாமை அறியத்தக்கது. குடமூக்கிற்பகவர் நிலாத்துக்குறிப்பகவர் எனப் பிற்காலத்து விஷ்ணுபத்தர் களான முனிவர்களும் இப்பெயர் பெற்றிருத்தல் காணலாம். திரிதண்டதாரிகளான இவ்வைஷ்ணவசந்நியாசிகளையே 'முக் கோற்பகவர்' என்று பழைய தமிழ்மக்கள் வழங்கலாயினர்.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்." (9)
"செக்கர்கொள் பொழுதினான்......
முக்கோ லந்தணர் முதுமொழி நினைவார்போல்." (129)

என்னுங் கலித்தொகையடிகள் இப்பகவரைச் சிறப்பித்தல் காண்க. இவற்றுள் அந்தணர் என்பதற்குக் 'காஷாயம்போர்த்த குழாங்கள்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர்.

"நூலே கரக முக்கோல் மணையே
ஆயுங் காலை யந்தணர்க் குரிய" (தொல். மரபி. 70.)

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவதும் பகவரான இத்திரிதண்ட சந்நியாசிகளையேயாம். இம்முக்கோல் முனிவர், தலயாத்திரையாகத் தமிழகமெங்குஞ் சஞ்சரித்து வருபவரென்பது, அகத்திணைக் களவியலில் "முக்கோற் பகவரை வினாதல்" என்று உடன்போக்குப் பகுதியுள் வருந் துறையாலுந் தெரியலாம்.[14]

---

14. "உடன்போய தலைவியின் பின்சென்ற செவிலி இடைச் சுரத்து முக்கோற் பகவரைக்கண்டு,'இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ' என வினவியாட்கு'அவரைக்கண்டு அஃது அறமெனவே கருதிப்போந்தேம்: நீரும் அவர் திறத்து எவ்வம்பட வேண்டா' என எடுத்துக்காட்டி அவர் (பகவர்) தெருட்டியது" (கலித். 9, அவ.) என்று இத்துறைச்செய்தியை நச்சினார்க்கினியர் விளக்குதல்காண்க

திருமாலை வணங்கும் கொள்கை முற்காலத்தே பிரபலம் பெற்றிருந்ததென்பது, மணிமேகலைச் சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையுள் வைணவவாதம் கூறப்படுதலால் அறியப்படும். இக்காலத்தேயிருந்த நல்லிசைப் புலவர் பலர் பரமபாகவதர்களாக விளங்கினர். பரிபாடலில் திருமாலைப்பற்றிச் சிறப்பித்த கடுவனிளவெயினனார், கீரந்தையார், நல்லெழுனியார் முதலியோர் பாடல்கள், அக்கடவுளிடம் அன்னோர் கொண்டிருந்த பரமபத்திக்குச் சிறந்த சான்றுயுள்ளன. வைஷ்ணவசமய மூலதத்துவங்கள் பலவும் ஆழ்வார்கள் வாக்கிற்போல இவர்கள் பாடல்களினும் காணப்படுதல் ஆய்ந்தறிதற்குரியது. இவரன்றி, விளக்கத்தனார்[15] கவிசாகரப்பெருந்தேவனார்[16] முதலாகவுள்ள வேறு புலவர்களும் வைணவசமயிகளாகவே தெரியவருகின்றனர். திருவள்ளுவரைப் பற்றி வழங்கும் கதைகளினுண்மை எத்தகையதாயினும், அவர்தம் வாக்களவிற்கொண்டு நோக்குமிடத்துத் திருமால்சமயத்துக்கு அவர்காலத்திருந்த சிறப்பியல்பு பெறப்படத் தடையில்லை.

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது [(கல்லாடம்.)
> உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்"

என்று சிறப்பிக்கப்படும் அத்தெய்வப்புலவர், பிறகடவுளர் எவரையுங் குறிப்பிடாத நிலையில்—

> "மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
> தாஅய தெல்லா மொருங்கு" (610).[17]

---

15. யான் செந்தமிழ்ப் பத்திரிகையிற் பதிப்பித்துவரும் 'பெருந்தொகை' 15-ம் பாடலையும், அதன் கீழ்க்குறிப்பையும் நோக்குக.

16. "பூவிற்குத் தாமரையே பொன்னிற்குச் சாம்புநதம்—ஆவிற் கருமுனியா யானைக் கமரரும்பல்—தேவிற் றிருமால் எனச் சிறந்த தென்பவே—பாவிற்கு வள்ளுவர்வெண் பா" என்ற திருவள்ளுவமாலை வெண்பா (36) இப்புலவர்வாக்காதல் காண்க.

17. "தன்னடியளவானே எல்லாவுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்புமுழுதையும், மடியிலா அரசன், முறையானன்றி ஒருங்கே எய்தும்" என்பது பரிமேலழகருரை.

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு" (1103)[18]

என்று கூறுதல் அவருள்ளக்கிடையைத் தெள்ளிதிற் புலப் படுத்தக் கூடியதன்றோ? இவற்றுள் முன்பாட்டில் வரும் 'அடியளந்தான் தாயதெல்லாம்' என்ற தொடர், அசுரர்க்கு உரிமையானதைத் தன்னுரிமையாக்க வேண்டி, திருமால் தன்னடியால் அளந்துபெற்ற எல்லாவுலகும்—என்ற கருத் துடனிற்றலும், இரண்டாங்குறள்—இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவனது தளர்ந்தநிலையை நோக்கி 'நிரதிசய வின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது' என்ற பாங்கற்கு அத் தலைவன் கூறிய கூற்றாக நிற்றலும் அறியத் தக்கன. இக்குறள்களினின்றும், இலீலா விபூதி நித்தியவிபூதி என்ற இருவகைப் பெருஞ்செல்வங் கட்குந் தனியிறைமை திருமாற்கேயுரியதென்ற வைஷ் ணவசமயக் கொள்கை, வள்ளுவனார் திருவுள்ளத்துக்கும் ஒத்ததென்பது நன்கு பெறப்படும். தாமரைக் கண்ணா னுலகினும் மேம்பட்ட நிரதிசயவின்பப் பேறு வேறுண்டு என்பது அத்தெய்வப்புலவர் கருத்தன்று; கருத்தாயின், 'உயர்ந்த தன்மேற்றே யுள்ளுங் காலை' என்றபடி, அவர் எடுத் துக் கொண்ட உவமையின் சிறப்பு இழுக்குறுமென்க.

இனி, பரமபாகவதரான இப்புலவர்களன்றிப் பண் டைத்தமிழரசர்பலரும் திருமால்பத்தியிற் சிறந்திருந்தனர். செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற சேரர் பெருந்தகை "மாய வண்ணனை மனனுறப் பெற்றவன்" என்று பதிற்றுப் பத்திற் புகழப்படுகின்றான்[19]. கோச்செங்கணான் என்ற சோழவரசன் திருநறையூர்த் திருமாலிடம் பரமபத்தி பூண்டிருந்தவனென்று திருமங்கைமன்னன் கூறுவர். இளம் பெருவழுதியார் என்ற பாண்டியர் குலத்தோன்றல் திருமா

18. "ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம்விரும்புமகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போல வருந்தாமலெய்த லாமோ, அவற்றைத் துறந்த தவயோகிகளெய்தும் செங்கண்மா னுலகம்" என்பது பரிமேலழகருரை. 19. 7-ம் பத்துப்பதிகம்.

விருஞ்சோலைப் பெருமானிடம் பேரன்புபூண்ட பரமபாகவதரென்பது பரிபாடலின் 15-ம் செய்யுளால் நன்கு விளங்கும்.

சங்கநாளில் வைணவம் சைவம் போன்ற வைதிக மதங்களை அரசர்களும் அடியார்களும் பெரிதும் ஆதரித்தும் போற்றியும் வந்தமையால், நாடுமுழுதும் அன்னோர் வழியையே பின்பற்றியொழுகிய தென்பது நன்கறியப் படுகின்றது. இக்காலத்தே சைனபௌத்தமதங்களும் அச்சமயத்தவர்முயற்சியால் தென்னாட்டிற் சிறுகப் பரவியிருந்ததேனும், வைதிகமதங்களின் செல்வாக்கை அவை அடைந்தனவல்ல. ஆனால் சங்ககாலத்துக்குப் பின்னர்—அஃதாவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதலாக—வடநாடெல்லாம் உரக்க வீசிப்போந்த சைன பௌத்தங்களாகிய சண்டமாருதம் தென்னாட்டிலும் சுழன்றடிக்கத் தொடங்கியது. தமிழரசரின் தலைநகர்ப் புறஞ்சேரிகளினும்[1] வைதிகஸ்தலங்களினும் இச்சமயத்தவர் தங்கித் தங்கொள்கைகளைப் பரப்பி வந்ததோடு, சைனபௌத்தப் பள்ளிகளையும் உபதேச கூடங்களையும் தாபித்துவந்தனர். தங்கள் சமயங்களைப் பிரபலப்படுத்துவதில் இன்னோர் கொண்டிருந்த ஆற்றலும் ஊக்கமும் நிரதிசயமானவை. வடகலைகளிற் பெரும் பயிற்சியும் வாக்குவல்லமையும் பெற்றுநின்ற இவர்கள், சென்ற நாடுகளிலெல்லாம் தத்தம் சங்கங்களைத் தாபித்தும் தேசபாஷைகளை நன்கு கற்று அவற்றின்மூலம் தஞ்சமயக் கொள்கைகளைத் தக்கவாறு பரப்பியும் வந்தனர். இவர்களுள் சைனர்கள், தமிழ்மொழியிற் செய்த இலக்கியவிலக்கண நூல்களும் சமயநூல்களும் பிறவும் பலவென்பதும், அவற்றிற் சில, பரசமயத்தாரும் பாராட்டும்படி இன்றுவரை

---

1. மதுரை வஞ்சி முதலிய தலைநகரங்களில் சைனபௌத்தப் பள்ளிகளும் உறைவிடங்களும் நகரின் எயிற்புறவிருக்கையில் அமைந்திருந்த செய்தி, சிலப்பதிகாரம்—புறஞ்சேரியிறுத்த காதையாலும், மணிமேகலை—வஞ்சிமாநகர்புக்க காதையாலும் அறியலாம்.

நின்று நிலவுதலும் யாவரும் தெரிந்தனவாம்.[2] . சைனரும் பௌத்தரும் தருக்கசாத்திரத்தில் மிக்க பயிற்சியுடையரா யிருந்தமையின், ஏனைச்சமயிகளை வாதப்போருக் கிழுத்துத் தங்கள் ஆற்றலைக் காட்டிவந்தனர்.

"போதியார் பிண்டியா ரென்றவப் பொய்யர்கள்
வாதனு லுரையவை" (தேவா. பக். 376, 10.

"தடுக்கமருஞ் சமணரொடு தருக்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண் வருமொழி" (ஷை, 822, 10.)

"தற்கச் சமணருஞ் சாக்கியப்பேய்களும்"
(திவ். இராமாநுஜநூற்றந். 99)

'தருக்கினுற் சமண்செய்து' (பெரியதிரு. 2,1,7).

என்று வைதிகசமய முன்னோர் இவரது தருக்கவாற்றலைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் காணலாம். சைனமுனிவர் கையாண்ட அனசனமுதலிய கடுநோன்புகளும் மந்திரதந்திரங்களில் வன்மையும் தமிழர்க்கு அன்னோரிடமிருந்த மதிப்பை மிகுதிப்படுத்தியன. இவர்களை அரசரும் பிறரும் கௌரவித்து வந்ததுமட்டுமன்றி, அவருட் சிலர் அம்மதங்களைத் தழுவி இவர் நோக்கம் முடிவுபெறுதற்குப் பெருந்துணையுமாயினர். இவ்வாறு இவர்க்கு அநுகூலராய் நின்றதென்னுட்டரசருள்ளே, பல்லவர்களைச் சிறந்தவராகச் சொல்லலாம். சைனமதத்தின் செல்வாக்கு, ஏனையவற்றினும் 6, 7-ஆம் நூற்றாண்டுகளிற் செழித்திருந்ததற்கு இவ்வரசர்களை காரணபூதராயினர். இங்ஙனம் பேரரசர்களது ஆதரவும், அம்மதப்பிரசாரகரது பேருழைப்பும் சைனசமயத்தை உச்சநிலைக்குக் கொண்டுவந்தனவென்றும், வேள்விமுதலிய சடங்குகளில் விசேடப்புற்றுக்கொண்டொழுகிய வைதிகமதங்கள் இதன் முன்னே மேலோங்க இடமின்றித் தளர்வடையத் தொடங்கின என்றும் சொல்லத் தடையில்லை.

---

2. "முன்னோ ரொழியப் பின்னோர் பலரினுள், எந்நூலாரும் நன்னூலாருக், கிணையோ வென்னுந் துணிவே மன்னுக" எனச் சுவாமிநாத தேசிகரும் (இலக். கொத் 8, உரை) "பல்கலைக்குருசில் பவணந்தியென்னும், புலவர்பெருமான் புகழ்போல விளங்கிநிற்றலான்" எனச் சங்கரநமச்சிவாயப்புலவரும் (நன். 137 உரை.) கூறுதல் காண்க.

இவ்வாறு, புறச்சமய வெழுச்சியால் நாட்டார்க்கு வைதிகமதங்களிற் பற்றுக் குறையவும், அவற்றின் பழைய தர்மங்கள் தளர்வடையவும் நேர்ந்ததே, அம்மதங்களிற் பெரியோர்களுடைய அவதாரங்கள் நிகழ்வதற்குக் காரணமாயிற்று. இக்காலத்தே சைவவைஷ்ணவ அடியார்களிற் சிறந்தோர்பலர் தோன்றி, சநாதன தர்மங்களை மேலேமேலிட்ட விளக்காக்கி வைத்தனர். இன்று நான் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கேற்பத் திருமாலடியாரான அத்தகைய பெரியோர்களைப்பற்றித் தெரிந்தவற்றைக் கூறுகின்றேன். முதலில் இப்பெரியோர்களின் சரித்திரச் சுருக்கங்களையும், அவர்கள் அவதரித்த காலவிசேடங்களையும், அவர்கள் திருவாக்காற் றெரியவருஞ் செய்திகளையும் கூறிவிட்டுப் பின் அக்காலத்திருந்த வைஷ்ணவசமய நிலையை விவரிப்பேன்.

## ii. ஆழ்வார்கள்காலத்து வைஷ்ணவ சமயநிலை.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தின்படி அம்மதப்பிரவர்த்தகர்களான பெரியோர்கள் இருவகைப்பிரிவினர் ஆவர். அவர்களை ஆழ்வார்கள், ஆசாரியர்கள் என்பர். இவர்களுள் ஆழ்வார்களென்போர், அவதார புருஷர்களாகவும் ஞான பரிபூரணர்களாகவும், வைஷ்ணவ சமயத்தின் மூலபுருஷர்களாகவும் விளங்கினவர்கள். ஆழ்வார் என்பதற்கு 'பகவத்குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்' என்று விற்பத்திப்பொருள் கூறுவதுண்டு. இப்பெயர்வழக்கிற்குத் திவ்யப்பிரபந்தங்களிற் பிரமாணம் காணப்பட்டிலதேனும், பண்டைச் சாஸனங்களினும் நூல்களினும் இச்சொல் பெரிதும் பயின்றுள்ளது.3

3. சோழசாஸனங்களில்—'ஆழ்வார் திருவரங்க தேவர்க்கு (i.s i. iii, p. 150) 'திருவத்தியூராழ்வாரைப் பாடியருளின ஸ்ரீபூதத்தாழ்வாரும்' (ஷை, பக். 164) என்று திருமால்மூர்த்தங்கட்கும், 'தீக்காலிவல்லத்துத் திருத்தீக்காலி யாழ்வாரை' 'மதுராந்தகன் கண்டராதித்தனூர் ஆழ்வாரை ஸஹஸ்ரகலச மாட்டுவிக்க' (ஷை பக். 102) என்று சிவமூர்த்தங்கட்கும், 'ஆழ்வார் பராந்தகன் குந்தவைப்

இனி, ஆசாரியர் என்போர், அவ்வாழ்வார்கட்குப் பிற்காலத்தே அவர்கள் அருளிச்செயலின்வழியைப் பின் பற்றி ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தைப் பிரவசனஞ் செய்து நாட்டை உய்யக்கொண்ட பெரியோராவர். இவர்கட்கெல்லாந் தலைவரானவர், ஸ்ரீமந் - நாதமுனிகள் என்பது பலருமறிவர். ஆழ்வார்கள் ஆசாரியர்களென்ற இவ்விரு வகைப் பெரியார்களின் வரலாறுகளைக் கூறும் சரித்திர நூல்கள் பலவாம். அவற்றுள், ஸ்ரீராமாநுஜர் காலத்து

---

பிராட்டியார்' (ஷை. ii. பக். 69), 'நம்பெருமாள் (அபயன்) திருத் தங்கையார் மதுராந்தகியாழ்வார்' (ஷை. iv. பக். 18) 'குலோத்துங்க சோழன் மகளார் அம்மங்கையாழ்வார்' (ஷை. பக். 35) என்று அரசர்குல மகளிர்க்கும், 'வாணகோவரையர் தங்களாச்சி...விச்சாதிரியாழ்வார்'(ஷை பக். 153) 'கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார் (ஷை no. 862) என அரசரைச் சார்ந்த தலைவர்மகளிர்க்கும் வழங்குதலேயன்றி, நூல்களில் — 'இனிப் பிறக்கக்கடவ மைத்திரியாழ்வாரான புத்த தேவர்க்கு'(தக்கயாகப்பரணியுரை),'புத்தனுடைய என்பாகிய தாது ஆழ்வார்' (நீலகேசி, மொக்கல. 82, உரை), 'ஈழ மடிப்படுத்த தாடையாழ்வார்' (புத்த சரித்திரம். பக். 25) என்று புத்ததேவர்க்கும் அவர் சம்பந்தமுடையார்க்கும் 'அவிரோதியாழ்வார்' (திருநூற்றந்தாதி) எனச் சைனமுனிவர்க்கும் கூறப்படுதல் காண்க. இதனால் கடவுளர்க்கும், அடியார்கட்கும், மக்களிற் சிறந்த இருபாலார்க்கும் இச்சிறப்புப் பெயர் முற்காலத்தே பெருவழக்கிலிருந்த செய்தி தெரியலாம். திருச்சிற்றம்பலத்தாள்வார், கோவிந்தபாடி யாள்வார், ஆள்வார் அரிகுலகேசரி தேவர் (s. i. i. iii. 380, 342, 248,) என இங்ஙனம், ஆள்வார் என்றும் சாஸனங்களிற் பயிலும். இங்ஙனம் பெருகிய வழக்குக்களிலிருந்து, இச்சொற்கு ஸ்வாமி, பெரியோர் என்பதே பண்டைப் பொருளாக வேண்டுமென்று தோற்றுகின்றது. 'பிறரை அடிமைகொண்டு ஆள்பவர்' என்ற பொருளில் ஆள்வார் என்று வழங்கிவந்தது, பின்பு ளகர ழகர வேற்றுமையின்றி ஆழ்வார் எனத் திரிந்ததோ வென்றும், பெண்பாலரான திருமாலடியார் ஒருவர் ஆண்டாள் என்றும் ஆசாரியத் தலைவரிற் சிலர் ஆளவந்தார் ஆண்டான் என்றும் வழங்கப்பெறுவதை நோக்குமிடத்து, 'ஆள்' என்பதே இதன் பகுதியோ என்றும் சங்கிக்க இடமுண்டு.

அவர் திருவடிசம்பந்தம் பெற்ற கருடவாகன பண்டிதரால் வடமொழியில் செய்யுளுருவமாகச் செய்யப்பெற்ற திவ்ய ஸூரிசரிதையும், ஸ்ரீநம்பிள்ளையின் திருவடிசம்பந்தம்பெற்ற பின்பழகியபெருமாள் ஜீயரால் மணிப்பிரவாளரூபமாகச் செய்யப்பெற்ற ஆறாயிரப்படி குருபரம்பரையும் பழமை பெற்றனவாகும். இவையன்றி, பிரபந்நாமிருதம், பிரமதந்திர ஸ்வதந்திர ஜீயர் இயற்றிய குருபரம்பரை முதலாகப் பிற்காலத்து நூல்களும் உள்ளன. நாதமுனிகள் முதலாகவுள்ள ஆசாரியர் வரலாறுகளை இச்சரித்திர கிரந்தங்களினின்றும் நாம் ஒழுங்காகவே தெரிந்துகொள்ளக்கூடும். இவற்றிற் கூறப்படுபவை, சரித்திரவாராய்ச்சி முறையோடும் பெரிதும் ஒத்தே வருகின்றமையால், இவற்றுட் பெரும் பகுதியும் அவ்வாராய்ச்சி வல்லாராற் சங்கிக்கப்படவில்லை. ஆனால், அந்நூல்களிலே பிற்பட்டவற்றிற் கண்ட ஆழ்வார்கள் காலங்களிலும் வேறுசிலவற்றிலுமே தடைகள் பல நிகழ்கின்றன. முற்கூறிய பழைய குருபரம்பரை இரண்டிலுள்ளும், நம்மாழ்வாரொருவர்க்கன்றி, வேறெவர்க்கும் அவதாரகாலங்கள் குறிக்கப்படவில்லையாதலால், பிற்பட்ட நூல்களிற்கண்ட காலக்குறிப்புக்கள் இடைச்செருகலென்பது அன்னோர்கருத்து. ஆழ்வார்களுட் சிறந்த நம்மாழ்வார்க்கும், ஆசாரியத்தலைவரான நாதமுனிகட்கும் நேரான தொடர்பிருந்ததென்று, திவ்யசூரிசரிதமும் பின்பழகிய சீயர் குருபரம்பரையும் கூறுவதாக அவர்கள் கருதுகின்றனர். இக்கருத்திற்கு, அந்நூல்களில் யாதோர் தெளிவான ஆதாரமும் இல்லை. இதனை, நம்மாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்து நன்குவிளக்குவேன். சுருக்கமாக ஒன்று மட்டும் இங்கே அறிதற்குரியது; அஃதாவது இவர்கள் கருதுவதுபோல் அவ்விருவர்க்கும் நேரான சம்பந்தமுண்டாயின், ஆழ்வார் ஆசாரியர் என்ற விபாகத்துக்கே சிறிதும் இடமில்லாதொழியும். ஆழ்வார்களே ஆசாரியர்களாய், நாதமுனிகட்கு அத்தலைமை ஏற்படுமிராது. அதனால், ஆழ்வார்கட்கும் ஆசாரியர்கட்கும் இடையே

தொடர்ச்சியற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் அத் தொடர்பின்மை எவ்வளவுகாலம் இருந்த தென்பதே இங்கு விடைதர வேண்டிய கேள்வியாகும்.

ஆழ்வார்கட்குத் துவாபரயுகவிறுதியும் கலியுகாரம்பமும் அவதாரகாலங்களாகக் கொண்டு, அவரவர் அவதரித்த கல்யாப்தம், வருஷமாசதிதிவாரநக்ஷத்திரங்கள் இவையென்று பிற்பட்ட குருபரம்பரைகள் கூறுகின்றன. சரித்திரவறிஞர் இக்காலக்குறிப்புகளில் நம்பிக்கை கொள்ளாமைக்கு, அவை முற்பட்ட திவ்யசூரிசரிதை முதலியவற்றிற் காணப்படாமைமட்டுங் காரணமன்று; ஆழ்வார்களது அருளிச்செயல்களிற் கண்ட தமிழ்நடையின் போக்காலும், இலக்கணவமைதிகளாலும், சொற்பொருள் வழக்குக்களாலும், அப்பெரியாரெல்லாரும் கடைச்சங்கத்துக்குப் பிற்பட்ட காலவிசேடங்களில் விளங்கியவர்கள் என்பதே அவ்னோர் முடிபு.

"சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்"
"சங்கத்தமிழ்மாலை முப்பதும்"

என்று; அச்சங்கத்தை அவர்கள் குறிப்பிடுவதோடு அச்சங்க நூற்றொடர்களையும்[1] பொருள்களையும் அவர்கள் வழங்குதலாலும், சங்ககாலத்துத் தமிழரசனை கோச் செங்கணனுடையதும் 8-ம் நூற்றாண்டினனாகத் தெரிந்த பல்லவ

1. "வித் துமிடல்வேண்டுங் கொல்லோ விடையடர்த்த பத்தியுழவன் பழம் புனத்து" (திருமழிசையார்.)———"வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்" (திருவள்ளுவர்) என்பனவும். "ஊரவர் கவ்வை யெருவிட் டன்னை சொன்னீர் மடுத்—தீர நெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள்" (நம்மாழ்வார்)——"ஊரவர் கவ்வை யெருவாக வன்னை சொல்—நீராக நீளுமிந் நோய்" (திருவள்ளுவர்) என்பனவும், "அன்ன நடையா ரலரேச வாடவர்மேல், மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்—தென்னுரையிற் கேட்டறிவதுண்டு (திருமங்கையார்)—"கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர், மடலேறார் மைந்தர்மே லென்ப" (முத்தொள்ளாயிரம்) என்பனவும் சொற்பொருள் வழக்குக்களால் ஒப்புமை கொண்டிருத்தல் காண்க.

நல்லனுடையதுமான வரலாறுகளைச் சாஸனங்களும் நூல்களும் கூறுமுறையே திருமங்கையாழ்வார் பாடுதலாலும் கலியுகத் தொடக்கத்தில் அவ்வடியார்களை நிறுத்துவது பொருந்தாது. திருமங்கைமன்னன், திருஞான சம்பந்தரோடு சமயவாதஞ் செய்தவரென்று குருபரம்பரைகள் கூறுகின்றன. சம்பந்தர்காலம் 7-ம் நூற்றாண்டென்பது சந்தேகமறக் கொள்ளப்பட்டுச் சைவர்பலருடைய சம்மதமும் பெற்றுள்ளது. ஆயின், திருமங்கையார் காலமும் அதனிலும் சிலவாயிரவாண்டு முற்பட்டதென்பது அசங்கதமாம்—என்றிவைபோன்றன பலவும் சரித்திரவறிஞர்களுடைய வாதங்களாகும்.

இப்படி வாதிப்பவர்களிற் சிலர் ஆழ்வார்கள் காலம் பற்றிக் கூறும் கொள்கைகளோ மிகவிநோதமானவை. ஸ்ரீவல்லபன், குலசேகரன் என்ற பெயர்களை இராமாநுஜர் காலத்துக்குப் பிற்பட்ட பாண்டியசோளவரசர் சிலர் கொண்டுள்ளதைக் கண்டதுமே, பெரியாழ்வார் குலசேகராழ்வாரிருவரும் அவ்வாசாரியத்தலைவர்க்குப் பிற்பட்டவர்கள் என்று எழுதிவிட்டனர் சிலர். மாறங்காரி, மதுரகவி என்ற பெயர்கள் பாண்டியன் மந்திரியொருவனுக்கு வழங்கியிருத்தலைச் சாஸனத்திற் பார்த்ததும் காரிமாறன் என்ற நம்மாழ்வார், அம்மாறங்காரியின் மகனென்றே கருதிவிட்டனர் சிலர். ஒரு சிலரோ, நாயன்மாரது தேவாரத்தைப் படித்தே ஆழ்வார்கள் பதிகம்பாடத் தெரிந்து கொண்டனர் என்றெழுதினர். வேறுசிலர், இதற்கு ஆதாரங்காட்டுவார் போல, 'அடியாரும் பகவரு மிக்கதுலகே' என்ற திருவாய்மொழித் தொடருள் "அடியார்" என்று சிவனடியாரான நாயன்மாரையே நம்மாழ்வார் குறித்தனர் என்று கூசாது கூறினர். மற்றுஞ்சிலரோ—"உன் திருவடிச் சூடுந் தகைமையினர்—எப்படி யூராமிலைக்கக் குருட்டாமிலைக்கு மெண்ணூம்—அப்படி யானுஞ் சொன்னேன்" [1]என்று நம்மாழ்வாராற்

1. 'அச்சுதன்றன்னை...மேவித்தொழுமடியாரும்' என்றும் 'உன்திருவடிச்சூடுந் தகைமையினர்' என்றும் முன்வரும் தொடர்ப் பொருள் இன்னோர்க்குப் புலப்படவில்லை.

கூறப்பட்டவர் "வரா மிலைக்கக் குருட்டா மிலைத்து" என்று பாடிய மாணிக்கவாசகரே என்று வரைந்து வெளிப்படுத்தினர். இங்ஙனமே பொருளுணர்ச்சியும் வழக்குணர்ச்சியுமின்றிப்பலரும் பலபட எழுதிவருவாராயினர்.

இங்ஙனம் குறைகூறுவதால் ஒருசார்பின்றி ஒழுங்கான முறையில் ஆழ்வார் காலவாராய்ச்சி செய்தவரே இல்லையென்று நான் கருதுவதாகவேனும், இத்தகைய ஆராய்ச்சி செய்தற்குரியதன்று என்பது என்கருத்தென்றேனும் ஒருவரும் நினைக்கக் கூடாது. சாஸனங்களும் மற்றக்கருவிகளும் பல்கிப் பெருகிவருதலால் உலகசரித்திரங்கள் அவாவுடன் ஆராயப்பெற்றுவரும் இக்காலத்தே, தெய்வத் தன்மைவாய்ந்த அடியார்களின் காலநிலைகளைத் தெரிந்து கொள்ள நம்மவர் அவாவுவதும் இயல்பேயாம். அத்தகைய அவாவால் விளையும் ஆராய்ச்சிகளைத் தடுக்க முயல்வதும், அதன் பயனான முடிவுகளைத் தக்க காரணமின்றி ஒதுக்குவதும் நவீனவுலகத்தின்முன் நடவாத செயல்கள் என்பதுந் தெரிந்ததே. அவ்வாராய்ச்சிகளால் உண்மை முடிபுகள் பல ஏற்படக்கூடுமாதலால், அவற்றை யாவரும் ஏற்றற்குரிய காலம் அதிகதூரமின்றி நெருங்கியுள்ளதென்பதிலும் ஐயமில்லை. கர்ணபரம்பரைச் செய்திகளை ஒருமுகப்படுத்தி முன்னோர் எழுதிவைத்த சரித்திரச் செய்திகளுடன் பிற சாதனச் செய்திகள் மாறுபடக் கூடுமாயின், அவற்றை ஆராய்ச்சி செய்வதே குற்றமென்ற கொள்கை, சில வருஷங்கட்குமுன் நம்மவரால் ஆதரிக்கப்பட்டவளவு, இப்போதில்லையென்றே சொல்லலாம். அத்தகைய கொள்கையை ஆதிமுதலே அநாதரித்துவருபவருள் யானும் ஒருவனென்பது பலரும் அறிவர். இப்போதும் அம்முறையில் நின்றே ஆழ்வார்களைப்பற்றி நீண்டகாலமாக ஆராய்ந்துவந்த என் முடிவுகளை ஒருதொகுதியாக இன்று நான் வெளியிடப் புகுகின்றேன். இவ்வுபந்நியாசம், இதுகாறுங் கிடைத்துள்ள சாதனங்களையெல்லாந் திரட்டிக் கொண்டு ஒரு சார்புமின்றிச் சரித்திரகாரனொருவன் செய்யும் ஆராய்ச்சிபோன்

றதேயன்றி, சம்பிரதாயமுறையுள் நின்று கூறுவனவல்ல. ஆழ்வார் திருவாக்குக்களால் அவர் காலநிலைகளாகத் தெரிய வருபவை யாவை? வேறு நூல்களும் சாஸனங்களும் அவற்றுக்கு எவ்வளவில் துணையாகின்றன? என்பனவே இன்று நான் விவரிக்க விரும்பும் விஷயங்களாம்.

முதலாவதாக நான் கூறுதற்குரியது — கலியுகத் தொடக்கத்தின் முன்னும் பின்னும் ஆழ்வார்கள் அவதரித்தவர்கள் என்பதற்குப் பழைய நூற்பிரமாணம் இல்லையென்பதேயாம். மேலே கூறியபடி, திவ்யசூரி சரிதம், பின்பழகிய ஜீயர் குருபரம்பரை என்ற பழைய நூல்களிரண்டினும் ஆழ்வார்கட்கு மாதங்களும் நக்ஷத்திரங்களுமன்றி வேறு கூறப்படவில்லை. அவற்றில் நம்மாழ்வார்க்கு மட்டுங் கண்ட பஞ்சாங்க காலங்கள் இடைச்செருகலே என்பதற்கு வேண்டிய ஆதாரங்களுள்ளன. இவற்றை, அவ்வாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்து விரிவாகச் சொல்வேன். சரித்திரவறிஞரெல்லாங் கருதுமாறு, ஆழ்வார்கள் கடைச்சங்ககாலத்துக்குப்பின் வாழ்ந்தவர்களே என்பது, சங்க நூல்களிலும் சாஸனங்களிலும் நன்குபயின்றவர்கள் எளிதில் அறியக்கூடிய தென்பதில் ஐயமில்லை. இவ்வாறு, ஆழ்வார்கள் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்தவர்கள் என்பது ஆராய்ச்சியில் தெளிவாகப் பெறப்படுமாயின் அதனை மறைப்பது எதன் பொருட்டு? அதனால் அவர்கள் பெருமைக்கு வந்த குறை யென்ன? ஆசாரியர்களெல்லாம் பிற்பட அவதரித்திருப்பதால் நேர்ந்த இழுக்குண்டோ? ஆதலால், பிற்பட்ட குருபரம்பரைகளினும் திவ்யஸூரி சரிதம் ஆறாயிரப்படிபோன்ற பழைய நூல்கள் நாம் ஆதாரங்களாகக் கொள்ளத்தக்கன என்பதும், அவையும் ஆழ்வார்களால் நேரே கூறப்படும் திருவாக்குக்கட்கு இயையாதனவாயின், அத்திருவாக்குக்களே பெரிதும் பிரமாணங்களாதற்குரியன என்பதும் மறுக்கமுடியாதனவாகும்.

ஆழ்வார்களெல்லாம், ஆசாரியருட்டலைவரான ஸ்ரீமந்நாதமுனிகட்கு முற்பட்ட காலத்தவர் என்பது மேலே

கூறப்பட்டது. அந்நாதமுனிகள் கி. பி. 825-ல் அவதரித்தவர் என்று பிரபந்நாமிருதம், கோயிலொழுகு முதலிய நூல்கள் கூறுகின்றன. இக்காலம், மற்ற ஆசாரிய பரம்பரைகட்கு மிகவும் இயைந்து வருகின்றது. 825-ல் அவதரித்த நாதமுனிகள் 918-ல் பரமபதித்தார் என்று அந் நூல்களின்று நாம் அறியலாகும். இதனால் அப்பெரியார் 93—திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்தவர் என்பது பெறப்படும். பரமயோகியாகக் கூறப்படும் அவர்க்கு இவ் வயது பெரியதுமில்லை. இவ்விஷயமாகவும் நம்மாழ்வாரைப்பற்றிக் கூறுமிடத்து விரிவாகப் பிரஸ்தாபிப்பேன். ஆக, இங்கே சுருக்கமாகவும் ஐயமில்லாமலும் தெரிந்து கொள்ளற்குரியது யாதெனின், கி. பி. 825-க்கு முற்பட்டதான காலமே, எல்லா ஆழ்வார்களும் எழுந்தருளியிருந்தது என்பதேயாம். நாதமுனிகட்குப் பின்பும் ஆழ்வார்கள் அவதரித்தவர்கள் என்று சிலர் கூறுவது, பிரபிதாமகன் கல்யாணகாலத்தில் அவன் பேரன் தாம்பூலம் வழங்கினனென்ற கதை போன்றதேயன்றிப் பிறிதில்லை.

இனிச் சங்ககாலத்துக்குப் பின்னும் நாதமுனிகளது அவதாரகாலமாகிய 825-க்கு முன்னும், ஆழ்வார்கள் எவ்வெந்த நூற்றாண்டுகளில் விளங்கினரென்பது ஆராயத்தக்கது. ஆழ்வார்கள் சரித்திரங்களாக வழங்குவன யாவரும் அறிந்தவையாதலால், அவற்றை விரிக்க வேண்டியதில்லை; ஆதலின் ஆராய்ச்சிக்குரிய வளவில், சுருங்கவே கூறிச்செல்வேன்.

# முதலாழ்வார்கள்.

---

பொய்கையார், பூதத்தார், பேயார் என்றமூவரும் முதலாழ்வார்கள் என்றழைக்கப்படுவர். இவர்கள் அயோநிஜர்களாய் ஒரேமாதத்தில் அடுத்தடுத்த நக்ஷத்திரங்களில் அவதரித்தவர் என்பதும், தனித்தனியே சஞ்சரித்துவந்த இவர்கள் திருக்கோவலூரிலே நெருக்கமான இடைகழி ஒன்றில் மழைபெய்த ஒருநாளிரவு ஒதுங்குவதற்காக சந்திக்க நேர்ந்தபோது, திருமால் இவர்கட்கு அருள்புரிய விரும்பி இவர்கட்கிடையில் நான்காமவராக இருந்து இருளில் நெருக்க அதனையறிய வேறுவிளக்கின்மையால் தங்கள் ஞானமாகிய விளக்கேற்றிப்பாட, அப்பெருமான் அங்கு அவர்கட்குக் காட்சி கொடுத்தனர் என்பதும் பிரபலமான சரிதங்களாகும். இவர்களுள் பொய்கையார் காஞ்சியிலும், பூதத்தார் திருக்கடன்மல்லையிலும், பேயார் மயிலாப்பூரிலும் அவதரித்தவர்களென்றும், இவர்கள் மூவரும் திருவல்லிக்கேணியில் யோகத்தில் எழுந்தருளியிருந்த திருமழிசையாழ்வாரைச் சந்தித்து அளவளாவினரென்றும் குருபரம்பரைகள் கூறும்.

23 வருஷங்கட்கு முன்பு பொய்கையார் என்ற தலைப்பெயரிட்டுச் செந்தமிழில் ஒரு நீண்ட வியாசம் எழுதியிருக்கிறேன். * அதனில், யான் கூறிய விஷயம் அடியில் வருமாறு:—யாப்பருங்கலவிருத்தி என்ற பழைய உரைநூலில் "பொய்கையார் பாட்டு" என்ற குறிப்புடன் சில வெண்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இப்பொய்கையாரை—"சாவவுங்கெடவும் பாடவல்லவரும், முக்காலமுமுணர்ந்தவருமாகிய இருடி" என்று அவ்விருத்தி எழுது

---

* இவ்வியாசம் இந்நூலின் முதலாம் அநுபந்தமாக இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது.

கின்றது. ஆரிஷச் செய்யுள்கட்கு அவ்விருத்தி காட்டிய உதாரணங்களுள், பொய்கைவாக்கு என்று குறிப்பிடப் பெற்ற இரண்டு வெண்பாக்கள், பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியில் உள்ளன. இதனால் ருஷியாகிய பொய்கையாரும், ஆழ்வாராகிய பொய்கையாரும், வெவ்வேறானவர் என்பது, 10-ம் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர்களது கருத்தன்றென்பது வெளியாகின்றது—என்பதே.

இவ்வாறு பல வருஷங்கட்கு முன்பு பொய்கையாழ்வாரைப்பற்றி எழுதப்பட்ட என்முடிவைச் சரித்திரவறிஞர் சிலர் முழுதுந் தழுவிக்கொண்டனர்.[1] ஆனால் வேறுசிலர்[2] இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் ஆட்சேபமெல்லாம், சங்ககாலத்தவரான பொய்கையார் உலகப்பிரவிருத்தியுடையராகவும் அரசர்க்கு நண்பராய் அவர்களைப் பாடியவராகவும் தெரிதலின், நாக்கொண்டு மானிடம் பாடாதவரும் யோகியுமான பொய்கையாழ்வாராக அவர் ஒருபோதும் ஆகார்—என்பதேயாம்.

இவ்வாக்ஷேபம் என்கூற்றைப்பற்றிய தன்றிப் பழையதோர் உரைகாரர் கொள்கையைப் பற்றியதென்பது இங்கு அறியத்தக்கது. யாப்பருங்கலவிருத்தியுடையார் எழுதியவை உண்மையல்லாதுபோனால், அதுபற்றி எனக்கு அதிகக் கவலையில்லை. ஆனால் பழைய பெரிய உரைகாரரொருவரது கூற்று அக்காலத்துப் பிரபல வழக்கொன்றைப் பற்றியே அமைந்திருக்கவேண்டுமென்றும், அதனை அவ்வளவு எளியதாக ஒதுக்கிவிடுவது ஏற்கத்தகாதென்றும் நான் வற்புறுத்துவேன். முன்னோரான அவர்கூற்றுத் தக்க காரணமின்றியே தள்ளுதற்குரியதாயின், வேறு எதுதான்கொள்ளு

1. தென்னிந்திய வைஷ்ணவசரிதம் (Early History of Vaishnavism in South India) என்ற தம் நூலில் (பக். 67—73) டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் முதலியோர் இக்கொள்கை கொண்டெழுதியிருத்தல் காண்க.

2. தஞ்சை ராவ்பகதூர் K. S. ஸ்ரீநிவாச பிள்ளையவர்கள் முதலியோர் (தமிழ்வரலாறு, பக். 176-7)

தற்குரியதாகும்? அவ் யாப்பருங்கலவிருத்தியுடையாரோ 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியினர் ஆவர். பிற்பட்ட வீரசோழியவுரைகாரர் தண்டியலங்காரமுடையார் இவர்கள் போல, வீரராசேந்திரன் முதற்குலோத்துங்கன் முதலிய பிரபல சோழர்களைப் பற்றிய பாடலொன்றையும் அவர் தம்முரையுள் ஆளாமையே இதற்கு உற்ற சான்றாம்.[1] ஆகவே அவ்வுரையாசிரியர்கள் யாவும், குருபரம்பரைகள் எழுதப்பட்டதற்கு முன்பேவழங்கிய தமிழ்நாட்டுப் பழஞ் செய்திகளாதலால் சரித்திரவாராய்ச்சிக்கு அவை அடிப்படையான சாதனங்களென்றுகொள்ளத் தடையில்லை எனக.

இனி, அவ்விருத்திகாரர் ஆரிடமான கவிகட்கு உதாரணங் காட்டிவருமிடத்தே—"அவை உலகியற் செய்யுட்கோதிய உறுப்புக்களில் மிக்குங் குறைந்தும்வரும்" என்றும் அவ்வாரிடம் பாடுதற்குரியார்—"ஆக்குதற்குங் கெடுத்தற்கும் ஆற்றலுடையோராய் முக்காலமுமுணர்ந்த இருடிகள்" என்றும், அவராவார்—பொய்கையார், குடமூக்கிற் பகவர், பூதத்தார், காரைக்காற்பேயார், மூலர் முதலியோர் என்றும் எழுதி, அவ்வாறு மிக்குங்குறைந்துமுள்ள அவர் பாடல்களை மேற்கோள்காட்டிச் செல்கின்றனர்.[2] ஈண்டுக் குறிக்கப்பட்ட ஆரிடக்கவிகளெல்லாம், யோகிகளான முதலாழ்வார்களுள்ளும் நாயன்மார்களுள்ளும் சேர்ந்த அடியார்களாக விளங்குதல் அறியத்தக்கதாம். இவற்றுட் பொய்கையார்பாடிய ஆரிடச் செய்யுள் :—

"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது."

என்பது முதலியன. மூலர்பாடிய ஆரிடச் செய்யுள்—

"இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா

1. செந்தமிழ், 24-ம் தொகுதியுள் 'அமிதசாகரர்' என்ற தலைப்பெயரின்கீழ் யான் எழுதிய ஆராய்ச்சியுள், இவ்விருத்திகாரரைப் பற்றியுங் குறிப்பிட்டுள்ளேன்.

2. யாப்பருங்கலவிருத்தி, 93 (பக். 350-52).

கிளையாள், முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வெய்துகொ ளீரே"

என்பது. பூதத்தாரும் காரைக்காற் பேயாருஞ் சேர்ந்து பாடிய ஆரிடச் செய்யுள்—

"கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய்
மறைக்க வறியாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு."

என்பது. இவற்றுட் பொய்கையார் பாடிய ஆரிடச் செய்யுள் தமிழரசர் நால்வரையும் பற்றிக் கூறுதல் தெரியலாம். மூலர்வாக்காகக் குறித்த ஆரிடப்பாட்டு திருமந்திரத்தில் 204-ம் செய்யுளாக உள்ளது. ஆனால், அவ்விருத்தியில் மிக்குவந்ததாகக் குறிக்கப்பட்ட கூன்சீர், இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புக்களிற் காணப்படாததோடு, அப்பாடல் பாடபேதமுங் கொண்டுள்ளது. இதனின்று மூலரும் திருமூலரும் ஒருவரே என்பது அவ்விருத்திகாரர் கருத்தென்பது தெரியலாம். இனி ௸ விருத்தியில், காரைக் காற்பேயார் என்றும் காரைக்காற் பேயம்மையார் என்றும் பிரதிபேதமுள்ளன (ஐங்குறு. முன்னுரை, பக் 14). இதனால், அப்பெயர்கள் அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான காரைக்காலம்மையாரையே குறிப்பன என்பதுந் தெளிவாகின்றது.

இனிப் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலிய உரைகாரர்களும், விருந்து என்ற நூற்பகுப்புக்கு—"பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச்செய்யுள்" களை உதாரணங்களாகக் காட்டுகின்றனர்.[1] 'பொய்கையார் முதலாயினார் அந்தாதிகள்' என்பதனால், பூதத்தார்பேயார் அந்தாதிகளும் தழுவப்பட்ட செய்தி விளங்கும். ஆதலால் முதலாழ்வார்களது அருளிச் செயல்களையே அவ்வுரைகாரர்கள் குறிப்பிடுதல் தெளிவாம். நச்சினார்க்கினியர் "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமும் உணர்ந்த

1. தொல்காப்பியம், செய். 239, பேரா, உரை.

மாமூலர் முதலியோர் அறிவன்றேனத்து அனைநிலைவகையோராவர். அவர்க்கு மாணாக்கராகித் தவஞ்செய்வோர் தாபதபக்கத்தராவர் ''[1] என்று, பழைய செய்தியொன்று வழங்குதலை அறிந்து எழுதுவர். இவைகளால், பொய்கையார் முதலிய திருமாலடியார்களும் திருமூலர் காரைக்காற்பேயார் முதலிய சிவனடியார்களும் சமயவழியாகப் பிரபலம் பெற்றதற்கு முன்பே, பாம்பரையாகவந்த தமிழ்நாட்டு வழக்குமுறையால், ஆக்கவும் கெடுக்கவும் ஆற்றலுடைய தமிழ்ப் பெருமுனிவர்களாகக் கருதப்பட்டும், அவரது திருவாக்குக்கள் பழைய நாலுரைகளில் எடுத்தாளப்பட்டும் பெருவழக்கிலிருந்தன என்பது தெரியலாம்.

பொய்கையார் ''வாக்காக் யாப்பருங்கலவிருத்திகாரர் காட்டிய வெண்பாக்களுள், தமிழரசர்மூவரும் தொண்டைமானும் கூறப்படுகின்றனர். இதனால் தமிழ்முனியாகிய பொய்கையார், அக்காலத்து அரசர்களுடன் பழகியவரென்பது பெறப்படும். இவ்வாறு, முனிவர்களான இன்னோர் உலகப்பிரவிருத்தியுடையராய் மானிடம் பாடினரெனல் பொருந்துமா என்று சிலர் சங்கிப்பர். பரிசுபெற்று உயிரோம்புங்கருத்தோடு மானிடம்பாடிய புலவருள் ஒருவராக இவரைக் கருதுவது என்னே? உலகநன்மை புரிய விரும்பியும், அரசர்க்கு இடித்துறுதிகூறுதல் பற்றியும், அவரது பெருந்தன்மைகளைக் கருதியும் இவர்கள் மானிடம் பாட நேர்ந்ததாயின் அஃது இவர்க்குக் குறைவாகுமோ ? பொய்கையார் போன்ற முனிவர்களாலும் பாடப்பெற்றவராயின் அவ்வரசர்கள் பெருமையால் நிறைந்தவர்களாகவே கருதத்தகையென்னை ? அதனால்,

> " கோவாகி மாநிலங் காத்துநம் கண்முகப்பே
> மாவேறிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவும்
> செங்கமல நாவியான் சேவடிக்கே யேழ்பிறப்புந்
> தண்கமல மேய்ந்தார் தமர் " (இரண். திருவந். 69)

---

1. தொல்காப்பியம், புறத். 70, நச்.உரை.

என்று பூதத்தாழ்வார் அருளியபடி, அவர்காலத் தரசர்கள் திருமாலடிமையிற் சிறந்த பெரியோராகவே கொள்ளற் குரியரென்க. அன்றியும்—

" பழுதே பலபகலும் போயினவென் றஞ்சி
யழுதே னரவணைமேற் கண்டு—தொழுதேன் " (16)

என்று பொய்கையாரே கூறியவாறு, இளமையில் அரசர் போன்றவரைச் சார்ந்திருந்து அவர்கள் காலம்போக்கிய குறிப்புப் புலப்படுதலும் காணலாம்.

இவ்வாறு, அரசர்க்கு நண்பராய் ஏதோ சந்தர்ப்பத் துக்கேற்ப அவர்களைப் பாடியிருத்தலால், போரிற் பிடிக் கப்பட்ட சேரனைச் சிறைநீக்கி உய்விப்பதற்காகச் சோழன் கோச் செங்கணானைக் களவழிநாற்பது என்ற நூலாற் புகழ்ந்த பொய்கையார், மேற்கூறிய தமிழ் முனிவரான பொய்கையாழ்வாராகவே இருத்தல் கூடும் என்பது என்கருத்து. இங்ஙனம் பாடியது, தம் பேரருளால்[1] ஒரு வனது துன்பநீக்கும் அறச்செயல்பற்றியதேயன்றிப் பரிசில் நோக்கியதன்றென்பதும், பாடப்பட்ட அரசன் திருமங்கை மன்னன் புகழுமாறு பாகவதசிரோமணியென்பதும் நாம் தெரிந்துகொள்ளத்தக்கன. ஒருகால், களவழிப் பொய்கை யாரைப்பற்றிய முடிபு எத்தகையதாயினும், யாப்பருங்கல விருத்தியுடையார் கூறிய பொய்கையார் ஆழ்வாரின் வேறல்லர் என்பதே முன்னோர் கருத்து என்பது ஒருதலை யென்க.

இப்பொய்கையார் வாக்காக மேலேகுறித்த நூல்களும் பாடல்களுமன்றிப் புறநானூற்றுள் கோக்கோதைமார்பன் என்ற சேரனைப்பற்றியுள்ள 48, 49-ம் பாடல்களும், கோச் செங்கணான் என்ற சோழனைப்பற்றியுள்ள 74-ம் புறப்பாட்

---

1. " இன்னருளின், மேதக்க பொய்கை கவிகொண்டு வில் லவனைப், பாதத் தளைவிட்ட பார்த்திவனும்" (விக்கிரம சோழ னுலா) என்று, கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தரும்—சேரமானைச் சிறைநீக்கிய பொய்கையாரது பெருங்கருணைத்திறத்தையே விசே டித்துப் பாடுதல் அறியற்பாலது.

டும், நற்றிணை 18-ம் செய்யுளும், பன்னிருபாட்டியலிற் சில சூத்திரங்களும் இப்பெரியார் இயற்றியனவாகக் காணப்படு கின்றன.

> " ஆழி யிழைப்பப் பகல்போ மிரவிற்
> றோழி துணையாத் துயர்தீரும்—வாழி
> நறுமாலை தாராய் திரையவோ வென்னுஞ்
> செறுமாலை சென்றடையும் போழ்து"

என்று யாப்பருங்கலவிருத்தியில் (பக். 518) பொய்கைவாக் காகக் கண்ட வெண்பாவால், இவர் திரைய னொருவனைப் புகழ்ந்துள்ளமை தெரியலாம். திரையரென்பார், பல்லவரைப் போலவே அவர்க்குமுன் தொண்டைநாடாண்ட தமிழரச வகுப்பினராவர். இத்திரையருட் பல்லவரும் அடங்கியவராகக் கருத ஆதாரங்கள் உள்ளன [1].

இனி, இன்னிலை என்ற பெயர்புனைந்த நூலொன்று 45-வெண்பாக்களில் நாற்பாலுடையதாகப் பொய்கையாரால் பாடப்பட்டதென்றும், அது மதுரையாசிரியர் என்பவரால் தொகுக்கப்பட்டதென்றும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அஃதொன்று எனவும், அதனையியற்றியவர் ஆழ்வாராகிய பொய்கையாரே ஆகுமெனவும் எழுதிச் சிலவாண்டுகட்குமுன்பு உரையுடன் வெளியிடப்பெற்றுள்ளது. தொல்காப்பியம், யாப்பருங்கலம் என்பவற்றின் பழைய உரைகளிலே, வெவ்வேறு இலக்கணவமைதிகட்கு எடுத்துக்காட்டப்பட்டனவும் புலவர்பலரால் பாடப்பெற்றனவுமாகிய வெண்பாக்கள்சில இந்நூலின் இடையிடையே கூட்டியுங் குறைத்தும் மாற்றியும் அமைக்கப்பட்

---

1. திரையமன்னருள், பல்லவத்திரையர் என்ற பிரிவினரும் ஒருவர் என்று தொண்டைமண்டலப் பட்டயங் கூறுகின்றது (The Tamils 1800 years ago, p. 48). அன்றியும், கடலினின்றும் வந்தேறிய அத்திரையர்வழியினர் என்பதற்கேற்ப, பல்லவர்நாணயங்களிற் கப்பலுருவம் அமைந்திருத்தலும், அத்திரையரைப்போலவே நாககன்னியிடத்தினின்று உற்பத்தியானவராகப் பல்லவர் கூறப்படுதலும் ஒப்பிடத்தக்கன. (Dr. Dubreuil's "*The Antiquities of Pallavas.*")

டுள்ளன. அவையொழிந்த ஏனைப்பாடல்கள்யாவும், பழைய சான்றோருடைய வெண்பாக்கட்கு இயல்பாயமைந்த செப்பலோசைத்திறமும், குறித்தபொருளைப் புலப்படுத்தற்குரிய சொன்னயந்தொடைநயங்களும் பொருட்பொலிவும் சிறக்கப்பெறுமனும், ஆயினும் பழைமைதோன்றுமாறு முன்னோராண்ட சொல்வழக்கினும் செய்யுள்வகையினும் ஒருசில பெய்யப்பெற்றும் உள்ளன. இந்நூல் முழுவதும் பொய்கையார் ஒருவரே செய்ததாயின், அதனைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என்பது பொருந்தவில்லை. புலவர் பலராற் பாடப்பெற்ற செய்யுட்களே பின்னோரால் தொகுக்கப்படுதற்கு உரியவன்றி, தனிநூலாக ஒருவரால் இயற்றப்பட்ட தொன்றைத் தொகைநூலாக முன்னோர் யாண்டும் வழங்காமை காணலாம். "நாலடி நான்மணி...கைந்நிலைய வாங் கீழ்க் கணக்கு" என்ற பாடற்படி, கைந்நிலை என்று பெயர் பெற்றுள்ள நூலைக் கீழ்க்கணக்குகளுள் ஒன்றாகக் கொள்வதில் எத்தடையும் இதுகாறும் நிகழ்ந்திலது. அகப்பொருள் பற்றியமைந்த அப்பழைய நூலின் சிதைந்தபிரதிகள் தமிழ்ப் பெரியார் சிலரிடத்தும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தும் உள்ளன. அத்தகைய நூலொன்று உண்டென்பதை அறியாமையாலோ, வேறெக்காரணத்தாலோ—'இனியநிலையுடைய காஞ்சி' என்ற பொருளில்வந்த "இன்னிலைய காஞ்சி" என்ற பாடத்தை மாற்றி இன்னிலை என்பது ஒரு நூலென்று கொண்டு, அவ்வாறு கொண்டதற்கேற்றதொரு நூலையும்பாடிப் பொய்கையாரை ஆசிரியராக்கினரோ என்ற சங்கை பெரிதும் நிகழ்கின்றது. இதனை இயற்றியவர் பொய்கையாழ்வார் ஆதல்வேண்டும் என்று சிலர் கருதியது பொருந்தவேறயாம். சொற்பொருட்சுவைகள் பெருகிநிற்கும் அவர் திருவந்தாதியின் வாக்குக்கும், அவையின்றிக் கருகிநிற்கும் இதன்போக்குக்கும் சிறுதொடர்பும் காண்டலரிது. இந்நூலின் சொற்பொருளமைதிகளினும் அதிசங்கை நிகழ இடமுண்டேனும் அவற்றை விரிப்பதற்கு இஃது இடமன்று. சுருங்கக்கூறுமிடத்து, இது பழைய பொய்கையாரதன்றி வேறு பொய்கையார் ஒருவராற் புனைந்துவிடப் பட்ட நூலென்றே கூறத் தடையில்லை என்க.

# பூதத்தாழ்வார்.

இனிப் பூதத்தாழ்வார் அவதாரஸ்தலம் மாமல்லபுரம் என்று வழங்கும் திருக்கடன்மல்லை என்ற தலம் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. இக்கடன்மல்லையைத் தம் திருவந்தாதியில் (70) இவ்வாழ்வாரும் பாடுகின்றார். இம்மாமல்லபுரம், மகாமல்லன் என்ற மறுபெயர் கொண்ட முதல் நரசிம்மபல்லவன் என்பவனால் உண்டாக்கப்பட்ட ஊரென்றும், அதனால் அவ்வரசன் காலமாகிய 650-க்குப் பின்பே, பூதத்தாழ்வார் வாழ்ந்தவராதல் வேண்டுமென்றும் கருதினார், காலஞ்சென்ற ஸ்ரீ. கோபிநாதராயர் அவர்கள்[1]. ஆனால் இக்கொள்கை உறுதியுடையதென்று நாம் நம்புவதற்கில்லை. பழைய சிறந்த கடற்றுறைமுகங்களுள் ஒன்றாகவும், அதனால் கடல்வளம் மிகப்பெற்றதாகவும் இவ்வூர் பண்டைக்காலத்தே விளங்கியதென்பது—

"புலங்கொணிதிக் குவையோடு புழைக்கைம்மாக் களிற்றினமும்
நலங்கொணவ மணிக்குவையுஞ் சுமந்தெங்கு நான்றொசிந்து
கலங்களியங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வலங்கொண்மனத் தாரவரை வலங்கொள்ளென் மடநெஞ்சே"
(பெரிய திருமொழி, 2,6,6,)

என்ற திருமங்கைமன்னனது பாசுரத்தாற் றெரியலாம். கடன்மல்லை என்பது, மரக்கலங்க ளியங்கிக் கொழிக்கும் கடல்வளம்பற்றி வந்த பெயரே என்று பொருள்கூறுவார் போல—"கலங்க ளியங்கும் மல்லைக் கடன்மல்லை" என்று அவ்வாழ்வார் பாடுதல் அறியத்தக்கது. மல்லை என்பது வளமென்ற பொருளில், ஆழ்வார்கள் பாசுரங்களில் அடிக்கடி பயிலுதலுங் காண்க.[2] இவ்வாறு கடல்வளம் பெற்ற

---

1. The History of Sri Vaisnavas, p. 16.

2. 'மல்லை மாமுந்நீர்' (பெரியதிருமொழி. 4,3,6; 8,6,4) எனக்காண்க.

ருந்த பண்டைத் துறைமுகப்பட்டினம், முதல் நரசிம்மபல்லவனால் பின்பு புதுப்பிக்கப்பட்டு மாமல்லன் என்ற அவன் சிறப்புப்பெயரைப் பெற்றிருத்தலும், அதனால், கடன்மல்லை என்ற தன் பழம்பெயரேயன்றி, மாமல்லபுரம் என்ற புதுப்பெயரும் அதற்குப் பெருவழக்காயமைந்திருத்தலும் கூடியனவே. நரசிம்மபல்லவனால் முன்னில்லாதிருந்த ஊரொன்று புதியதாக நிருமிக்கப்பட்டு அவன்பெயர் கொடுக்கப்பெற்றது என்பதற்குச் சாஸனமுதலிய ஆதாரவு ஒன்றுமே யில்லை. அன்றியும், முதல்நரசிம்மவர்மன் தந்தை மகேந்திரவர்மன் I என்பவனுக்குச் சத்துருமல்லன் என்ற பெயர்வழக்குச் சாஸனங்களிலே வழங்குவதாம். திருக்கடன்மல்லை என்ற மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராகர் சந்நிதியுள், இப்பல்லவனுக்கும் இவன்தந்தை சிம்மவிஷ்ணுவுக்கும் சிலையுருவங்கள் அமைக்கப்பெற்று அவற்றின் மேலே அவர்கள் பெயர்களும் வரையப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது[1]. மாமல்லனான நரசிம்மவர்மனால் தனியே புதியதாக உண்டாக்கப்பட்டதே அந்நகரமாயின், தன்பிம்பத்தையன்றித் தந்தைபாட்டர்களின் உருவச்சிலைகளையும் அவன் அங்கு அமைக்கவேண்டிய நியாயமில்லை. அதனால், மகாமல்லனாகிய நரசிம்மவன்மனுடைய பாட்டன்காலத்துக்கு முன்பே அப்பட்டினம் விளங்கியிருந்ததென்பதும், அவ்வூர்க்கோயில்கள் சில அம்மகாமல்லன் முன்னோராற் கட்டப்பெற்று அவர்கள் உருவச்சிலைகளையும் உடையவாயிருந்தன என்பதும் நன்குபெறப்படும். மல்லை என்றும் அவ்வூர் ஆழ்வார் திருவாக்குக்களில் வழங்குகின்றது. “மாமல்லை கோவல் மதிற்குடந்தை” என்று பூதத்தாழ்வார் அருளிய தொடருள் ‘மல்லை’ என்பதற்குக் கொடுக்கப்பட்ட விசேடணம்—

“நீளோதம், வந்தலைக்கு மாமயிலை மாவல்லிக் கேணியான்”

என்ற திருமழிசைப்பிரான் வாக்கிற்போல வந்த அடை

1. இவ்விஷயத்தை அன்புடன் எனக்கு அறிவித்தவர் சென்னை ஹைகோர்ட்டுவக்கீலும், சரித்திரவாராய்ச்சியில் வல்லுநருமான ஸ்ரீமான் டி. ஜி. ஆராவமுத ஐயங்காரவர்கள், M.A., B.L.,

சொல்லாகக் கொள்ளற்குரியதன்றி, மாமல்லபுரம் என்ப தன் திரிபாகவே கொள்ளவேண்டுமென்னும் நியதியில்லை. ஆகவே, அக்கடன்மல்லைத் திருமாலைப்பாடிய பூதத்தாழ்வாரையும், அவர்காலத்தவர்களான பொய்கை பேயாழ்வார்களையும் 7-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டவர்களாகக் கொண்ட இராயரவர்கள் கருத்து வலியுடையதன்றென்பது விளங்கும்.

இனி, பூதத்தாரும் காரைக்காற் பேயம்மையாருஞ் சேர்ந்து பாடிய ஆசிடைவெண்பாவாக யாப்பருங்கலவிருத்தியுடையார் காட்டிய பாட்டு மேலே குறிக்கப்பட்டது. அதனால், அப்பெரியாரிருவரும் ஒரு காலத்தவரென்பதே அவ்வுரையாளர் கருத்தென்பது பெறப்படும். "அவையடக்கியலே" என்ற தொல்காப்பியச் சூத்திரவுரையுள் (113)—

"திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்
உரைத்த வுரைபோகக் கேட்டு—முரைத்த
பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவா செய்வார் பலர்"

என்ற வெண்பாவைக் காட்டி 'இது பூதத்தார் அவையடக்கு' என்றெழுதினர், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். இவ்வெண்பா ஆழ்வாரான பூதத்தாருடையதோ, பிறருடையதோ தெரிந்திலது. இனிப் பேயனார் என்ற சங்ககாலத்துப் புலவரொருவர் உளர். அவரையும் பேயாழ்வாரையும் ஒருவரென்று கருதற்கிடமில்லை. இப்பேயாழ்வாரைப் பற்றித் தமிழ்நூல்வழியாக வேறுசெய்தியும் கிடைத்திலது.

# திருமழிசையாழ்வார்.

இவர், தொண்டைநாட்டுள்ள திருமழிசை என்ற க்ஷேத்திரத்தில், பகவானை ஆராதித்துவந்த பார்க்கவ முனிவர்க்கு அவர்பத்தினியிடம் பிண்டரூபமாக அவதரித்து அவர்களால் வழியிடையே அநாதரவாகக் கைவிடப்பெற்றவர். இப்பிண்டம் சிலநாள்களில் உருப்பெற்ற குழந்தை வடிவாகி அழுது சோர்ந்துகிடப்பதைக் கண்ட திருவாளர் என்ற சதுர்த்தரொருவர் அதனை எடுத்து வளர்த்துவர, இவரும் வளர்ந்து இளமையிலேயே பரஞான முதிர்ச்சி பெற்ற யோகியாக விளங்கினர். இப்பெரியாரது குழந்தைப் பருவத்தில் இவரது மகிமையறிந்து பால்கொடுத்து வந்த பாகவதரொருவர்க்கு இவரருளாற் பிறந்த கணிகண்ணர் என்பவர், இவருக்கு இணைபிரியாத் தொண்டராயினர். திருமழிசையார் உண்மைத் தத்துவம் இன்ன தென்பதை அறிய முயன்று சைன பௌத்த சைவமுதலிய எல்லாச் சமயங்களையும் ஆராய்ச்சிசெய்து முடிவில் திருமாலே பரதெய்வமென்று தெளிந்து, அப்பெருமானை இடைவிடாது தியானித்துக்கொண்டு திருவல்லிக்கேணியில் நெடுங்காலம் யோகத்தில் எழுந்தருளியிருந்தார். அப்போது, பரம யோகிகளும் முதியோர்களுமான முதலாழ்வார் மூவரும், திருவல்லிக்கேணிக்கெழுந்தருளித் திருமழிசையாரது பிரபாவமறிந்து அவரைச் சந்தித்து அளவளாவிப் பிரிந்தனர். பின்பு, இப்பெரியார் அம்முதலாழ்வார்கள் அவதரித்த தலங்களைத் தரிசித்துவிட்டுத் திருக்குடந்தைக்குச் செல்லத் தொடங்கி, இடையில் கச்சித் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்தபோது, ஆங்குத் தமக்கு உரிய கைங்கரியஞ் செய்துவந்த கிழவியொருத்தியைக் குமரியாக்கி யருளினர். இவ்வற்புதச் செய்தியை அறிந்த அந்நகரத்தரசன் தன் கிழத்தனத்தையும் நீக்கிவைக்க ஆழ்வாரைத் தம்மிடம்

அழைத்துவரும்படி கணிகண்ணர்மூலம் தெரிவிக்க, ஆழ்வார் அதற்கிணங்காராகச் சினங்கொண்டவேந்தன் அவ்விருவரும் தன்னகரைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டனன். உடனே, திருமழிசையார் திருவெஃகாவில் அறிதுயிலமர்ந்த திருமாலையும் தம்முடன் வெளியேறும்படி வேண்டி அப்பெருமானைப் பரிவாரங்களுட்பட உடனழைத்துக் கொண்டு கணிகண்ணரோடும் அந்நகரத்தைவிட்டு நீங்கினர். இச்செய்தியறிந்த அரசன் ஆழ்வாரது பிரபாவமறிந்து, அவரைப் பெருமானுடன் திரும்புமாறு பிரார்த்தித்தழைத்து அவர்க்குத் தொண்டுபூண்டனன். பின்பு, திருமழிசையாழ்வார் திருக்குடந்தை என்ற தூப்பகோணஞ் சென்று, அங்கே யோகத்தில் நெடுங்காலம் எழுந்தருளி யிருந்து, திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதிகளை அருளிச்செய்து பின் பரமபதம் அடைந்தார்—என்பது இவ்வாழ்வாரது சரித்திரச் சுருக்கமாகும்.

இவ்வரலாற்றினின்றும், முதலாழ்வார்மூவரும் திருமழிசைப்பிரானுக்கு ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களென்பதும், அந்நால்வரும் ஒருகாலத்தவர் என்பதும் தெரியலாம். காஞ்சியில் ஆட்சிபுரிந்த அரசன் இன்னானென்று திவ்யசூரிசரிதம் கூறவில்லையேனும், அவன் பல்லவ வமிசத்தவனென்று பின்பழகியசீயர் குருபரம்பரை முதலியன கூறுகின்றன. இது பழையதொரு வரலாற்றைப் பற்றி வழங்கியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. 2-ம் நூற்றாண்டுக்கு முன்பு, காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர் தென்னாடாண்டவர் என்பதற்கு எவ்வகையாதாரமும் இல்லையென்று சரித்திரவறிஞர் கூறுவர். இக்கருத்து உண்மையுடையதாயின், திருமழிசையாழ்வார் அந்நூற்றாண்டுக்குப் பின்பே விளங்கியவர் என்பது பெறப்படும். இவ்வாழ்வார்நாளிலிருந்த பல்லவன் இன்னான் என்று கூறவிடமில்லையேனும், சோழன்—கோச்செங்கணான், திரையன் போன்ற பழையஅரசரைப் பாடிய பொய்கையார்க்குச் சமகாலத்தவராகக் கூறப்படுவதால், திருமழிசைப்

பிரான் முற்பட்ட பல்லவனொருவனது ஆட்சிக்காலத்தில் விளங்கியிருந்தவர் என்றே கருதலாம். அன்றியும், இவ்வாழ்வார் திருவாக்கினின்றே அறியப்படும் மற்றொரு குறிப்புமுண்டு.

" காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன்
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணபரனே* யுன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்."

(நான். திருவந். 93.)

என்று தம் திருவந்தாதிப் பாசுரத்தில், திருமாலை இவ்வாழ்வார் குணபரனே என்று விளித்தல் காணலாம். குணபரன் என்றபெயர் முதல் மகேந்திரவர்மனுக்கு உரியதென்பது சாஸனங்களால் தெளியப்படும். இப்பல்லவன் பெயரால் திருமாலை ஆழ்வார் கூறுதல், அவ்விருவரும் ஒருகாலத்தவரென்பதைக் குறிப்பிக்கும் என்பது சிலர் கருத்து[1]. இவ்வூகம் முதலில் எனக்கு விநோதமாகவே தோற்றியது. ஆயினும், திருமாலின் திருநாமங்கள் எண்ணிறந்தன இருப்பவும், ஆழ்வார்களெவரும் எடுத்தாளாத இந்நாமத்தால் அவர் பெருமானை விளிப்பது ஒருகருத்தை உட்கொண்டு போலும் என்று, அவர் காலநிலையோடு பொருந்தநோக்கும் போது புலனாகின்றது.

பல்லவ வேந்தர்கள் தெய்வாமிச முடையவர்களாகக் கருதப்பட்டு, அவர்களை ஸத்தியபராக்கிரமன், ஸகலகல்யாணன், புருஷோத்தமன், பராபரன், த்ரைலோக்யவர்த்தனன், ஸ்ரீநிதி, அநூபமன் என்றித்தகைய கடவுட்பெயர்களால் அக்காலத்து மக்கள் சிறப்பித்துக் கூறிவந்த செய்தியைச் சாஸனங்களினின்றும்[2] அறியலாம். ஸர்வேசுவரனுக்குரிய இத்தகைய பொருள்சேர் புகழ்ச்சிப்பெயர்களைச்

* 'குணப்பரனே' என்று ஒற்றிரட்டித்துப் பாடம்வழங்குவர்.

1. காலஞ்சென்ற ஸ்ரீ. எம். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், எம். ஏ., அவர்கள் இவ்வாறு கருதியெழுதினர் (The Tamil Studies. pp.305, 6.)·

2. S. I. I. vol. i. pp. 1—4

சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினரான மக்கட்குத் தங் காலத்தார் கண்டவாறு வழங்கியிருப்பது ஆழ்வார்க்கு மிக்க வெறுப்பை உண்டாக்கியிருக்கவேண்டும் என்பது நிச்சயம். 'நாக்கொண்டு மானிடம் பாடேன்' என்பர், இப்பெரியார். அதனால், தங்காலத்தரசன் தனக்குத்தகாத குணபரன் என்ற பெயரைத் தரித்திருப்பதிலும் வெறுப்புற்று, 'அவ்வீது அனந்த கல்யாண குணபரிபூர்ணனாய் அதனால் குணபரத் என்ற திருநாமம் பெற்ற எம்பெருமானுக்கே உரியதாம்' என்ற திருவுள்ளத்துடன் குணபரனே என்று பெருமானை இவர் அழைத்திருத்தல் கூடியதேயன்றோ? தீர்த்தகரர் என்று சைநசமயப் பெரியோர்களுக்கு வழங்கும் பெயர் அவர்க்குச் சிறிதும் ஏற்காதது என்ற கருத்தால்—

"பண்டிப் பெரும்பதியை யாக்கிப் பழிபாவங்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறாதே—எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்
தீர்த்தகர ராமின் திரிந்து."

என்று, பூதத்தாழ்வார் உண்மையான தீர்த்தகரராகும்வழி இதுவென்று அருளிச்செய்தலும்,

"மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகேசரியாய் போற்றி"

என்று, 'அரிகேசரி எனப் பாண்டியர்கொண்டுள்ள சிறப்புப் பெயர் சிவபிரானுக்கே ஏற்றது' என்ற குறிப்புத் தோன்றத் திருவாதவூரடிகள் பாடுதலும் இங்கு ஒப்பிட்டறியத்தகும்.* இவ்வாறே ஆழ்வாரும் குணபரப்பெயரை வழங்கினர் என்பது ஏற்றுக்கொள்ளப்படின், அப்பெயர்கொண்ட மகேந்திரவர்மனது ஆட்சிக்காலத்தைத் (618—646) திருமழிசையாரது வாழ்நாளின் பிற்பகுதியாகக் கொள்ளலாம். இவ்

---

* இவ்வாறன்றி "வேந்தாய் விண்ணவராய்...மற்றெல்லாமாய்" என்று இவ்வாழ்வாரும், (நான். 83), "பெருந்துறை மேய தென்னவன் சேரலன் சோழன்" (திருவாசகம்,குயிற்பத்து,7) எனத் திருவாதவூரடிகளும் பாடியவாறு, 'திருவுடைமன்னர் உருவமாக நின்று அருள்புரிபவனும் கடவுளே' என்ற கருத்துடன் அவ்வாறு கூறினர் எனினும் பொருந்தும்.

வாறு கொள்வதற்கு அடியில்வருமாறு அவர் காலநிலையும் இயைந்துள்ளமை அறியத்தக்கது.

முதலாழ்வார்கள் வாழ்ந்தருளுகிற காலத்தே அவர்கள் அவதரித்து மகிமைபெற்ற காஞ்சிமண்டலத்திலும் பிற இடங்களிலும் சைனபௌத்தமதங்கள் பெரிதும் செழித்து அவர்கள் கவனத்தைக் கவர்ந்தனவாயிருந்தன என்று சொல்வதற்கில்லை. 'அரனதிகம் உலகளந்த அரியதிகம்' என்று அதிகவேற்றுமை பாராட்டிய பிற்காலநிலை போலின்றி அவ்விருகடவுளரும் ஒருபரம்பொருளின் உருவவேறுபாடுகளே என்ற கொள்கை அம்முதலாழ்வார் மூவர் திருவுள்ளங்களிலும் குடிகொண்டிருந்ததனால், சைவமதவைஷம்யமான கருத்துக்கள் அவர்கள் திருவந்தாதிகளிற் காண்பதரிதாகும்.

" முதலாவார் மூவரே யம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன் " (15)

" அரனா ரணனாம மான்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று " (5)

" ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு " (74)

" பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தாற்றிரிவ ரேனு மொருவன்
ஒருவனங்கத் தென்று முளன் " (98)

எனப் பொய்கையாழ்வார் தம் முதல் திருவந்தாதியிலும்,

" தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து"

எனப் பேயாழ்வார் தம் மூன்றாந் திருவந்தாதியினும் பாடிய பாசுரங்களும் பிறவும் மேற்கூறிய கருத்தை விளக்கவல்லன.

இனித் திருமழிசைப்பிரான் வாக்கை நோக்குமிடத்து, அவர் நாளில் சமயவாதங்கள் நாட்டிற் பெருகியிருந்தன என்பது நன்கு புலனாகும்.

" அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பின்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலா லின்று. (நான்முகன் 6)

" நாரா யணனென்னை யாளி நரகத்துச்
சேராமற் காக்குந் திருமால்தன்—பேரான
பேசப் பெறாத பிணச்சமயர் பேசக்கேட்
டாசைப்பட் டாழ்வார் பலர்" (ஷை. 14)

" சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோஞ் சங்கரனார்
ஆக்கிய வாகமநூ லாராய்ந்தோம்— பாக்கியத்தாற்
செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்" (பின்பழகிய. குருபரம். பக். 10.)

என்ற ஆழ்வார் பாசுரங்களால் மேற்கூறிய செய்தி வெளியாகும். அன்றியும், சைவவைணவர்க்குள் மாற்சரியங்களும் இவர் காலத் திருந்துவந்தன.

" மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை
கற்றைச் சடையான் கரிகண்டாய்" (நான்முகன். 26).

" பிதிரு மனமிலேன் பிஞ்ஞகன் றன்னோ
டெதிர்வ னவனெனக்கு நேரான்" (ஷை. 84).

" காணினு முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவரை
ஆணமென் றடைந்துவாழு மாதர்காள்" (திருச்சந். 69.)

என்பனபோன்ற இவர் பாடற்றொடர்கள், முதலாழ்வார் போக்கிற்கு முற்றும் வேறுபட்டனவென்றே சொல்லத்தக்கன. இவ்வாறு சமயவிரோதங்கள் செறிந்து நிகழ்ந்தது குணபரனாகிய மஹேந்திரவர்மனது ஆட்சிக்காலமேயாம். இப்பல்லவனை முதலிற் சைனசமயத்தவனாயிருந்து, திருநாவுக்கரசுநாயனாரால் சைவமதத்திற்குத் திரும்பப் பெற்றவன். இவன் மகன் காலத்தேதான், சிறுத்தொண்டர் திருஞானசம்பந்தரென்ற சிவனடியார்கள் விளங்கினர். இக்

மறைமலையடிகள் நூல் நிலையம்
L495a

குணபரன் சைவப்பற்றுடையவனாயினும், ஏனைய வைதிக மதங்களில் வெறுப்புக்காட்டி வந்தவனல்லன். மகேந்திர வாடியில்[1] திருமால்கோயிலொன்று இப்பல்லவனாற் கட்டப் பட்டிருப்பதும், மாமல்லபுரத்து ஆதிவராகர் சந்நிதியில் இவனது உருவச்சிலை அமைந்திருப்பதும் வைஷ்ணவசமயத் தும் இவன்வைத்திருந்த அபிமானத்துக்கு உற்றசான்றாக ளாம். குணபரனது சமயச்சார்பு இத்தகையதாயினும், இவன் தந்தை சிம்மவிஷ்ணுவும், இவன்மகன் நரசிம்மவர்ம னும் பரம வைஷ்ணவர்கள். இவர்கள் போன்ற அரசரது ஆதரவுகளாலும் பெரியோர் அவதாரங்களாலும் சைவம் போலவே திருமால் சமயமுந் தழைத்திருந்ததென்றே சொல்லத்தகும். முதலாழ்வார்காலத்தில் ஆட்சிபுரிந்து வந்த பல்லவவேந்தர் திருமாலடிமைத்திறத்திற் சிறந்தவ ரென்று பூதத்தாழ்வார் தம் திருவந்தாதியுட் குறிப்பிட் டுள்ளசெய்தி மேலே கூறினேன். இவ்வேந்தர் சிம்மவிஷ்ணு வும் அவன் முன்னோருமாகவே கொள்ளத் தடையில்லை[2]. இவ்வாறு சைவமும் வைணவமும் அரசராதரவு பெற்றுப் புறமதத்தவரைத் தாக்குவதில் ஒன்றிய கருத்துடைய வாக இருந்தனவேனும், அவ்விருசமயத்தார்க்கும் வேறு வகையில் உள்ளார்ந்த மாற்சரியங்கள் நிகழாமற் போக வில்லை. இதற்கு மேற்காட்டிய திருமழிசையார் வாக்குமட் டுமே யன்றி—

---

1. இவ்வூர், சோழசிம்மபுரத்தை அடுத்துளது. இதன் குடைவரைக் கோயிலிற்கண்ட சாஸனத்தால், 'மகேந்திர விஷ்ணுக்கிருகம்' என்பது அவ்வூர்த் திருமால் கோயிலின் பழையபெயர் என்று தெரியவருகின்றது. (Ep. Rep. 13 of 1896).

2. மகேந்திரவர்மனைச் சைவனாகக் கூறத்தகுமாயினும் அவன் தந்தை சிம்மவிஷ்ணுவையும், அவன் முன்னோரான பல்லவரிற் பலரையும் பரமபாகவதர்கள் என்று விசேடித்துச் சாஸனங்கள் கூறுகின்றன. (Ind. Ant. Vol, V. pp. 50, 154 ; Vol. XV. p, 274) "நம் கண்முகப்பே மாவேறிச் செல்கின்ற மன்னவரும், செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும்...தமர்" என்று தம் காலத் தரசர் பரம்பரையே வைஷ்ணவர்கள் என்று பூதத்தார் இரண்டாந் திருவந்தாதியில் (69) பாடுவதற்கு இயையவே, சாஸனங்களும் அக் காலத்துப் பல்லவரைக் கூறுதல் அறியத்தக்கதாம்.

" நூறு கோடி பிரமர்கள் நுந்திஞர்
ஆறு கோடி நாரயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச ஞெருவனே.

" தாயினு நல்ல சங்கர னுக்கன்ப
ராய வுள்ளத் தமுதருந் தப்பெறார்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே"

என்பனவும், இலிங்கபுராணம் திருக்குறுந்தொகை போன்ற பதிகங்களில் அமைந்த அப்பர்பாடல்களும், தம் தேவாரப் பதிகங்களின் ஒன்பதாங்கவிதோறும் திருமாலைத் தாழ்த்தியுரைப்பதையே சங்கற்பமாகக்கொண்ட சம்பந்தர்பாடல்களும் வைஷ்ணவமயக்கொள்கை ஒருபுறம் வளர்ச்சிபெற்று வந்ததையும், அதனினும் சைவத்தில் அதிகப்பற்றுத் தமிழ் மக்கட்கு உண்டாகும் நோக்கத்துடன் அவ்வாறு பாடப்பெற்றன என்பதையுங் குறிப்பிக்கக் கூடியனவாம். ஆனால் பொதுப்பகைவரான புறச்சமயிகளுடன் பெரும்போர் புரிந்து சநாதனதர்மங்களைப் போற்றவேண்டியிருந்த நிலையில், வைதிகர்களான தங்கட்குட் பெரியவிரோதங்களை வளர்த்துக்கொள்ள அவ்விருசாராரும் விரும்பியிரார் என்றே கருதலாம். சைவவைணவவாதம் நிகழ்ந்ததாக அவ்விருவர் நூல்களினும் ஒத்தவரலாறு காணப்படாமையும் நோக்கத்தக்கது.

இவற்றால், சமயவாதஞ் செறிந்து நிகழ்ந்த மகேந்திரவர்மனது ஆட்சிக்காலமே திருமழிசைப்பிரானுக்கும் உரியதென்று கொள்வது பெரிதும் பொருந்தும் எனலாம். இதற்கேற்ப, குணபரன் என்ற பல்லவன் பெயரையே, பொருட்பேறு சிறத்தல்பற்ற அவ்வாழ்வார் திருமாலுக்கு வழங்கலாயினர்—என்று மேற்கூறிய கருத்தும் ஏற்புடையதாயின், அப்பல்லவன் ஆட்சிபுரிந்த 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கமே, திருமழிசையாரது வாழ்நாளின் பிற்பகுதியென்று துணியத் தடையில்லை. பரமயோகியாய்

நெடுங்காலம் வாழ்ந்தவர் என்று இவ்வாழ்வாரைக் குரு பரம்பரைகள் ஒருங்கு கூறுகின்றன. அதனால், இப்பெரியார் 6, 7-ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளினும், இவர்க்கு மூத்தவர்களும் 'முக்காலமும் உணர்ந்த இருடி'களுமான முதலாழ்வார் மூவரும் 5, 6-ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளினும் எழுந்தருளியிருந்தவர்கள் என்பதில், எவ்வகைத் தடையும் நிகழ இடமில்லை. சோழன் செங்கணானைக் களவழியாற் பாடிய பொய்கையார் முதலாழ்வார்களுள் முன்னவரே என்று கருதுவதற்குத் தக்க காரணங்களிருத்தல் மேலே விளக்கப்பட்டது[1]. இச் செங்கணான் கடைச்சங்கத்தரசருள்ளே பிற்பட்டவன் என்பது சங்கநூல்களை ஆராயுமிடத்து நன்கு பெறப்படும்[2].

1. கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர் தம் இராசராசனுலாவில்—"சொன்மாலை நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்" என்று சிறப்பிக்கின்றார் "சுடராழி யானடிக்கே சூட்டினன் சொன்மாலை" என்று தம் திருவந்தாதியைப் பொய்கையாழ்வார் தொடங்குதலின், அதனை உட்கொண்டே கூத்தர் அப்பெரியாரை அவ்வாறு விசேடித்தனர் என்று கொள்ளத்தகும். சொன்மாலை நல்லவன்—பாமாலையாகிய திருவந்தாதியைப் பாடிய நல்லடியார் என்றவாறு. விக்கிரம சோழனுலாவில், இன்னருளின் மேதக்க பொய்கை என்று அப்புலவரே பாடியதொடர்—திருமாலின் பேரருள்பெற்றுச் சிறந்தவர் அப்பெரியார்—என்ற கருத்துடன் அமைக்கப்பட்டதாகக் கருதவும் இடமுண்டு.

2 சோழன் செங்கணான், சேரமான்-கணைக்கா லிரும்பொறையைப் போரில் வென்று அகப்படுத்தியபோது, சேரனைச் சிறை மீட்கவேண்டி அச்சோழன்மேற் களவழிபாடிய பொய்கையாரே, கோக் கோதைமார்பன் என்ற சேரனையும் 48-ம் புறப்பாட்டாற் பாடியுள்ளார். இவ்வாறு, இப்புலவர் காலத்தவர்களாகத் தெரியும் கணைக்காலிரும்பொறை, செங்கணான், கோக் கோதைமார்பன் என்ற அரசர் மூவரும் முற்பட்ட சங்கப்புலவரெவராலும் பாடப்பெற்றவர்களாகத் தெரியவாராமையின், அன்னோர், சங்ககாலத்துக்குச் சிறிது பிந்திய காலத்தில் வாழ்ந்தவர்களென்று கருதத் தகும். நற்றிணையுள் (18)—"மூவன்...எயிறழுத்திய கதவிற் றொண்டி" என்று பொய்கையார் வாக்கிற்கண்ட செய்தி, சிலர் கருதுவது

பழைய சோழசாஸனங்கள் சிலவும்[1] இவனை அவ்வாறே குறிப்பிடுகின்றன. இவற்றால், இச்சோழன் ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனென்று கருதல் குறைவாகாது. ஆகவே செங்கணான் வாழ்ந்த அந்நூற்றாண்டே பொய்கையார் முதலியவர்க்கும் ஏற்றதாதல் கண்டுகொள்க.

இனி, ஆக்கவுங்கெடுக்கவும் பாடவல்ல ஆற்றலுடையராய் முக்காலமுமுணர்ந்த முனிவர்களாகப் பொய்கையார் பூதத்தார், குடமூக்கிற் பகவர், காரைக்காற் பேயம்மையார் திருமூலர்—என்றிவர்களை யாப்பருங்கலவிருத்தியுடையார் கூறியதும், இவர் யாவரும் பழைய திருமால்சிவனடியார்களாக அமைதலும் மேலே விளக்கப்பட்டன. இவர்களுள் குடமூக்கிற் பகவர் என்ற பெரியார் இயற்றிய நூல் வாசுதேவனார்சிந்தம் என்ற பெயர்பெற்றதென்றும், அந்நூலுள் மிக்குங்குறைந்தும் வரும் செய்யுள்களும் ஆரிடமாம் என்றும் அவ்விருத்திகாரர் குறிப்பிடுவர். குடமூக்கிற் பக

---

போல், அப்புலவர் காலத்து நிகழ்ச்சியாகக் கொள்ள வேண்டுவதன்று. புறநானூற்றுள் (48)—“தொண்டி, அஃதெம் மூரே யவனெம் மிறைவன்” என்று இப்புலவர் பாடியது, தாம் எடுத்துக்கொண்ட புலவராற்றுப்படைத் துறைக்கேற்ப ஆற்றுப்படுக்கும் புலவன்கூற்றாகக் கூறியதேயன்றிப் பிறிதன்றென்பதும் அறியத்தக்கது. இனிப் பொய்கையாராற் பாடப்பட்டவனாக மேலே கூறிய திரையன் என்பவன், சிலர் கருதுவதுபோல், பெரும்பாணாற்றுப்படை கொண்ட இளந்திரையன் என்று கொள்வதற்கு ஆதாரமின்று; அவ்விளந்திரையன்வழியில் வந்த சிற்றரசனாகக் கொள்ளற் குரியனென்க.

1 சோழவமிசாவளியை விரிவாகக் கூறும் அன்பில், திருவாலங்காடு, கன்னியாகுமரி முதலிய இடங்களிலமைந்த சாஸனங்கள், செங்கணானைக்—கரிகாலன் வழித்தோன்றலாகவும், 9-ஆம் நூற்றாண்டினனான விசயாலயனுக்கு முன்னோனாகவும் இடைப்பட வைத்துக் கூறுகின்றன. இதனால், விசயாலயனுக்குமுன் பிரபலம் பெற்றிருந்த சோழன், செங்கணான் ஒருவனே என்பதுபெறப்படும். திருஞானசம்பந்தமூர்த்திகளால் இச்சோழன் பாடப்பெற்றிருத்தலின், 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதே அவ்வரசன் காலமாகும்; அஃது ஐந்தாம் நூற்றாண்டெனல் பொருந்துமென்க.

வர் என்பது குடமூக்கில் என்ற தலத்து வாழ்ந்த முனிவ ராகிய திருமாலடியார் என்ற பொருள்பெறும். குடமூக்கில் —கும்பகோணம்; "பாம்பணைமேற் சேர்ந்தாய் குடமூக்கில் கோயிலாக் கொண்டு" என்பது இரண்டாந்திருவந்தாதி (97). பொய்கையார் பூதத்தார் களோடும் ஒருசேரவைத்து அவ்விருத்திகாரர் குடமூக்கிற்பகவரைச் சிறப்பித்தலால், அவர்களோடொத்தபெருமையினர் அப்பெரியா ரென்பது தெளிவாகத் தடையில்லை. இனி, அப்பகவர் யாவர் என்று ஆராயுமிடத்து, அவர் திருமழிசைப்பிரான் போலும் என்று கருதும்படியிருத்தல் கவனிக்கத்தக்கது. இவ் வாழ்வாரைப்பற்றிக் குருபரம்பரைகள் கூறும் வரலாறுகளி லிருந்து, இவர், தம் வாழ்நாளின் பிற்பகுதியில் திருக் குடந்தை சென்று தங்கி, அங்கே நெடுங்காலம் யோகத்தி லெழுந்தருளியிருந்து பின் வீடுபெற்றவரென்பதும், அந் நகரில் இவர் இருந்தருளிய நாளில் இயற்றிய திவ்யப்பிர பந்தங்களே திருச்சந்தவிருத்தமும் நான்முகன்திருவந்தாதி யுமென்பதும் நன்கறியலாகும். ஆகவே, யோகியான திரு மழிசையாழ்வாரும் பண்டைத் திருமாலடியாரான முனிவ ரென்று கூறப்பட்ட குடமூக்கிற்பகவரும் ஒருவராதற் குரிய பொருத்தமிருத்தல் தெரியலாம். இனி இப்பகவர் செய்த நூல் வாசுதேவனார்சிந்தம் என்னும் பெயர்பெற்ற தென்று அவ்விருத்தி கூறுகின்றது. இப்பெயர்க்கு 'வாசு தேவனாகிய திருமாலைப்பற்றிப் பாடப்பட்ட சிந்த நூல்' என்பது பொருளாகும். இந்நூற்பெயரை நோக்குமிடத்து, இது திருமழிசையார் அருளிய திருச்சந்தவிருத்தத்தி னும் வேறாகாதென்றே கொள்ளும்படியுள்ளது. (வாசு தேவனார்) 'சந்தம்' என்பதே 'சிந்தம்' என்று பிற்காலத்துத் திரிந்திருத்தல் வேண்டும். வளாகம், கலாய்த்தல் என்பன விளாகம்[1] கிலாய்த்தல்[2] என மொழிமுதல் அகரம் இகர மாகத் திரிதல் பண்டைக்காலமுதலேயுள்ள வழக்காதலுங்

---

1. "பைம்பொழில் விளாகத்து" (தேவா. பக். 784, பாட். 6, சாமிநா. பதிப்பு.)

2. "நெண்டிக் கொண்டேயுங் கிலாய்ப்பன்" (ஷை, 743, 8).

காண்க. அறிவுடையநம்பி என்பவரால் வஞ்சியடிகளிற் செய்யப்பெற்ற சிந்தநூலொன்றும் யாப்பருங்கல விருத்திகாரரால் அவ்விடத்தே மேற்கோள் காட்டப்பட்டுளது.[1] வாசுதேவனார்சந்தமும் அத்தகையதுபோலும் என்ற கருத்தால், பின்னோர் அதனையும் சிந்தம் என்று திரித்து வழங்கியிருத்தல் வேண்டும். வாசுதேவனார் சிந்தமும் அறிவுடைய நம்பியதுபோலவே வஞ்சியடியில் அமைந்திருந்ததாயின், அந்நம்பிசெய்த நூலை மேற்கோள்காட்டிய யாப்-விருத்தியுடையார், அவ்விடத்தே குடமூக்கிற் பகவர் செய்த நூலையும் குறிப்பிட்டெழுதியிருப்பரென்பது ஒருதலை. அங்ஙனம் அவர் எழுதாமையால், அப்பகவர் செய்த வாசுதேவனார் சிந்தமென்பது, திருமழிசைப்பிரான் அருளிய திருச்சந்தவிருத்தமாகவே கருதற்குப் பொருத்தம் உண்டென்க. குடமூக்கிற்பகவரது இச்சந்தத்துள், எழுத்துக்கள் மிக்கும் குறைந்தும் வந்த பாடல்கள் உள்ளன வென்றும், அவை ஆரிடமாமென்றும், யாப் - விருத்தி யுடையார் எழுதியவாறே, திருச்சந்த விருத்தத்துள்—

" ஆதி யான வான வாண ரண்ட கால நீயுரைத் [தி]"
(பாட்டு-8, அடி-3)

" நாச மாகி நாளு லப்ப நன்மைசேர் பணங்கனிக் [கு]" (80, 2)

" மாறு செய்த வாள ரக்கன் நாளு லப்ப வன்றிலங் [கை]"
(116, 1)

என்ற பாசுரவடிகளினீற்றில் எழுத்தொன்று மிகுந்தும், "பெறற்க ரிய நின்ன பாத பத்தி யான பாசனம்" (100, 3) என்ற அடியின்முதலில் எழுத்தோசை குறைந்தும் வந்துள்ளமை காணலாம். யாப் - விருத்திகாரர் ஆரிடச்செய்யுட்டொடராகக் குறிப்பிட்ட பொய்கையார் வாக்குள்ளும்—

" சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல் [லு]"
" இருந்தான் றிருநாம மெண் [ணு]"
(முதற்றிருவந்தாதி, 69, 51.)

என, ஈற்றெழுத்தொன்றே மிக்கு வந்திருத்தலும் ஈண்டு ஒப்பிடற்பாலது. இனி, திருச்சந்தவிருத்தத்தை ஆழ்வார்

1. " யாப். வி. 93, பக். 392.

திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்தபோது இயற்றியவர் என்பதற்கேற்ப, அந்நகரிற் கோயில்கொண்ட திருமாலை இப்பெரியார் அந்நூலுட் பலபாடல்களாலுஞ் சிறப்பித்துப் பாடுதல் காண்க. (56—61).

இவ்வாழ்வார் அருளிய திருவந்தாதியின் 63-ஆம் பாசுரம் சிறிது ஆராய்ச்சிக்கு இடந்தருவதாயுள்ளது. அஃதாவது—

"தரித்திருந்தே னாகவே தாரா கணப்போர்
விரித்துரைத்த வெந்நாகத் துன்னைத்—தெரித்தெழுதி
வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது."

என்பது. இதன் முதலிரண்டடிகட்கு—"நக்ஷத்ர கதியாயிருக்கிற ஜ்யோதிஸ்-சாஸ்திரத்தைச் சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருக்கிற உன்னை" என்பது பூர்வ வியாக்யானம். இதன்படி 'தாராகணப்போர் விரித்துரைத்த' என்ற விசேடணம் ஆதிசேடனுக்கு உரியதாகும். ஆனால் அவனை இவ்வாறு விசேடிப்பதற்குரிய நேரான பொருத்தமொன்றுங் காணப்படவில்லை. ஆதிசேடன் செய்த சோதிட நூல் இன்னதென்பதுந் தெரிந்திலது. அதனால், 'வெந்நாகத் துன்னை' என்றுள்ள பாடம் 'விரித்துரைத்த வென்னாகத் துன்னை' என்றிருந்த பழம்பாடத்தினின்றும் மாறியதோ என்று கருத இடந்தருகின்றது. '(சோதிட நூலை) விரித்துரைத்த, (என் + ஆகத்து =) எனது நெஞ்சிடமாகவுள்ள, உன்னை'—என்பது இப்பாடப்படி பொருளாகும். ஆகம் என்பது சண்டு மனம்; 'ஆகத் தெழுகனல் கண் வழியுக' என்றார் கம்பநாடரும் (கரன்வதை, 97). இங்ஙனம் 'தாராகணப்போர் விரித்துரைத்த' என்பது, ஆழ்வார்க்குரிய விசேடணமாயின், தம்மாற் செய்யப்பெற்ற சோதிட நூலொன்றைப்பற்றி அவர் குறிப்பிட்டனராவர். அத்தகைய நூல் யாது என்பது ஆராய்ந்து அறிதற்குரியது[1]. இனிப் பழைய நூலுரைகளில் எடுத்தாளப்பட்ட

1. பார்க்கவம் (திவா.), பிருகுசூத்திர முதலிய கணித சோதிட கிரந்தங்கள் உள்ளன. இவைபோன்ற தொன்றே, பிருகுவமிசத்தவரான ஆழ்வார் அருளிச்செய்ததாக வேண்டும்.

" ஆடவர் ளெவ்வா றகல்வரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றூர் பொழிற்கச்சி மாண்பு. "

என்ற பாடல்[1] திருமழிசைப்பிரான் அடித்தொண்டரான கணிகண்ணர் என்பார் வாக்காகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. 'அவ்வாழ்வார் தன்னைப் பாடாராயின் தன் நகரை விட்டு அகலக்கடவர்' என்று கூறிய பல்லவனுக்கு விடையாக அக்கணிகண்ணர் இப்பாசுரம் பாடியவராதல் வேண்டுமென்பது 'ஆடவர்க ளெவ்வா றகல்வர்' என்று தொடங்கும் தொடரினின்று அறியத்தகும். இனி "யதுகுலத்திலே பிறந்து கோபகுலத்திலே வளர்ந்தருளிய கண்ணனைப்போல, இவ்வாழ்வாரும் இருஷிகுலத்திலே பிறந்து தாழ்ந்த குலத்திலே வளர்ந்தருளினாராயிற்று"[2] என்று திருமழிசையாரது பிறப்புவளர்ப்புக்கள் கூறப்படுவதற்கேற்ப, இவ்வாழ்வார்—

" குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாவிலு நவின்றிலேன்
புலங்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்
இலங்குபாத மன்றிமற்றோர் பற்றிலேனெம் மீசனே "
(திருச்சந். 90).

எனத் தம்வரலாறு கூறுதல் அறியத்தக்கது. இவர் வளர்ந்த குலத்தின் தாழ்வுபற்றியே, பெரும்புலியூரில் நடந்த யாகமொன்றில் அறியாது தம்மை யிகழ்ந்த அத்வர்யு தொடக்கமான சடங்கவிகள் முன்பு—

" அக்கரங்க ளக்கரங்க ளென்று மாவ தென்கொலோ
இக்குறும்பை நீக்கியென்னை யீசனுக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர்வா யடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே."

1. யாப்பருங்கலவிருத்தி, 94; குருபரம்பரைகளில் இவ்வெண்பா, சில பாடபேதங் கொண்டுள்ளது.

2. திருச்சந்தவிருத்தம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான அவதாரிகை.

என்று பாடி, திருமால் தம் திருமேனியிடைத் தோன்றிக் காட்சிதரும்படி செய்வித்துத் தம் பிரபாவத்தை வெளிப் படுத்தினர் என்பது இவ்வாழ்வாரது சரித்திரமாம். இப் பெரியார் அருளிய திருச்சந்த விருத்தத்திற்குப் பழைய தமிழுரையொன்று உண்டென்பது ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தால் தெரியவருகின்றது.[1]

இதுவரை கூறிவந்தவற்றால் முதலாழ்வார் மூவரும் திருமழிசையாழ்வாரும் 5-ஆம் நூற்றாண்டின்பிற்பகுதி முதல் 7-ஆம் நூற்றாண்டுத்தொடக்கம்வரை வாழ்ந்த பேர டியார்கள் என்பதும், இவர்கள் வரலாறுகளிற்சிலவும் இவர்களருளிய நூல்களும் பண்டையுரையாசிரியர்களால் எடுத்தாளப்பெற்றவை என்பதும் ஒருபடியாகத் தெரியலாம். இந்நால்வரையும் துவாபரயுகத்தவர்களாகவும் ஏனைய ஆழ் வார்கள் கலிபிறந்தபின் அவதரித்தவர்களாகவும் குருபரம் பரைகள் கூறுவதனாலும், இவர்கள் ஏனையோர்க்கு முற் பட்ட காலத்தின ரென்பது பெறப்படும். இதற்கேற்ப, இன்னோர் அருளிய அந்தாதிவெண்பாக்கள் செப்பலோ சைத்திறத்தினும், தொடைநடைப்போக்கினும் சிறந்து திகழ்தல் காணலாம்.

" யானே, இருந்தமிழ்நன் மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது."

என்று, பூதத்தாழ்வார் தம்மைக் கூறியுள்ளபடியும், அட் டபுயகரத்துத் திருமாலைப் பாடும் போது, திருமங்கை மன்னன்—

" செந்தமிழ் பாடுவார்[2] தாம்வணங்குந்
தேவ ரிவர்கொல் தெரியமாட்டேன் " (பெரிய திரு. 2,8, 2).

---

1. திருச்சந்தவிருத்தம், 181-ம் பாசுரத்தில் "உடைந்தவாலி தந்தனக் குதவவந் திராமனாய்" என்ற அடியுள் "(வாலிதந் தனக்கு) மவ்வுக்கு ந ஆதேசமாய் 'தம்பி' என்றத்தை 'தந்' என்று கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது என்று ஒரு தமிழன்" எனவரும் வியாக்கியான பந்தி காண்க.

2. 'செந்தமிழ் பாடுவார்' என்பது முதலாழ்வார்களைக் கருதியே என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.

என்று அருளியபடியும், முதலாழ்வார்களைப் 'பெருந் தமிழர்' என்றும், அவர்கள் அருளிச்செயல்களைச் 'செந் தமிழ்' என்றுங் கூறுதல் தகும். நாலாயிர திவ்யப்பிரபந் தங்களுள் இசைத்தமிழ்ப்பகுதியிற் சேராத இயற்பா என்ற தொகுதியுள், இவ்வாழ்வார்கள் நால்வரும் அருளிய அந்தாதிகள் முற்பட அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அருளிச் செயல்களெல்லாம், தம் பெயருடன் பயன்கூறும் முத்திரைக்கவிகளைக்[1] கொண்டு முடிவனவல்ல என்பதும், திருப்பாணாழ்வாரது 'அமலனாதிபிரான்' ஒழிய ஒழிந்த ஆழ்வார்கள்பிரபந்தங்களெல்லாம் அவைகொண்டு முடிவன என்பதும் அறியத்தக்கன. இதுநிற்க.

மேலே பூதத்தாழ்வாரைப்பற்றிப் பேசியவிடத்தில் முதல் நரசிம்மபல்லவனை மகாமல்லனால், அவன் பெயரிட்டு நிருமிக்கப்பட்டதே அவ்வாழ்வார் பாடிய மாமல்லை என்ற ஊர் என்பது பொருந்தாதென்றும், பழைமையாகவே கடல்வளமுடைய துறைமுகமாயிருந்ததுபற்றிக் கடன் மல்லை, மல்லை[2] என்ற பெயர்வழக்கை அது பெற்றதாக வேண்டுமென்றும், அதனால், 7-ம் நூற்றாண்டின்பிற்பகுதியை முதலாழ்வார்கட்குரியதாக்குவது ஏற்புடையதன்று என்றும் நன்குவிளக்கியிருக்கின்றேன். இனி, அவ்வாழ் வார்கட்கு உரியகாலமாக மற்றொருவர் எழுதிய கருத் தொன்றையும் இப்போது எடுத்துக்கொண்டு ஆராய்வது அவசியமாயுள்ளது. முதற்றிருவந்தாதியுள் (77)—

> " வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவு மஃகாத
> பூங்கிடங்கி னீள்கோவற் பொன்னகரும்—நான்கிடத்தும்
> நின்றான இருந்தான் கிடந்தான் நடந்தானே
> என்றாற் கெடுமா மிடர்."

1. இதனைத் 'திருக்கடைக்காப்பு' என்பது சைவவழக்கு.

2. 'பல்லவன் மல்லையர்கோன்' (பெரியதிருமொழி, 2,9,1) 'மல்லையுங் கச்சியும் பாடீரே' (கலிங். பரணி. 521) என்பவற்றில் 'மல்லை' என்றும் வழங்குதல் காண்க.

2. Tamil Studies, pp. 301—2.

என்பது பொய்கையார்பாசுரம்: இதனுட் கூறப்பட்ட வேங்கடம், விண்ணகர், வெஃகா, கோவல் என்ற நான்கு தலங்களும், பல்லவரது தொண்டைமண்டலத்தைச் சார்ந்தனவே என்றும், திருமாலின் இருந்த திருக்கோலமுடையதாக நிரலிறையாக இப்பாட்டிற் கூறப்படும் விண்ணகர், தொண்டைநாட்டில் இல்லாததும், நின்ற திருக்கோலமுடையதுமான திருவிண்ணகர் (உப்பிலியப்பன்கோயில்) ஆகாமையால், காஞ்சீபுரத்துள் அத்திருக்கோலத்தோடுள்ள பரமேச்சுரவிண்ணகரமே ஆகும் என்றும், இவ்விண்ணகரம் 7-ஆம் நூற்றாண்டிறுதியில் ஆண்ட பரமேச்சுரபல்லவனால் தன்பெயரிட்டு நிருமிக்கப்பெற்றதாதலின், அதனைப் பாடிய பொய்கையார் முதலியோர் அக்காலத்துக்குப் பின் வாழ்ந்தவராதல் வேண்டும் என்றும் காலஞ்சென்ற என் நண்பர்: ஸ்ரீ. ம. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் கருதினர். விண்ணகரம் என்பது "விஷ்ணுக்ருகம்" என்ற வடமொழித் தொடரின் திரிபென்பதில் ஐயமில்லை. தொண்டைநாட்டில் பரமேச்சுர விண்ணகரம் ஒன்றே அத்தொடர்கொண்டுள்ளதாயினும், சோழநாட்டில் அப்பெயரிணைந்த திருமால் திருப்பதிகள் அடியில்வருமாறு ஐந்துள்ளன:—

| | |
|---|---|
| 1. நந்திபுர விண்ணகரம் (நாதன் கோயில்)<br>2. வைகுந்த விண்ணகரம்<br>3. அரிமேய விண்ணகரம் | இருந்த திருக்கோலம் |
| 4. காழிச்சீராம விண்ணகரம் (சீகாழி)<br>5. திருவிண்ணகர் (உப்பிலியப்பன் சந்நிதி) | நின்ற திருக்கோலம் |

இவ்வைந்தனுள் முதல்மூன்றும் இருந்த திருக்கோலமுடையனவாதலின், இவற்றுள் ஒன்றையே ஆழ்வார் குறித்தனராகலாம். ஐயங்காரவர்கள் கருதியவாறு, தொண்டைநாட்டுத்தலங்களையே மேற்காட்டிய வெண்பா குறிப்பிடுவதாகச் சொல்வதற்கில்லை. அத்தலங்களுள் ஒன்றான திருக்கோவலூர், தொண்டைநாட்டதன்றி, மலாடு என்ற நடுநாட்டுக்கு உரியதாகும். "தெற்குப்பிணாகி" என்று கூறப்பட்ட எல்லைப்படி, பெண்ணையாற்றின் வடபகுதியே தொண்டைநாடாதலுங் காண்க. இதனால், அந்நாட்டைச்

சார்ந்த தலங்களையே பொய்கையார்பாசுரம் குறிப்பிடுவது என்பது பொருந்தாதாம். இவ்வாறே, பூதத்தாழ்வார் தம் திருவந்தாதி 70-ம் பாசுரத்திலும், பேயாழ்வார் தம் திருவந்தாதி 62-ம் பாசுரத்திலும் தொண்டை நாட்டுத் தலங்களுடன், சோழபாண்டிய நாட்டுத் திருப்பதிகளையும் சேரவைத்துப் பாடுதல் காணலாம். ஆகவே, மேலேகுறித்த பொய்கையார் பாசுரத்திற் கண்ட விண்ணகர், இருந்த திருக் கோலமுள்ளனவாகத் தெரியும் சோணாட்டு-விண்ணகரம் மூன்றனுள் பழையதொன்றைப்[1] பற்றியதாகவே கொள்ளத் தகும். இவற்றால், முதலாழ்வார் திருமழிசையாழ்வார் கட்குப் பிறர்கூறிய 8-ஆம் நூற்றாண்டு சிறிதும் ஏற்காத தென்பதும், முதல்நந்திவர்மன் (கி. பி. 534), சிம்மவிஷ்ணு (கி. பி. 590) போன்ற பரமபாகவதரான அரசர்களதாட்சி யில் பூதத்தாழ்வார் போன்றவர்களும், மகேந்திரவர்மனை குணபரனதாட்சியில் திருமழிசையாரும் விளங்கியவர்கள் என்ற என்கருத்து எவ்வகையினும் பொருந்துவதாதலும் அறிந்து கொள்ளத்தக்கன.

இனி, மேற்கூறிய முதற்றொகுதியினரான ஆழ்வார் கள் நால்வரையும் அடுத்து அவதரித்தவராக நம்மாழ் வாரைக் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன. அந்நால்வர்

1. நந்திபுர விண்ணகரத்தை "நந்திபணி செய்த நகர்" என்று திருமங்கைமன்னன் பாடுவர் (பெரியதிரு. 5,10,7). நந்தியென்பது அரசனொருவன் பெயரென்று பூர்வ வியாக்யானப் பொருள் கூறும். ஆகவே, இந்நந்தி பல்லவருள் ஒருவனாதல்வேண்டும். இரண்டாம் நந்திவர்மனை பல்லவமல்லனை அரசனாக்கவேண்டி அவன் சேனாபதி இந்நந்திபுரத்திற் போர்நடத்தியசெய்தி உதயேந்திர சாஸனத்தால் அறியக்கிடக்கின்றது. அதனால், அப்பல்லவன் உண்டாக்கிய ஊராக இத்தலத்தைச் சொல்வதற்கில்லை. முதல் நந்திவர்மன் பரமபாகவதன் என்று சாஸனங்களிற் கூறப்படுகின்றான். இவனால் தன்பெயரிட்டு நந்திபுர விண்ணகரம் நிருமிக்கப்பட்டிருத்தலும், தம்நாட்டுத் திருமாலடியனான அரசன்கட்டிய அக்கோயிலை ஆழ்வார் பாடியிருத்தலும் கூடியனவேயாம். விண்ணகரம் என்று பொய்கையார் கூறிய தலத்துக்குப் பரமபதம் என்று பழையவியாக்யானம் பொருள் கூறுகின்றது.

வைபவங்களையுங்கூறிப் பின் குலசேகரப்பெருமாள் வரலாறு கூறத்தொடங்கியபோது, பின்பழகியசீயர் தம் குருபரம்பரையில் எழுதுவதாவது:—"இங்கே அவதாரக் கிரமம் பார்க்கில், நம்மாழ்வார் திருவவதார வைபவஞ் சொல்லலாயிருக்க, ஸ்ரீ குலசேகராழ்வார் திருவவதாரஞ் சொல்லுகிறது, அவயவநிரூபணம் பண்ணியே அவயவியை நிரூபிக்கவேண்டுகையாலே" என்பது. இவ்வாறே, ஸ்ரீ வரவரமுனிகளும்—

"பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்ய னருண்மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர் தாட்ளி நற்பாண னற்கலியன்
ஈதிவர்தோற் றத்தடைவா மிங்கு."

என்று ஆழ்வார்கள் அவதாரக்கிரமங் கூறுவர். குருபரம்பரையாசிரியர்கள் பெரும்பாலாரும் இம்முறைவைப்பையே கொண்டனராயினும், நம்மாழ்வார் மதுரகவிகள் இருவர் வைபவங்களையும் எல்லாவாழ்வார்கட்கும்பின் இறுதியில் வைத்து அவர்கள் எழுதுகின்றனர். இவர்க்கெல்லாம் முற்பட்டவரும், ஸ்ரீராமாநுஜர்காலத்தவருமான திருவரங்கத்தமுதனார், தம் இராமாநுசநூற்றந்தாதியில் மேற்கண்ட குருபரம்பரையாசிரியர் கூற்றுக்குச் சிறிதுமாறாக ஆழ்வார்கள் அவதாரமுறையை[1] அமைத்துளாராயினும் நம்மாழ்வாரை இறுதியில்வைத்துப் பாடுவதில் தவறில்லை, நாலாயிரப் பிரபந்தத்தும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி இறுதிப்பிரபந்தமாகவே தொகுக்கப் பெற்றுள்ளது. இவற்றினின்று, ஆழ்வார்கள் அவதாரக்கிரமம்பற்றிப் பூர்வாசாரியர்கள் ஒருபடியான கருத்துடையவரல்லரென்றும், நம்மாழ்வார் ஆழ்வார்களுள்ளே பிற்பட அவதரித்

1. இராமாநுச நூற்றந்தாதி, 8-முதல் 19-வரையுள்ள பாசுரங்களில் முதலாழ்வார் மூவர், திருப்பாணாழ்வார், திருமழிசையார், தொண்டரடிப்பொடிகள், குலசேகரப்பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கைமன்னன், நம்மாழ்வார், மதுரகவிகள் என்ற முறைவைப்புக் கூறப்படுதல் காண்க.

தவராகவேண்டுமென்றும் சிலர் கருதுவர். இவர் கருத்தி னுண்மை எத்தகையதாயினும், அதுபற்றி நாம் இப்போது ஆராயவேண்டுவதன்று. முற்கூறிய குருபரம்பரைகளின் முறைவைப்பே நேரானதென்றுகொள்வதால் எக்குற்றமும் நிகழ இடமில்லை என்பதைப் பின்பு விளக்குவேன். அந் நூல்கள் கூறுமுறையே நம்மாழ்வார் விஷயத்தை நானும் இறுதியில் வைத்தும், திவ்யப் பிரபந்தங்கள் அருளிய ஆழ்வார்களில் முதலிரண்டு பிரபந்தங்களியற்றிய பெரியாழ் வார் ஆண்டாளிருவருடைய வரலாறுகளையும் சௌகரியத் தின்பொருட்டு முதலிற்கொண்டும் கூறுவேன்.

## பெரியாழ்வார்.

இவ்வாழ்வார் தென்பாண்டிநாட்டிலுள்ள ஸ்ரீ வில்லி புத்தூரிலே, அந்தணவருணத்தில் வேயர்குலத்து [1] அவ தரித்து விஷ்ணுசித்தர் என்ற திருநாமம் பெற்றுவிளங்கி யவர். திருநந்தவனமுண்டாக்கித் திருமாலைகட்டுதல் முத லிய கைங்கரியங்களைச் செய்துகொண்டு தம்மூர்த் திருமாலை

1. 'வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்' (5, 4, 11) 'வேயர்புகழ் விட்டுசித்தன்' (1, 8, 11) என்ற இவ்வாழ்வார் திரு வாக்குக்களால் இவர் குலம் 'வேயர் குலம்' என்பது விளங்கும். வேயர்-மூங்கிலையுடையவர். திருவரங்கத்தமுதனாரது குடியை 'மூங்கிற்குடி' என்று, அவரது இராமாநுசநூற்றந்தாதித் தனியன் கூறுவதும், இவ்வேயர் குலத்தோடு ஒத்ததாகவேண்டும். 'பிரமசரிய நிலையை நீங்கி இல்லறநிலையடையும் பிராமணன் மூங்கிற்கோலை ஏற்றுக்கொள்க' என்று தர்மசூத்திரம் கூறுவதால், அத்தகைய தண்டைத் தாங்கிவந்த அந்தணரில் ஒருசாரார்க்கு 'வேயர் குலம், மூங்கிற்குடி' என்ற பெயர்கள் வழங்கியனவாக வேண்டுமென்பர். (The Holy Lives of the Alvars by A. Govindacharya Swami p. 20). "பிடித்துத் திரியும் வேய்த்தொழிலாளர் மிழலையுள்ளீர்" என்ற சுந்தரமூர்த்திகள் தேவாரத்தொடரும் இங்கு ஒப்பிடத்தக் கது. (தேவா. சலாமிநரீ. பதிப்பு, பக். 586, பாட்டு, 4).

இடையறாது வழிபட்டுவந்தவர். ஒருகால், மதுரையில் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் சமயவிசாரஞ் செய்வதிற் பெருவிருப்புடையவனாய்ப் 'பரமார்த்த தத்துவம் இன்ன தென்பதை நிரூபிக்கும் பெரியோர்க்கு உரியது' என்று தன் அரண்மனையிற் கட்டிய பொற்கிழியைத் திருமால் பேரருளால் இவ்வாழ்வார் சமயவாதியர் பலரோடு வாதஞ்செய்து பரத்துவநிரூபணம் பண்ணி வெற்றியடைந்து பெற்றன ரென்றும், அதுமுதல் பட்டர்பிரான் என்ற சிறப்புப்பெயர் இவர்க்கு வழங்கலாயிற்றென்றும், அப்பாண்டியனும் இவர்க்கு அடியனாயினன் என்றும், தாம் வாதவெற்றியிற் பெற்ற கிழிப்பொருளைத் தம்மூர்த் திருமால் கைங்கரியங்களில் விநியோகித்து அப்பெருமானை முன்போல் இடையறாது வழிபட்டுக்கொண்டிருந்தனரென்றும், இவர் அவதாரகாலம் கலிபிறந்த 57-ஆம் ஆண்டென்றும் குருபரம்பரைகள் கூறுகின்றன.

"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று"

என்பது இவரது தனியன். மேற்கண்ட இவ்வாழ்வார் வரலாற்றோடு, இவர் திருவாக்குக்கள் பெரிதும் ஒத்துள்ளன. தம்மூர்த் திருமால்கோயிலுக்கு எல்லாவகைக் கைங்கரியங்களையும் புரிந்துகொண்டும், அக்கோயிலில் எல்லாமரியாதைகளையும் பெற்றும் பரமபாகவதராகவும் மகாஞானியாகவும் இவ்வாழ்வார் வாழ்ந்தவரென்பது—

"நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும்
அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயுங் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை
வெள்ளுயி ராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப்
பல்லாண்டு கூறுவனே (திருப்பல். 8).

" உடுத்துக் களைந்தநின் பீதக வாடை
புடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன
சூடுமித் தொண்டர்களோம் " (ஷை. 9).

" தோட்ட மில்லவள் ஆத்தொழு ஓடை
துடவையுங் கிணறும் இவையெல்லாம்
வாட்ட மின்றியுன் பொன்னடிக் கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண் டிருந்தேன் "

" வன்மை யாவதுன் கோயிலில் வாழும்
வயிட்ட ணவனெனும் வன்மைகண் டாயே "
(பெரியாழ். திருமொழி. 5, 1, 3).

என்பன முதலிய இவ்வாழ்வார் பாசுரத்தொடர்களால் அறியப்படும். இப்பெரியார் காலத்தே இராசபுரோகிதராகவும் பரமபாகவதராகவும் விளங்கியவர், திருக்கோட்டியூர்த் தலைவரான செல்வநம்பி என்ற சீரியோர் என்றும், இவ்வாழ்வார்காலத்து விளங்கிய திருமாலடியனை அரசன் இன்னன் என்றும் ஆழ்வாரே விளங்கக்கூறுதல் அடியில் வருமாறு:—

" அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும்
உனக்குப் பழவடியேன் " (திருப்பல். 11).

" நளிர்ந்தசீலன் நயாசலன் அபிமான
துங்கனை நாடொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட
செங்கண்மால் திருக்கோட்டியூர் "
(பெரியாழ். திருமொழி. 4, 4, 8).

" தென் கூடற்கோன், தென்னன் கொண்டாடுந்
தென்றிரு மாலிருஞ்சோலையே " (திருப்பல் 4, 2, 7).

" பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்
திருப்பொலிந்த சேவடியென் சென்னியின் மேற்பொ
றித்தாய்" (திருப்பல். 5, 4, 7).

இனி, இவ்வாழ்வார் வாழ்ந்த காலநிலையை நோக்குவோம். மேலே ஏழாம் நூற்றுண்டு, வைதிக சமயத்தவரான

அடியார்களுக்கும், அவைதிகர்களான சைந பௌத்தர்களுக்கும் கடுமையான வாதப்போர் நிகழ, அதனில் முன்னவர் வெற்றிபெற்றுச் சநாதன தர்மங்களை நிலைநாட்டிய கால விசேடம் என்பது விளக்கப்பட்டது. இதற்கடுத்த எட்டாம் நூற்றாண்டிலோ, அத்தகைய போர்கள் அதிகமாக நிகழ இடமில்லையென்றே சொல்லலாம். இந்நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்றிருந்த தமிழரசர்கள்—பல்லவரும் பாண்டியருமே ஆவர். இவர்கள் புறச்சமயங்களைத் தழுவாது, வைதிகக்கொள்கைளில் ஆழ்ந்தபற்றுடையரா யிருந்தனர் என்பது, அக்காலத்துச் சாஸனங்களால் நன்கறியப்படுகின்றது. இவருள்ளே, பல்லவர் வைஷ்ணவமதத்தையும், பாண்டியர் சைவமதத்தையும் மிகுதியுந் தழுவியவர். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்றவாறு, அரசர்கள் எந்த மதத்தை மேற்கொண்டு அதிகப் பற்றுடையராகின்றனரோ, அம்மதமே நாட்டில் ஆதிக்கப்பெற்றோங்குவதும் அவரபிமானம் பெறாதவை, அத்துணையாகச் செழியாமல் தாழ்வதும் முற்காலத் தியல்புகளாகும். ஆகவே, அரசரது ஆதரவு பெறாதநிலையில், சைந பௌத்தங்கள், முந்திய நூற்றாண்டுகளில் அடைந்திருந்த தலைமையை இந்த எட்டாநூற்றாண்டில் இழந்துவிட்டன என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆனால், வைதிகப்பற்றுடையரான அரசர்கள், அப்புறமதங்களை வேரறுக்கும் கடுஞ்செற்றங் கொண்டிருந்தவரல்லர். அதனால், அம்மதத்தவர்கள் தத்தங் கொள்கைகளைப் பரப்பும் முயற்சிக்கு யாதொரு தடையும் இருந்ததில்லை.

இந்நிலைமையோடு கூடிய <u>8-ம் நூற்றாண்டே</u>, பெரியாழ்வார் வாழ்ந்த காலவிசேடமுமாகும். இவ்வாழ்வார் நடத்தியதாகக் கூறும் சமயவாதம், பெரும்பாலும் வைதிக சமயத்தவர்க்குள் நிகழ்ந்ததாகக் கொள்ளற்குரியதேயன்றிப் புறச்சமயிகளுடன் அன்று. தமிழகத்தில் தலைமைபெற்றோங்கிய பல்லவர்கள் திருமால்பத்திமையிற் சிறந்து நின்றது இந்நூற்றாண்டின்கண்ணே யாதலாலும், இவ்வாழ்

வாரே கூறியவாறு "பத்தர்களும் பகவர்களும்" பலர் இக்காலத்துவிளங்கினமையாலும், ஏற்கவே சைனரைவென்று நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த சைவர்க்கு, வைணவசமயிகளிடம் மனவெறுப்பு உண்டாயிருத்தலும், அதுபற்றிப் பரத்துவம்பற்றிய வாதம் அவ்விருவர்க்குள் நிகழ்ந்திருத்தலும் கூடியனவே. இக்காலத்தில், தமிழ்நாட்டின் வடபகுதியை ஆண்ட பல்லவர் திருமாலடிமையிற் சிறந்திருந்தவராயினும், தென்பகுதியை ஆட்சிபுரிந்த பாண்டியர் பரம்பரையே சிவபத்தியில் தலைசிறந்தவர்கள். அதனால், அவ்வாதம் தென்னாட்டில் ஏற்படலாயிற்றென்றும், அதனில் பெரியாழ்வார் தம் நிரதிசயமான ஞானவிசேடத்தாலும் நாவன்மையாலும் வெற்றிபெற்றுப் பாண்டியனது பொற்கிழியைப் பெற்றதோடு, அவனையுந் தம் அடியவனாக்கினார் என்றும் கருதப் பெரிதும் பொருத்தமுண்டு.

இனி, இவ்வாழ்வார்க்கு அடியவனான பாண்டியன் பெயர் **ஸ்ரீ வல்லபதேவன்** என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. ஆனால் ஆழ்வார் தம் திருமொழி 4-ம் பத்து 2-ம் பதிகத்துள், பாண்டியன் ஒருவனை அடியில் வரும் பாசுரத்தாற் சிறப்பித்தல் அறியத்தக்கது:—

**மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்**
**முன்னங்குச் சென்று மோழை யெழுவித் தவன்மலை**
**கொன்னவில் கூர்வேற் கோநெடுமாறன் தென்கூடற்கோன்**
**தென்னன்கொண் டாடுந் தென்றிரு மாலிருஞ் சோலையே."**

என்ற 7-ம் பாசுரத்தில், அப்பாண்டியனைக் **கோ நெடு மாறன்** என்று கூறுதல் காணலாம். 'கூடற்கோன், தென்னன்' என்பவற்றால், தாம் கூறப்புகும் அரசன் பாண்டியனே என்பதை ஆழ்வார் விளக்கிவிட்டமையால், பின்னும் நெடுமாறன் என்றது, அவனுக்குத் தங்காலத்துவழங்கிய பிரபலமான பெயரையே என்றுகருதத் தடையில்லை. ஆயின், இந்நெடுமாறன் என்று பெயர்பெற்ற பாண்டியன் யாவன் என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

வேள்விகுடி சின்னமனூர்ச் சாஸனங்களால் 7-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டுவரை ஆட்சிபுரிந்த பாண்டியர்களின் பெயர்கள் நமக்குத் தொடர்ச்சியாகத் தெரிய வருகின்றன. அதனுட் கண்ட அரசர் வரிசை அடியில் வருமாறு:—

1. கடுங்கோன்
2. மாறவர்மன் அவனி சூளாமணி
3. செழியன் சேந்தன்
4. அரிகேசரி மாறவர்மன் (நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன், திருஞான சம்பந்தர் காலத்தவன்; கி. பி. 667-க்கு முன் ஆண்டவன்.)
5. கோச்சடையன்
6. மாறவர்மன், இராஜசிம்மன் (பல்லவமல்லன் காலத்தவன்; கி. பி. 750-ல் இருந்தவன்)
7. பராந்தகன், நெடுஞ்சடையன், ஜடிலவர்மன்; பரமவைஷ்ணவன். (கி. பி. 767—784)
8. இராஜசிம்மன்
9. வரகுண மகாராஜன்
10. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்
11. வரகுணன் (கி. பி. 862-ல் பட்டமெய்தியவன்) | பராந்தக வீரநாராயணன் → இராஜசிம்மன் (சோழன் பராந்தகன் I காலத்தவன் கி. பி. 942).

இவருள் 4, 6, 7, 11-ஆம் எண்ணுடையவர்க்குத் தரப்பட்ட காலக்குறிப்புகள், அவர்கள் நாளில் வாழ்ந்த வேற்றரசர்நன்மக்கள் வழியாகவும் சாஸனவாயிலாகவுந்

தெரியவந்தவை. இனி, இவ்வரசர்களுள் மாறவர்மன் என்ற பெயருடையார்களை 2, 4, 6-எண்களிற் காணலாம். இப்பெயரே இலக்கியம் சாஸனங்களில் மாறன்[1] நெடுமாறன் என்றும் வழங்குவதாம். இம்மாறவர்மர் மூவருள்ளே 2-ஆம் எண்ணுக்குரியவன், ஏழாநூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவன். ஏனைய பாண்டியரையெல்லாம் பலபடியாகவும் சிறப்பித்துக்கூறிவரும் வேள்விக்குடிச்சாஸனம் இம்மாறவர்மன் செய்தியாக ஒன்றையுங் குறிப்பிடாமற் பொதுப்படக் கூறிச் செல்கின்றது. இதனால், வெற்றிவேந்தனை தன்தந்தை கடுங்கோனுக்குப்பின் தான் பெற்றநாட்டைச் சில்லாண்டுகள் ஆட்சிபுரிந்து சென்றவனாகவே இவனைக் கருதத்தகும். அன்றியும், இவன் காலம், முதற்றொகுதியடியார்களுள் ஒருவரான திருமழிசைப்பிரானுக்கு உரியதென்பது மேலே விளக்கப்பட்டது. இவற்றால், பெரியாழ்வாரால் அடிமைகொள்ளப் பெற்ற நெடுமாறன் இவனே என்று கருதற்குச் சிறப்பாக அமைந்த காரணம் ஒன்றுமேயில்லை என்பது தெரியலாம்.

இனி, 4-ம் எண்ணுக்குரிய மாறவர்மன் திருஞான சம்பந்தர் காலத்தவனாவன். இவனே அந்நாயனாரால் சைன மதத்தினின்றும் திருப்பப்பெற்ற பரமசைவனானவன்.

1. மாறன் என்பது பாண்டியர்கொண்ட பொதுப்பெயரேயாயினும், 7, 8-ஆம் நூற்றாண்டிலிருந்த அவ்வரசர்சிலர், இதனைத் தம் இயற்பெயராகக்கொண்டிருந்தவர் என்பது சாஸனங்களால் தெளிவாகின்றது. இது, சாஸன வடமொழிப்பகுதியில் மாறவர்மன் என்றும், நூல்களில் நெடுமாறன் என்றும் வழங்கும். இப்பெயர்போலவே, சடையன் என்பதும் அக்காலத்து அதிகவழக்குடையதாம். தந்தை மாறனும் மகன் சடையனுமாயின், மகனை மாறஞ்சடையன் என்றும், தந்தை சடையனும் மகன் மாறனுமாயின் பின்னவனைச் சடையமாறன் என்றும், தந்தைபெயரை இணைத்துக் கூறும் பண்டைவழக்குப்படி, அவ்விருபெயர்களும் பலதலைமுறை மாறிமாறி வழங்கப்பட்டுள்ளன. இராசகேசரி, பரகேசரி என்ற பெயர்கள் தந்தைக்கும் மகனுக்கும் மாறிமாறிப் பலதலைமுறை வழங்கப்படுவதைச் சோழவரசருள்ளுங் காண்க.

"நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்" என்று சிவனடியார்களுள் ஒருவனாகத் திருத்தொண்டத் தொகையிற் சுந்தரமூர்த்திநாயனாரால் கூறப்பட்டவன் இவனே. இந்நெடுமாறன் நெல்வேலி வென்ற செய்தியையும், சிவபத்தன் என்பதையும் தேவாரமும் சாஸனமுங் கூறியவாறே, இறையனார்களவியலுரையுட் கண்ட [1]மேற்கோட் செய்யுட்களும் ஆதரிக்கின்றன. பெரியாழ்வார், சிவனடியார்களுள் ஒருவனை இந்நெடுமாறனையே திருத்திப் பணிகொண்டவர் என்று கொள்வதில் தடைகள்பல நிகழக் கூடியதாதலின், அவ்வாழ்வார்காலத்தவன் இவனுமாகான் என்பது திண்ணம்.

இனி, இந்நெடுமாறன் பேரன், மேற்காட்டிய வமிசாவளியில் 6-ஆம் எண்ணுக்குரிய மாறவர்மனுவன். இவன் காலம் உத்தேசம் கி. பி. 830—867 ஆகும். இப்பாண்டியன், பல்லவ மல்லனோடும் (717—779), மற்றும் பலருடனும் போர்புரிந்து வெற்றிபெற்ற பெருவீரன் என்றும், கங்கராசன் மகள் பூசுந்தரியை மணந்தவனென்றும், "பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பதுமபாதம் பணிந்தேத்தி" யவன் என்றும் வேள்விகுடிச்சாஸனம் புகழும்.

" மான வெண்குடை மான்றேர் மாறன் "
(வேள்வி குடிச்சாஸனம்)

" மற்றவற்குப் பௌத்ர னயின மன்னர்பிரான்
இராச சிங்கனும் " (சின்னமனூர்ச்சாஸனம்)

---

1. அவ்வுரையுள், 106, 145-ம் கட்டளைக்கலித்துறைகள் நெடுமாறனது நெல்வேலிப்போரையும், 256, 279-ம் கலித்துறைகள் அவனது சிவபத்தியையும் விளக்குதல் காண்க. இக்களவியலுரையிலுள்ள மற்றக் கட்டளைக்கலித்துறைகள் யாவும், இந்நெடுமாறனைப் பற்றியனவேயாம். சென்னை, மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள 'இறையனாரகப்பொருள் மேற்கோள்விளக்கம்' என்ற நூலுட் காட்டப்பட்ட இக்கலித்துறைகளின் தலைப்பில், பாண்டிக்கோவை என்ற குறிப்புக்காணப்படுதலால், அவையாவும் அக்கோவையைச் சார்ந்தன என்று தெரிகின்றது. இலக்கணவிளக்கப்பாட்டியல் 116 ம் சூத்திரவுரையுள்—"செய்வித்தோன்பெயரான் வந்தன, பாண்டிக்கோவை முதலியன " என்று எழுதப்பட்டிருத்தலாலும் இத்தகைய நூலொன்று முன்பு வழக்கிலிருந்தமை தெளிவாகும்.

என்ற சாஸனத்தொடர்களால் இப்பாண்டியனுக்கு மாறன்[1] இராசசிங்கன் என்ற பெயர்கள் வழங்கின என்பது தெரியலாம். மாறன் என்ற பெயரையே, மாறவர்மன் என்றும் நெடுமாறன் என்றுங் கூறுவதுண்டு என்பது, இவன் பாட்டனும் சம்பந்தர் காலத்தவனுமாகிய மேற்கூறிய பாண்டியனை அம்மூவகையாகவும் சாஸனமும் நூல்களும் கூறுவதினின்றும் பெறப்படும்.

இம்மாறவர்மனாகிய இராஜசிம்மன் தன் முன்னோரைப் போலவே சைவசமயத்தவனாயினும், பெரியாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பெற்றவன் இவனே என்று கருதற்குப் பொருத்தம் பெரிதும் உள்ளது. இப்பாண்டியன் மகன் பராந்தகன்நெடுஞ்சடையன் என்பவன்— உத்தேசம் கி. பி. 767-ல் பட்டமெய்தினன். இவ்வரசனது ஆட்சித் தொடக்கத்தே, இவனிடம் உத்தரமந்திரியாக இருந்தவன் மாறங்காரி என்பானென்பதும், இந்நெடுஞ்சடையனது மூன்றாம் ஆட்சி வருஷத்தில் (கி. பி. 770) அம்மந்திரி இறந்துவிட்டனன் என்பதும் சாஸனங்களினின்று நன்கறியக்கிடக்கின்றன. இதனால், நெடுஞ்சடையனது ஆட்சியில் மிகச் சில வருஷங்களே அவன் உயர்பதவியை வகித்தவன் என்பது தெரியலாம். அம்மகா சாமந்தன் தன்னரசனுக்குக் கங்கராசன்மகள் பூசுந்தரியைப் பெரும்போர்புரிந்து மணஞ்செய்து வைத்தவனென்று வேள்விக்குடிச்சாஸனம் கூறுகின்றது. இக்கங்க சம்பந்தஞ்செய்து கொண்டவன் நெடுஞ்சடையன் தந்தையான மாறவர்மனே என்பது—

"கொங்கலர் நறுங்கண்ணிக் கங்கராசனொடு சம்பந்தஞ்செய்தும்"

1. இவனை 'மான்றேர் மாறன்' என்று சாஸனங்கூறுவதில் தேர் என்பது விசேடணமாகக் கொள்ளற்குரியதேயன்றி, பலரும் கருதுவதுபோலத் தேர்மாறன்என்பது பெயராகக் கொள்ளவேண்டுவதன்று. பாண்டிக்கோவைப்பாடல்களில், மாறன் என்று இவன் பாட்டன் வழங்கப்பெறுவதுபோலவே, இவனும் வழங்கப்பட்டனனென்றே கொள்க.

எனவரும் அச்சாஸனத்தொடரால் தெளிவாம். இங்ஙனம் மணஞ்செய்துகொண்ட தேவியையிற்றிற் பிறந்த மகனாகவே நெடுஞ்சடையனைக் கருதவும் பொருத்தமுண்டு. ஆகவே, மகனது ஆட்சித்தொடக்கத்தில் உத்தரமந்திரியாயிருந்த மாறங்காரி, தந்தையிடமும் பல வருஷங்கள் அப்பதவியை வகித்தவன் என்று கொள்ளத் தடையில்லை. இம்மாறங்காரி 'ஸ்வர்க்காரோகணம் செய்தபின்னை அவனுக்கு அநுஜனாய் உத்தரமந்திரபதம் எய்தின'' வன் மாறன்-எயினன் என்ற பெயர்பெற்றவன். பாண்டியரது தலைமையமைச்சராக விளங்கிய இச்சகோதரர் இருவரும் பரம வைஷ்ணவர்கள் என்பது, மதுரையை யடுத்த யானைமலை அடிவாரத்தில் இவர்களால் அழகாக நிருமித்துப் பிரதிஷ்டிக்கப்பெற்ற நரசிம்மப் பெருமாள்கோயிற் சாஸனங்களால் தெளிவாகின்றது. இங்ஙனம் பரம வைஷ்ணவனொருவனைத் தன் உத்தரமந்திரியாக உடையனாயிருந்திருப்பதால், பாண்டியன்-மாறவர்மன் தன் சமயக்கோட்பாட்டில் திருத்தம்பெறுவதற்கு இடமேற்பட்டிருக்கவுங் கூடுமென்றே கருதத் தகும். அப்பாண்டியனது சமயவிசாரத்துக்கு இவ்வைஷ்ணவமந்திரியே காரணமாக அமைந்திருத்தல் வேண்டும். இம்மந்திரியின் ஊராகிய களக்குடி பெரியாழ்வார் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு அணித்தாக உள்ளது[1]. அதனால், அப்பெரியாரது திருவடிசம்பந்தம் இம்மந்திரிக்கு இருந்ததுபோலும் என்று சங்கிக்கவும் இடமுண்டு.

மற்றும், தந்தை மாறவர்மனது ஆட்சி முடிந்ததும் அவன் மகன் நெடுஞ்சடையன் தக்கபருவத்திற் பட்டம் பெற்றவன் என்பது, அவனது முதன்மூன்றுவருஷத்து ஆட்சிச் செயல்களாக வேள்விக்குடிச்சாஸனங் கூறும் வரலாறுகளினின்றும் பெறப்படுகின்றது. இப்பாண்டியனது 17-வது ஆட்சியாண்டில் அமைந்த சீவரமங்கல சாஸனத்தில் இவன்—

1. இதுவரை கருதப்பட்டபடி, இவ்வூர் களக்காடு அன்று என்பதை நம்மாழ்வார் விஷயமாகக் கூறுமிடத்து விளக்குவேன்.

"பராந்தகன் பரமவைஷ்ணவன் தானாகி
நின்றிலங்கு மணிநீண்முடி நிலமன்னவன் நெடுஞ்சடையன்"

என்று புகழப்பட்டுள்ளான். இச் சாஸனத்தை எழுதுவித்த ஆஞ்ஞாபதி, முற்கூறிய உத்தரமந்திரி மாறங்காரியின் வழியினனாகிய தீரதரன்மூர்த்தி எயினன்[2] என்பவன். தன் முன்னோரைப்போலவே இம் மந்திரியும் வைஷ்ணவன் என்பது, இவனெழுதிய அச்சாஸனப் போக்கால் தெளிவாம். இங்ஙனம் பாண்டியனொருவனும், அவன் மகாசாமந்தரும் திருமாலடிமைத்திறத்திற் சிறந்தவராக விளங்கியது பாண்டியவமிசத்தில் மிகவும் அருமையேயாகும். இதுபற்றியே "பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கும்" என்று, அச்சாஸனம்பாடிய கவியும் வியப்பதுபோலவே தோற்றுகின்றது. பரம்பரைச் சைவரான பாண்டியகுலத்தில், இத்தகைய நிலைமையொன்று இடையே புகுந்ததெனின், அதற்கு ஏதோ ஒரு விசேஷ சம்பவம் காரணமாக வேண்டுமன்றோ? அந்தச் சம்பவம் பெரியாழ்வாரால் உண்டாக்கப் பெற்றதாகவே கருதத்தகும். அவ்வாழ்வாரால் தம்காலத்துத் திருமாலடியவனாக்கப்பட்டவன், நெடுமாறன் என்ற பெயரினன் என்பது மேலே விளக்கப்பட்டது. பரமவைஷ்ணவனாக சீவரமங்கலசாஸனங் கூறும் பாண்டியனுக்கு நெடுஞ்சடையன் அல்லது சடையன் என்பவை பெயரேயன்றி நெடுமாறன் என்பதன்று. இவனை மாறஞ்சடையன் என்றும் சாஸனங்கள் வழங்குவதுண்டு. தந்தை பெயரை இயற்பெயருடன் இணைத்துக்கூறும் பண்டை வழக்குப்படி, மாறனுக்கு மகன் சடையன் என்பது இதன் பொருளாம். ஆகவே, ஆழ்வாரால் திருமாலடியவனாக்கப்பட்ட பாண்டியன், தந்தையாகிய மாறன் அல்லது

1. Indian Antiquary, XXII—"Madras Museum Plates."

2. மாறங்காரியின் ஊராகிய களக்குடி என்ற களந்தையும், அவனுக்குரிய வைத்திய குலமும், மகாசாமந்த பதவியும் இவனுக்கும் உரியனவாக இச் சாஸனங் கூறுதல் காண்க. இவனுக்கு வழங்கும் பெயரால், அம்மாறங்காரியின் சகோதரனான மாறனெயினனுடைய மகனாக இவனைக்கொள்ள இடமுண்டு.

நெடுமாறனேயன்றி அவன் மகனாகிய நெடுஞ்சடையன் ஆகான் என்பது நன்குபெறப்படும். படவே, ஆழ்வார் நடத்திய சமயவாதம் தந்தை-நெடுமாறன் காலத்து நிகழ்ச்சியாகவேண்டும் என்றும், அவனே அப்பெரியார்க்கு முதலில் அடியவனாயினன் என்றும், சைவனாயிருந்து பின் வைணவனாயின அப்பாண்டியனைப் போலாது அவன் மகன் ஆழ்வாரது சார்பால் முழுவைஷ்ணவனாகவே விளங்கினமையால் "பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்குர் ......நெடுஞ்சடையன்" என்று சிறப்பிக்கப்பெற்றனன் என்றும் நாம் கருதக்கூடியனவாயுள்ளன. தந்தை-நெடுமாறனது ஆட்சியில்—அஃதாவது அவன் மகன் பட்டம்பெற்ற கி. பி. 767-க்கு முன்பு—பெரியாழ்வார் அவன்முன் பரத்துவநிரூபணஞ்செய்து அவனை அடிமையாக்கியவராயின், அப்போது தக்க பருவத்தினனாயிருந்த அவன்மகன் நெடுஞ்சடையனும் அப்பெரியார் மகிமையை நேரில் அறிந்து அவர் திருவடிசம்பந்தம் பெற்றுப் பரம பாகவதனாகியிருத்தல் கூடியதேயாம். சீவரமங்கலசாஸனத்துக் கண்ட இச்சடையன் பெருமைகளுள்ளே, இவன் "மனுதர்சித மார்க்கத்தினால் குருசரிதங் கோண்டாடி" வருபவன் என்ற செய்தியும் ஒன்றாக உள்ளது. இங்ஙனம் அவனாற் கொண்டாடப்பெற்ற குரு—"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று" என்றவாறு, பெரியாழ்வாராகவே கொள்ளுதற்குப் பொருத்தம் பெரிதும் உண்டென்றே சொல்லலாம்.

இங்ஙனம் பரமவைஷ்ணவனான நெடுஞ்சடையனது செய்திகளிலே, அவன் கொங்கபூமியைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தியபின்—

"பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோயிலாக்கினான்"

என்று வேள்விக்குடிச் சாஸனம் கூறுகின்றது. காஞ்சிவாய்ப் பேரூர் என்பது, கொங்குநாட்டில் நொய்யலாறு என்

வழங்குங் காஞ்சிமாநதிக்கரையின் பக்கத்துள்ள பேரூர்[1] என்ற பிரபல சிவதலமாகும். இதனை 'மேலைச் சிதம்பரம்' என்றுங் கூறுவர். இவ்வாறு பிரசித்தமான சிவதலத்தில் திருமாலுக்குப் பெரியதோர் கோயிலமைத்தவன் இப்பாண்டியன் என்பதனால், அக்கடவுளிடம் இவன் வைத்திருந்த பத்தியின்பெருமை இத்தகையதென்பது விளங்கும். இப்பாண்டியன் கொங்குநாட்டிற் புரிந்த இவ்வரிய திருப்பணி—

"கொங்குங் குடந்தையுங் கோட்டியூரும் பேரும்
எங்குந் திரிந்து விளையாடு மென்மகன்"
(பெரியாழ். திருமொழி, 2,6,2).

என்ற பெரியாழ்வார் திருவாக்கை ஞாபகப்படுத்துகின்றது. ஆழ்வார்களது பாடல்பெற்ற திவ்யதேச மொன்றையும் உடைத்தாகாத கொங்குநாடு கண்ணன் திருவிளையாடல் புரியும் இடங்களிலொன்றாகப் பெரியாழ்வாரால் எண்ணப் படுவதற்குக் காரணம் யாது? இதற்கு ஏற்ற விடையாவது —தம் சிஷ்யனும் பரமபாகவதனுமான நெடுஞ்சடையனால் அந்நாட்டுப் பேரூரில் நிருமித்துப் பிரதிஷ்டிக்கப் பெற்ற பெருமானைத் திருவுள்ளத்துக்கொண்டே அப்பெரியார் அவ்வாறு பாடியிருத்தல்வேண்டும் என்பதேயாம். கொங்கு நாட்டிற் பாடல்பெற்ற திவ்யதேசங்களே இல்லாமையால் —'கொங்குங் குடந்தையும்' என்ற தொடர்க்கு—"வாசனைமயமான குடந்தையும்" என்று பதப்பொருளும் "'கொங்குங் குடந்தையும்' என்றிருக்க வேண்டியது 'கொங்குங்குடந்தையும்' என்று மெலிந்தது" என்று விசேடமும் பண்டை வியாக்கியானங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், பெரியாழ்வார் காலத்து நிகழ்ச்சிகளை நோக்குமிடத்து, அத்தொடர்க்கு மேற்கூறிய கருத்துக்கொள்ளுதலே பொருத்தமாமென்க.

---

1. "தண்பணிமலர்ப் படப்பை, குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினர்" என்ற சேக்கிழார் வாக்குங் காண்க (பெரியபுராணம். ஏயர்கோன். 88).

இனி, மேற்காட்டிய பாண்டியவமிசாவளியில், 10-ஆம் எண்ணுக்குரிய ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்பவனே பெரியாழ்வார் காலத்தவன் என்றும், ஸ்ரீ வல்லபன் அவனிப சேகரன் என்ற பெயருடையவனாகப் (புதுக்கோட்டைச் சீமைச்) சித்தணவாசற் குடைவரைச் சாஸனங் கூறும் பாண்டியன் இம்மாறனே என்றும், ஸ்ரீகோபிநாதராயரவர்கள் எழுதியுள்ளார்.[1] இங்ஙனம் அவர் கருதியதற்கு ஸ்ரீவல்லபன் என்ற பெயரொற்றுமை ஒன்றைத்தவிர வேறுகாரணம் இல்லை. இராயரவர்கள்கூறும் பாண்டியன் பெரியவீரனே யாயினும் பரமவைஷ்ணவனாயிருந்தவன் என்று சொலத் தக்கவனல்லன். அன்றியும் இவன் கி. பி. 862-க்கு முன் வாழ்ந்தவன் என்பது இவன்மகன் வரகுணன் சாஸனத்தினின்றும் அறியக்கிடக்கின்றது. ஸ்ரீ வைஷ்ணவாசாரியத் தலைவரான ஸ்ரீமந்-நாதமுனிகள் பிரசித்தராக விளங்கியது இவனது ஆட்சிக்காலமுதலே ஆகும். பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும்—இராயரவர்கள் கருத்தின்படி—இக்காலத்தவரேயானால், இப்பேரடியார்களை அவ்வாசாரியத்தலைவர் நேரில் அறிந்திருக்கவும், அறிந்து அளவளாவியனவும் கேள்வியுற்றனவுமாகிய வரலாறுகள் அம்முனிகளுடைய சிஷ்யபரம்பரைமூலமாய்ச் சரித்திரநூல்களிற் பயின்றிருக்கவும் கூடும். ஆனால், இதற்கு மாறாக, ஆழ்வார்கள் அவதரித்து நெடுங்காலத்துக்குப் பின் அந்நாதமுனிகள் திருவாய்மொழிமுதலாய திவ்யப்பிரபந்தங்களைப் பெற்றதாகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. இதனால், அம்முனிகளுக்கும் ஆழ்வார்கட்கும் இடையிட்ட காலம் பெரிதென்பது பெறப்படுதலால், அவ்வாசாரிய சிரேஷ்டர் விளங்கிய 9-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்த பாண்டியனொருவனைப் பெரியாழ்வார் காலத்தவனாகக் கூறுவது அசங்கதமாமென்க.

இனி, சித்தண வாசற் குடைவரைச் சாஸனங்கூறும் ஸ்ரீவல்லபன் அவனிபசேகரன் என்ற பாண்டியன், தாம்

---

1. The History of the Sri Vaisnavas, p. 23.

குறித்த ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்றெழுதிய ராயரவர்கள் கருத்தும் உறுதி பெறுவதன்று. அச்சாஸனத்துக் கண்ட **சீரிவல்லுவன்**[1] என்பது ஸ்ரீவல்லபன் என்ற வடபெயரின் திரிபேயாம். சோணாட்டுத் திருவிசலூரிற் கண்ட கல்வெட்டொன்றிலும் இத்திரிபுப் பெயர்கொண்ட பாண்டியனொருவன் முதலாம் இராஜேந்திர சோழன் (1011—42) காலத்தவனாகக் காணப்படுகின்றான்.[2] இச்சோழன் மகனான வீர ராஜேந்திரன் ஸ்ரீவல்லபன் மகனை வென்றவன் என்று அவன் மெய்க்கீர்த்தி[3] கூறுவதும் காண்க. இவ்வாறு திரிந்து வழங்கும் பாண்டியன் பெயரொற்றுமையை நோக்குமிடத்து சிற்றன்னவாசற் சாஸனத்துக் குறிக்கப்பட்டவன் அச்சோழன் காலத்துச் சிரீவல்லுவனின் வேறல்லன் என்றே தோற்றுகின்றது.

இனி, பரமவைஷ்ணவனான நெடுஞ்சடையனுக்கு ஸ்ரீவல்லபன் என்ற பெயர் வழங்குண்டு என்று ராயரவர்களே குறிப்பிட்டுள்ளார்.[4] இதற்கு வேறு பிரமாணமும் உள்ளது. ஹரிவம்சம் என்ற ஜைனகிரந்தம் இயற்றிய ஜினஸேனர் என்பார், இந்திராயுதன் என்ற இரட்டவேந்தன் வடநாட்டையும், ஸ்ரீவல்லபன் என்பான் தென்னாட்டையும் ஆண்டு வந்த காலத்தே சகாப்தம் 705 (=கி. பி. 783)—ல் தம் நூலை எழுதி முடித்ததாகக் கூறுகின்றார்.[5] வல்லபர் என்பது இரட்டரும் சளுக்கரும் கொண்டதாயினும் அஃது அவர்களெல்லார்க்கும் வழங்கும் பொதுப்பெயராதலின் ஸ்ரீவல்லபன் என்று ஜினஸேனர் குறிப்பிட்டுக் கூறியது, அதனைத் தன் சிறப்பியற்பெயராகக் கொண்ட தென்னாட்டரசனாகவே கொள்ளற்கு உரியது.[5] அங்ஙனம் பிரபலனாய் அவர் கூறுங்காலத்தில் விளங்கிய தென்னாட்டுவேந்தன் நெடுஞ்சடையனே யாதலின், ஸ்ரீவல்லபப் பெயர் அவனுக்கிருந்ததென்ற ராயரவர்கள் கருத்துப் பெரிதும் ஏற்புடைத்தாம் என்க. இவற்றால், எல்லாவகையானும் பெரியாழ்

---

1. Ep. Rep. 368 of 1904.
2. Ibid. 46 of 1907.
3. "தென்னனைச் சிரீவல்லவன்மகன் சிறுவன், மின்னவில் மணிமுடி வீரகேசரியை, மதவரை யொன்று ளுதைப்பித்து" எனக்காண்க.
4. T. A. S. Vol. I, p. 189.
5. Dr. Shama Sastri's—*The Epoch of Kūna Pāṇḍya*—Report of the Third Oriental Conference, pp. 223—7.

வார்க்கு அடிமை பூண்டவன் நெடுஞ்சடையன் என்பதே தெளிவாதல் கண்டுகொள்க. இனி, கோநெடுமாறனைப்பற்றி ஆழ்வார் பாடிய பாசுரம் மற்றொரு குறிப்பும் உடையது போலவே தோற்றுகின்றது.

" மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்
முன்னங்குச் சென்று மோழையெழுவித் தவன்மலை
கொன்னவில் கூர்வேற் கோநெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னன் கொண்டாடுந் தென்திரு மாலிருஞ் சோலையே "

என்ற அப்பாட்டில், 'தன் மைத்துனர்க்காகத் தேரேறிச் சென்று பகையரசரை வருத்திய அழகரது திருமலையைக் கொண்டாடுபவன், நெடுமாறன்' என்று ஆழ்வார் கூறுதல் அறியலாம். இங்ஙனம் முன்னிரண்டடிகளிற் கண்ட திரு மால் சரிதம், அப்பாண்டியன் வணங்குதற்கேற்றதாக அமைந்த அவனது வரலாறொன்றையும் கருத்துட் கொண் டதுபோலவே தோற்றுகின்றது. இவ்வாறு 'ஸாபிப்ராய விசேஷண விசேஷ்யங்கள்' உடையனவாகவே ஆழ்வார்கள் பாடுவதை—அவர்கள் அருளிச்செயல்களாலும் அவற்றின் வியாக்யானங்களாலும் நாம் நெடுக அறிந்துகொள்ளலாம். ஈண்டுக் கூறப்பட்ட திருமால் சரிதமும் அத்தகையதாயின், 'தன் மைத்துனர்க்காகத் தேரேறிச் சென்று பகைவரைக் கலக்கிய திருமால் கோயில்கொண்ட மலை, அதுபோன்ற செயலை முன்புரிந்த நெடுமாறனால் கொண்டாடற் குரியு தாயிற்று' என்ற தொனிப்பொருள் இப்பாசுரத்தாற் பெறப் படத் தடையில்லை. 'மைத்துனர்க்காகப் போர்புரிந்த பெரு மானை மைத்துனர்க்காகப் போர்புரிந்த அரசன் வழிபடல் தகும்' என்பது கருத்து. இங்ஙனம் நெடுமாறன் எந்த மைத்துனர்பொருட்டு எக்காலத்துப் போர்செய்தவன் என் பதைப்பற்றிச் சாஸனம் நேராக ஒன்றுங் கூறவில்லை. ஆயினும், இரண்டுவகையால் அத்தகைய செயலை அவன் நிகழ்த்தியிருக்க இடமுண்டென்றே தோற்றுகின்றது.

முதலாவது—பல்லவ மல்லனுடன் இந்நெடுமாறன் நடத்தியபோர், அப்பல்லவ குலத்தவனான சித்திரமாயன் என்பவனைப் பட்டத்தில் நிறுத்துவதற்கே என்று சரித்திர காரர் கருதுவர். இச்சித்திரமாயன், நெடுமாறனுக்கு அம்

மான் முறையினனாக வேண்டுமென்பது, கனம். தூப்ராயில் துரை எழுதிய பல்லவசரித்திரத்தால் அறியலாகும்.[1] துணை புரியப்பெற்ற இச்சித்திரமாயன், பல்லவமல்லன்சேனாபதியாற் போரிற் கொல்லப்பட்டான். ஆயினும், நெடுமாறன் அப்பல்லவனை விடாமல், பலவிடங்களிலும் எதிர்த்தவனென்று கூறப்படுகிறான்.[2] இப்போர்கள், தன் மாமனான சித்திரமாயனுடைய மக்கள் பொருட்டு நிகழ்த்தப்பட்டனவாதல்வேண்டும். ஆயின் அம்மக்கள், தூப்ராயில் துரையின் கருத்துப்படி, நெடுமாறனுக்கு மைத்துன முறையினர் ஆவர். அதனால், அப்பாண்டியன் அவர்கட்குச் செய்த உதவியை ஆழ்வார் திருவுளத்துக்கொண்டு அவ்வாறு கூறியிருத்தல் கூடும்.

இரண்டாவது—மாறவர்மனான இந்நெடுமாறன் கங்கராசனுடைய மகளான பூசுந்தரியை மணம்புரியவிரும்பி அவளைப் பெற முயன்றபோது வடவரசர் பலர் திரண்டெதிர்த்தனர் என்றும், அவரையெல்லாம் தன் பெருஞ்சேனையால் அப்பாண்டியன் அழித்தோடச்செய்து அக்கன்னியாரத்னத்தை அடைந்து மணந்தனனென்றும் வேள்

1. செந்தமிழ். தொகுதி 17, பக். 28.

2. இப்போர்களிலே பல்லவமல்லன் வெற்றிபெற்றானென்று திருமங்கை மன்னனது பரமேச்சுரவிண்ணகரப் பதிகமும், நெடுமாறன் வெற்றிபெற்றவனாக வேள்விகுடிச் சாஸனமும் கூறும். இதனால், அவ்விருவரும் வெற்றிதோல்விகளை மாறிமாறிப் பெற்றவர்கள் என்பது பெறப்படுகின்றது. அப்பல்லவனுடன் பொருத மாறவர்மனை "உலகுடை மன்னவன் தென்னவன்" என்று திருமங்கைமன்னன் அப்பதிகத்துப் பாடியதற்கியைய, பெரியாழ்வார் அவனைக் கோநெடுமாறன் என்று விசேடித்துப் பெயர் கூறுதல் ஒப்பிடத்தக்கது. கோ என்பது, அரசர்க்கரசன் என்ற பொருள் பயக்கும்; கோப் பெருஞ்சோழன், கோ இராசகேசரி என்ற வழக்குக் காண்க. "கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர்" என்றார் பின்னோரும். கூடல் வஞ்சி கோழி என்ற மூன்று தலைநகரங்கட்குமுரியவனாக ஷை நெடுமாறனை வேள்விகுடிச்சாஸனம் கூறுதலால் அவன் உலகுடைமன்னவன், கோ என்ற விசேடணங்கட்கு உரியவனாதல் காண்க.

விருடிச் சாஸனங் கூறுகின்றது. அவ்வாறு மணம்புரிவதற்கு அநுகூலராகக் கங்கராசன்மக்கள் நெடுமாறன்சார்பாய் நின்றிருத்தலும், மைத்துனமுறையினரான அவர்க்கு உதவியாக வடவரசரைப் போரில் அவன் புறங்கண்டிருத்தலும் கூடியனவேயாம். ஆக, இவ்விருவகை நிகழ்ச்சிகளுள் ஒன்றை ஆழ்வார்பாசுரம் குறிப்பாற் புலப்படுத்துவது என்றே அதன் போக்கால் தோற்றுகின்றது. இக்கூற்றுச் சிலர்க்கு அதிவாதம்போலத் தோற்றுமாயினும், ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் ஆராய்ச்சியுடையார்க்கெல்லாம் என் கருத்து ஏற்புடையதாகும் என்பது திண்ணம். இங்ஙனம் தன் அடியவனை நெடுமாறனுக்குத் திருமால் பகையழித்து அருள்புரிந்து வந்ததே—

"குறுகாத மன்னரைக் கூடு கலக்கிவெங் கானிடைச்
சிறுகா னெறியே போக்குவிக்குஞ் செல்வன் பொன்மலை"
(பெரியாழ். திருமொழி, 4, 2, 8)

என்று அடுத்துவரும் பாசுரத்தும் ஆழ்வாரால் எடுத்து மொழியப்பட்டதாகும். மேற்பாடலின் தொடர்புகொண்டு இவ்வடிகளை நோக்குமிடத்து, 'குறுகாத மன்னரை' என்ற தொடர்க்கு—'நெடுமாறனுக்குப் பகைவரான அரசரை' என்பதே பொருளென்றும், அப்பகையரசர் திருமாலால் நிலைகுலைக்கப்பட்ட செய்தியே[1] அவ்வாழ்வாராற் கூறப்படுவதென்றும் புலப்படத் தடையில்லை. இவ்வாறன்றிப் பூர்வ வியாக்கியானத்தின்படி— தன் மலையைக் குறுகி வணங்காத

---

1. தன் அடியரான அரசர்க்கு அநுகூலனாகவும், அவர் பகைவர்க்குப் பிரதிகூலனாகவும் நின்று ஈசன் அருள் புரிபவனென்பதை— "மண்ணுலகங் காவல்பூண்ட உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும், பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானை" எனச் சுந்தரமூர்த்தி நாயனார், (தேவா. பக். 17, பாட்டு 4, சுவாமிநா. பதிப்பு), "கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால், வீற்றிருந்தான் பெருந்தேவியுந் தானுமோர் மீனவன்பால், ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே" எனத் திருவாதவூரடிகளும் (திருவாசகம், திருப்பாண்டிப் பதிகம், 10) கூறுதல் ஒப்பிடற்குரியன.

மன்னர்க்குத் திருமால் பிரதிகூலனாக நின்றதையே அவ்வடிகள் கூறுவன எனின், தன் திருமலையை வணங்கும் நெடுமாறனுக்கு அருள்புரிந்த திருமால் அதனை வணங்காத அடியாராகாத பகைவரை வருத்துபவனாயினான்' என்பது கருத்தாகக் கொள்க.

இற்றைக்கு 22-ஆண்டுகட்கு முன் செந்தமிழ் 2-ம் தொகுதி 3-ம் பகுதியினும், 18-ஆண்டுகட்கு முன் ஷை பத்திரிகை 6-ம் தொகுதி 2-ம் பகுதியினும் பெரியாழ்வார் காலம்பற்றி யானெழுதிய கட்டுரைகளிலே, அவ்வாழ்வார் தம்காலத்துப் பாண்டியன், நெடுமாறன் என்ற பெயர் கொண்டவன் என்று குறிப்பிட்டுக் கூறுவதை முதன்முதல் வெளியிட்டு, அவனே ஆழ்வாரால் அடிமை கொள்ளப் பெற்ற ஸ்ரீ வல்லபதேவனாதல் வேண்டுமென்று எழுதியுள்ளேன். அக்காலத்துப் பாண்டிய வமிசத்தைப் பற்றிய செய்திகள் சாஸனவழியால் மிகுதியாகத் தெரிய இடமில்லை. பிற்பட்டு வெளிவந்த வேள்விகுடி சின்னமனூர் முதலிய இடங்களில் அமைந்த சாஸனங்களால் அவ்வமிசத்தரசர் வரலாறுகள்பல வெளிவந்திருத்தலின் முன் என்னாற்குறிக்கப்பட்டவனன்றி, வேறொருவனே ஆழ்வார் கூறும் நெடுமாறனென்பது இப்போது தெரியக்கூடியதாகின்றது. யான் மேலே எழுதிப்போந்தவற்றால், முன்குறித்த பாண்டியவமிசாவளியில் 6-ம் எண்ணுக்குரியவனாகக்கண்ட மாறவர்மனே, பெரியாழ்வார் குறிப்பிடும் திருமாலடியவனை நெடுமாறனவன் என்பதும், குருபரம்பரைகளிற் கண்ட ஸ்ரீவல்லபன் என்ற பெயர், அந்நெடுமாறன் மகனும், அவனைப்போல அவ்வாழ்வார்க்கு அடிமைபூண்டு "குருசரிதங் கொண்டாடி......பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கிய" வனுமான நெடுஞ்சடையன் தரித்ததென்பதும் நன்கு விளங்கக்கூடியன. இங்ஙனம் தந்தையும் மகனும் ஆழ்வார்க்கு அடியவர்களாக இருந்தமையால், அவ்விருவர் பெயர்களும் ஒருவனே கொண்டதாகப் பிற்காலத்துச் சரித்திரநூலோர் கருதலாயினர் என்றே தோற்றுகின்றது.

ஆகவே, தந்தை நெடுமாறனுகிய மாறவர்மனுக்கே ஸ்ரீவல்லபப் பெயரும் உண்டென்பது இனி வெளிவரும் சாஸன ஆதாரவால் தெரியவரும்வரை, மேற்கூறிய என்கருத்தே பொருந்துவதாதல் கண்டு கொள்க.

பெரியாழ்வார் அருளிச்செயல்களை நோக்குமிடத்து, திருமாலவதாரங்களுள்ளே முக்கியமாகக் கண்ணபிரானது தோற்றமுதல் நிகழ்ந்த பாலசரிதைகளை, அப்பெருமானை எடுத்துவளர்த்த யசோதைப்பிராட்டியாருடையவும் கோபியருடையவுமான பேச்சுக்களாற் கொண்டுமொழிந்து ஈடுபடும் அழகு வெளியாம். கண்ணனது குழவிப்பருவத்தில், கஞ்சன் முதலியோரால் நேரக்கூடியதாயிருந்த ஆபத்துக்களுக்குப் பெரிதுமஞ்சிப் பல்லாண்டுபாடி மங்களாசாஸனம் பண்ணியும், அப்பெருமானது ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களைப் பருகிக்களித்தும் இவ்வாழ்வார் மயங்கிநிற்கும் அற்புதநிலைமை இங்கு நம்மால் எழுதக்கூடிய அளவினதன்று. இங்ஙனம் "சோராத காதற் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலையொன்றும், பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மைய" ராகிய இவரது பெருமை பற்றியே—

> "மங்களா சாசனத்தின் மற்றுள்ள வாழ்வார்கள்
> தங்களார் வத்தளவு தானன்றிப்—பொங்கும்
> பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றன்
> பெரியாழ்வா ரென்னும் பெயர்".
>
> (உபதேசரத்தினமாலை, 18).

என்றவாறு, பெரியாழ்வார் என்ற திருநாமம் இவர்க்கு வழங்கலாயிற்று என்பர். இங்ஙனம் கோபவிருத்தியை மேற்கொண்டு கண்ணனை அநுபவித்த தம் அநுபவங்களையும், அப்பெருமானிடம் தாங்கொண்டுள்ள ஈடுபாடுகளையுமன்றி, திருமழிசையார் திருமங்கைமன்னன் முதலிய ஆழ்வார்கள்போல, தேவதாந்தரங்களைப்பற்றியேனும் தம் காலத்திருந்த பிற சமயநிலைகளைப்பற்றியேனும் யாதொரு குறிப்பும் இவர் திருவாக்குக்களினின்றும் அறியக்கூட

வில்லை. பாண்டியன் முன் சமயவாதஞ் செய்து வெற்றி பெற்றவராகக் கூறப்படும் இவ்வாழ்வார் தம் காலத்தில் வைஷ்ணவனாக விளங்கிய பாண்டியனொருவனைச் சிறப்பிட் பதுதவிர, வேறு உலகநிலைமையொன்றையுங் குறிப்பிடாத தற்கு, அவ்வரசனை அடிமையாக்கி அவனாற்பெற்ற பெரும் பொருளைத் திருமால் கைங்கரியங்களில் விநியோகித்து உலகப்பற்று ஒன்றுமின்றிப் பிரபத்திநிஷ்டையில் இப்பெரி யார் முனைந்துநின்றதே காரணமாகவேண்டும்.

" விழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற் றல்லால்
வேறொருவரோ டென்மனம் பற்றாது "

" நாட்டுமானிடத் தோடெனக்கரிது "

" நான், உண்ணு நாள்பசி யாவதொன் றில்லை
யோவா தேநமோ நாராய ணாவென்
றெண்ணு நாளு மிருக்கெசுச் சாம
வேத நாண்மலர் கொண்டுன பாத
மண்ணு நாளவை தத்துறு மாகில்
அன்றெனக்கவை பட்டினி நாளே "

" என்னையும் என்னுடைமையையுமுன் சக்கரப்பொறி
யொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்திருந்தே னினியென் திருக்குறிப்பே "

என்பன முதலாயுள்ள இப்பெரியாரது அழகிய பாசுரத் தொடர்களால், பிற சிந்தையின்றி எம்பெருமானையே உபாயோபேயமாகப் பற்றிநின்ற இவரது பரமபக்தியின் சிறப்பு வெளியாகும்.

பெரியாழ்வார் 85-திருநக்ஷத்திரம் வாழ்ந்தருளியவர் என்பது குருபரம்பரைகளால் அறியப்படுகின்றது. உத் தேசம் 690-ல் இவ்வாழ்வார் அவதரித்தவராயின், 775-வரை இவர் வாழ்ந்த காலமாகக் கூறத்தகும். 767-ல் பட்டம் பெற்றவனாகத் தெரியும் ஸ்ரீவல்லபனாகிய நெடுஞ்சடையன் எத்தனையாண்டுகள் ஆட்சி புரிந்தவனென்பது தெளிய இடமில்லை. ஆயினும், அப்பாண்டியனது 17-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்த சீவரமங்கலசாஸனத்தால், 784-ல்

அவன் சீவந்தனாயிருந்தவன் என்பது அறியப்படுகின்றது. பெரியாழ்வார் 775-வரை எழுந்தருளியிருந்தவராயின், மேலே குறித்த பாண்டிய வமிசாவளியில் 5-ம் எண்ணுக்குரிய கோச்சடையன் (உத்தேசம் 690) காலமுதல், 7-ம் எண்ணுக்குரிய அவன்பேரன் நெடுஞ்சடையன்து ஆட்சியிடையே 775-வரை, மூவர் பாண்டியர்காலங்களில் இப் பெரியார் விளங்கியிருந்தவரென்றே முடிவுகூறலாம்.

## ஸ்ரீ ஆண்டாள்.

பெரியாழ்வார் திருமகளாரைப்பற்றி இனிக் கூறுவேன். அவ்வாழ்வாரால் திருமாலைக் கைங்கரியத்துக்கென்று வில்லிபுத்தூரில் அமைக்கப்பட்டுவந்த திருநந்தவனத்துள் துளஸீவனத்திடையே, இப்பெண்கொடி அப் பெரியாராற் கண்டெடுக்கப்பெற்று, தம் மகளாராகவே கொண்டு **கோதை** என்ற திருநாமஞ்சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவர இவர் வளர்ந்துவந்தனர். இளமையிலே இவர் கலைகள் முழுதுந் தன்னடையே நிரம்பப் பெற்று, ஆழ்வார் திருமகளார் என்றதற்கேற்றபடி ஞானபரிபூர்ணராகவும், திருமால்பாற் பிரேமை மிகப்பெற்றவராகவும் விளங்கியதோடு, அப்பெருங்காதலடியாகப் பெருமானையே தமக்குரிய நாயகனாக வரித்து 'அவனை விட்டகன்றுற்ற கில்லா' நிலையுடையராயினர். இங்ஙனம் நிகழ, பெரியாழ்வார், தாம் வழிபடுந் திருமாலுக்கென்று நாளுந் தொடுத்துவைத்த திருமாலைகளை அவரில்லாக் காலத்தே அவரறியாமல் தங்குழலிற் சூடிக்கொண்டு 'என் அழகு எம்பெருமான் ஏற்கக்கூடியதாகுமோ' என்று கண்ணடி

யில் அழகுபார்த்து அகங்களித்து, தம் திருத்தந்தையார் வருமுன்பே சூடியமாலைகளைக் களைந்து முன்போற் சுருட்டி உரியவிடத்தில் வைத்துவர, ஆழ்வாரும் அஃதறியாதே அத்திருமாலைகளைப் பெருமானுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு வந்தனர். ஒருநாள், ஆழ்வார் தாம் கட்டிய திருப்பள்ளித் தாமத்தில் நீண்ட மயிரொன்றிருத்தல் கண்டு அஞ்சி, அது வந்த காரணத்தை உசாவி அறிந்து தம் திருமகளாரைக் கடிந்தவராய், அத்திருத்தாமம் பெருமானுக்கேற்காதது என்று அன்று ஸமர்ப்பிக்காமற் போனார். போக, அன்றிரவு திருமால் அவர் கனவில்தோன்றி, வழக்கம்போல் மாலைசாத்தாத காரணத்தை உசாவ, ஆழ்வார் தம்மகளது அறியாமைச்செயலைக் கூற, 'அத்தகைய சூடிக்கொடுத்த தூமலர்த்தாமமன்றிப் பிறிதெதுவும் தமக்குப் பிரியமற்ற தாம்' என்று பெருமான் அருளிச்செய்யவும், பெருவியப்பும் உவப்புமடைந்து, "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்" என்று தம் திருமகளார் பால் விசேடப் பிரதிபத்திபண்ணி, அடுத்தநாள் முதலாகத் தம் திருமகள் சூடிய திருமாலைகளையே நாளும் சாத்திப் பெருமானை உவப்பித்து வரலாயினர். அதுமுதல் 'சூடிக் கொடுத்தாள்' என்ற திருநாமம் கோதையார்க்கு வழங்குவதாயிற்று. பின்னர், உரிய பக்குவம் வந்ததும் தம் திருமகளார்க்குத் திருமணம்புரிய விரும்பித் தக்க வரன் தேடப் புகவும்—"திருவரங்கத்துப் பெருமானை அழகிய மணவாளனையன்றி 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று மறுத்துநின்ற இவரது வைராக்கிய மிகுதியைக் கண்டு பெருங்கவலையுற்ற ஆழ்வார் கனவிலே திருவரங்கச்செல்வர் தோன்றி—தாம் நேரே கைப்பற்றிக் கொள்ளுமாறு தம் கோயிற் றிருமுற்றத்திற்கு அவர் தம் திருமகளை அழைத்துவரும்படி அவர்க்கு ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். ஆழ்வாரும் பேருவகைபூத்து, அத்திருவாணைப்படியே கோதையாரைப் பரிவாரங்களுடன் மணக்கோலமாகத் திருவரங்கப் பெருநகர்க்கு அழைத்துக்

கொண்டு சென்று அழகிய மணவாளன் திருமுன்பு நிறுத்த, அவ்வெம்பெருமானும் வரவேற்று ஆழ்வார் திருமகளாரைப் பெருவிருப்புடன் அங்கீகரித்தருளித் தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டருளினன். இவ்வரிய நிகழ்ச்சிக்குப் பின், பெரியாழ்வார் தம்மூரேற எழுந்தருளித் தம் அருமைப் பெண்கொடியை பிரிந்ததற்கு ஆற்றாது வருந்தினராயினும், பெருமான் அவளைப் பேணிக் கொண்டருளியதற்கு உவந்து, முன்போல் திருமால் கைங்கரியங்களைப் புரிந்து வந்தனர்—என்பதே, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் சரித்திரச் சுருக்கமாகும். 'பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை' யான இவர்க்கு ஆண்டாள், நாய்ச்சியார் என்ற திருநாமங்களும் பிரபலமாக வழங்கின. இப்பெரியாள் இயற்றியருளிய திவ்யப் பிரபந்தங்கள்—திருப்பாவை முப்பதும், நாய்ச்சியார் திருமொழி நூற்றுநாற்பத்துமூன்றுமாகும். இவை, பெரியாழ்வார் திருமொழியையடுத்து நாலாயிர திவ்யப்பிரபந்தத்துள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டாளது இவ்வருளிச்செயல்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யுமிடத்து மிகவும் அழகிய செய்திகள் பல வெளியாகின்றன. முதலிலுள்ள **திருப்பாவை** என்ற திவ்யப்பிரபந்தம், கோகுலத்து ஆயர்குல இளம்பெண்கள் கண்ணபிரானைத் தங்கள் நாயகனாக அடையவும் நாடு செழிக்கவும் வேண்டிப் **பாவை நோன்பு** நோற்றதைக் கொண்டுகூறி மிகவும் அற்புதமாக இவரால் அருளிச் செய்யப்பட்டதாம். **பாவை நோன்பு** என்பது கன்னிப் பெண்களால் மார்கழி மாதத்திற் றொடங்கப்பெற்று அம் மாதத்துப் பௌர்ணிமையோடு முடிக்கப்பெறும் ஒரு விரதமாகும். நல்ல நாயகனை அடையவும் நாடு செழிக்கவும் காத்தியாயனீ தேவியை நோக்கிக் கன்னிப் பெண்களால் இந்நோன்பு அம்மாதத்தே நடத்தப் பெறுமென்பதும், சங்ககாலத்தே சாஸ்திரமான முறைப்படி "தைந்நீராடல்" என்ற பெயர்பெற்று வழங்கிவந்ததென்பதும், மலையாள நாட்டாரால் 'திருவாதிரைத் திருவிழா' என்றும், சைவ

ரால் 'ஆருத்திராதரிசனம்' என்றும் கொண்டாடப்படுந் திருநாள் இவ்விரதமுடிவுதினமே என்பதும் பிறவும் நான் செந்தமிழ்ப் பத்திரிகையில் நன்கு விளக்கியுள்ளேன்.[1]

இனி, இப்பெரியாரது திருமொழியை நோக்கு மிடத்து, திருமாலையே தனக்குரிய மணவாளனாக வரித்துக் கொண்டு அப்பெருமானிடங் காட்டும் இவரது பிரேமைப் பெருக்கு ஒவ்வொரு பாசுரத்தும் ததும்பி நிற்பதைக் காணலாம். ஆண்பாலரான மற்றை ஆழ்வார்களும், தம்மை நாயகியராகவும் திருமாலை நாயகனாகவுங்கொண்டு பாடியுள்ளனராயினும், அவர்களது நாயகநாயகி பாவம் அநுகாரமேயாதலின் இயற்கையானதன்று என்றும், அதனால் அன்னோர் திருமாலிடஞ் செலுத்திய அன்பு மேட்டு மடை நீர்போன்றதென்றும், ஒன்றையும் அநுகரியாமல் பெண்பாலாராய்ப் பிறந்து அழகிய மணவாளனையே தம் நாயகனாக வரித்துக்கொண்டு அவனிடம் உள்ளுருகிச் செலுத்தும் இவரது இயற்கையான காதற்பெருவெள்ளம் பள்ளமடை நீர்போன்றதென்றும் பெரியோர்கள் எழுதிய கருத்துப் பெரிதும் பொருத்தமேயாம். திருமாலை அடைய வேண்டித் தையில் தொடங்கி பங்குனிவரை காமதேவனைக் குறித்துத் தாம் நோற்கும் நோன்பைப்பற்றி விரிக்கு மிடத்தே—

"சுவரிற் புராணநின் பேரெழுதிச
 சுறவநற் கொடிகளுந் துரங்கங்களும்
கவரிப் பிணாக்களுங் கருப்பு வில்லும்
 காட்டித்தந்தேன் கண்டாய் காமதேவா
அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்
 ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
 தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே."

"வானிடை வாழுமவ் வானவர்க்கென்று
 மறையவர் வேள்வியில் வகுத்தவவி

---

1. இவ்வியாசம், இந்நூலிறுதியில் 2-ஆவது அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பது மோப்பதுஞ் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்
றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

"தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன்
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப் பெறுவிடில்நான்
அழுதழு தலமந் தம்மா வழங்க
ஆற்றவு மதுனக் குறைக்குங் கண்டாய்
உழுவதோ ரெருத்தினை நுகங்கொடு பாய்ந்து
ஊட்டமின் றித்துரந் தாலொக்குமே"

என்று இத்தகைய பாசுரங்களால், அக்காமனை விளித்துத் தம் நிலைமைகளை அவன்பால் முறையிடும் அழகு ஒவ்வொருவரும் அறிந்து மகிழ்தற்குரியது. "யாண்டை ராறதில் எழிற்காம னேன்பொடு" என்ற பன்னிருபாட்டியலின்படி (182) முற்காலத்தே கன்னியர் தம் பன்னிரண்டாம் வயதில் காமனோன்பு நோற்றுவந்த செய்தி புலனும். இம்முறையே, ஆண்டாளும் மணஞ்செய்தற்குரிய தம் இளம் பருவத்தே இந்நோன்பைக் கைக்கொண்டு நடத்திவந்தன ரென்று கருதல் பொருந்தும். இங்ஙனமே, சுரமஞ்சரி என்ற நங்கை சீவகனை விரும்பி—

"தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையினுயோர்
காமமிங் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின்
மாமணி மகர மப்பு வண்சிலைக் கருப்பு மான்றேர்
பூமலி மார்ப வீவல் ஊரொடும் பொலிய வென்றாள்"
(சீவக. 2057.)

என்று மன்மதனைக் குறித்து நோற்றதும்,

"பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள்
கன்னி யாயந் தன்னுபு சூழ
மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின்
மகர வெல்கொடி மகிழ்கணைக் காமற்கு

*நகரங் கொண்ட நாளணி விழவினுள்*
*எழுநா ளோறுங் கழுமிய காதலொடு*
*வழிபா டாற்றிய போதரு மின்றென''*
(பெருங்கதை, 3,5, 27—33).

என்றபடி, பதுமாபதி என்னும் பெண்மணி உதயணனை அடையவிரும்பிக் காமனைநோற்றதும் முன்னூல்களால் அறியலாம். இவ்வாறே ஆண்டாளும் தாம் நோற்றநோன்பைக்கூறுமிடத்தும், "மதுராபதிக் கொற்றவன்வரிற் கூடிடு கூடலே'' என்று கூடலிழைத்துக் குறியறியுமிடத்தும், மாயவன்றன்னை மணஞ்செயக் கண்ட தூயநற் கனவைத் தோழிக்கு உரைக்குமிடத்தும், மற்றும் அவன் பாலசரிதங்களில் ஈடுபட்டவிடத்தும் பாடிய பாசுரங்களும், எம்பெருமான் தமக்கு உரியகாலத்தே வந்தருளாமையால்—

"ஒளிவண்ணம் வளைசிந்தை யுறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே'' [மேல்

†"கோங்கல ரும்பொழில் மாலிருஞ் சோலையிற் கொன்றை கண்
தூங்குபொன் மாலைக ளோடுட னாய்நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்தின் மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலி யுந்தலைப் பெய்வதெஞ் ஞான்றுகொலோ.''

† இப்பாசுரத்தின் முன்னிரண்டடிக்கும்—"கொன்றை மாலையாகையாலே அழகர்க்கு ஆகாது; அதுதான் திருமலையில் உள்ளதாகையாலே சைவர்கள் புகுந்து பறித்துக் கொள்ளாங்கள்; ஆக இரண்டிடத்துக்கும் ஆகாதே கிடந்து நாலுமாபோலே, தம்மோட்டை ஸம்பந்தமே ஏதுவாகப் பந்துக்களுக்கும் ஆகாதே, தாமும் அங்கீகரிக்கப் பெறாதே, நடுவேநின்று தடுமாறா நின்றேன்'' (ஈடு, 6, 6, 7 ஜீயரரும்பதம்) என்றும், பின்னிரண்டடிக்கும்—"இரண்டவதாரத்தில் இரண்டு பிராட்டிமார்க்கு உதவினது தனக்கொருத்திக்குமே வேணடும்படி ஆய்த்து இவள் (ஆண்டாள்) தசை. சிசுபாலன் ஸ்வயம்வரார்த்தமாக (வந்து தன்னைக் கைப்பற்ற) ஒருப்பட்ட சமயத்திலே புறச்சோலையிலே (கண்ணனது) ஸ்ரீ பாஞ்சஜந்ய கோஷமானது வந்து செவிப்பட்டுத் தரிப்பித்தது ருக்மிணிப் பிராட்டியை.* இராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டின

என்றிவ்வாறு தாம்படுந் துன்பநிலைகளைக் கூறும் பாசுரங்களும், பெருமானிடத்தில் இவர் நேரே கொண்டிருந்த கரைபுரண்ட காதற்பெருக்கைக் காட்டக் கூடியன. தம் திருமகளாரின் இத்தகைய மனநிலைமையையே பெரியாழ்வாரும்—

" நாடூரும் அறியவேபோய் நல்ல துழாயலங்கல்
சூடிநாரணன் போமிடமெல்லாஞ் சோதித் துழிதருகின்றாள்
கேடுவேண்டுகின் றார்பலருளர் கேசவ னோடிவளைப்
பாடிகாவ லிடுமினென்று பார்தடு மாறினதே. "

" காறைபூணுங் கண்ணாடி காணுந் தன்கையில் வளைகுலுக்கும்
கூறையுடுக்கு மயர்க்குந் தன்கொவ்வைச்செவ்வாய் திருத்தும்
தேறித்தேறிநின் றாயிரம்பேர்த் தேவன் திறம்பிதற்றும்
மாறின் மாமணி வண்ணன்மேலிவள் மாலுறுகின்றாளே "

" கைத்தலத்துள்ள மாடழியக் கண்ணாலங்கள் செய்திவளை
வைத்துவைத்துக்கொண் டென்னவாணிபம் நம்மை வடுப்
[படுத்தும். "

"பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து
பேணிநம் மில்லத்துள்ளே
இருத்துவா னெண்ணி நாமிருக்க
இவளுமொன் றெண்ணுகின்றாள்"
(பெரியாழ். திருமொழி, 3, 7.)

என்பன போன்ற பாசுரங்களால் உயர்வும் உருக்கமும் உண்டாகப் பாடுதல் காணலாம். ஆண்டாளும், அழகிய மணவாளனையன்றி வேறு 'மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லா'த் தம் நிலைமையைக் கூறிவரும்போது:—

---

போது (இராமபிரானது) ஸ்ரீ சார்ங்கத்தின் ஜ்யாகோஷம் (நாணொலி) ஆனது வந்து செவிப்பட்டுத் தரிப்பித்தது ஸ்ரீஜனக ராஜன் திருமகளை. இரண்டவதாரங்களில் உள்ளவையும் சேர மடுத்தொலிக்கும்படி வேண்டும்படி ஆய்த்து இவள் விடாய்; அவர்கள் அளவல்லவாயிற்று இவளது ஆற்றாமை" (பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம்) என்றும் எழுதிய பெரியோர்களின் உரைநயங்கள் ஈண்டு அறிந்து மகிழத்தக்கன.

"குமரனார், சொல்லும் பொய்யானால்
நானும் பிறந்தமை பொய்யன்றே"
(நாய்ச்சியார் திருமொழி, 10, 4.)

"திருவரங்கச் செல்வனார், பேசியிருப்பனகள்
பேர்க்கவும் பேராவே."
(ஷை, 11, 8.)

"நல்லவென் தோழி! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர்யாஞ் செய்வதென்
வில்லி புதுவைநகர் விட்டுசித்தர் தங்கள்தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே."
(ஷை, 10, 10.)

"செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்பா ரென்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானாற் சாதிப்பா ராரினியே"
(ஷை 11, 10.)

என்று தம்மிடமும் தந்தையாரிடமும் திருவரங்கப்பெருஞ் செல்வர் தம்மைக் கைக்கொள்வதாக 'மெய்ம்மைப் பெருவார்த்தை' கூறியிருப்பதையும், அவ்வாறு கூறியதையும மறந்து இதுவரை தம்மைக் கொண்டருளாமையால் அப்பெருமான் திருவாக்கும் பொய்ப்படுவதையும், பெருந்தெய்வமாகிய அவர் சிறுமானிடராகிய தம்மைப் பொருட்படுத்தாமற் போயினும், தம் மெய்யடியாரும் மெய்ந்நாவருமாகிய தந்தை விஷ்ணுசித்தரை அவர் புறக்கணிக்க முடியாதாதலின், அவர்மூலம் அவ்வழகியமணவாளனைத் தாம் அடைவது திண்ணமென்றும் பாடுதல் அறியத்தக்கது. இதனால், பெருமானைக் கட்டுப்படுத்துவதற்குத் தமது பரமபத்தியாகிய பாசத்தைமட்டுமன்றித் தம் திருத்தந்தையாரின் புருஷகாரபலமும் ஆண்டாளுக்குப் பேருதவி புரிவதாயிற்று என்பது நன்குதெரியலாம். ஆகவே, பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்மணியான இவர், எவ்வகையும் பெருமானால் உவந்து அணிதற்குரிய பேரணிகலமாயினர் என்க. திருவரங்கப்பெருமானார் தம் திருமுன்பு வரவழைத்து அத்திருமகளாரை விரும்பிக் கைக்கொண்டருளிய பின்பு,

விஷ்ணுசித்தர் தம் அருமைப் பெண்கொடியின் பிரிவுக் காற்றுமல்—

"நல்லதோர் தாமரைப்பொய்கை நாண்மலர்மேற் பனிசோர
அல்லியுந் தாது முதிர்ந்திட் டழகழிந்தா லொத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றாலோ! என்மகளை எங்குங்காணேன்!
மல்லரை யட்டவன்பின்போய் மதுரைப்புறம் புக்காள்கொல்லோ!

"ஒருமகள் தன்னையுடையேன் உலகம்நிறைந்த புகழால் [ன்"
திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனா

"வேடர் மறக்குலம்போல வேண்டிற்றுச் செய்தென்மகளைக்
கூடிய கூட்டமேயாகக் கொண்டுகுடி வாழுங்கொலோ
நாடும் நகருமறிய நல்லதோர் கண்ணாலஞ்செய்து
சாடிறப் பாய்ந்தபெருமான் தக்கவா கைப்பற்றுங்கொலோ"

"அண்டத் தமரர்பெருமா னாழியான் இன்றென்மகளைப்
பண்டப் பழிப்புக்கள்சொல்லிப் பரிசற ஆண்டிடுங்கொல்லோ"

(பெரியாழ். திருமொழி, 3, 8)

என்றிவ்வாறு பலபடியாகவும் புலம்பிக்கூறும் பாசுரங்கள் எல்லாவுள்ளங்களையும் ஒருங்கே உருக்கக்கூடியன. ஆழ்வார் திருமகளார் தம்மைக் கண்ணனுகந்த கோபியருள் ஒருவராகவே அநுகரித்துக்கொண்டு காதல் பெருக்கிப் போந்தவராதலின், அவரை அத்தகையராகவே கருதி ஆயர் குலத்துத் தாயர்கூற்றாக அவர் திருத்தகப்பனார் இங்ஙனம் பாடியது பெரிதும் பொருந்துமென்க. "ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோபஜன்மத்தை ஆஸ்தானம் பண்ணினார்கள்" என்று பெரியோர்கள் எழுதிய ஸ்ரீவசனபூஷணமும் இங்கு அறியத்தக்கது. இங்ஙனமாக எம்பெருமானால் ஆண்டாள் அங்கீகரிக்கப் பெற்றபின்பு, வில்லிபுத்தூரேறச் சென்று முன்போலவே திருமால் கைங்கரியபரராய் நெடுங்காலம் வாழ்ந்துவந்த பெரியாழ்வார், தம் நிலைமையைக் குறித்து—

"தோட்ட மில்லவள் ஆத்தொழு ஓடை
துடைவையுங் கிணறும் இவையெல்லாம்

> வாட்ட மின்றியுன் பொன்னடிக் கீழே
> வளைப்பகம் வகுத்துக்கொண் டிருந்தேன்"
> (பெரியாழ். திருமொழி. 5. 1, 5.)

என்று அருளிச்செய்யும் பாசுரத்திலே, தம் திருமகளாரைப் பற்றி அவர் ஒன்றுங் குறிப்பிட்டனரில்லை. இதனாலும், "ஒரு மகள் தன்னையுடையேன்......செங்கண்மால் தான் கொண்டுபோனான்" என்பதனாலும், பெருமான் ஆண்டாளை அங்கீகரித்துக்கொண்ட காலத்துக்குப் பின்பே, தம் திருமொழியை அப்பெரியார் பாடியவர் என்பது பெறப்படுகின்றது. இவற்றால், ஆண்டாள் வைபவங்களாகக் கூறப்படுஞ் சரித்திரங்களுடன், அவருடையனவும் அவர் திருத்தந்தையாருடையனவுமாக அமைந்த பாசுரங்கள் எவ்வளவு தூரம் ஒற்றுமைப்பட்டுள்ளன என்பது நன்கறியலாகும்.

இனி, ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதும், கோகுலத்து ஆயர்குலமகளிர் மார்கழி நீராட்டத்தின்பொருட்டு வைகறைக்குமுன்பே எழுந்து, தத்தந் தோழியர்மனைகளின் வாயிற்கடைகளிலே நின்று துயிலெழும்படி அவர்களைப் பலபடியாகவும்வேண்டி அழைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பது யாவரும் அறிவர். இவ்வாறு ஆய்ச்சியர் மார்கழிநோன்பு நோற்ற முறையை ஆண்டாள் தம் காலவழக்குக்களுடன் கொண்டு மொழிந்து பாடியவற்றுள், அடியில்வரும் 13-ஆம் பாசுரம் பெரிதும் ஆராய்ச்சிக்கு உரியதாகின்றது:—

> "புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
> கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
> பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
> வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
> புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
> குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
> பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
> கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்"

எனக் காண்க. "உடனொத்த கன்னியரெல்லாம் மார்கழி நீராடுதற்குரிய களத்தை அடைந்து விட்டனர்; வெள்ளி எழுந்து வியாழனும் உறங்கியது; புட்களும் சத்திக்கலாயின; இங்ஙனமாகவும், இன்னும் இந்த நன்னாளில் பள்ளியிற் கிடக்கலாமோ? பெண்ணே! துயிலெழுந்து எம்முடன் வருக"—என்பது இப்பாசுரக் கருத்து. திருப்பாவை முதற் பாட்டில்—

> " மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
> நீராடப் போதுவீர் போதுமினோ "

என்று ஆண்டாள் தொடங்குதலால், மார்கழி மாதத்தே மதிநிறைந்த நாளான பௌர்ணிமையன்று அதிகாலையில் அத்திருநாளின் நீராட்டம் நடைபெறுவதென்பது பெறப்படும். சங்கப்புலவராகிய நல்லந்துவனாரும்—

> " ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
> மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
> ஃ ஃ ஃ ஃ
> அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்
> முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
> பனிப்புலர் பாடி " (பரிபாடல், 11).

என்று, இந்நோன்புநிகழும் காலத்தைக் குறிப்பிடுதல் தெரியலாம். இதுபற்றியமைந்த விசேடச்செய்திகளையெல்லாம், இந்நூலிறுதியிலே என்னால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ள மார்கழி நோன்பாகிய தைந்நீராடல் என்ற அநுபந்த விஷயத்துட் கண்டுகொள்க. இம்மார்கழி நீராட்டின் பொருட்டுக் கோகுலத்து ஆயர்குலமகளிர் துயிலெழுந்து யமுனைத்துறைக்குச் சென்றதையும், அக்காலத்துக் கண்ணபிரான் அவர்கள் கரையில்வைத்த ஆடைகளையெல்லாம் கவர்ந்து குருந்தமரத்தில் ஏற, அம்மகளிர் வந்து தத்தந் துகில்களைத் தருமாறு பெருமானைப் பிரார்த்தித்ததையும் ஆண்டாள் கொண்டுகூறுமிடத்தே—

"கோழி யழைப்பதன் முன்னங்
குடைந்துநீ ராடுவான் போந்தோம்
ஆழியஞ் செல்வ னெழுந்தான்.........
துகிலைப் பணித்தருளாயே"
(நாய்ச். திருமொழி, 1).

என்றும், காமனோன்புக்காகத் தாமே நீராட்டம் நிகழ்த்தியதைக் கூறுமிடத்தே—

"வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன்முன்னந் துறைபடிந்து" (ஷ.1,2).

என்றும் ஆண்டாளே பாடியருளுதல் அறியத்தக்கது. இவற்றால், கோழி கூவுதற்கும் கிழக்கு வெளுப்பதற்கும் முன்பே நீராடித் தங்கள் நோன்புச்சடங்குகளை வைகறையில் முடித்துவிடுவதே மகளிரது பழைய வழக்கென்பது நன்கு தெளியலாம். அஃதாவது—காலை 4-மணிக்குமுன் எழுந்து 5-மணிக்குள் அந்நீராட்டமும் நோன்பும் முடிவுறும் என்க.

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்" (8)

"வந்தெங்கும் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தர்மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண்" (18)

"புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரை யன்கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ"

"வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்து அரீஇென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய் (6)

என்பவற்றால், கீழ்வானம் வெளுப்பதும், கோழியழைப்பதும், பறவைகள் சத்திப்பதும், முனிவரும் யோகிகளுந் துயிலெழுந்து ஹரிசப்தமிடுவதும் ஆகிய விடிதற்குறிப்பு நிகழ்

வதைச்சுட்டி அவை நிகழ்வதற்குமுன்பே விரதநியமத்தை முடிக்கவேண்டி மகளிர் விரைதல் கூறப்படுதலின், 5-மணிக்குப் பின்பும் மகளிர் நீராட்டமும் நோன்பும் நடந்தன ஆகா. அதனால், நித்தியமாகத் துயிலுணர்ந்து நீராடுதற்குரிய நேரத்தையே, நைமித்திகமாய்ச் சிறந்த இந்நோன்பு நீராட்டத்துக்குங் கொள்ளுதல் பொருத்தமற்ற தென்க. இங்ஙனம் வைகறைக்கு முன்பே துயிலெழுந்து நீராடுவதைக் குறிப்பிடும் மேற்குறித்த 13-ம் திருப்பாவைப் பாசுரத்துள்—

> "பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
> வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
> புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்"

என்று கூறுகின்றார், ஆண்டாள். அதிகாலையில் சுக்கிரோதயத்தைக் கண்டு நீராடுவதோ பிரயாணமோ நிகழ்த்துதல் எக்காலத்தும் நடைபெற்றுவந்த வழக்கேயாம்.

> "வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளும்
> உயர்சினைக் குடம்பைக் குரலோற் றினவே"
> (புறநா. 397).

> "வெள்ளி தோன்றப் புள்ளுக் குர லியம்பப்
> புலரி விடியற் பகடுபல வாழ்த்தி" (ஷை. 385.)

> "மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர...
> பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்ப" (398).

> "விளக்குறு வெள்ளி முளைத்துமுற் றோன்ற...
> தெளித்தலைத் தெண்ணீர் குளித்தன ளொடி"
> (பெருங்கதை. 1, 53, 81).

> "வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" (பொருந.72).

என்று இவ்வாறு பழங்காலத்தும் விடிவெள்ளியின் உதயங்கண்டு நன்மக்கள் வேண்டியகாரியம் நடத்திவந்தனர் என்பது தெரியலாம். ஆனால், ஆண்டாளோ, அவ்வாறு 'வெள்ளியெழுந்து' என்றதுடன் நில்லாது, 'வியாழம்

உறங்கிற்று' என்று, வேறுகிரகத்தின் நடை யொன்றை யுஞ் சேர்த்துப்பாடுதல் காணலாம். மார்கழி மாதத்துப் பௌர்ணிமையில் விடிவதற்குமுன் சுக்கிரோதயம் நிகழ வேண்டுமென்ற நியதியேயில்லை. அம்மாதத்து வைகறை களிலே வெள்ளி எழுவது, சிலவாண்டுகள் சேர்ந்தும் இடை யிட்டும் உண்டாகக்கூடிய நிகழ்ச்சியேயன்றி ஒருமுறைக்கு உரியதன்று. அவ்வாறிருக்க, அவ்வெள்ளி ஒருபுறம் உதயமாக மறுபுறம் வியாழம் அஸ்தமித்ததென்று ஆண் டாள் குறிப்பிட்டுக் கூறுவரெனின், அஃது அவர்காலத்து நிகழ்ந்த ஒரு விசேடசம்பவமே என்று கொள்ளத் தடை யுண்டோ? 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்' நீ ராட்டத்துக்காக வைகறைக்கு முன்பே துயிலெழுந்து நக்ஷத்திர கிரகங்களின் சஞ்சாரங்களைக்கண்டு நாழிகை அறியப்போந்தநிலையில், வெள்ளியின் எழுச்சியும் வியாழ னது வீழ்ச்சியும் ஒருங்கு நிகழ்ந்திருப்பதை நேரிற் பார்த்து இவ்வாறு பாடலாயினர், அந்நல்லிசைப் புலமை மெல்லியலடியார் என்பது நன்கு பெறப்படும். பாண்டியன் கொண்டாடிய பட்டர்பிரான் திருமகளார் என்று தம் பதி கங்களிற் கூறிக்கொள்வதற்கேற்ப ஆண்டாள் இளமையிலே கலைகள் நிரம்பியவரென்பதும், அதிசயோக்தியின்றி உள்ள தை உள்ளபடியே பாடும் உத்தமகவியென்பதும் அவர் திரு வாக்குக்களால் தெளிய அறியப்பட்டவை. அதனால் திருப் பாவைப் பாசுரத்திற்கண்ட வெள்ளி வியாழங்களின் உத யாஸ்தமனங்கள், வானநிலையை நேரிற்கண்டு அப்பெரியா ராற் கூறப்பட்ட விசேடநிகழ்ச்சியே என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இனி 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று' என்பதில் எழுந்து என்பது, 'கோழி கூவிப் பொழுது புலர்ந்தது' என்பதிற்போல உடனிகழ்ச்சிப் பொருளில் திரிந்துவந்த செயவெனெச்சம் என்பது தெளிவாம். கோழி கூவுதல் பொழுதுபுலர்தற்குக் காரணமும் அதன் காரியமும் ஆகா மல், கோழிகூவுதலும் பொழுதுபுலர்தலும் ஒருசேர

நிகழ்ந்தன என்ற பொருள்பயத்தல்போல, இத்தொடரும், வெள்ளியெழுதலும் வியாழனுறங்குதலும் சேரநிகழ்ந்தன என்ற பொருளே பயக்கும். அஃதாவது—கீழ்த்திசையடி வானத்தே சுக்கிரன் கண்ணுக்குப்புலப்படும்படி உதயமான வளவில், மேற்றிசையடிவானத்துக் கண்ணுக்குப் புலப்பட்டிருந்த வியாழன் அஸ்தமிக்கலாயிற்று என்பதாம். வியாழனுறங்கிச் சிலநாழிகைகள் கழித்து வெள்ளி எழினும், வியாழன் உறங்குவதற்குச் சில நாழிகைகளிருக்க வெள்ளி எழினும் அவை உடனிகழ்ச்சி ஆகா என்க. அவ்வுதயாஸ்தமனங்கள் உடனிகழ்வனவாயின், கீழ்த்திசை மேற்றிசை அடிவானங்களில் இருக்கும் வெள்ளி வியாழன்களுக்கு இடைப்பட்ட தூரவளவு 180-பாகை(degree) ஆகும். சிறிது முன்னும்பின்னுமாக அவற்றின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்தனவாகக்கொண்டாலும் அந்தத் தூரவளவு 165-க்குக் கீழும் 185-க்கு மேலும் ஒருபோதும் போகா. போகுமாயின், சுக்கிரன் எழும்போது வியாழன் அஸ்தமித்துப் பல நாழிகைகள் சென்றதாகவேனும், சுக்கிரோதயத்தில் வியாழன் அஸ்தமிக்கப் பலநாழிகைகள் செல்லக் கூடியதாகவேனும் இருக்குமேயன்றி அவ்வுதயாஸ்தமனங்கள் ஒருசேர நிகழ்வன ஆகா. ஆதலின் 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று' என்று ஆண்டாள் பாடுவதற்கு இடமே இல்லையாம். இவ்வாறு ஒருவருங் கூறுதமுறையில், வெள்ளிவியாழங்களின் உதயாஸ்தமனங்களை ஒருசேரவைத்து அப்பெரியாள் கூறுதலால், அவை —பெரியாழ்வார்காலமாக மேலே நான் விரிவாக விளக்கிப் போந்த—எட்டாம் நூற்றுண்டில் எந்த எந்த வருஷங்களில் நிகழ்ந்துள்ளன என்று தெரிந்துகொள்வது இன்றியமையாததாகின்றது.

சௌரமானப்படி மார்கழிமாதத்தில் சூரியன் தனு ராசியில் தங்குவதாலும், சூரியனுள்ள இடத்திலிருந்து சுக்கிரன் 48-பாகைத்தூரத்துக்குமேற் செல்லுவதில்லையாதலாலும் அம் மாதத்தில் சுக்கிரன், துலாம் விருச்சிகம் தனுசு

என்ற ராசிகளுக்குள் இருத்தல் வேண்டும். மேலும், சுக்கிரனுதயமும் வியாழனஸ்தமனமும் ஒரேகாலத்தில் நேர்வதனால், சுக்கிரன் தங்கும் இராசிக்கு ஏழாமிராசியாகிய மேஷ ரிஷபமிதுனங்களொன்றில் வியாழன் இருத்தலும் வேண்டும். இந்நிலைமைப்படி, மார்கழிப் பௌர்ணிமையன்று காலை 5-மணிக்கு முன், 165 முதல் 185 பாகைக்குள் வெள்ளிவியாழங்கள் எதிர்தோன்றும்படி நேர்ந்தநிகழ்ச்சி, பெரியாழ்வார் விளங்கிய 8-ம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் பின்னும்—அஃதாவது 7-முதல் 9-ம் நூற்றாண்டு முடிய—எந்த எந்த வருஷத்தில் உண்டாயிற்று என்பதை அறியவிரும்பி வானசாஸ்திரவறிஞரான அன்பர் சிலரை உசாவலானேன். அன்னோர் என்பொருட்டுப் பெரிதும் சிரமமெடுத்துக் கணித்துக் கண்டுதெரிவித்த காலக்குறிப்பு அடியில் வருமாறு:—

### மார்கழிப் பௌர்ணிமையன்று ஏறக்குறைய 4—5-மணிக்கு வெள்ளியேழவும் வியாழமுறங்கிய காலம்.

| நூற்றாண்டு; | கி. பி. ௵; | மாதந்தேதி; | வியா. வெள். தூரவளவு | மணி. |
|---|---|---|---|---|
| 7 | 600 | நவம்பர் ௴ 27௳ | 171° | 3-20 |
| × 8 | 731 | டிஸம்பர் ௴ 18௳ | 177° | 3-50 |
| 9 | 885 | நவம்பர் ௴ 25௳ | 180° | 5-8 |
| | 886 | டிஸம்பர் ௴ 14௳ | 165° | 5-20 |

காலஞ்சென்ற திவான் பகதூர். ஸ்ரீமான். L. D. சுவாமிக்கண்ணுபிள்ளையவர்கள் வெளியிட்ட இன்டியன்-எபிமெரிஸ் (Indian Ephemeris) என்ற அரிய பெரிய கணிதநூலின் உதவிகொண்டும், வேறு தக்ககருவிகள் கொண்டும் கணனஞ்செய்ததில் இக்காலங்கள் தெளிவாகப் பெறப்படுகின்றன என்று அவ்வன்பர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேற்குறித்த காலக்குறிப்பிலிருந்து, மார்கழிப் பௌர்ணிமையில் வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் 11, 12-வருஷங்கட்கு ஒருமுறை ஒருங்குநேர்தல் கூடியதாயினும், வக்கிரமுதலிய கதிவேறுபாடுகளால் பின்

னும் அதிகவருஷங்கள் தள்ளியும் நிகழக்கூடியன என்பது தெரியலாம்.

இனி, மேற்கூறியவாறு பெரியாழ்வார் காலமாகப் பெறப்பட்ட 8-ஆம் நூற்றாண்டில் 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிய' நிகழ்ச்சி ஒரேமுறைதான் வந்துள்ளது. அஃதாவது—731-ஆம் ஹு டிசம்பர்மீ 18உ அதிகாலை 3-50-மணி ஆகும். இதற்கு 130-வருஷங்கட்கு முன் 600-ஆம் ஆண்டிலும், இதற்கு 154-வருஷங்கட்குப்பின் 885, 886-ஆம் ஆண்டுகளிலும் அக்கிரகங்களின் உதயாஸ்தமனங்கள் ஒப்ப நிகழ்ந்திருக்கின்றன. 600-ஆம் ஆண்டை ஆழ்வார்திருமகளார் பாசுரத்துக்குரியதாகக் கொள்வதாயின், அது, முதற்றொகுதியடியாருள் ஒருவரான திருமழிசைப்பிரான் விளங்கியதும், பெரியாழ்வார் செய்திக்கேற்றவாறு பரமபாகவதர்களான பாண்டியரின் ஆட்சி நிகழாததுமான காலவிசேடமாகும். அன்றியும் 600-ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று, வெள்ளியெழுந்து வியாழமுறங்கிய நேரம் 3-மணி 20-நிமிஷமாதலால், நீராட்டத்துக்கு மகளிர் துயிலெழக்கூடிய சமயமாதற்கு அஃது ஏற்புடையதுமன்று. இனி, 885, 886-ஆம் ஆண்டுகள் திருப்பாவைக்கு உரியனவாகக் கொள்வதாயின், அவை, ஆசாரியருள் தலைவரான ஸ்ரீமந்-நாதமுனிகளும் அவர் சிஷ்யர்களும் பிரபலம் பெற்றிருந்த காலவிசேடங்களாகும். அவற்றுளொன்றை ஆழ்வார்திருமகளார்க்குக் கொள்வது சிறிதும் பொருத்தமுடையதன்றாம். ஆகவே, அவ்விருவகைக் காலங்களிலும் நிகழ்ந்த அவ்வுதயாஸ்தமனங்களை ஆண்டாள் திருவாக்குக் குறிப்பதன்றென்பது திண்ணமென்க.

இனி, எஞ்சிநின்ற 731-ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று, வெள்ளியெழுச்சியும் வியாழன் வீழ்ச்சியும் அடிவானங்களிற் காணக் கூடியவாறு அதிகாலையில் 3-50-மணிக்கு ஒப்ப நிகழ்ந்திருக்கின்றன. இந்நேரம் மார்கழிநீராட்டத்துக்காக மகளிர் துயிலெழுதற்குப்

பெரிதும் ஏற்றதேயாகும். மலையாளநாட்டில் விசேடமாக நடைபெறும் மார்கழிநோன்பாகிய திருவாதிரைத்திருவிழாவிலும் இளம்பெண்கள் வைகறையில் துயிலெழுந்து நான்கு மணிக்கே நீராடிவிடும்வழக்கம் இன்றும் உள்ளமை காணலாம். அம்முறையில் 'பஞ்ச பஞ்ச உஷத்காலம்' எனப்படும் ஸ்நானசமயத்துக்குச் சிறிது முன்னதாகவே துயிலுணர்ந்த ஆண்டாள், தம் கண்ணாரக்கண்ட வான நிலையையே இங்ஙனம் பாடலாயினர் என்றல் பெரிதும் பொருந்துமென்க. எனவே, 731-ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று அதிகாலையே, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் திருவாக்கினின்றும் அத்திருப்பாவை அவதரித்த சமயமாகவேண்டும் என்று நாம் கொள்ளத் தடையில்லை. வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் அம்மாதத்தில் ஒருசேர நிகழ்ந்து நெடுங்காலமான அருமையை அறிந்துபோலும், எல்லாரும் கூறுமுறையில் 'வெள்ளி யெழுந்து' என்றதுடன் நில்லாது, 'வியாழ முறங்கிற்று' என்று சேரவைத்து ஆண்டாள் பாடுவாராயினர் என்க. இங்ஙனம் முன்னும் பின்னும் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக நிகழ்ந்திராத கிரக நடையொன்றை ஆண்டாள் குறிப்பிட்டுக் கூறுவதும், அது, பெரியாழ்வார் திருவாக்காலும் சாஸனமுதலிய கருவிகளாலும் அவரது காலமாகத் தெளியப்பட்ட எட்டாநூற்றாண்டின் முற்பகுதியாக அமைந்திருத்தலும் ஈண்டு அறிந்து மகிழத்தக்கன.

ஆண்டாளது அவதாரதினம்—நள வருஷம் ஆடிமீ சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையுங் கூடின பூரநக்ஷத்திரம்—என்று குருபரம்பரைகள் சில கூறுகின்றன. இக்காலக்குறிப்பைக் கொண்டு—கி.பி. 776-ஆம் வருஷம் ஜூன் மீ 25௳ அவ்வடியாரது அவதார காலம்—என்று ஸ்ரீமாங்-சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் தம் நூலுட் கணித்திருக்கின்றனர். ஆண்டாளுக்கும் மற்ற ஆழ்வார்கட்கும் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ள பஞ்சாங்ககாலங்கள், பிற்பட்ட

சரித்திர நூல்களிலன்றித் திவ்யசூரிசரிதம், பின்பழகிய சீயர் குருபரம்பரைகளிற் காணப்படவில்லை. அவற்றிற் குறிக்கப்பட்டவை—ஆழ்வார்கள் அவதரித்த மாதங்களும் நட்சத்திரங்களுமே ஆம். சிவனடியார்கட்கும் இங்ஙனமே மாதநட்சத்திரங்களன்றி வேறு வழங்காமை ஒப்பிடத் தக்கது. ஆகவே, முன்னூல்களிலே ஆண்டாளுக்குக் கூறப்பட்டுள்ள ஆடிப்பூரநாளுடன், நள வருஷத்தை மட்டும் இங்கே கூட்டிநோக்குமிடத்து, 8-ஆம் நூற்றாண்டிலே—பிள்ளையவர்கள் கணித்த 776-ஆம் வருஷமேயன்றி, அதற்குமுன் 716-ஆம் வருஷத்து ஆடிப்பூரமும் அப்பிராட்டியின் அவதாரதினமாக நெருங்கக் கூடியதாகின்றது. இங்ஙனம் கண்ட காலக்குறிப்புக்களை முழுதும் நம்பி ஆழ்வார்களின் அவதாரகாலங்களை நாம் ஒருதலையாகத் துணிதல் கூடாததேயாம். ஆயினும், திருப்பாவை கூறும் வெள்ளிவியாழங்களின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்த காலமாக மேலே பெறப்பட்ட 731-ஆம் ஆண்டைக் கொண்டு நோக்கும்போது, 716-ஆம் வருஷத்துத் திருவாடிப்பூரம் ஆண்டாள் அவதாரதினமாவதற்கு மிகவும் ஏற்றதாதல் காணலாம். 716-ல் அவதரித்த கோதைப்பிராட்டியார் 731-ல் தம் திருப்பாவையை அருளிச்செய்தவராயின், 15-ஆம் பிராயம் அப்போது அவர்க்கு நடை பெற்றது என்பது நன்கு பெறப்படும். அப்பிராட்டி தம் திருமொழியைப் பாடும்போது தக்க பருவத்தினராயிருந்தவர் என்பது—

"அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்
ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே"

"ஊனுடை யாழிசங் குத்தமர்க்கென்
றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

என்று தாமே தெளிவாகக் கூறுதலால் வெளியாகத்தக்கது. இங்ஙனம் ஆண்டாளது திருவாக்காலும் அவரது ஞான முதிர்வாலும், திருவரங்கச்செல்வரான அழகிய மணவாளன் அப்பிராட்டியை அங்கீகரித்தருளிய காலத்தே 15-திருநட்சத்திரத்துக்கு அவர் மேற்படவில்லையென்பது நாம் ஒருவாறு அறியக்கூடியதாகின்றது.

சிலர் கருதியதுபோல், வரகுண பாண்டியன் தந்தையாய் கி. பி. 862-க்குமுன் ஆட்சி புரிந்த ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தைப் பெரியாழ்வார்க்கு உரியதாகக் கொள்ளுமிடத்து, அஃது ஆசாரியத் தலைவரான ஸ்ரீமந்நாதமுனிகள் வாழ்நாளோடு மிக நெருங்கியிருத்தலால் அவ்வாழ்வார்க்கு அக்காலம் சிறிதும் ஏற்புடையதாகாதென்றும், அதனால் 'பரம வைஷ்ணவனைக் குரு சரிதங்கொண்டாடி வந்தவன்' என்று கூறப்படும் பராந்தகன்-நெடுஞ்சடையன் ஆட்சிபுரிந்த 8-ஆம் நூற்றாண்டே அப்பெரியார் காலம் ஆதல் வேண்டும் என்றும் மேலே நன்கு விளக்கியுள்ளேன். ஸ்ரீராமாநுஜயதிவரர் காலத்தே அவர் திருவடிகளை ஆசிரயித்தவரும் 'கவிவைத்ய புரந்தரர்' என்ற சிறப்புப்பெயர் பெற்றவருமாகிய கருடவாகன பண்டிதரால் அருளிச்செய்யப்பட்ட திவ்யஸூரிசரிதத்தில் ஸ்ரீவிஷ்ணுசித்தர் ஆண்டாள் திருமணத்தைப்பற்றி ஆலோசனைபுரிய விரும்பித் தம் திருமகளாருடன் ஆழ்வார்திருநகரி சென்று ஸ்ரீசடகோபருடன் கலந்தனரென்றும், அப்போது குலசேகரப் பெருமாள், தொண்டரடிப் பொடிகள் முதலிய திருமாலடியார்களும் அங்கெழுந்தருளி அளவளாவினர் என்றும், திருமங்கை மன்னன் தம் குலத்தொழிலில் முனைந்துநின்றது அக்காலந்தான் என்றும் கூறப்பட்டுள்ளன. இத்திவ்யஸூரிசரிதமோ, பின்பழகிய பெருமாள் சீயர், வேதாந்த தேசிகர் முதலிய பிற்பட்ட ஆசாரியர்களால் பிரமாண கிரந்தமாக எடுத்தாளப்பெற்ற பெருமையுடையதாம். இந்நூல் கூறும் வரலாறுகள்சில பின்வந்த குருபரம்பரைச் செய்திகளோடு மாறுபடுவனவாயினும்,

அவை ஆளவந்தார் உடையவர்நாள்களிற் பிரபலமாக வழங்கிவந்த கர்ணபரம்பரைச் சரிதங்களாகக் கொள்ளத் தடையில்லை. அதனால், பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும், நம்மாழ்வார் திருமங்கையார் முதலிய அடியார்கள் காலத்தவர் என்பதே பண்டையாசாரியர்கள் கொண்டு வழங்கிய செய்தி என்பது பெறப்படும். நம்மாழ்வார், திருமங்கை மன்னனிருவரும் 8-ம் நூற்றாண்டில் எழுந்தருளியிருந்தவர்கள் என்பது அவ்வவர் விஷயம்பற்றி இனி எழுதப்படும் ஆராய்ச்சியுரைகளால் ஐயத்துக் கிடமின்றித் தெளியலாகும். இதனாலும் அந்நூற்றாண்டில் 731-ம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையே, மேற்கூறியவாறு இருப்பாளை அவதரித்த காலமாதற்கு உரியதாதல் தெளியத்தக்கது.

## திருமங்கை மன்னன்.

இனி, ஆழ்வார்களுள் பிற்பட்டவராகச் சொல்லப்படும் திருமங்கை மன்னனைப்பற்றிக் கூறுவேன். மற்ற அடியார்கள் கால நிலையைத் தெரிந்து கொள்வதற்கு இவ்வாழ்வார் வரலாறுகள் பெருந்துணையாக உள்ளனவாதலால், அவற்றை முறைபட ஆராய்ந்து கொள்வது நலமாகும். திருமங்கையாரைப் பற்றிப் பின்பழகிய சீயர் குருபரம்பரை முதலியன கூறும் சரித்திரத்தின் சுருக்கம் அடியில் வருமாறு:—

சோழமண்டலத்தே திருவாலி நாட்டைச் சார்ந்த திருக்குறையலூரிலே, அவ்வாலிநாட்டுக்குத் தலைவரான கள்வர் குலத்தில் இவ்வாழ்வார் அவதரித்தவர். கலியன் என்ற திருநாமத்துடன் வளர்ந்து அறிவு திருவாற்றல்கள் நிரமபியவராய், தக்கபருவம் வந்ததும் தம் தந்தையுரிமை

களைப்பெற்றுத் தாமே ஆலி நாட்டின் தலைவராகவும், சோழ ராசன் கீழ்ச் சேனைத்தலைவருள் ஒருவராகவும் விளங்கினர். அப்போது, திருநாங்கூரில் வைத்திய சிரேஷ்டரா யிருந்த பாகவதரொருவரால் அருமையாக வளர்க்கப் பெற்று வந்த குமுதவல்லியார் என்ற பெண்மணியைத் திருமணம் புரிந்து தாமும் பரமபாகவதராகி அவளுடன் திருமாலடியார்களை ஆராதிப்பதில் தம் செல்வங்களை மட்டு மன்றி அரசிறையாகத் தம்மிடமிருந்த பெரும் பொருளை யுஞ் செலவிடலாயினர். இச்செய்தி அறிந்ததும் அரசன் கலியனது சிற்றரசுரிமையைப் பறிக்கொண்டதோடு, அவரையும் சிறையிலிடுவித்தனன். இவர் அவ்வாறு சிறைப்பட்டிருந்தபோது திருமாலை நோக்கிப் பலவாறு வேண்ட, அப்பெருமான் அவர் கனவில் தோன்றிக் 'காஞ்சீபுரத்தேற வந்தால் உமக்கு வேண்டிய திரவியந் தருவோம்' என்று நிய மிக்க, அதற்குப் பெரிதும் உவந்து, தாம் இறுத்தற்குரிய பகுதிப்பொருளைக் கச்சியிற் செலுத்துவதாக அரசனுக்கறிவிக்க, அவன், 'காஞ்சிக்கு அழைத்துச்சென்று அப்பகுதிப் பொருளைப் பெற்றுக்கொண்டு அவரைச் சிறைவீடுசெய்க' என்று ஆணையிட்டுத் தன் காவலருடன் அவரை விடுத்த னன். கலியரும், காவலருடன் கச்சிமாநகரடைந்து அங்கே திருமாலருளாற் கிடைத்த பெருநிதியைச் செலுத்திச் சிறையினின்று விடுதலை பெற்றனர்.

பின், இவர் திருமால் கைங்கரியம் புரிதற்குத் தம் கையில் வேறு பொருளில்லாமையால், அதன் பொருட்டுத் தமக்குற்ற நண்பர் சிலருடன் தம் குலத்தொழிலாகிய களவில் மூண்டு நிற்கலானார். ஒருநாள், கச்சியை யடுத்த திருமணங் கொல்லையில், வழிப்பறிக்காக இவர் பதுங்கி நின்றபோது, புதுமணவாளக் கோலத்துடன் பிராமண இளைஞரொருவர் தம் மணவாட்டியும் பரிவாரங்களும் சூழப் பெருந்திரவியங் களுடன் அவ்வழியே வரவும், அவர்களைக் கண்டு மகிழ்ந்து தங் கூட்டத்தோடும் மேல் விழுந்து அவர்களிடமிருந்த பொருள்களை யெல்லாம் பற்றிக்கொண்டு மூட்டையாகக்

கட்டி எடுத்துச்செல்லத் தொடங்கியவளவில், அது தூக்க வாராமையால் 'நீ மந்திரவாதம் பண்ணினை போலும்' என்று அம்மணவாளப் பிள்ளையை நெருங்கிக் கேட்க, 'ஆம், உமக்கும் அந்த மந்திரத்தை உபதேசிக்கிறேன், வாரும்' என்று கலியன் கழுத்தை அணைத்து, 'பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து' திருமந்திரத்தை உபதேசித்தவளவில், பரஞான பரபக்தி மேலிட்டால் தாம் செய்த தொழிலை வெறுத்து எம்பெருமானைப் பல படியாகப் பாடவும், எதிர்நின்ற கூட்டம் திடீரென்று மறைந்தது. திருமாலும் கருடாரூடராய் விண்ணுறநின்று கலியற்கு அற்புதக் காட்சி யளித்தனர். இவ்வாறு எம்பெருமான் தமக்குச் செய்த நிர்ஹேதுக பரம கிருபையை நினைந்து நினைந்துருகி ஆடிப்பாடி அகங்களித்துப் பெருமான் திருக்கோயில் கொண்ட திருப்பதிகட்கெல்லாம் நேரிற் சென்று மங்களாசாஸனம் பண்ணியும், புறச்சமயத்தவர் பள்ளிகளினின்றும் கொள்ளையிட்ட திரவியங்களைக்கொண்டு திருவரங்கப்பெருநகரின் சுற்றுத்திருமதில் எடுத்து முற்றுவித்தும் இவ்வாறு நெடுங்காலம் வாழ்ந்து, முடிவில் திருக்குறுங்குடியிலே தன்னடிச் சோதிக்கெழுந்தருளினர்—என்பதே. இவ்வரலாறுகளையே திவ்யஸூரிசரிதமும் கூறுவதாயினும், திருவரங்கச் செல்வர் ஸ்ரீ ஆண்டாளைத் திருமணம் புரிந்து மாமனார் கிருகமான ஸ்ரீ வில்லிபுத்தூரேற மணக்கோலமாகப் பரிவாரங்களுடன் வருமிடையில், களவுத் தொழிலில் முனைந்துநின்ற திருமங்கைமன்னன் அவர்கள் மேல் விழுந்து வழிமறித்து, 'மாயோனை வாள் வலியால் மந்திரங்கொண்டு' பேரருள்பெற்றனரென்ற செய்திமட்டும் வேறாகக் காணப்படுகின்றது. திருமங்கை மன்னன் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங்கள்:—பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன.

திருமங்கையாரது பாசுரங்களை ஆராயுமிடத்தும் அவர் வரலாறுகளில் ஒருசில தெரிய வருகின்றன. சோழமண்ட

லத்தே ஆலிநாட்டுக்கும்[1], திருமங்கை குறையல் என்ற நகரங்கட்கும் தலைவர்[2] என்றும், பெருஞ்சேனையுடையவ ரென்றும்[3] யானைப்படைக்குத் தலைமையும் போரில் அதனை நடத்துந் திறமையும் உடையர்[4] என்றும், பெரிய குதிரை வீரரென்றும்[5], வாட்போரில் பகைவரின் உடல்துணிக்க வல்லவர்[6] என்றும் தம் சேனைப்பெருமையையும் வீரப் பெருமையையும் சிறப்பித்துப் பாராட்டுகின்றார். தமது பெரிய வள்ளன்மையையும், அதனால் புலவர்போற்றுந் தம் புகழையும்[7], பொய்ம்மொழியொன்றில்லாத தம் மெய்ம் மைத்திறத்தையும்,[8] மாரிபோன்ற தம் கொடையையும்[9], தம் தமிழ்ப் பெரும்புலமையையும்[10], கவிபாடுந் திறத்தையும்[11] பதிகவிறுதிகளிற் பாடுகின்றார். மனைவியும் மக்களும் பல

---

1. இந்நாட்டின் தலைமையூர், இக்காலத்துத் திருவலி என வழங்குகின்றது.

2. "கூரணிந்த வேல்வலவ னாலிநாடன் கொடிமாட மங்கையர்கோன் குறையலாளி" (பெரியதிருமொழி, 4, 4, 10),

3. "வாட்டிறற் றானை மங்கையர் தலைவன்" (10, 9, 10.)

4. 'அமரிற் கடமா களியானைவலான்' (2, 4, 10.) 'கடமாருங் கருங்களிறு வல்லான் வெல்போர்க் கலிகன்றி' (2, 5, 10.)

5. 'ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடல்மாவலவன்'(5,8,10)

6. "மருவலர்தம் முடல்துணிய வாள்வீசும் பரகாலன்" (3, 9, 10.)

7. 'கற்றார்பரவும் மங்கையர்கோன் காரார்புயற்கைக் கலிகன்றி' (5, 1, 10) 'பாரணிந்த தொல்புகழான்' (4, 4, 10.)

8. 'பொய்ம்மொழியொன் றில்லாத மெய்ம்மை யாளன்' (6, 6, 10.)

9. 'அருண்மாரி' (3, 4, 10; 4 2, 10; 8, 6, 10).

10. 'இருந்தமிழ்நூற் புலவன்' (1, 7, 10.)

11. 'பாடேன் தொண்டர்தம்மைக் கவிதைப் பனுவல் கொண்டு' (7, 2, 2.)

ருடையாராகவும்,[12] வேட்டையாடுவதில் விருப்பமிக்கிருந்தவராகவும்[13], அரசர்முதலிய பிறர்க்குப் பெரிதும் உழைத்துத் தம் வாழ்நாளின் ஒருபகுதியைக் கழித்தவராகவும்,[14] பரம்பரையே திருமாற்கடியாரானவர் குலத்தில் உதித்தவராகவும்,[15] தாய்தந்தையர் காலஞ்சென்றபின் தாம் அவ்வடிமைத்திறத்தில் முனைந்துநின்றவராகவும்,[16] அதனால் தெள்ளியராய்த் திருமாலருளைச் சிக்கெனப் பெற்றவராகவும்,[17] தங்குடும்பத்தை முற்றத் துறந்து[18] திருப்பதிகடோறும் சென்றுபாடித் திருமாலடியாரென்று தேசமறியத் திரிந்தவராகவும்[19] தம்வாழ்க்கைவரலாறுகளைக் குறிப்பிக்கின்றார். கலியன் கலிகன்றி பரகாலன் என்பன இவர்க்குத்திருநாமங்கள் என்பது இவர் திருவாக்கினின்றே தெரியலாம். இவரைக் கள்வர்மரபினர் என்றும் சபரர்

12. 'காவித்தடங்கண் மடவார்கேள்வன்' (6, 10, 10.) 'கொங்குமலர்க் குழலியர்வேள்' (3, 4, 10) 'பிறிந்தேன் பெற்ற மக்கள்' (6, 2, 4)

13. 'சினத்தொழில்புரிந்து திரிந்து நாயினத்தொடுந் திளைத்திட்டோடியு முழன்று முயிர்களே கொன்றேன்' (1, 6, 6.)

14. 'பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்' (1, 9, 7)

15. 'எந்தை தந்தை தம்மானென்றென் றெமரே ழேழளவும் வந்து நின்ற தொண்டர்' (4, 9, 9) 'எந்தாதைதாதை யப்பா லெழுவர் பழவடிமை வந்தார்' (7, 2, 6)

16. 'எம்மானு மெம்மனையு மென்னைப்பெற் றொழிந்ததற்பின் —அம்மானு மம்மனையு மடியேனுக் காகிநின்ற...சுடரே' (7, 2, 3)

17. 'கண்டவா திரிதந்தேனேலும்...சிக்கெனத் திருவருள் பெற்றேன்' (1, 1, 5)

18. 'பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா தறிந்தேன்' (6, 2, 4.)

19. 'தேசமறிய உமக்கேயாளாய்த் திரிகின்றோமுக்கு' (4, 9, 4)

குலத்தவரென்றும், நீலனென்ற திருநாமமுடையரென்றும் நூல்கள் கூறும்[20]. இவ்வாறு திருமங்கைமன்னன் வரலாறுகளாக வழங்குவனவற்றுடன் அவர் திருவாக்குக்கள் ஒருவாறு ஒற்றுமை பெறுதல் காணலாம்.

இனி, இப்பெரியார் வாழ்ந்த காலநிலையை நோக்குவோம். திருமங்கையார் காலம்பற்றி மூன்று நியாசங்கள்[21] பலவாண்டுகட்குமுன்பே என்றால் எழுதப்பட்டுள்ளன. தம் பெரியதிருமொழியில் திருநறையூர்ப் பதிகத்தே, சோழன் கரிகாலன் வழியில் வந்த கோச்செங்கணனது போர்ச்செய்திகளையும் அவனது திருமாலடிமைத் திறத்தையும் பாடுதலாலும், எட்டாம்நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த பரமேச்சுரவர்மபல்லவனது பெயர்புனைந்து விளங்கும் பரமேச்சுரவிண்ணகரத்தைப்பற்றித் தாம் பாடிய பதிகத்தில், பல்லவவேந்தனொருவனது போர்ச்செய்திகளையும் அவனது திருமால்பத்திமையையும் பெரிதும் சிறப்பித்தலாலும், கடைச்சங்கத்துக்குப் பின்னர்த் தென்னாட்டிற் பல்லவராதிக்கம் தலைசிறந்துநின்ற காலத்தில் திருமங்கைமன்னன் எழுந்தருளியிருந்தவர் என்பது ஐயமறத் தெளியப்படுகின்றது. ஆகவே, அவ்வெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்குப் பின்பும், பல்லவர் பெருமைமுழுதும் குலைந்ததும் ஆசாரியத்தலைவரான நாதமுனிகள் வாழ்ந்ததுமான 9-ஆம் நூற்றாண்டிறுதிக்கு முன்புமுள்ள காலவிசேடமே இவ்வாழ்வார்க்கு உரியதென்று சொல்லலாம். ஆயின், அவ்விடைப்பட்ட காலத்துள் ஆழ்வார்க்குச் சிறந்தது யாது—என்பதே இனி ஆராயத் தக்கதாகும்.

---

20. 'ஸமஜாயத தத்ர சாபப்ரமுக: க:சந நீலநாமக:' (திவ்ய ஸூரிசரிதம்) 'தண்டமிழ் செய்த நீலன்றனக் கினியானை (இராமாநுச நூற். 17)

21. செந்தமிழ், தொ-3, பக் 483; தொ-4, பக்-61; தொ-21, பக்-5-6.

பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் ஆழ்வாராற் கூறப்படும் பல்லவன் செய்திகளை நோக்குமிடத்து, அவை, இரண்டாம் நந்திவர்மனுடையனவாகச் சாஸனங்கூறும் வரலாறுகளின் வேறல்லவென்றே தெரிகின்றன. உதயசந்திரன் என்ற சேனாபதி, தன்னரசனான நந்திவர்மனுடன் எதிர்த்த தலைவர்களை—மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக்கிராமம், நெல்வெலி, காளிதுர்க்கம் என்ற இடங்களில் நடந்தபோர்களிலே வென்றதாக உதயேந்திர சாஸனம் கூறுகின்றது. அச்சாஸனத்தின் எழுத்தமைதியால், அது பத்தாம் நூற்றாண்டினனான பராந்தகசோழன் காலத்ததாயினும், அதனுட் குறிக்கப்பட்ட பழஞ்செய்திகளினின்று, முற்பட்ட சாஸனமே அச்சோழனாட்சியில் நடந்த திருப்பணியிற் பெயர்த்துவரையப்பட்டதென்று கருதப்படுகின்றது.[1] அவ்வுதயேந்திர சாஸனங்கூறும் போர்க்களங்களுள்ளே—மண்ணைக்குடி, நெல்வெலி, காளிதுர்க்கம் என்பன ஆழ்வாரது பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தும்[2] குறிப்பிக்கப்படுகின்றன. இவற்றுடன் அச்சாஸனங்கூறும் மற்றப்போர்களையும் சேர்த்துநோக்குமிடத்து, அவையாவும்[3] பாண்டிநாட்டின் எல்லைப்புறத்தில் நந்திவர்

1. s. i. i. ii, p. 362.

2. "கிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர்வேல் நெடுவாயிலுகச் செருவில் முனைநாட்-பார்த்தவன் பல்லவர்கோன்" (பெரியதிருமொழி. 2, 9, 3). "விடைத்திறல் வில்லவன் நெல்வெலியில் வெருவச் செருவேல் வலங்கைப் பிடித்த—படைத்திறற் பல்லவர்கோன்" (ஷை, 2, 9, 8). "தேம்பொழிற் குன்றெயில் தென்னவனைத் திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற - பாம்புடைப் பல்லவர்கோன்" (ஷை, 2, 9, 5).

3. இப்போர்க் களங்களுள்ளே—மண்ணைக்குடி என்பது தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கித் தாலூகாவைச்சார்ந்த மண்ணைக்குடி என்ற ஊர் ஆகும். இதனை—திருவிசலூருக்கும் கும்பகோணப் பக்கத்துள்ள இடவைக்கும் சமீபமான மண்ணி என்று புரொபஸர் தூப்ராயில் துரை தம் பல்லவசரித்திரத்தில் எழுதியது பொருத்தமானதன்று (செந்தமிழ்-தொ. 17 பக். 37). மண்ணைக்குடியை ஆழ்வார் மண்ணை என்று திரித்தது தமிழ்முறையே. சூதவனம், நிம்பவனம், சங்கரக்கிராமம் என்று சாஸனங்கூறும் ஊர்கள், ஷை ஜில்லா பட்டுக்கோட்டைத்தாலூகாவில் உள்ளன. இவற்றுள்—சூதவனம்,

மன் சேனாபதி பாண்டியனுடன் நடத்தியனவாகவே தெளிவாகின்றன. இங்ஙனம் பல்லவசேனைகளுடன் அவ்வெல்லைப்புறத்தில் எதிர்த்துநின்ற பாண்டியன், பெரியாழ்வார் காலத்தவனாக மேலே நான் விளக்கிப்போந்தவனும், தமிழ் நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்துவந்த பேரரசனுமாகிய பராங்குசன்-மாறவர்மனே என்பது சாஸனவறிஞர் தெரிந்த செய்தியாம். திருமங்கைமன்னனும், பல்லவமல்லனுக்குப் பெரும்பகைவனாக இருந்தவன் பாண்டிய

---

திருவுசாத்தானம் எனத் தேவாரத்தும், கோவிலூர் என வழக்கிலும் வழங்கும் சிவதலமாகும். நிம்பவனம் என்பது வேப்பங்காடு என்றுள்ள ஊரின் வடமொழிப் பெயர்ப்பாகும். புதுக்கோட்டைச் சீமைத் திருவரங்குளச் சாஸனமொன்றில் இந்நிம்பவனப் பிரஸ்தாபம் வருதல்கொண்டு, அஃது அப்பக்கத்தது என்பது தெரியலாம். சங்கரக்கிராமம் என்பது அப்பிரதேசத்துள்ள சங்கரனார் குடிக்காடு என்ற ஊராதல்வேண்டும் [குடிக்காடு—கிராமம்; 'ஐவர்க்கு மைந்து குடிக்காடு நல்குதியோ கூறு'' (பெருந்தே. பாரதம். வாசுதேவன் தூது, 173) எனக்காண்க] இனி, நெல்வெலி என்பது இப்பக்கத்துள்ள நெல்மெலி என்ற ஊராம். இவ்வூர்ப்போர், சபர் தலைவனான உதயணனுடன் நடத்தியதென்று சாஸனமும், 'விடைத் திறல் வில்லவ னெல்வேலியில் வெருவ' நடத்தப்பட்டதென்று பரமேச்சுரவிண்ணகரப் பதிகமுங் கூறுகின்றன. இங்கு வில்லவன் என்று ஆழ்வாராற் குறிக்கப்பட்டவன் சேரன் அல்லன். அப் பதிகத்தின் முதற்பாட்டில்—வ(ப?)ல்லவன் (சளுக்கன்), வில்லவன் (சேரன்) முதலியோர் பல்லவனுக்கு அடங்கியவராக அவ்வாழ்வார் கூறிவிட்டமையால், அவ்வில்லவனையே இரண்டாமுறையும் அவர் எடுத்துரைக்க நியாயமில்லை. அதனால், தனக்கடங்காத பாண்டியனது சேனைத்தலைவருள் அவ்வில்லவனும் ஒருவனாதல்வேண்டும். ஆகவே, (வில்லாளனான)வேடர் தலைவன் என்றே வில்லவன் என்று ஆழ்வார் கூறியதற்கும்—சாஸனக் கருத்துக்கிணங்கப்—பொருள் கொள்ளத் தககது. இனி, "தேம்பொழிற் குன்றெயில் தென்னவனை'' என்று ஆழ்வார் பாடுதற்கேற்ப— பகவதியாற் காக்கப்படும் காளிதுர்க்கத்தை அழித்துப் பாண்டியசேனையை மண்ணைக்குடியிற் தோற்கச் செய்தவன்'' என்று உதயேந்திரசாஸனம் கூறும். இதனினின்று இத்துர்க்கம் பாண்டியனுக்குப் போரரணாகவிருந்ததென்பது புலப்படத் தடையில்லை.

னென்றே பல பாடல்களிலுங் கூறுவதோடு, அப்பாண்டியனை 'உலகுடை மன்னவன் தென்னவன்' என்று பாடுதலும் ஒப்பிட்டறியத்தக்கது. இவற்றால் அவ்வாழ்வாராற் சிறப்பிக்கப்படும் பல்லவன் இரண்டாம் நந்திபோதவர்மன் (717—779) என்றே துணியத் தடையில்லை. இனி இவ்வாழ்வார் அட்டபுயகரப்பதிகத்தின் ஈற்றில்—

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்
நீண்முடிமாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
அட்டபுயகரத் தாதி தன்னை" (பெ. தி. 2, 8, 10.)

என்று பாடுகின்றார். 'வயிரமேகன் என்ற பெருவேந்தனது கீர்த்திப்பிரதாபங்கள் சூழ்ந்துள்ள கச்சிமாநகரைச்சார்ந்தது அட்டபுயகரம்' என்ற கருத்து, இப்பாட்டாற் பெறப்படுதல் காணலாம். 'இவ்வயிரமேகன் யாவன் என்பது அறியப்படின் திருமங்கைமன்னன் காலமும் செவ்விதின் விளங்கக்கூடும்' என்ற ஆராய்ச்சி எனக்குள் முதன்முதல் நிகழலாயிற்று. அதன் பயனாக யான் கண்ட முடிபைத் 'திருமங்கையாழ்வார் காலவாராய்ச்சி' என்ற தலைப்பெயரின் கீழ், 22-வருஷங்கட்கு முன்பு 'செந்தமிழ்ப்' பத்திரிகை மூலம்[1] வெளியிட்டேன். பின்னர், என் கொள்கையின் மேற் பிறர்கொண்ட கருத்துக்களும் வெளிவந்தன. அவற்றை ஒருங்கு தொகுக்குமிடத்து, வயிரமேகனைப்பற்றி இதுவரை அமைந்த கொள்கைகள் மூன்றென்று கூறலாம். அவற்றுள்:—

முதற் கோள்கை—என்னுடையது. மேலேகுறித்த ஆழ்வார் பாசுரவடிகட்குத் 'தொண்டையர்கோனை வயிரமேகன் வணங்கும் (திரு)மாலை; (அவன்) வலிபுகழ்கள் சூழ்ந்த கச்சி அட்டபுயகரத்து ஆதியை' என்று கொண்டு கூட்டி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை பொருள் அருளிச் செய்வர். இவ்வாறு 'தொண்டையர்கோன் வணங்கும்

1. 'செந்தமிழ், தொகுதி-3, பக். 483—90.

மாலை' என்றும், 'வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி' என்றும் இருபிரிவாக்கிப் பொருள்கொள்ளுமிடத்து 'ஆசிரியன் பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் உண்டான்' என்புழிப்போலத் (தொல். சொல். 42, சேனு.) தொண்டையர் கோனும் வயிரமேகனும் இருவேறானவர் என்ற கருத்து எளிதிற் பெறக்கூடியதாகவும் ஒருவன் என்பது வலிதிற் கொள்ளக்கூடியதாகவும் அமைகின்றன. திருமங்கைமன்னனது திருவாக்கின்போக்கை நோக்குவோர்க்கு ஆற்றொழுக்கான பொருளமைதிபெறப் பாடுவதே அப்பெரியாரியல்பு என்பது விளங்கத் தடையில்லை. அம்முறையில் 'மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்' என்ற தொடர் வயிரமேகனுக்கு விசேடண மென்பதும், 'தொண்டையர்கோனால் வணங்கப்படும் வயிரமேகனது பெருமை சூழ்ந்த கச்சிநகரைச் சார்ந்த அட்டபுயகரம்' என்பதே மேற்கூறிய அடிகட்கு நேராகச்செல்லும் பொருள் என்பதும், வயிரமேகன் என்பவன் வேற்றரசனென்பதும், அவன் கச்சிப் பல்லவனை வணங்கச்செய்து தன்பெருமையை அக்கச்சியிற் பரப்பினவனென்பதும் பெறப்படும். இவ்வாறு பாசுரப் போக்கால், பல்லவனை வணக்கியவனாகத் தெரியவரும் வேற்றுவேந்தன் யாவன் என்று ஆராய்ச்சி செய்தவிடத்து இராஷ்டிரகூடருள்ளே பெருவலிபடைத்த **தந்திதுர்க்கன்** என்ற வேந்தன் (கி.பி. 753—4) பல்லவனது தலைநகரமாகிய காஞ்சியின்மேற் படையெடுத்து அவனை வென்றவன் என்றும், அவனுக்கு வயிரமேகன் என்ற சிறப்புப்பெயர் வழங்கி வந்ததென்றும் சாஸனங்களாலும்[1] சரித்திரநூல்களாலும் தெரியவந்தது. அதனால் 'தொண்டையர்கோன் வணங்கும்......வயிர மேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்று ஆழ்வார் கூறிய வரலாறு அவ்விரட்ட வேந்தனதேயாதல் வேண்டும் என்று கருதலானேன். இவ்வயிரமேகன்காலத்துப் பல்லவன் மேலைகூறிய இரண்டாம் நந்திவர்மன்(717—779) ஆவன். இங்ஙனம் முதன்

1. Kadaba Plates—*Ep. Ind. Vol. iv, p.* 334.

முதலாக யான் எழுதி வெளியிட்ட கருத்தைச் சரித்திர வறிஞரிற் சிலர் முழுதுந் தழுவிக்கொண்டனர்[1]. ஆனால் மற்றொருசாரார் சிலபலஆட்சேபங்களை நிகழ்த்தி என்கொள்கையை ஏற்கவில்லை.[2] அன்னோர் வாதங்களுள் தலைமையானது பல்லவமல்லனைப் பெருவீரனென்றும் திருமாலடியவனென்றும் பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திற் புகழ்ந்து பாடிப் போந்த திருமங்கைமன்னன், அட்டபுயகரப் பதிகத்தில் அவனை வேற்றுவேந்தனொருவனுக்கு அடங்கிப் பணிந்தவனாக இழிவுபடப் பாடார் என்பதேயாம். இதற்கு அப்போது யான் எழுதிய விடை அடியில் வருமாறு:—

3 "அட்டபுயகரத்தைத் திருமங்கையார் பாடநேர்ந்தபோது— பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தைப்போல, பல்லவனைச் சிறப்பிக்கச் சங்கற்பித்துக்கொண்டு அவர் பாடினவரல்லர். அவ்வட்டபுயகரம் கச்சிப் பேரூரைச் சார்ந்தது என்பதைக் குறிக்கவந்தவர், அப்போதிருந்த கச்சியினிலைமை ஒன்றையும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி' என்று பதிகமுடிவில் வெளியிட்டருளினர். திருத்தேவனார்தொகைத்திருமாலைப் பாடநேர்ந்தபோது, இவ்வாழ்வாரே-

"மாவரும்திண் படைமன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கைத்
தேவரும்சென் றிறைஞ்சுபொழிற் றிருத்தேவ னார்தொகையே".
(பெ. தி. 4 4. 2.)

என்று தாம் பாடப்புக்க தலத்துக்கன்றி, அத்தலத்தைத் தன்னுட் கொண்ட திருநாங்கூர்க்கு, தாம் நேரிற்கண்ட வீரச்செயலொன்றை விசேடணமாக்கிக் கூறியதும், ஈண்டு ஒப்பிட்டறியத் தக்கது. பழைய அடியாரெல்லாம் ஒவ்வொருகாலத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், தலயாத்திரைசெய்து பதிகங்கள் பாடிவந்தவரென்பதும், அவ்வப்போது கண்ட விசேடச்செய்திகளும் அவர்கள் வாக்கில் தன்னடைவே அமைவதுண்டென்பதும் நாம் நன்கறிந்தவை.

---

1. ராவ் ஸாஹிப். டாக்டர். S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M.A. அவர்கள் முதலியோர்.

2. தஞ்சை: ராவ்பஹதூர் கே. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள், திருவனந்தபுரம்: ஸ்ரீமாந். கே. ஜி, சேஷ ஐயரவர்கள் (Retired High Court Judge) முதலியோர்.

3. செந்தமிழ், தொ- 22, பக். 5, 6.

அம்முறையே, கச்சிப்பதி சென்று அட்டபுயகரத்துப் பெருமானைப் பாடநேர்ந்தபோது 'மருவலர்தம் முடல்துணிய வாள்வீசும்' பரகாலராகிய தம்மையும் வியப்புறச்செய்த வீரச்செய்தியொன்று நிகழ்ந்ததைக் கச்சிக்கு விசேடணமாக்கி அவர் கூறினர் எனின், அது கவியின் இயற்கைச்சிறப்பைக் காட்டுமேயன்றிப் பிறிது குறிக்குமோ? தம் காலத்தே பெருவேந்தனும் வீரனுமிருந்த பல்லவனையும் வெற்றிகொண்ட அரசனொருவனது அரியபெரிய செயலை வீரசிகாமணியாகிய ஆழ்வார் நேரில் அறிந்திருந்தும், அதனை மறைத்துச் செல்வதற்கு, வீரத்தால் அப்பல்லவனுக்கு ஆழ்வார் பட்டிருந்த கடமையென்னே? வென்ற வேந்தன் எத்தகையவனாயினும், வீரத்தால் அவனடைந்த புகழை, சூரரும் பண்டிதருமாயுள்ள இவ்வாழ்வார் புகழாமல் வேறு யார் புகழ்தற்கு உரியவர்? திருநறையூர்த் திருமாலைவழிபட்டுத் திருப்பணிசெய்த கோச்செங்கணானைப் பரமபாகவதனாகப் புகழ்ந்துவருந் திருமங்கைமன்னன், அவன் சிவபிரானுக்கு 70-மாடக்கோயில் கட்டிப் பெருமைபெற்றதை—

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

என்று சிறப்பித்துப்போந்தனர்; இங்ஙனஞ் சிறப்பித்தது, திருமாலடியவனாக அவ்வரசனைப் பெரிதும் புகழ்ந்துவருஞ் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாததுபோற் றோன்றினும்*, அவன் நிகழ்த்திய பெருஞ் செயலொன்றை மறையாது எடுத்துக்கூறுவதில் அவ்வாழ்வார்க்குள்ள விருப்பமிகுதியை இவ்வடிகள் குறிப்பிடுவனவன்றோ? பல்லவமல்லனது வீரச்சிறப்பையும் திருமாலடிமைத்திறத்தையும் ஆழ்வார் புகழநேர்ந்த காலமும் சந்தர்ப்பமும் முற்றும் வேறாகவேண்டுமென்பதும், இராட்டவரசனான வயிரமேகனை அவர் தற்செயலாகப் புகழ்ந்தது, அவனது வீரம்பற்றியேயன்றி அடிமைத்திறம்பற்றியன்றென்பதும் நாம் நன்றாக அறிந்துகொள்ளத்தக்கன."

இவ்வாறு நான் கூறிய சமாதானம் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், ஆற்றொழுக்கான பொருளமைதியுட

*இங்ஙனஞ் சிறப்பித்துப்போந்ததற்கு, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, வேறுகருத்து நயம்பெறக் கூறியருளுவர்.

ஆழ்வார் வாக்கியல்புக்கு ஏற்புடையதாகவும் சாஸன ஆதரவுபெறுவதாகவும் உள்ள என்கருத்து முடிபாகத் தடையில்லை. இதற்கேற்பத் தந்திதுர்க்கனுன வயிரமேகன் நந்திபல்லவமல்லனை வென்றபின் அவனுடன் சமாதானம்பெற்றுத் தன்மகள் ரேவா என்பவளை அவனுக்கே மணம்புரிவித்துச் சென்றனனென்றும், அப்பல்லவனுக்கு அத்தேவிவயிற்றுப்பிறந்த மகனே தந்திவர்மன் என்றும் சரித்திரவறிஞர் கருதுகின்றனர். இக்கருத்து உண்மையாகுமாயின், இரட்டனுன வயிரமேகன் மாமன்முறைபற்றியும் பல்லவமல்லனுல் கௌரவிக்கப்பட்டவனுவன் என்க. எனவே, தம் காலத்தில் இரட்டபல்லவர்க்குள் நிகழ்ந்த விசேடசம்பவங்களை நேரில் அறிந்தே திருமங்கையார் வயிரமேகனைப்பற்றிக் கூறலாயினர் என்பதும், அவ்வேந்தன் கச்சிமாநகரிற் படையெடுத்த கி. பி. 754ல் அவ்வாழ்வார் தம் அட்டபுயகரப்பதிகத்தை அருளிச்செய்தவராதல் வேண்டும் என்பதும் பெறப்படக்கூடியன. இவையே ஆதியிற் கண்ட என் கருத்துக்கள்.

இரண்டாங்கோள்கை—காலஞ்சென்ற ஸ்ரீ. வேங்கையர் அவர்களாலும்[1], ஸ்ரீ. கே. ஆர். கண்ணபிரான் அவர்களாலும்[2] எழுதப்பட்டதாம். பல்லவமல்லன் மகனும், இரட்டவேந்தனுன தந்திதுர்க்கன் மகள்வயிற்றுப் பேரனுக கருதப்படுபவனுமான தந்திவர்மனே திருமங்கையார் கூறும் வயிரமேகன் என்பது இன்னோர் கருத்து. இங்ஙனங் கருதியதற்குக் கண்ணபிரானவர்கள் சிறப்பாக எழுதிய காரணங்கள் இரண்டாகும். முதலாவது—தந்திதுர்க்கன்பேரனுன தந்திவர்மபல்லவனுக்கு அவன் பாட்டன் பெற்றிருந்த வயிரமேகப்பெயரும் வழங்கியிருத்தல் பொருந்தும் என்பது. இத்தந்திபல்லவனது 2, 9—ஆம் ஆட்சி வருஷங்களில் அமைந்த உத்தரமல்லூர்ச்

1. Ep. Ind. Vol. viii, p. 290.
2. The Quarterly Journal of the Mythic Society, Vol. xiii, No. 3, pp. 699—701.

சாஸனங்கள் வயிரமேகதடாகம் என்ற பெயர்கொண்ட ஏரியொன்றைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.[1] கோயில், ஏரி குளங்கள் முதலியவை அவற்றைச் செய்வித்த அரசர் பெயரைப் பெறுவது அக்கால வழக்காதலின்,[2] இத்தடாகப் பெயரிலிருந்து, அதுவரையப்பட்ட சாஸனகாலத்தவனான தந்திவர்மனுக்கு வயிரமேகன் என்ற பெயர்வழக்கு உண்டென்று அறியப்படும் என்பது அன்னோர் கருத்து. இரண்டாவது—ஆழ்வார் பாடுதற்கேற்றபடி, இத்தந்திவர்மன் திருமால்பத்திமையிற் சிறந்திருந்தவன் என்று சாஸனங் கூறுவதாகும்.

மூன்றாங் கோள்கை—தஞ்சை ராவ்பஹதூர் ஸ்ரீ. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்களும்,[3] திருவனந்தபுரம் ஸ்ரீ. கே. ஜி. சேஷ ஐயரவர்களும்[4] எழுதியதாகும். இவர்களுட் பிள்ளையவர்கள் 'தொண்டையர்கோன் வணங்கு நீண்முடி மாலை வயிரமேகன்' என்பதற்குத்—'தொண்டையர் அரசனும், தன்னை வணங்கும் மன்னர்முடிகளையே மாலையாக உடையவனுமாகிய வயிரமேகன்'—என்பது பொருளும், 'முடிமன்னர் பலர் வணங்கும்படி விளங்கிய

---

1. Ep. Rep. No. 61 and 74 of 1898.

2. பல்லவர், தங்காலத்தே நாடுவளம்பெற ஏரிகளும் கால்களும் உண்டாக்கி அவற்றுக்குத் தம் பெயரிட்டு வழங்கிவந்தனர் என்பது—செங்கற்பட்டு ஜில்லா மகேந்திரவாடியில் மகேந்திர தடாகம் என்று தன்பெயரால் மகேந்திரவர்மன் வெட்டிய ஏரியாலும், அவனே தன் சிறப்புப்பெயரையிட்டுப் பெரும்பிடுகு வாய்க்கால் என்று பாலாற்றிலிருந்து அமைத்த நீர்க்காலாலும், இவ்வாறே பரமேசுவரதடாகம், சித்திரமேகதடாகம், திரையனேரி என்று அவ்வப்பல்லவர் தத்தம் பெயரால் அமைத்த நீர்நிலைகளாலும் நன்கு விளங்கும். (Historical Sketches of Ancient India, pp. 367—68)

3. தமிழ் வரலாறு, பக். 122—129

4. The Quarterly Journal of the Mythic Society, Vol. xiii. No. 2. pp. 580—88,

வன் வயிரமேகன்' என்பது கருத்துமாகக் கொண்டுளார்கள். ஐயரவர்கள், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான முறையைத் தழுவிப் பல்லவனொருவனே ஆழ்வாரால் கூறப்பட்டவன் என்றும், இவ்வயிரமேகன் வைஷ்ணவனுக்குத்தெரியும் தெள்ளாறெறிந்த மூன்றும் நந்திவர்மனாதல் வேண்டும் என்றும் வரைந்துளார்கள்.

இவ்வாறு (1) தந்தி துர்க்கன், (2) தந்தி வர்மன், (3) மூன்று நந்திவர்மன் என்ற மூவருள் 'வயிரமேகன் என்பான் யாவன்' என்ற விவாதத்தை இப்போது நாம் ஒருபடியாகச் சோதித்து ஏற்பதொன்றைக் கொள்ளுதல் நலமாகும். மூன்றுங் கொள்கையிற் கூறப்பட்டவாறு, பல்லவ மல்லன் பேரனும் தெள்ளாறெறிந்தவனுமான நந்திவர்மனிடம் ஆழ்வார்பாடுதற்கேற்ற வைஷ்ணவத்துவம் விளங்கியதென்பதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. ஆனால் அதற்கு மாறாக இவனைப் பரமசைவன் என்று சாஸனங்கள் கூறுகின்றன[1]. இப்பல்லவனைப் பற்றியமைந்த நந்திக்கலம்பகத்தில்:—

> "சிவனை முழுதும் மறவாத சிந்தையான்
> செயமுனி யுறவு தவிராத நந்தி" (104)

எனவருந் தொடராலும், இந்நந்தியின் சிவபத்திச் சிறப்புத் தெளியப்படும். அன்றியும் வயிரமேகன் என்ற பெயர் மூன்றும்நந்திக்கு வழங்கியதுண்டு என்பதற்குச் சாஸனக் குறிப்பு ஒன்றுமே இல்லை. இவ்வாறு திருமங்கை மன்னன் சிறப்பித்தற்கேற்ற திருமாலடிமைத்திறமேனும், பெயரொற்றுமையேனும் இப்பல்லவனிடங் காணப்பெறுமையால், அப்பெரியார் காலத்தவனாக இவனைக் கொள்ளுதல் ஏற்புடைத்தன்றென்க.

---

1. हरचरणसरोजोत्तंसचिह्नन मूर्ध्ना
   मुकुलितकरपद्मो वन्दते नन्दिवर्मा ।
   (Velurpalyam Plates—S. I. I. ii p. 509.)

இனி இரண்டாங்கொள்கையின்படி, பல்லவமல்லன் மகனை தந்திவர்மனே வயிரமேகன் என்பார்கூற்று, மேற்கூறிய கருத்திலும் ஏற்புடையதென்பதில் ஐயமில்லை. 'இரட்டவேந்தனை தந்திதுர்க்கனே ஆழ்வாராற் குறிக்கப்பட்டவன்' என்ற என்கொள்கையில் மிகுதியாக நிகழுந் தடையெல்லாம், தாம் சிறப்பித்துப்பாடிய பல்லவமல்லனுக்கு இழுக்குண்டாம்படி வேற்றுவேந்தனை அவன் வணங்கியவனென்று ஆழ்வார் பாடார் என்பதேயாம். இவ்வொருகாரணம்பற்றி என்கொள்கை ஒதுக்கப்படத்தக்கதன்று என்பதை மேலே விரிவாக விளக்கியுள்ளேன். ஆயினும், தந்திவர்மனே வயிரமேகன் என்பார் கொள்கையில், அதிகவிவாதம் நிகழ இடமின்மையால் அதுவும் பொருத்தமுடையதென்றே சொல்லலாம். திருமால்பால் வைத்திருந்த 'த்ருடபத்தி' யாலும்[1], தன் தாய்ப்பாட்டனது வயிரமேகப்பெயரைப் பெறுவதற்கு உரிமையும் அவ்வாறு பெற்றிருந்ததைக் குறிப்பிக்கும் சாஸனமும் உள்ளமையாலும், ஆழ்வாராற் பாடப்பெற்ற பரம வைஷ்ணவனை பல்லவமல்லனுடைய மகனும் அவன்பின் பட்டமெய்திய சிறப்பாலும் திருமங்கைமன்னன் தந்திவர்மன்காலத்திலும் விளங்கி அவனையும் பாடியிருத்தல் கூடியதே. தொண்டையர்கோனும் வயிரமேகனும் இருவேறானவர் என்று கொண்டு நான் மேற்கூறிய பொருள் நேரேசெல்லக்கூடியதாகவும், மற்றவை சிறிது வலிந்துகொள்ளக் கூடியனவாகவும் உள்ளன என்பதில் தடையில்லை. ஆனால், ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான முறையிலேனும், மேற்குறித்த பிள்ளையவர்கள் கருதிய உரைமுறையிலேனும் திருமங்கைமன்னன் திருவுளங்கொண்டு பாடியிருத்தல் ஒருகாலும் முடியாது என்பது என் கருத்தன்று. அம்முறைகளில் பாடற்றொடர் அமைவதற்கும், இலக்கணவிதிகளும் எடுத்

---

१. पुरन्दरसमो राजा दृढभक्तिर्मुरद्विषि ।
तन्तिवर्मा महाबाहुः क्ष्मापालमकुटीनतः ॥

(பாகூர்ச் சாஸனம்—S.I.I. ii, No. 98, சுலோ. 9. p. 515)

துக்காட்டுங் கூறக்கூடியனவே. ஆதலால் அவ்வுரைவகை களுள் ஒன்றைத் 'தந்திவர்மனே வயிரமேகன்' என்பார் கொள்கைக்கும் இசைத்தல் கூடியதாம். யான் முதலில் எழுதியபடி, இரட்டனை தந்திதுர்க்கனே வயிரமேகனா யின், தம் நாட்டரசன் என்ற அபிமானமின்றித், தங்காலத் தில் வீரனாக விளங்கிய அரசனையும் வணங்கச் செய்த வெற்றிவேந்தனொருவனது பேராற்றலை உள்ளவாறு வியந்து பாடினர் ஆழ்வார் என்பது பெறப்படும். பிறர் கூறுமாறு, அவ்வயிரமேகன் பல்லவனை தந்திவர்மனாயின், தம்மாற் சிறப்பிக்கப்பட்ட பரமவைஷ்ணவனை பல்லவன் மகனாக வும், தானும் பரமவைஷ்ணவனாகவும் தங்காலத்து விளங்கிய வேந்தனை அப்பெரியார் பாடலாயினர் என்பது பெறலாகும். இவற்றுள் ஒன்றே திருமங்கைமன்னனது திருவுள்ளம் என் பதிற் சிறிதும் ஐயமில்லை. உண்மை எதுவாயினும் ஆகுக. 'பரமவைஷ்ணவர்களும் தந்தையும் மகனுமானவர்களுமாகிய நந்தி தந்தி இருவர்காலங்களிலும் அப்பெரியார் வாழ்ந்தவ ரென்றே நாம் உறுதி கூறலாம். அங்ஙனங் கூறுதற்கு வேறு சில குறிப்புக்களும் உள்ளன. பெரியதிருமொழி அட்டபுயகரப்பதிகத் திருத்திப்பாசுரத்தில், "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்று ஆழ்வார் பாடுகின் றார். இத்தொடர்க்கு "வயிரமேகனுடைய பிரதாபமும் கீர்த்தியும் சூழ்ந்துள்ள காஞ்சிபுரம்" என்பது பொருளாம். இவ்வயிரமேகன் யாவனாயினும், அவனிருந்தகாலத்திலே ஆழ்வாரும் வாழ்ந்தவர் என்பது இத்தொடரினின்று பெறப் படத் தடையில்லை. வயிரமேகன் இருந்ததற்குச் சில தலை முறைக்குப்பின்பு ஆழ்வார் விளங்கியவராயின், அவ்வரசன் கீர்த்தி மட்டுமன்றி அவன் வலிமையும் கச்சியைச் சூழ்ந் திருந்தது என்று, பெரிதும் பிற்பட்டவர் பாடும்படி ஒரு காலும் நேர்ந்திராதென்பது திண்ணம். தங்காலத்து விளங்கி யுள்ள அரசனை விட்டொழித்தும், எத்தனையோ மாறுபா டடைதற்குரிய காலத்தை இடையிட்டும், தமக்கு முன் னிருந்த அரசன் வலிமையானது சூழ்ந்திருந்ததாகக் கச்சிப் பதியை ஆழ்வார் சிறப்பித்தாரெனல் சிறிதும் பொருந்துவ

தன்று. அன்றியும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்று—வேறொருவர் வலியும் புகழும் கச்சிக் குரியனவல்ல—என்பதுபட வற்புறுத்திக் கூறுவதாலும், அவ்வயிரமேகனது கீர்த்திப் பிரதாபங்களை ஆழ்வார் நேரி லறிந்தவர் என்பது உறுதிப்படுகின்றது. இவ்வாறாக அப் பாசுரத்தொடரின் இயற்கையமைப்பைச் சிந்திப்போர் எவர்க்கும் வயிரமேகன் என்பான் திருமங்கை மன்னன் காலத்துக்குச் சிறிதேனும் முற்பட்டவன் என்று கருத இடமே இராதென்னலாம். எனவே, அவ்வயிரமேகன் இரட்டனை தந்திதுர்க்கனையினும் பல்லவனை தந்திவர்ம னையினும், அவனைப்பாடிய ஆழ்வார் 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விளங்கியிருந்தவர் என்ற முடிவு பெறப்படத் தடையில்லை. திருமங்கையாரது வாக்குமுழுமையும் நோக்கு வோர்க்கு அவர் காலத்தில் பல்லவராதிக்கம் தமிழகத்திற் சிறிதேனும் குறைந்திருந்ததென்று ஒருபோதுஞ் சொல்ல முடியாது. ஆனால், அதற்கு மாறாக அவ்வரசர் பெருமை களை அவர் வாக்குக்களில் மிகுதியும் பயிலுதலின், அன்னா ராட்சி தமிழ்நாட்டில் தலைசிறந்தோங்கிய காலத்தே அப் பெரியாரும் விளங்கியவர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. சிறப்பாகக் கூறப்புகின், தமிழகத்தின் தென்பகுதியிலும் பல்லவாதிக்கம் செழிப்புற்ற காலமே அவ்வாழ்வார்க்கு உரியதென்று கூறல்தகும். திருமங்கைமன்னன் தம் திரு வல்லிக்கேணிப் பதிகத்தின் இறுதியில்—

"மன்னுதண் பொழிலும் வாவியு மதிலும்
மாடமா ளிகையுமண் டபமும்
தென்னன் தொண்டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக் கேணிநின் றானை"

என்று அருளிச்செய்கின்றார். இதனால், திருவல்லிக்கேணிக் குப் பல திருப்பணிகளுஞ் செய்து அத்தலத்தைச் சிறப் பித்த பல்லவனைத் தென்னன் என்று அவர் கூறுதல் காண லாம். இத்திருப்பணிகள் செய்தவன் பல்லவமல்லனேனும் அவன் மகன் தந்திவன்மனேனும் ஆதல் வேண்டும். அவ்

ஆர்க்கோபின் கர்ப்பக் கிருகத்திற் கண்டெடுக்கப்பட்ட சாஸனமொன்று, தந்தியின் 12-ஆம் ஆட்சி வருஷத்தில் அமைந்ததாக இருத்தலும் அறியத்தக்கது[1]. இங்ஙனம் திருப்பணிசெய்த பல்லவனைத் 'தென்னன்' என்று திருமங்கைமன்னன் கூறுதலால், தென்னாடு பல்லவராட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் அவர் அப்பதிகம் பாடியவராதல் வேண்டும். இத்தகைய தென்னாட்டாதிக்கம், தந்திவர்மன் காலத்தில் அவனது 16-ஆம் ஆட்சி வருஷத்துக்குப் பின்பு, பல்லவர்கையைவிட்டு நழுவிப் பாண்டியர் வசமாயிற்று. இவ்வாறு கைப்பற்றிய பாண்டியன் மாறஞ்சடையன் என்ற முதல் வரகுணன் ஆவன். இதுபற்றிச் சிறந்த ஆராய்ச்சியுடன் கனம் - தூப்ராயில் துறை தம் பல்லவசரித்திரத்தில் நிரூபித்துள்ளார்[2]. ஆழ்வார் புகழ்ந்துள்ளபடி, திருவல்லிக்கேணித் திருப்பணி செய்தவன் பல்லவமல்லனாயின் அவன் தென்னாட்டைத் தன்காலத்தில் அடிப்படுத்தியவனாதலின், அவனைத் தென்னன் என்று அப்பெரியார்கூறத் தடையில்லை. அவன்மகன் தந்தியாயின், 16-ஆம் ஆட்சி வருஷத்துக்குப்பின் அவன் தென்றமிழ்நாட்டை முழுதும் இழந்தவனாதலின், அவ்வாட்சியாண்டுக்கு முற்பட்டகாலத்தே அவனைத் தென்னன் என்று அப்பெரியார் சிறப்பித்திருத்தல் வேண்டும். இக்கருத்து அறிஞரால் ஏற்றுக்கொள்ளப்படின், தந்தியின் 16-ஆம் ஆட்சி வருஷமான 795-க்குமுன் திருமங்கைமன்னன் தம் திருவல்லிக்கேணிப் பதிகத்தைப் பாடியவர் என்று நாம் ஒருதலையாகக் கூறலாம்.

ஒருசிலர், பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் ஆழ்வார் தாம் சிறப்பிக்கும் பல்லவமல்லன் செய்திகளைக் கூறுமிடத்து —பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று என்ற சொற்களைப் பெய்து பாடுதலால், அவ்வரசனுக்கு நெடுங்காலத்துக்குப் பின்பு ஆழ்வார் வாழ்ந்தவராதல்வேண்டும் என்று கருதுவர். அவர் கருதுமாறு, காலங்கடந்த பழஞ்செய்தியைத்தான் அச்சொற்கள் குறிப்பிடவேண்டும் என்ற

1. Ep. Rep. 3 234 of 1903. (I. M. P. Ms. 326)

நியதியில்லை. அவையாவும் 'கடந்த காலம்' என்ற பொருள்கொண்டு ஒருவன்வாழ்நாளுட் சென்றகாலத்தை யும், தலைமுறைசென்ற காலத்தையும் பொதுவாகவே காட்டக் கூடியன. "பண்டு மின்றும் மேலுமாய்" என்ற திருமழிசைப்பிரான் வாக்கில் (திருச்சந்த. 1, 2), அச்சொல் இறந்தகாலம் என்ற பொருளில் வழங்குதல் காண்க. ஒரு வன் வாழ்நாளுள்ளே சிலபல ஆண்டுகள் கழிந்ததை மட்டு மன்றி, சில மாதங்கள் நாள்கட்குமுன் நிகழ்ந்தவற்றைக் குறிப்பதற்கும் அச்சொற்கள் முன்னோரால் நூல்களில் மிகுதியாக வழங்கப்பட்டுள்ளன[1]. அதனால், அச்சொல் வழக்கைக்கொண்டு ஒரு முடிவு கட்டுதல் பொருந்தாதென்க.

இன்னும், அவர், வயிரமேகன் என்பது பல்லவர்க்குப் பொதுவாக வழங்கிய குடிப்பெயர் என்று பெரியவாச்சான்

---

1. பண்டு முதலியவை, சிலபல ஆண்டுகட்கு முன்னிகழ்ச்சி குறித்தலை— 'பண்டும் பண்டும் பாடுந ருவப்ப...பெண்டிருந் தம் பதங் கொடுக்கும்' (புறம். 151), 'பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை யுண்டேம்' (மணிமே. 8, 18), 'பண்டறி கிளையொடு பதி யுங் காணாள்' (ஷை. 8, 15), 'பண்டுகாம ரானவாறும்...ஒக்கவுரைத் திருமி' (பெரிய திருமொழி, 1, 3, 5), 'பண்டிவ னயனங்காய்' (ஷை. 3, 7, 2), 'வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்' (திருப்பாவை. 15), 'பண்டே எரிமுன் னுன்னைப் பாவி தேவியாகக் கொண்டே னல்லேன்' (கம்பரா. நகர்நீங். 48), (விருந்தினர்) 'இருவகையா, பண்டறிவுண்மையிற் குறித்துவந்தாரும், அஃதின் மையிற் குறியாதுவந்தாருமென (குறள், 43, பரி) என்பவற்றாலும், சில பல மாதங்கள் நாள்கட்கு முன்னிகழ்ச்சி குறித்தலை -'பண்டறி யேன் கூற்றென்பதனை' (குறள். 1083), 'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்' (ஷை. 1133), 'பண்டும் பல பல வீங்கிருள் காண்டும்' (திருவிருத்தம், 49), 'பண்டிப்புனத்து...கண்டிக் களிற்றையறிவன்' (யாப். வி. பக். 102) 'பண்டையில் சிறப்பால்' (குறள். 1152, பரி.) 'முன்னுந் தொழத் தோன்றி' (யாப். வி. பக். 402), 'வந்தணங்கா மன்னர் தேய முன்னாள்' (இறை. களவியல். 156 உதா.) 'முன்னாள் முறைமையின்...அல்லிடைப் பெயர்ந்தனர்' (சிலப். 13, 135-6), 'முன்னொருகா லென்மகனைக் கண்டேனென் கண்குளிர' (சீவக. 1807). 'பகடுந்திவந்தார் அன்றவிய...வேல் கொண்ட கோன்' (இறை. களவியல். 158, உதா) 'அன்று நீ செல்லக் கிடவென்றாய்' (பொய்யாமொழியார் பாட்டு—தமிழ்நா. சரிதை, 76) என்பவற்றாலும் தெளிக.

பிள்ளை வியாக்யானத்தால் அறியப்படுதலின், அப்பெயர் வழக்கைக் கொண்டு ஆழ்வார் காலவரையறை செய்தல் கூடாதென்பர். இவ்வயிரமேகப்பெயர் பல்லவர்க்குள் முதன்முதல் வழங்கத்தொடங்கியது, இராஷ்டிர கூடனை தந்திதுர்க்கன்சம்பந்தம் அப்பல்லவர்க்கு உண்டான பின்பேயன்றி, அதற்கு முன்பு அன்று. அப்பெயரைப் பல்லவவரசர்சிலர் பெற்றிருந்தனர் என்பதற்குச் சாஸனக்குறிப்பு உள்ளதாயினும், அது பல்லவாது குடிப்பொதுப்பெயராக வழங்கியதென்பதற்கு ஆதாரம் ஒன்றுமே இன்று. சிலர் கருதுவதுபோலப் பல்லவர்குடிக்குப் பொதுப்பெயராக வயிரமேகப்பெயர் வழங்குவதென்று பெரியவாச்சான்பிள்ளை எழுதினர் என்று ஒருதலையாகச் சொல்வதற்கில்லை. 'மன்னன்...வயிரமேகன்' என்ற தொடர்க்கு அப்பெரியார் எழுதிய வியாக்கியான பந்தியாக அச்சுப்பிரதியில் உள்ளதாவது :—"ராஜா—தொண்டைமான் சக்கரவர்த்தி; வயிரமேகன் என்று அவற்கு[க்குடி]ப் பெயர்" என்பதே. இவற்றுள் அவற்கு[க்குடி]ப் பேயர் என்பதிலுள்ள குடி என்பது பிற்காலத்தவரால் இடைச்செருகப்பட்ட சொல்லாகும். இச்செய்தி, அவ் வாக்கியத்தை விளக்க வந்த முன்னோரான அரும்பதவுரைகாரர்—'அவற்குப் பேயர் - சக்கரவர்த்திக்குப் பெயர்" என்று குடியைவிலக்கிப் பொருளெழுதிச் செல்வதனாலும், "குண்டலிதாக்ஷரம் க்வாசித்கம்[1], அரும்பதத்துக்குப் பாடமில்லை" என்று பதிப்பாளரே கீழ்க்குறிப்பில் 'குடி' என்பது இடைச்செருகல் என்று தெளிவாகக்காட்டியிருத்தலாலும் விளக்கமாகும். ஆகவே, வயிரமேகன் என்பது பல்லவக்குடியின் பொதுப்பெயரென்று பெரியவாச்சான் பிள்ளை எழுதிவிட்டனர் என்று பிறரெல்லாம் எழுதி வருவது ஆதாரமற்றதே என்க. எனவே, தந்திதுர்க்கன் அல்லாமற்போயின் அவன் மகள்வயிற்றுப் பேரனை தந்திவர்மனுக்கன்றி அவன் முன்னோர் எவர்க்கும் வயிரமேகப்பெயர் வழங்கியதென்பதற்குச் சாஸனக் குறிப்புக்

1, வளைவுகளுக்கு உட்பட்ட எழுத்துக்கள் வழக்கருமையானவை ' என்பது இதன்பொருள்.

காணப்படாமையால், அத்தந்தியே ஆழ்வாராற் கூறப்பட்ட பல்லவனாதல் வேண்டும் என்று சொல்லலாம்.

மற்றுஞ்சிலர், வயிரமேகனென்ற பெயர் வேறுபல்லவர் சிலர்க்கும் வழங்கியிருத்தல் சாஸனங்களால்[1] அறியப் படுகின்றதென்றும், அவருள் ஒருவனையே ஆழ்வார் கூறினராதல் வேண்டும் என்றும் கருதுவர். அச்சாஸனங்களின் எழுத்தமைதியால், அவை தந்திவர்மன் காலத்துக்குப் பிற் பட்டவையே என்பது சாஸனவாராய்ச்சிவல்லார் தெளிய அறிந்ததாம். வயிரமேகதடாகம் என்று தந்திவர்மன் காலத்துவழங்கிய ஏரியால், அவனுக்கே முதன்முதல் அப் பெயர் வழங்கியிருக்கவேண்டும் என்பது மேலே காட்டப் பட்டது. அவ்வாறு தந்தி பெற்றிருந்த பெயரையே அவன் மகன் நந்திவர்மனும் (III) பெறுவது மாபன்று. அதனால், பிறர்கருத்துப்படி அவனுக்கும் பிந்திய பல்லவ னொருவற்கு வயிரமேகப் பெயர் வழங்கியிருத்தல் வேண் டும். அன்றியும் இம்மூன்றாநந்தி ஆழ்வாராற் பாடப்ப டுதற்கேற்ற திருமாலடிமைத்திறம் உள்ளவனல்ல னென் பதை மேலே விளக்கியுள்ளேன். இம்மூன்றாநந்தியின் மகனும் பேரனும், ஆசாரியத் தலைவரான ஸ்ரீமந் - நாதமுனிகள் விளங்கிய காலத்தை அடுத்திருந்தவர்கள். அவ்வாசாரியர் காலத்துப் பல்லவருளொருவனைத் திருமங்கைமன்னன் பாடினரென்றல் சிறிதும் பொருந்தாதென்பதைப்பற்றி, இந்நூல்முடிவில் நாதமுனிகள் காலநிலையைக் கூறநேரு மிடத்து, நன்கு விளக்குவேன். மற்றும் இவ்வாழ்வார் காலம்பற்றி நிகழ்ந்த தடைகட்கு யான் எழுதிய விடை கள், "திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்" என்ற கட்டுரையால் அறியத்தக்கன.[2] ஆகவே, தந்திவர்மன் மூன்றாம் நந்திவர்மன் இவர்கள் பின்வந்த பல்லவருள் வயிர மேகப்பெயர் தரித்திருந்தவர் எவராயினும், அவர்காலத்தில் ஆழ்வார் ஒருபோதும் இருந்தவராகார் என்பதே உறுதி யென்க.

1. Ex. Rep. Nos. 150 and 152 of 1916.
2. செந்தமிழ், தொகுதி-22, பகுதி-1.

இனி, நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கை மன்னன் முதலிய அடியார்களை ஒருகாலத்தவர்களாகத் திவ்யஸூரிசரிதம் குறிப்பிடுவதும், பாண்டியன் - மாறவர் மனும் அவன்மகன் நெடுஞ்சடையனும் ஆண்ட காலமே பெரியாழ்வார் ஆண்டாள் இருவர்க்கும் உரியதென்பதும் மேலே விரிவாக விளக்கப்பெற்றன. இப்பாண்டியரிருவர் காலத்தே தான், இரண்டாம் நந்திவர்மனை பல்லவ மல்லனும் அவன்மகன் தந்திவர்மனும் ஆட்சிபுரிந்தவர்கள். ஆகவே, தமிழகத்தின் தென்பகுதியை மாறனுஞ் சடையனும், வடபகுதியை நந்திதந்திவர்மர்களும் சிறப்புடனாண்ட 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியே, திருமங்கைமன்னன் விளங்கிய காலமாகும் என்பது திண்ணமெனக.

திருமங்கைமன்னன் பரமேச்சுர விண்ணகரப்பதிகத் திற்கூறும் போர்களிற் சில, பல்லவமல்லன் பட்டத்துக்கு வந்த இளமைக்காலத்தில் அவன் சேனாபதியான உதய சந்திரனால் நடத்தப்பெற்றவை என்பது உதயேந்திரதான சாஸனத்தால் அறியக்கிடக்கின்றது. இப்போர்க்களங் களிற் பல பாண்டிநாட்டின் எல்லைப்புறம் உள்ளன என்று மேலே குறிப்பிட்டேன். இவையெல்லாம் ஆழ்வார் அவ தரித்த ஆலிநாட்டுக்கு அதிக தூரமானவை அல்ல. ஆகவே பல்லவமல்லனது தென்னாட்டு வெற்றிகளை நேராகவும் கேள்விமூலமாகவும் ஆழ்வார் அறிந்தவராகவே கருத இட முண்டு. அப்போர்கள் தங்காலத்து நிகழ்ச்சிகளேயாயினும், 'பண்டொருகால் வளைத்தான்' 'செருவில் முனநாட் பரந் தான்' என்று அவர் கூறுதலின், தாம் பரமேச்சுரவிண் ணகரப்பதிகத்தைப் பாடுவதற்குப் பல்லாண்டுகட்குமுன்பு அப்போர்களிற்சில ஒருகால் நடந்தனவாகக் கருதலாம். இப்போர்களுள்ளே—

“உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னிமா மதில்சூழ் கருவூர் வெருவப்
பலபடை சாயவென் றான்பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே”

என்று பல்லவ மல்லனுடன் எதிர்த்த பாண்டியனை 'உலகுடை மன்னவன்' என்கின்றார், ஆழ்வார். இப்பாண்டியன் மாறவர்மன் - பராங்குசன் என்பது வேள்விக்குடிச் சாஸனத்தால் தெளிந்தது. இவன் தன் இராசதானியோடு சேரசோழர்கள் தலைநகரங்களையும் தன்னடிப்படுத்தி அவற்றின் கோட்டைமதில்களைப் புதுப்பித்துப் பலப்படுத்தியவன் என்பது—

"கூடல் வஞ்சி கோழி யென்னும் மாடமா மதில்புதுக்கியும்
அறைகடல் வளாகங் குறையா தாண்ட...மாறன்"

எனவரும் அச்சாஸனப்பகுதியால் தெரியலாம். இங்ஙனம் தமிழகத்தின் பெருவேந்தனாக விளங்கியமை பற்றியே 'கோ - நெடுமாறன்' என்று பெரியாழ்வார் இவனைச் சிறப்பித்ததூஉம் என்க. இப்பாண்டியன் படைத்திருந்த இத்தனியரசுரிமையை நேரில் அறிந்தே ஆழ்வார் அவனை 'உலகுடை மன்னவன்[1] தென்னவன்' என்று, பல்லவனும் பெருதிருந்த பாண்டியனது பெருநிலையை அப்பல்லவனைப் பற்றிய பதிகத்தே பாடுவாராயினர் என்க. இங்ஙனம் பெற்றிருந்த பாண்டியனது தென்னாட்டாதிக்கத்தைக் குறைக்கவே, பல்லவமல்லன் அந்நாட்டில் இவனுடன் பல போர்கள் புரிய நேர்ந்தது. இப்போரொன்றிற் பாண்டியன் வெற்றிபெற்றதாக வேள்விக்குடிச்சாஸனங்கூறினும், ஆழ்வார் கூறியபடி பல்லவனே முடிவாக வெற்றிபெற்றுத் தன்னாட்சியைச் சோணாடு முழுதினும் நிலைநாட்டியவன் என்பதில் ஐயமில்லை. இக்காலத்தே சோழமன்னர் பல்லவரின் கீழடங்கிப்[2] பேருக்கரசராய் ஒடுங்கிப்போயினர். இவ்வாறு பல்லவரது தென்னாட்டு வெற்றிக்கு முக்கிய காரணபூதராய் நின்று உதவியவர், முத்தரையர் என்ற வகுப்பினராவர். இன்னோர் கள்வர்குலத்தவராகவும், பெரு

1. உலகுடை மன்னவன் - தமிழுலகத்தை ஆளும் அரசன் இவ்வாறே இளங்கோவடிகளும் 'உலகமன்னவன்' என்று பெருவேந்தனை சேரன் - செங்குட்டுவனைப் பல்லிடத்துங் கூறுதல் காணலாம் (சிலப்-26, 83 ; 28, 7 ; 30, 156).

2. T.A.S. Vol. iii, p. 108.

வீரர்களாகவும், புலவர்புகழ்ச்சிக்கு உரியவராகவும்[1] பழங் காலத்தே விளங்கினவர். பல்லவர்க்குப் பெருந்துணையாக நின்ற இன்னோர், பாண்டியசோழர்களுடன் பல போர்கள் புரிந்து சோணாட்டை அவர் குடைக்கீழ் நிறுவியதோடு, அவர்க்குப் பிரதிநிதிகளாய்த் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அந்நாட்டைத் தாமே ஆட்சிபுரிந்தும் வந்தனர். பல்லவமல்லனது இளமைக்காலத்தில் அவனாட்சியை நிலை நிறுத்திய கள்வர்தலைவருள்ளே பெரும்பிடுகு முத்தரையன் என்பான் சிறந்தவன். இவனைக் கள்வரகள்வன் என்று சாஸனம்[2] விசேடித்துக் கூறுகின்றது. திருமங்கைமன்னன் ஆலிநாட்டதிபரான கள்வர்குலத்தவர் என்று வரலாறு வழங்குதலும், பல்லவாதிக்கம் சோணாட்டிற் பல்கிநின்ற காலத்தே தாமும்விளங்கி அப்பல்லவர் பெருமைகளையே பலபடப்பாராட்டுதலும் மேலெல்லாம் நன்கறியப்பட்டன. இங்ஙனம் கள்வர்குலத்துதித்த சோணாட்டுத்தலைவராய்ப் பல்லவாபிமானம் மிக்குடைய நம்பெரியாரை மேற்கூறிய முத்தரையமரபினருள் ஒருவராகவே[3] நாமும் கருதல் கூடியதன்றோ? இத்தகைய வீரகுலத்தவராய்த் தம் அரசனுக்குப் பேருதவிபுரிந்த சிறப்புப்பற்றியே—

---

1. நாலடியாரில் பெருமுத்தரையர் (200, 286) என்று சிறப்பிக்கப்பெற்றிருத்தலாலும், செந்தலைச் சாஸனத்தில்—பாச்சில்வேள் நம்பன், குலாலன் காஞ்சன், கோட்டாற்று இளம்பெருமானார், ஆசாரியர் அநிருத்தர் என்ற புலவர்களாற் பாடப்பெற்றிருத்தலாலும் (செந்தமிழ். தொ-6., பக். 10—15) தமிழ்முத்தரையர்கோவை (யாப்பருங்கலவிருத்தி. பக், 486) என இவர்சம்பந்தமாகவழங்கும் நூலாலும் இன்னோரது 'புலவர்பாடும் புகழுடை' மை நன்குவிளங்கும்.

2. Ep. Ind. XV, ii, p. 49 ff.

3. கள்வர் குலத்தவர்க்குச் சேம்பிய முத்தரையர் என்ற பட்டப்பெயர் சோணாட்டில் இன்றும் வழங்குதல் அறியத்தக்கது. (திருவாளர், மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள் எழுதிய கள்ளர் சரித்திரம், பக். 23, 24.)

" ஆலிநாட னருண்மாரி யரட்டமுக்கி யடையார்சீயம் "
" வாட்டிறற் றனை மங்கையர் தலைவன் "
" அமரிற் கடமா களியானைவலான் "
" ஒன்னலர்தங்களை வெல்லும் ஆடன்மாவலவன் "
" மருவலர்த முடல்துணிய வாள்வீசும் பரகாலன் "

என்றிவைபோலும் வீரப்பெருமையால் தம்மை ஆழ்வார் சிறப்பிப்பாராயினர் என்றுணர்க. பல்லவர்களுள் பரம வைஷ்ணவர்களான இரண்டாம் பரமேசுவரவர்மன் காலத்தும், அவன்பின் பட்டம்பெற்ற நந்திதந்திவர்மர் காலங்களிலும் விளங்கிய முத்தரையர்கள் தம்மரசரைப்போலவே திருமால் சமயத்தவர்களாக இருந்திருத்தல் கூடியதென்பதும் இங்கு அறியத்தக்கது.[1] களவுத் தொழிலில் இழிவான முறைகளையெல்லாம் திருமங்கைமன்னன் கையாண்டொழுகியவர் என்ற சரித்திரம் நெடுங்காலமாகப் பிரபலம் பெற்றுள்ளது. அவை பெரும்பாலவும் இவரது குலப்பெயர் பற்றியும்[2],

" கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலுந்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன் " (பெ. தி. 1, 1,5)

" கோடிய மனத்தாற் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடுந் திரிந்திட்
டோடிய முழன்று முயிர்களே கொன்றே
னுணர்விலே னுதலால் " (ஷை, 1, 6, 6)

1. கள்ளர் மரபினருள் திருமால்சமயத்தவராகப் பலர் சோணாட்டில் இன்னும் உள்ளனர்.

2. இவ்வாழ்வார் அவதரித்தது 'சபாகுலம்' என்று திவ்ய ஸூரிசரிதம் முதலியவை கூறும். வேட்டை முதலியவற்றில் விருப்பமிக்கிருந்தமைபற்றிக் கள்வர்குலத்தை வடமொழியாளர் அவ்வாறு பெயர்த்துக்கொண்டனர் போலும். வேங்கடமலைக்குத் தலைவனும், வள்ளலுமான புல்லி என்பானைக் கள்வர்கோமான் என்று சங்கநூல்கள் (அகநானூறு. 61) கூறுவதினின்று, இக்கள்வர் குடியின் பழமைபெருமைகள் தெரியலாம்.

என்பன போன்ற இவரது திருவாக்குக்களிலிருந்தும் பிற்காலத்துண்டான கதைகளாகவே தோற்றுகின்றன. அக்கதைகள்யாவும் உண்மையானவையாயின், சத்தியவானாகவும், அருள்மாரியாகவும், தாதாவாகவும், பண்டிதராகவும், பரமவைஷ்ணவராகவும் தம்மைப்பற்றி இவர் நெடுகக் கூறிவருவனவற்றோடும் பெரிதும் முரணத்தலையில்லை. 'கள்வனேனானேன்' என்பதுமுதலிய இவ்வாழ்வார் பாசுரங்கள் தாம் பிறந்த வீரக்குடிக்கேற்றபடி, போர்களிற் பிறர்பொருளைக் கொள்ளையிட்டும் வேட்டைமுதலியவற்றிற் கொடுமையிழைத்தும்போந்த தம் முன் செயல்களை வெறுத்துரைத்தனவேயன்றித் தாமேற்கொண்டிருந்த களவுமுறைகளைக் குறித்தனவென்று ஒருதலையாகச் சொல்லத்தக்கனவாகா. அந்தணர்குலத்தவரான தொண்டரடிப்பொடிகளும் 'சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்'' என்று, 'ஆத்மாபஹாரம்' செய்துபோந்த தம்மைக் கள்வன் என்று கூறிக்கொள்ளுதல் காணலாம். இளமையில் தம் அரசன் கட்டளை கடந்ததனால் ஆழ்வார் கடுந்துன்பத்துக்கு உள்ளாகியவர் என்ற சரித்திரமுள்ளது. ஒருகால் அக்காலத்தே ஆறலைகள்வர் அராசகர்களுடன் சேர்ந்து இவர் சில அதிக்கிரமங்களைச் செய்திருத்தல் கூடியதே. ஆனால் பருவம் நிரம்பிய நிலையிலும் அவற்றையே செய்து தாம் கவர்ந்த கொள்ளைப்பொருளாற் திருமால்கைங்கரியம் புரிந்தவர் இப்பெரியார் என்று வழங்குங் கதைகள் பெரும்பாலவும் கற்பிதங்களே என்பதில் ஐயமில்லை.

"தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்து மிட்டேன்
பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்''

என்று, தம் வாழ்நாளின் முன்பின்பகுதிகளில் நிகழ்ந்த செய்கைகளை இவ்வாழ்வாரே கூறுதல் அறியத்தக்கது. இதனால் தம் முன்னோர் போலவே பேரரசரின் கீழ் அரசியல்நிர்வாகத்தில் தம் ஆயுளின் பெரும்பகுதியைக் கழித்தவர் இப்பெரியார் என்பதே மிகவும் பொருத்தமென்க. "இவ்வாழ்வாராகிறார், ஆத்மாவை விஷயிலேயும் உடம்பை

நிழலிலேயும் வைத்துப் போந்தாராயிற்று. ஆத்மாவை வெயிலிலே வைக்கையாவது—பகவத் விஷயத்திலே முதலிலே இழியாமை; உடம்பை நிழலிலே வைக்கையாவது—அநாதிகாலம் விஷயப்ரவணராய் அதுவே யாத்ரையாகப் போருகை; நிழலாவது—தான் பகவத்விஷயமிறே'' என்று—ஏனையடியாரெல்லாரினும் திருமங்கைமன்னனுக் கிருந்த உலகப்பிரசித்தியின் மிகுதியை—ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அழகாகக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. எல்லாப் பற்றும் அற்றுத் திருமாலடிமைத்திறத்தே இப்பெரியார் முனைந்துநின்ற காலத்தும் வீரப்பெருமையால் தம்மையுந் தம்போன்ற சூரர்களையும்பற்றிச் சிறப்பிப்பது இவர்க்கியல்பாகும். "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி' என்று, தங்காலத்து வேந்தனை அவனது வீரம்பற்றி இவர் புகழ்ந்தவாறே, வேறு வீரர்களையும் தம் திருப்பதிகங்களில்

"ஒண்டிறல் தென்னனோட வடவரசோட்டங் கண்ட
திண்டிறலாளர் நாங்கூர்'' (பெரியதிருமொழி, 4, 5, 6).

"மாவரும் திண்படை மன்னை வென்றிகொள்வார்
மன்னும் நாங்கை'' (ஷை, 4, 1, 2).

"மண்ணித் தென்கரைமேல் திண்டிறலார்
பயில் நாங்கை'' (ஷை, 4, 1, 5).

"துண்ணென மாற்றார்தம்மைத் தொலைத்தவர்
நாங்கை'' (ஷை, 4, 6, 2).

"நண்ணார்முனை வென்றிகொள்வார்
மன்னும் நாங்கூர்'' (ஷை, 4, 7, 1).

என்று இவர்பாடுதல் அறியத்தக்கதாம். இவற்றுள், நாங்கூரில் உள்ள வீரர்கள், ஆற்றல்மிக்க பாண்டியனோடு வடவேந்தனொருவனைப் போரிற் புறங்காட்டியோடச் செய்த அருஞ்செயலைத் திருமங்கைமன்னன் பலபட வியந்து பாராட்டுதல் தெரியலாம். பாண்டியனையும் வடவரசனையும் அன்னோர் வென்றவர் எனவே, அவ்விருவராலும் எதிர்க்கப்பட்ட பேரரசன்பக்கத்து நின்றவர் அவ்வீரர்கள் என்பதும், 'வென்றிகொள்வார் மன்னும் நாங்கை' 'திண்டிறலார் பயில் நாங்கை' என இறந்தகாலத்தாலல்லாது நிகழ்காலத்

தாற்கூறுதலின் அன்னோரை ஆழ்வார் நேரில் அறிந்தவர் என்பதும் தெளிவாகப் பெறப்படுகின்றன. இவ்வீரர்களுடைய நாங்கூர் சோணாட்டில் திருமங்கைமன்னனுடைய திருநகரிக்கு அணித்தாயிருத்தல், அங்ஙனம் அவர் அறிந்து வியத்தற்கு ஏற்றதாதலுங் காண்க. எனவே, ஆழ்வார் காலத்தே தென்னாட்டில் ஆதிக்கம் பெற்ற அரசர் பல்லவரேயாதலின், அப்பல்லவரின் படையாளர்களே பாண்டிய வடவரசர்களைப் புறங்கண்ட நாங்கூர்வீரர்கள் என்பது நன்குபெறப்படத் தடையில்லை. இங்ஙனம் வெல்லப்பட்ட பாண்டியனும் வடவேந்தனும் யாவர்? இவர்க்குப் பகைவனாய் எதிர்த்த பல்லவன் யாவன்? என்பவை இப்போது ஆராய்ந்தறிய வேண்டுவனவாகும்.

திருமங்கைமன்னன் காலமான எட்டாநூற்றாண்டில் வடவரசரது தென்னாட்டுப் படையெடுப்பு இருமுறை நிகழ்ந்துள்ளன. முதலாவது—பல்லவமல்லனது இளமைக் காலத்தில் 741-க்கு அணித்தாகச் சாளுக்கிய வேந்தனை இரண்டாம் விக்கிரமாதித்தன் (731-746) படையெடுத்து வந்து அப்பல்லவனை வென்று காஞ்சியைக் கைப்பற்றியதாகும்[1]. இரண்டாவது—754-ல் இரட்டனை தந்திதுர்க்கன் கச்சிமாநகரிற் பிரவேசித்து அதனைத் தன்வசப்படுத்தியதாகும்[2]. இவ்விரண்டு படையெடுப்புக்களை ஒழிய, பல்லவ பாண்டியர்களது ஆதிக்கம் பெருகிச்சிறந்த அந்நூற்றாண்டிலே வேறுவடவேந்தர் தென்னாட்டுட் பிரவேசித்தனர் என்பதற்கு ஆதாரமே இல்லை. இவ்விரண்டு படையெடுப்புக்களினும் சளுக்கியனும் இரட்டனும் பல்லவமல்லனை வென்றவர்கள் என்பது சாஸனங்களால் தெளியப்பட்டது. ஆதலின் அன்னோரை நாங்கைவீரர் வென்றவராக ஆழ்வார் கூற இடமே இல்லையெனலாம். இனி, 9-ம் நூற்றாண்டுத்தொடக்கத்தில் கி. பி. 803-க்கு அணித்தாக இராஷ்டிரகூட வேந்தனை மூன்றாங் கோவிந்தன் படையெடுத்துவந்து, பல்லவ

1. Ep. Ind. Vol. ix, No. 29, p. 205.
2. Kataba Plates—Ep. Ind. Vol. iv, p. 334.

மல்லன் மகன் தந்திவர்மனை வென்று கச்சியைக் கைப்பற்றி ஞன் என்றும், அதனால் அத்தந்தியின் ஆட்சியே நிலை குலையத் தென்னாட்டிற் பல்லவா திக்கம் குறையலாயிற்றென் றும் சாஸனம்[1] தெரிவிக்கின்றது. இதனால், வெற்றி யாளனான அவ்விரட்ட வேந்தனையும் 'வடவரசு' என்று ஆழ்வார் கூற இடமில்லையாம். ஆகவே 8-ம் நூற்றாண் டிடையினும், 9-ம் நூற்றாண்டுத்தொடக்கத்தும் நிகழ்ந்த வடவர் படையெடுப்புக்களைப் பற்றியதன்று மேற்குறித்த ஆழ்வார் வாக்கென்பது தெளிவாகும்.

இனி, 7-ம் நூற்றாண்டிறுதியிலே சாளுக்கியவேந்தான முதல் விக்கிரமாதித்தன் (670-680?) சோழிய விஷயத்தி (சோணாட்டி)ன் மேற் படையெடுத்துவந்து காவேரித் தென்கரையில் உள்ள உரகபுரத்தில் தங்கியிருந்தனன் என் றும், இவனை எதிர்க்கவேண்டி மூவர் அரசர் ஒன்று சேர்ந் திருந்தனர் என்றும், முடிவில் பல்லவ-பரமேச்சுரவன்மன் (674—700) "அநேகலக்ஷம் படைகளையுடைய விக்கிரமா தித்தனை முறியடித்து ஒரு கந்தைத்துணியைமட்டுங் கட்டி மூடிக்கொண்டு பிறகிட்டோடும்படி செய்தான்" என்றும், இப்போர் பெருவளநல்லூரிலே நடந்ததென்றும்—கூரம் உதயேந்திர சாஸனங்கள் விளக்குகின்றன. இங்ஙனம் இவ்வடவேந்தன் தங்கிய உரகபுரம் என்பது மதுரை என் றும், நாகபட்டினம் என்றும், உறையூர் என்றும் பலரும் பலவாறு கருதினர். ஆயினும், உறையூரே[2] விக்கிரமாதித்

1. Ind. Ant. Vol. ix, p. 127.

2. சோழராஜதானிகளுள் உரகபுரமும் ஒன்றென்பது "உரக புரியாள் தலைவா தாலேலோ" என்ற குலோத்துங்கன்பிள்ளைத் தமிழ்த் தொடரொன்றால் தெரியவருகின்றதென்றும், இவ்வுரகபுரி உறையூரே என்றும், மேற்குறித்த தொடர் தஞ்சைச் சரஸ்வதி மாலில் ஷை பிள்ளைத்தமிழின் சிதைந்த சுவடியொன்றில் தாம் கண்டறிந்ததென்றும் ஸேதுஸம்ஸ்தானம் மஹாவித்வான் ஸ்ரீ உப. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமி அன்புடன் தெரிவித்தார் கள். இது தூப்ராயில் துரையவர்கள் முடிபை உறுதிப்படுத்துதல் காண்க.

தன் தங்கியிருந்த பாடியாகவேண்டும் என்றும், அவனுடன் பல்லவன் போர்நடத்திய களமாக உதயேந்திரசாஸனங் கூறும் ஊர், அவ்வுறையூர்க்கு வடமேற்கே 10-மைலில் உள்ள பெருவளநல்லூரே என்றும் கனம் தூப்ராயில் துரை தம் பல்லவசரித்திரத்தில் ஆராய்ந்தெழுதியவை மிகப் பொருத்தமானவையாம்.[1] இப்போரில் அரசர்மூவர் சாளுக்கியனுக்கு எதிர்க்கட்சியில் ஒன்றுகூடியிருந்தனர் என்பதும், அவருள் பல்லவ-பரமேசுவரவன்மன் ஒருவன் தவிர மற்றையிருவர் சிங்களவேந்தனை மானவன்மனும், பாண்டியன்—நோச்சடையனும் ஆதல்வேண்டும் என்பதும் அவர் கருத்து. மூவரசர்கள் சேர்ந்து தன் தந்தையாண்ட தேசப் பகுதியைக் கவர்ந்தனராக, அதனை முதல் விக்கிரமாதித்தன் தன் ஆட்சித்தொடக்கத்தே மீட்டுப்பெற்றுக் குறைவற ஆண்டான் என்று அவனது உரகபுர தான சாஸனம்[2] கூறுகின்றதேயன்றித் தென்னாட்டிற் படையெடுத்த அவ்வேந்தனை எதிர்க்கவேண்டி அம்மூவருந் திரண்டிருந்தனர் என்று அது குறிக்கவில்லை. ஒருகால், முதலிற் பகைவர்களாயிருந்த அம்மூவருமே இப்படையெடுப்பிலுங் கூடியிருந்தனர் என்று கொள்ளினும், துரையவர்கள் கருத்தின்படி அப்பகையரசருள் ஒருவனாயிருந்த பாண்டியன், நோச்சடையன் என்று கொள்வதினும் அவன் தந்தை அரிகேசரி—மாறவர்மன் என்பதே பெரிதும் பொருந்தும். நோச்சடையன்பேரன் பராந்தகன்—நெடுஞ்சடையன், 767-க்கு அணித்தாகப் பட்டம் பெற்றவன் என்பது ஆனைமலை வேள்விக்குடிச் சாஸனங்களால் தெளிவானது. 675-ல் முதல்விக்கிரமாதித்தனுடன் எதிர்த்தவர்களிலே அந்நோச்சடையனும் ஒருவனாயின், அங்ஙனம் எதிர்த்தபோது அச்சடையனுக்கு 25-வயது கொண்டாலும், அவனும் அவன்மகன் மாறவர்மனும் ஆண்ட காலம் உத்தேசம் 117-வருஷங்களாகின்றன. இந்நீடித்த

1. The Pallavas (Eng. tr.), p. 43.
2. Ep. Ind. Vol. X. No 22, p. 103, L. 13, 14.

காலம் அவ்விருவர்க்குள் நிகழ்ந்ததென்பதற்கு யாதொரு சாஸனக்குறிப்பும் இல்லை. அன்றியும், கோச்சடையன்—'மங்கலபுரமென்னும் மகாநகருள், மகாரதரை எறிந்தழித்தவன்' என்று வேள்விக்குடிச்சாஸனந் தெரிவிக்கின்றது. ஈண்டு மகாரதர் எனப்பட்டவர், டாக்டர்-தூப்ராயில் கருத்துப்படி சளுக்கியராகவே கொள்ளினும், பாண்டிய சளுக்கர்க்குள் நடந்த அம்மங்கலபுரப்போர்,[1] விக்கிரமாதித்தியனுக்கும் பல்லவர்க்கும் நடந்த பெருவளநல்லூர்ப் போருடன் இயைபுடையதென்று கருதச் சிறிதும் இடமில்லை. எனவே, கோச்சடையன் தந்தை அரிகேசரி—மாறவர்மனே முதல் விக்கிரமாதித்தன்காலத்துப் பாண்டியனாதல் வேண்டும் என்பது மிகப் பொருத்தமென்க.

இம்மாறவர்மன் சேரனுடன் பலபெரும்போர்கள் புரிந்து அவன் நாட்டைக் கைப்பற்றிய பெருவீரன் என்பதும், சேரரது கொங்குநாட்டின் பெரும்பகுதி இவன் காலமுதலாகப் பாண்டியரதாட்சிக்கு உட்படலாயிற்று என்பதும் இறையனார்களவியலுரை வேள்விக்குடிச்சாஸனங்களால் இனிதறியப்படுகின்றன. இப்பாண்டியனே திருஞானசம்பந்தமூர்த்திகள் காலத்தவனாய், அவ்வடியாரால் சைனத்தினின்று சைவத்துக்குத் திருத்திப்பணிகொள்ளப் பெற்றவன் என்பது இங்கு அறியத்தக்கது. பெருவீரனை இப்பாண்டியனது ஆட்சிக்காலத்தில், சளுக்கிய-விக்கிரமாதித்தன் தன்குலப்பகைவரான பல்லவரைத் தாக்கவேண்டிச் சோணாட்டிற் பிரவேசித்து உறையூரிற் பாளயமிறங்கியிருந்தவனாயின், அது பாண்டியனைப்போரில் வென்றோ, அன்றி அவனுடம்பாடுபெற்றோ இரண்டனுளொன்றால் நடந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். போர்புரிந்தே அவ்வடவேந்தன் பிரவேசித்தவன் என்பதை அவன் சாஸனமேனும் பிறவேனும் சிறிதுங் குறிப்பிடவில்லை. அதனால், பாண்டியனுதவிபெற்றே அவனதிக்கம் மேலோங்கியிருந்த

---

1. இம்மங்கலபுரம் மங்களூர் என்று சிலர் கருதுவராயினும், அது சேரர்க்குரிய கொங்குநாட்டு ஊராகவே தோற்றுகின்றது.

கொங்குநாட்டின் வழியாக விக்கிரமாதித்தன் சோணாட்டினுள் நுழைந்திருத்தல் வேண்டும். அன்றியும், பாண்டியர் பல்லவர்க்கு எதிர்க்கட்சியிற் சேரவே அதிக நியாயமுண்டு. சோழரது ஆட்சியைத்தொலைத்துச் சோணாட்டில் தங்கள் ஆதிக்கத்தைப் பல்லவர்கள் சிம்மவிஷ்ணுகால முதலே (உத்தேசம். 590) தாபித்து வந்ததோடு பாண்டிநாட்டின் எல்லைப்புறங்களிலும் அவர்கள் பிரவேசித்து அந்நாட்டரசர்க்குப் பெரிதும் இடுக்கண்விளைத்தும் வந்தவர்கள். அதனால் பல்லவபாண்டியர்க்குள் தீராப்பெரும்பகை பல தலைமுறையளவாக உண்டாயது. ஆகவே, படையெடுத்து வந்த வடவரசனை எதிர்க்கப் பல்லவனுடன் பாண்டியன் சேர்ந்துகொண்டான் என்று கொள்வதினும், பேராற்றல் பெற்றிருந்த பல்லவனையொடுக்க அப்பாண்டியன் பிறவேந்தனைத் துணைக்கொண்டான் என்பதே ஏற்புடையதாகுமென்க. பாண்டிநாட்டுக்கு அடுத்ததும் சேரர்க்குரியதுமான கொங்குபூமியை அரிகேசரி - மாறவர்மன் கைப்பற்றியவனென்று மேலே குறிப்பிட்டேன். அவன் காலமுதலே, சேரவேந்தர் பாண்டியர்க்குப் பகைவராய்ப் பல்லவர்துணையையே எதிர்பார்த்திருந்தவர். இம்மாறவர்மன் கொட்பேரன் பராந்தகன்-நெடுஞ்சடையன் பல்லவசேரர்களுடன் பலபோர்கள் புரியநேர்ந்ததும்[1] இப்பழம்பகைமை பற்றியேயாம். திருமங்கைமன்னனும்—

"வல்லவர் வில்லவ ரென்றுலகிற்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லையர் கோன்" (பெ. தி. 2, 9, 1).

என்று பல்லவரதுசார்புடையராகவே வில்லவரான (சேரர்

---

1. "பல்லவனுங் கேரளனு, மாங்கவற்குப் பாங்காகி அணுக வந்து விட்டிருப்ப...இருவரையு மிருபாலு மிடரெய்தப் படைவிடுத்து" என்று நெடுஞ்சடையனைப்பற்றிச் சீவரமங்கல சாஸனங் கூறுதல் காண்க. (Indian Antiquary, Vol. XXII—"Madras Museum Plates."

இருந்தநிலையை வெளியிடுதலுங் காண்க. இவற்றால், விக்கிரமாதித்தனுக்கு எதிர்க்கட்சியினரான அரசர் மூவராகவே கொள்ளினும், அம்மூவரும்—பல்லவர், சிங்களர், சேரர் என்பவராகக் கொள்வதே பொருத்தமுடைத்து. வடவரசனது இப்படையெடுப்பில் பாண்டியன் எந்தக் கட்சியில் சேர்ந்திருந்தவன் என்பதை அந்காலத்தை அடுத்து விளங்கிய திருமங்கைமன்னன் மிகத்தெளிவாகக் கூறுதல் இங்கு அறியத்தக்கதாம். அவர்—

"ஒண்டிறல் தென்னனோட வடவர சோட்டங் கண்ட
திண்டிற லாளர் நாங்கூர்"

என்று பாடுகிறார். 'ஒண் திறல் தென்னன்' என்பதனால், பாண்டியன் பெருவலிபடைத்திருந்தவன் என்பதும், 'தென்னனோடு அவ்வடவரசு' என்பதனால், அப்பாண்டியன் படையெடுத்து வந்த வடவரசன் சார்பாயிருந்தவன் என்பதும், 'அவ்வடவரசு' என்ற உலகறிசுட்டால் அங்ஙனம் வந்த வேந்தன் மிகப்பிரசித்தனானவன் என்பதும் பெறப்படுதல் காணலாம். 'தென்னனோடு' என்று பதம்பிரியாமல் 'தென்னன் ஓட' என்று பிரித்துப் பொருள்கொள்ளுமிடத்தும், 'துணைவந்த பாண்டியனை முதலிற் பிறகிடச்செய்து, பின் வடவரசனையும் புறங்காட்டிபோடக்கண்டவர் நாங்கை வீரர்' என்பதே கருத்தென்னத் தடையில்லை[1]. 'விக்கிரமாதித்தனை ஒரு கந்தைத்துணியைமட்டுங் கட்டி மூடிக் கொண்டு போரினிடையே ஓடச்செய்தான்' என்று பரமேச்சுரவர்மனைப்பற்றிக் கூரம் சாஸனம்[2] மிகவிரிவாகப் புகழ்வதும் இங்கு ஒப்பிட்டறியத் தக்கது. "மாவருந் திண்படை மன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கை" "துண்ணென மாற்றார் தம்மைத் தொலைத்தவர் நாங்கை"

1. மேற்கூறிப்போந்த சரித்திரச் செய்திகள், பிற்காலத்து அறிய இடமில்லாமற் போனமையால், ஆழ்வாரது இப்பாசுரத் தொடர்க்கு வேறு பொருள் பூர்வவியாக்யானங்களிற் கூறப்பட்டுள்ளது.

2. S. I. I. Vol. I, p. 153.

என்று ஆழ்வார் பாடுவதனாலும் வந்தவேந்தன் பெருமையும், அவன் விரைவில் தோற்றோடிய சிறுமையும் நன்கு புலப்படக்கூடியன.

இவ்வாறு, 7-ஆம் நூற்றாண்டிறுதியில் சோணாட்டுப் பெருவளநல்லூர்ப் போரிலே, படையெடுத்துவந்த வடவேந்தனை வெற்றிகொண்டவன் பல்லவனாகும்போது, அவ்வெற்றிக்கு அந்நாட்டவரான நாங்கூர்வீரர்களே சிறந்த காரணமாகத் திருமங்கைமன்னன் குறிப்பிடும் அரியபெரிய செய்தியும் நம்மாற் சேர்த்துக்கொள்ளத்தக்க தன்றோ? அப்பெரும்போர் நடந்தகாலத்தை அடுத்து—அஃதாவது 8-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், இளமைப் பருவத்தினராய் விளங்கிய அவ்வாழ்வார், தம் ஊர்ப்பக்கத்தவரான அவ்வீரர்களிற் பலரை நேரில் நன்கறிந்தே, பல்லவாதிக்கத்தைத் தம்நாட்டினிற் பரப்பிய அன்னோர்வாழும் ஊரை அவர் வீரப்பெருமையாற் பலபடப் பாராட்டுவாராயினர் என்க. நாங்கூரும் தம் திருநகரியும் மிகவும் அண்ணிய ஊர்களாதலின், அந்நாங்கைவீரர்களே ஆழ்வார் அவதரித்த கள்வர்குலத்து முத்தரையர்களாகக் கருதவும் இடமுண்டு. இங்ஙனம் கூறிப்போந்த பிரபலகாரணங்களாலும், திருமங்கைமன்னன் காலத்தையொட்டிப் பல்லவர் வடவருடன் சோணாட்டிற் பொருதுவென்ற பெரும்போர் வேறின்மையாலும், ஆழ்வார் கூறிய வடவேந்தன், சாளுக்கியனை முதலாம் விக்கிரமாதித்தனன்றி [1] வேறேவனுமாகான் என்றே நாம் துணிந்துகூறலாம்.

---

1. இவ்விக்கிரமாதித்தன் தந்தை இரண்டாம் புலகேசி 7-ஆம் நூற்றாண்டில் இருமுறை தென்னாட்டிற் படையெடுத்ததும் உண்டு. அக்காலத்தாண்ட பல்லவனை மகேந்திரனேனும் அவன் மகன் நாசிம்மவர்மனேனும் அப்புலகேசியை வென்றவனாகக் கருதலுங்கூடியதே. இவ்வாறு, பல்லவன் படைவீரர்களான நாங்கைவீரர்கள் புலகேசியின் படையை எதிர்த்தோட்டியவர்களாயின், 8-ஆம் நூற்றாண்டிடையில், வயிரமேகன் காலத்து வாழ்ந்திருந்தவரான ஆழ்வார் அவர்களை நேரில் அறிந்துபாடுதற்குக் காலம் பெரிதும் இடையிடுதலிற் கூடாமையால் அப்புலகேசியின்படையெடுப்பைப் பற்றியதன்று அவர் திருவாக்கு என்பது தெளிவு.

திருமங்கை மன்னன் பூர்ணையுளுடன் எழுந்தருளியிருந்தவர் என்று குருபரம்பரைகளால் தெரியவருகின்றது. உத்தேசம் 700-க்கு அணித்தாக இப்பெரியார் அவதரித்தவராகக்கொண்டால், ஏறக்குறைய 8-ஆம் நூற்றாண்டு முழுதும் இவ்வாழ்வார்க்குரிய காலமாகும். ஆயின், விக்கிரமாதித்தனைப் புறங்கண்ட நாங்கூர்வீரர்களிலே முதியவர்களை, அவர்களது 65, 70-ஆம் வயதுகளில், இவ்வாழ்வார் அறிந்திருக்கத் தடையில்லை. அப்போது திருமங்கை மன்னன் 20, 25 பிராயமுடைய இளம்பருவத்தினராதலும் வேண்டும். நாங்கைவீரர் நடத்தியபோரைத் திருமங்கையார் நேரில் அறிந்தவராகாமற் போயினும், அப்போரில் வெற்றிபெற்ற வீரருள் முதியோர் வாயிலாக அதன்வரலாறுகளை நன்கறிந்து அத்தகையோரிடம் பெருமதிப்புடையவராயிருந்தவர் இப்பெரியார் என்பதில் ஐயமில்லை. எவ்வகையினும், பல்லவமல்லன் (717—779) ஆட்சி முழுதும், அவன்மகன் தந்திவன்மன் ஆட்சித் தொடக்கத்திற் சில ஆண்டுகளும்—ஆழ்வார் இத்தமிழுலகத்தை அலங்கரித் தெழுந்தருளியிருந்தவர் என்று முன்கூறிய என்முடிபு மிகவும் பொருத்தமாதல் கண்டுகொள்க.

இனித் திருமங்கைமன்னனும் திருஞான சம்பந்தமூர்த்திகளும் ஒருகாலத்தவரென்றும், அவ்விருவர்க்கும் சீகாழியில் வாதம் நிகழலாயிற்றென்றும் குருபரம்பரைகள் கூறுகின்றன. மேலே கூறிப்போந்தபடி 675-ல் முதலாம் விக்கிரமாதித்தனுக்கும் பல்லவனுக்கும் நடந்த பெரும் போரைத் திருமங்கைமன்னன் தம்பாசுரங்களிற் குறிப்பித்தலினின்று அவர் அதனை நேரில் அறிந்தவரென்று கொண்டு, அப்போர்க்குச் சிறிது முன்பு 7-ம் நூற்றாண்டிடையில் விளங்கியவராகத் தெளியப்பட்ட சம்பந்தமூர்த்திகளை இவ்வாழ்வார்காலத்துடன் இயைத்துக்கொள்ளவும் இடமுண்டு. ஆனால், இக்கருத்துக்குச் சில பல தடைகள் உள்ளன. அந்நாயனார் 655-ம் ஆண்டையொட்டி ஐக்கியமடைந்தவராதல் வேண்டுமென்பதற்குப் பல காரணங்கள்

உள்ளன.[1] திருமங்கைமன்னன் அச்சிவனடியாரைச் சந்தித்தவராயின், அப்போது அவ்வாழ்வார்க்குக் குறைந்தது 25-வயதாகக் கொண்டாலும், அவரது அவதாரகாலம் 630-ஐ ஒட்டியதாதல் வேண்டும். 710-க்குப்பின் பட்டமெய்திய பரமேசுவரபல்லவன் (ii) கட்டிப் பிரதிஷ்டித்த பரமேசுவர விண்ணகரத்தைத் திருமங்கைமன்னன் பாடியிருப்பதும், 717-ஆம் ஆண்டையடுத்துப் பட்டம்பெற்ற நந்திபோத பல்லவமல்லனது போர்ச்செய்திகளை இவர் கூறியிருப்பதும் முன்னரே விளக்கப்பட்டன. அவர்களுட் பின்னவனான பல்லவமல்லனைப் பாடியபோது, மேற்குறித்தவாறு 630-ல் அவதரித்தவரான ஆழ்வார் 87-வயதினராகக் கொள்ளுதற்கு உரியர். மேலும், என் கொள்கைப்படி இரட்டவேந்தனான தந்திதுர்க்கனையே வயிரமேகனென்று இவ்வாழ்வார் தம் அட்டபுயகரப் பதிகத்திற் பாடியவராகக் கொண்டால்—754-ல் அவ்வேந்தன் கச்சிமாநகரைக் கைப்பற்றியவனாதலின்—அவனைப் பாடியபோது திருமங்கையார்க்குக் குறைந்தது 124-ம் வயது நடந்திருத்தல் வேண்டும். பிறர்கருத்தின்படி, பல்லவமல்லன் மகன் தந்திவர்மனே வயிரமேகனாயின், அவனைப்பாடிய காலத்து அப்பெரியார் 150-வயதினராவர். இங்ஙனங் கூறும் நீண்ட ஆயுளளவுகள் இயற்கைக்கு மாறானதென்று இக்காலைச் சரித்திரநூலோர் கருதத் தடையில்லை.

"வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்"

என்று, திருமங்கை மன்னனுக்குச் சமகாலத்தவரான தொண்டரடிப்பொடிகள் கூறியபடி, ஆழ்வார்கள் நாளிலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆயுள் இயற்கைக்குமாறானதாகவே எண்ணப்பட்டிருந்தமை தெரியலாம். ஆயினும், மக்கட்கு

---

1. தஞ்சை ராவ்பஹதூர்: ஸ்ரீமாந். கே. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் பெரியபுராண வரலாறுகளைக்கொண்டும் சாஸன உதவிகொண்டும் சம்பந்தமூர்த்திகள் 655-ல் சிவஸாயுஜ்யம் பெற்றவராக வேண்டுமென்று முடிவுகாட்டியிருத்தல், அவர்களெழுதிய **தமிழ் வரலாறு** 49-54-ஆம் பக்கங்களிற் கண்டு கொள்க.

வயதளவு 120-என்ற ஒரு கொள்கையும் உண்டு.[1] அம்முறையில் திருமங்கைமன்னனைக் கொள்ளுமிடத்து, அவர் சம்பந்தமூர்த்திகளைச் சந்தித்து வாதாடிய சரித்திரத்தை நாம் ஒருபடியாக இணைத்தல் கூடும். இவ்வாறு கூறுவதால் எட்டாம் நூற்றாண்டினும் ஆழ்வார் வாழ்ந்தவராகவே முடிதலின், மேற்கூறிய என்கருத்துக்களுடன் பெரிதும் முரணுதற்கு இடமில்லை. ஆயினும், இத்துணை நீடித்த ஆயுளளவைத் திருமங்கையார்க்குக் கொள்ளவேண்டும் என்பதற்குச் சிறப்பாயமைந்த காரணம் ஒன்றுமில்லை. இல்லாததோடு, அவ்வாழ்வார் 7-ம் நூற்றாண்டிடையில் இருந்தவரல்லர் என்பதற்கு ஏற்றபடி வேறு குறிப்புக்கள் சிலவும் உள்ளன. முதலாவது—100-க்கு மேல் 120வரை ஆழ்வார்க்கு வயதாயின்—70, 75-ஆம் பிராயத்தில் தம்மூப்பின் தன்மைகளைத் திருநாவுக்கரசுநாயனார்பாடியவாறு[2]—அதனினும் மிக முதிர்ந்த தம் வயோதிகநிலையை இப்பெரியாரும் பாடியிருப்பர். தமக்கு இனிவரப்புகும் மூப்பினைப்பற்றி வதரிதிருநறையூர்ப் பதிகங்களில்[3] பாடிப்போந்த ஆழ்வார், அது வந்து முதிர்ந்து தளர்வுண்டாக்கிநின்ற நிலையையும் பாடத்தவறுரன்றோ? அத்தகைய குறிப்பொன்றுமே இவர் திருவாக்கிற் காணப்படாமை அறியத்தக்கது. இரண்டாவது—7-ம் நூற்றாண்டின் இடையில் இப்பெரியார் வாழ்ந்தவராயின், அக்காலத்துப் பல்லவர் பாண்டியர் முதலிய

---

1. "பன்னீராட்டைப் பிராயத்தளே பிள்ளைப் பதின் மூவாட்டைப் பிராயத்தாய் இவ்வகை நூற்றிருபதும் புக்குத் தலைமடியவேண்டும் என்பது" என்ற இறையனார் களவியற்றொடரும் (சூத். 32, உரை), ஸ்ரீராமாநுஜமுனிவரர் முதலிய பெரியோர் 120-ஆண்டு வாழ்ந்தவராகக் கூறப்படும் சரித்திரமும் அறியத்தக்கன.

2. "வெள்ளந்—திளைக்கின்ற முடியினுன்றன் திருவடி பரவமாட்டா—திளைக்கின்றே னிருமி மூன்றி யென்செய்வான் தோன்றினேனே" "தளையவிழ் கோதைநல்லார் தங்களோ டின்பமெய்த—இளையனு மல்லேன்" "இன்றுளே ஞளையில்லேன்" எனவரும் அப்பர்தேவாரத்தொடர்கள் அறியத்தக்கன. (தேவா. பொது. குறைந்த திருநேரிசை, 1. 8, 9).

3. பெரிய திருமொழி, 1, 3; 6, 4-ஆம் பதிகங்கள்.

பிரபல அரசர் செய்திகளையும் இவர் கூறத்தவறுர் என்று இவரியல்புகொண்டே சொல்லலாம். அங்ஙனம் கூருதது மட்டுமன்றி, 8-ம் நூற்றுண்டினரான அரசர் வரலாறு களையே மிகுதியாக இவ்வாழ்வார் பாடுதல், இவர்க்கு 7-ம் நூற்றுண்டுத்தொடர்பு இருந்ததில்லைப்போலும் என்று சங்கிக்க இடந்தருகின்றது. மூன்ருவது—ஆழ்வார்கட் கெல்லாம் பிற்பட்டிருந்தவர் திருமங்கைமன்னனென்றும், ஸ்ரீசடகோபர் என்ற நம்மாழ்வார் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியபின், அப்பெரியார்க்குத் திருவத்யயனோத்ஸவம் கண்டருளியவரென்றும்,[1] "மாறன் பணித்த தமிழ் மறைக்கு—ஆறங்கங்"களாக ஆறு பிரபந்தங்கள் அருளிச் செய்தவரென்றும் சரித்திரங்கள் வழங்குகின்றன. நம் மாழ்வார் எட்டா நூற்றுண்டின் முற்பகுதியினும் எழுந் தருளியிருந்தவர் என்பது அப்பெரியாரைப்பற்றிக் கூறு மிடத்துத் தெளிவாக அறியலாம். ஆகவே, திருமங்கை யார் ஏறக்குறைய அவ்வெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதி முழுதும் வாழ்ந்தருளியவர் என்பது பெறப்படத்தடை யில்லை. இவையன்றித் தம் நாளிற் பிரபலராயிருந்த தமி ழரசரெல்லாம் திருமால் பத்திமையிற் சிறந்திருந்தவர் என் பதை இப்பெரியார்—

"பரனே! பஞ்சவன் பூழியன்[2] சோழன்
பார்மன்னர் மன்னர் தாம்பணிந் தேத்தும்
வரனே" (பெரியதிருமொழி, 7, 7, 4).

என்பதனுல் குறிப்பிடுகின்றுர். இவ்வாறு அவ்வேந்தர்கள் திருமாலடியாராக விளங்கியகாலம், 7-ம் நூற்றுண்டாதற்கு ஏற்புடையதன்று. மகேந்திரவர்மன் காலமுதலாக (618)

---

1. கோயிலொழுகு, கலியனருள்பாடு முதலிய நூல்களில் இச்சரிதம் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

2. 'பௌழியன்' என்பது இப்போதைப் பாடம். பூழிநாட்டுக்குத் தலைவனுமைபற்றிப் பூழியன் என்று சேரர்க்கு ஒரு பெயர் பழைமையாகவே வழங்குதலாலும், பௌழியன் என்று அவர்க்கு நூல்வழக்கின்மையாலும் 'பூழியன்' என்றே ஈண்டுப் பாடங் கொள்ளப்பட்டது.

இரண்டாம் நரசிம்மவர்மன் காலம் முடிய (700) இருந்த பல்லவர்கள், விஷ்ணுசமய விரோதிகள் அல்லராயினும், திருமாலடியார் என்று சிறப்பிக்கத்தக்கவர் ஆகார். அவ் வேழாநூற்றாண்டின் இடையிலிருந்த பாண்டியனே அரிகேசரி-மாறவர்மன் என்பான். அவனையே "நெல்வேலி வென்ற நெடுமாறன்" என்று இறையனார்களவியலுரையும், திருத்தொண்டத்தொகையும் கூறுகின்றன.[1] சம்பந்தர்காலத் தவரே இவ்வாழ்வாரும் இவர்க்குச் சமகாலத்தவராகத் திவ்யசூரிசரிதம் கூறும் பெரியாழ்வார் முதலியவருமாயின், அக்காலத்துப் பாண்டியனை நெடுமாறன் பரம சைவன் என்று தெரியவருதலால், அவனை—

" பஞ்சவன்...பணிந்தேத்தும் வானே "
" கோநெடுமாறன் ...கொண்டாடுந் தென்றிருமாலிஞ்சோலையே"

என்று அவ்வாழ்வார்கள் சிறப்பிக்க நேர்ந்திராது என்றே சொல்லலாம். ஆகவே, பரமவைஷ்ணவர்களாகப் பல்லவரும் பாண்டியரும் விளங்கிய காலவிசேடமே அப்பெரியார்கட்கு உரியதென்று, மேற்காட்டிய அவர்கள் திருவாக்கைக் கொண்டே தெளியத்தடையில்லை. திருமங்கையார் காலத்துப் பாண்டியர், பெரியாழ்வார்க்கு அடியாராக மேலே விளக்கிப்போந்த பராங்குசன் - மாறவர்மனும், அவன்மகன் பராந்தகன் - நெடுஞ்சடையனும் ஆவர். அக்காலத்துச் சேரவேந்தன் இன்னான் என்பது, குலசேகரப் பெருமாளைப் பற்றிக் கூறுமிடத்து நன்குவிளங்கும். சோழவரசர் இக் காலத்தே பல்லவர்கீழ்ச் சிற்றரசராயிருந்தவரே; ஆதலால் தம் தலைமையரசர் கொண்டிருந்த சமயத்தையே அவருந் தழுவியவராயிருத்தல் கூடியதாம். 8-ம் நூற்றாண்டில்

---

1. சுந்தரமூர்த்தி நாயனார், அறுபத்துமூவருள் ஒருவராகத் திருத்தொண்டத் தொகையிற் பாடியவாறே—" நறையாற்றகத்து வென்றான் முடிமேல்—நின்றான் மணிகண்டம் போல்" (256), " விழிஞத்துவென்ற—வல்லியல் தோண்மன்னன் சென்னி நிலா வினன் வார்சடையான்" (279) என இந்நெடுமாறனைச் சிவபத்தனாகப் பாண்டிக்கோவைப் பாடல்களும் கூறுதல் காண்க. (இறையனார் களவியலுரை)

தலைமை வகித்த பல்லவரின் திருமால்பத்திச் சிறப்போ, ஏற்கவே நன்கு அறியப்பட்டது. மேற்குறித்த பாசுரத் தொடரில், 'பார்மன்னர் மன்னர்'[1] என்று திருமங்கைமன்னன் கூறுவது இவ்வேந்தரையென்றே தோற்றுகின்றது.

"உலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற் பல்லவன்"
"துளங்கு நீண்முடி யரசர்தங்குரிசில் தொண்டை மன்னவன்"

என்று இப் பல்லவரையே பேரரசர்களாக அப்பெரியார் வேறிடங்களிற் பாடுதலுங் காண்க. இங்ஙனம் பெருவேந்தரன்றி அவர்க்கடங்கியிருந்த சிற்றரசரும் ஆழ்வார் காலத்தில் திருமாலடியாராயிருந்தவரென்றே தெரிகின்றனர். தம் திருநெடுந்தாண்டகத்தின் 7-ஆம் பாசுரத்தில்—

"விந்தமேய, கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில்சூழ் நெடுமறுகிற் கமலவேலிப்
பொற்புடைய மலையரையன் பணியநின்ற
பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே"

எனத் திருக்கோவலூர்த் திருமாலிடம் அந்நகரத்தலைவனாகிய மலையமான் கொண்டிருந்த பத்திமையை இவ்வாழ்வார் சிறப்பித்துக் கூறுதல் காண்க. இப்பாசுரத்துள் 'மலையரையன்' என்பது மலையமான்களை[2] என்று சாதியொருமையாக ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை பொருளெழுதியிருத்தல் அறியத்தக்கது. திருமுடிக்காரி முதலாய பழைய மலையமான்களுக்குத் திருக்கோவலூர் தலைமை நகரமாக விளங்கிய செய்தி சங்கநூல்களால் அறிஞர் நன்கறிந்ததே. 7, 8-ம் நூற்றுண்டுகளில் இம்மலையமான்கள் பல்லவர்கீழ்ச் சிற்றரசராகவிருந்தனர். இவ்வாறு பல்லவர்க்குக் கீழ்ப்பட்டவர்களும் படாதவர்களுமான தமிழரசரெல்லாம், விஷ்ணுபக்திமிக்கவராயிருந்தனர் என்று தங்காலநிலையைத் திருமங்கை

1. 'பார்மன்னர் மன்னர்' என்பது இப்போதைப் பாடமாயினும், ஒருமையாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

2. 'மலையமானவர்க்கு' என்று அச்சுப்பதிப்பில் தவருகக் காணப்படுவது, 'மலையமான்களுக்கு' என்று திருத்திக்கொள்ளற்குரியது.

மன்னன் குறிப்பிட்டருளுதலால், அத்தகைய வைஷ்ணவ காலமாதற்கு ஏற்புடையது எட்டாநூற்றாண்டேயன்றிப் பிறிதன்று. ஆதலால், சம்பந்தமூர்த்திகள் காலத்தவராகத் திருமங்கையாரைக் கொள்வதினும், அந் நூற்றாண்டுத் தொடக்கத்தே இரண்டாம் நரசிம்மவர்மன்[1] ஆட்சியில்

---

1. இந்த நரசிம்மவர்மனுக்கு இராஜசிங்கன் என்ற வேறு பெயரும் உண்டு. இப்பல்லவனே சமாதானத்துடன் ஆண்டவனாகவும், பரமசிவபக்தனாகவும் விளங்கியவன். காஞ்சீபுரத்தில் அரிய சிற்பத்தொழிலமைந்த கைலாசநாதர் கோயில் எனப்படும் இராஜசிம்மேச்சுரமும் பனமலைச் சிவாலயமும் மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயில்களும் இவ்வேந்தனால் கட்டிப் பிரதிஷ்டிக்கப் பெற்றவை. சிவத்தொண்டு புரிவதினும் சிவனடியார்கட்கு வேண்டியனவுதவி அவர்களை ஆராதிப்பதினும் தன்காலத்தைச் செலவிட்டவன் இவன் என்பர் (தூப்ராயில்-பல்லவசரித்திரம்). இவனைச் 'சிவசூடாமணி' 'ஸ்ரீ சங்கரபக்த:' 'சைவஸித்தாந்த மார்க்கே க்ஷதஸகலமல:' (சைவசித்தாந்தமார்க்கத்தால் எல்லாப்பாவங்களையும் போக்கியவன்) என்று சாஸனங்கள் (S.i.i. i, 12—13) சிறப்பிக்கின்றன. இவனையே "கடல்சூழ்ந்த உலகெல்லாங் காக்கின்றபெருமான்—காடவர்கோன் கழற்சிங்கன்" என்று சுந்தரமூர்த்திநாயனார் தம் திருத்தொண்டத்தொகையிற் பாடியதோடு, 'காக்கின்ற' என்பதனால் இவன் தங்காலத்தவன் என்பதையுங் குறிப்பிட்டனர். 'கழற்சிங்கன்' என்பதில், கழலென்பது அடைசொல்லேயன்றி இயற்பெயருடன் இணைந்ததன்று. 'காடவர்தங் குலமுவந்த கழலார் சிங்கர்' என்ற திருத்தொண்டர் புராணசாரப் பாட்டும் இக்கழல் விசேடணபதமே என்பதை விளக்கிநிற்றல் காண்க. பல்லவருட் சிலர் சிங்கன் என்றே பெயர்பெற்றிருந்தனர் என்பது, "நலமிகு கச்சியார்கோவாயினானும்—சிலைமிகுதோட் சிங்கனவ னென்பவே" என்ற பழம் பாடலாலும் (யாப். வி. 87.) அறியப்படும். நரசிங்கன் என்பது சிங்கனெனவும் வழங்குதலை, "சிங்கப்பிரான்" (திருவாய்.) 'சிங்கப்பெருமாள்' என்பவற்றால் உணர்க. சேரமான் பெருமாணாயனாரும், சுந்தரமூர்த்திகளும் கைலைசென்ற காலத்தைக் குறிப்பதற்கு வழங்கிய அப்தமே கொல்லமாண்டு என்பதும், அதனால் அச்சிவனடியாரிருவரும் கி. பி. 825-வரை வாழ்ந்தவராவர் என்பதும் ஒருசாரார் கொள்கை. அன்னோர்கருத்துப் பொருத்தமானதன்று. 'கொல்லம் தோன்றி' இன்ன ஆண்டு—என்றே மலைநாட்டுச் சாஸனங்கள் பலவற்றிற் காணப்படுவதால் (T.A.S. V, 44.) கொல்லநகரம் உண்டானதைக் குறிக்க அவ்வப்தம் வழங்கியதேயன்றிப் பிறிதன்று. அந்நகரம் இன்னாரால் உண்டாக்கப்பட்டது என்பதுபற்றிக் காலஞ்சென்ற ஸ்ரீமாந். கோபிநாதராயர் அவர்

வாழ்ந்த சுந்தரமூர்த்திகளின் சமகாலத்தவராக நம்பெரியா ரைக் கொள்ளப் பெரிதும் பொருத்தமுண்டு. அதனால்,

---

கள் நன்குவிளக்கியிருத்தல் அறியத்தக்கது. (Ibid. Vol. ii, pp. 73, 76—77). வேறுசிலர்—"பல்லவர்க்குத் திறைகொடா மன்ன வரை மறுக்கஞ்செய்யும் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை" என்று சுந்தரமூர்த்திகள் பாடுதலினின்று அவர்காலத்தே பல்லவர் வலிமை குன்றியிருந்த நிலைமை வெளியாவதாகக் கொண்டு அந் நிலைமை இரட்டவேந்தனான மூன்றாங்கோவிந்தனது படையெடுப் பால் 804-ல் தந்திவர்மனது ஆட்சியில் உண்டானமையின், அப் பல்லவன் காலத்தவரே அந்நாயனார்—என்று கருதுவர். 'பல்ல வர்க்குத் திறைகொடா மன்னவரைச் சிவபிரான் கலங்கச்செய்கின் றார்' என்பதனால், பல்லவரை வலிகுன்றியவராகக்கருதல் என்னே? 'அடங்காத பிறவேந்தரும் அடங்கித் திறைசெலுத்தும்படி ஈசன் தன்னடியனான அரசற்கு அருள்செய்கின்றான்' என்று தங் காலத் துப் பல்லவன் அடிமைத்திறத்தால் அடைந்து வரும் பெருமை யைச் சிறப்பிக்கின்றார்—என்ற கருத்துக்கொள்ளற்கு இழுக் கென்னை? பெரியாழ்வாரும் "குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங் கானிடைச்—சிறுகானெறியே போக்குஞ் செல்வன்" என்று இவ்வாறே பாடுதலை மேலே விளக்கியுள்ளேன் (பக். 70). இக்கருத்தே சுந்தரமூர்த்திகட்கும் உரியதன்றாயின் 'கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்' என்று, 'தங்காலத்துப் பல்லவன் உலக மெலாம் ஆளும் பேரரசன்' என்று, அவன் பெருமை விளங்கப் பாடார் என்பது திண்ணம். இந்நாயனாரை அபிமானித்து வளர்த் தவர், திருமுனைப்பாடிநாட்டின் தலைவரான நரசிங்கமுனையரையர் என்று பெரியபுராணங் கூறும். 7-8-ம் ஆம் நூற்றாண்டுகளிலிருந்த அந்நாட்டினரசர் பல்லவர்க்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களே. பேரர சர் கொள்ளும் பெயர்களையே அவர்கீழ்ச் சிற்றரசர் தமக்குரிய கௌரவ நாமமாகத் தரித்துவந்தவர் என்பதற்கு எண்ணிறந்த சாஸனப் பிரமாணங்கள் உள்ளன. அம்முறையில், சுந்தரமூர்த்தி களை அபிமானித்த முனையரையரும், தம் தலைமையரசன் பெயரையே தரித்தவராதல் வேண்டும் என்று, நரசிங்கர் என்ற அவர் நாமத்தி னின்றே கருதல் பொருந்தும். 7-ம் நூற்றாண்டில் நரசிங்கவர்மன் என்ற பெயர்கொண்டிருந்த பல்லவரிருவருள், முதலாமவன் திரு ஞானசம்பந்தர் காலத்தவனாதலாலும் 8-9-ம் நூற்றாண்டுகளில் அப் பெயர்பூண்ட பல்லவர் வேறில்லாமையாலும், நரசிங்க முனையரை யர்காலத்துத் தலைமைவேந்தன் இரண்டாம் நரசிம்மவன்மனான இராஜசிங்கனேயாதல் வேண்டும் என்க. எனவே, இவனே— 'காடவர்கோன் கழற் சிங்கன்' என்று சுந்தரமூர்த்திகளாற் பாடப் பட்டவன் என்பதும், இப்பல்லவனதாட்சியின் பிற்பகுதியில் வாழ்ந்த அந்நாயனாரும் திருமங்கையாழ்வாரும் ஒருகாலத்தவராக இணைதல் கூடுமென்பதும் மிகப்பொருத்தமாதல் காண்க.

ஆளுடையநம்பி என்று பேர்பெற்ற அந்நாயனாரையே ஆளுடையபிள்ளையான ஞானசம்பந்தராகப் பிற்காலத்தார் கருதி எழுதநேர்ந்ததோ என்ற அதிசங்கை நிகழ்கின்றது. இதற்கேற்பச் சம்பந்தர்சிஷ்யர்களே திருமங்கையாரது விருது கூறவொட்டாமல் தகைந்தவர் என்று சரித்திரமுண்மையால், அந்த சிஷ்யபரம்பரையிலே தலைமையானவராகச் சுந்தரமூர்த்திகளைக் கொண்டு அவருடன் இவ்வாழ்வார் வாதாடியவராக முன்னோர் கருதியிருத்தல் கூடியதேயாம்.

"நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்"

(தேவா. கேதாரம். சுந்-10)

என, அப்பர் சம்பந்தர்கள்காலத்தை அடுத்திருந்த தம்மை, அவர்களுடைய அடியாராகச் சுந்தரமூர்த்திகள் கூறிக்கொள்ளுதலுங் காண்க. இங்ஙனமன்றி, சம்பந்தர் சிஷ்யர் வேறுசிலருடன் திருமங்கையார் வாதாடினர் எனினும் அமையும். எங்ஙனமாயினும், சரித்திரவுண்மையை ஒருசார்புபற்றாது ஆராயுமிடத்துச் சம்பந்தமூர்த்திகள் காலத்துக்கும் திருமங்கைமன்னன் அவதாரகாலத்துக்கும் அரைநூற்றாண்டளவேனும் இடையீடு இருந்திருக்கவேண்டும் என்றே தோற்றுகின்றது.[1]

இனி, திருமங்கைமன்னன் தம் பெரிய திருமொழியின் முதற்பத்து மூன்றாந் திருப்பதிகமுழுதினும்—தமக்கு மூப்பு வருவதுணர்ந்து அதுமுதிர்ந்து மகளிர் இகழும்படி நேர்வதற்கு முன்பே, வடநாட்டுள்ள வதரி என்ற திருப்பதி

1. "வருக்கைநறுங் கனிசிதறி" "கடியுண்ட நெடுவாளை" என்ற இரண்டு செய்யுட்களால் (தனிப்பாடற்றிரட்டு) திருமங்கையாரும் சம்பந்தரும் ஒருவரையொருவர் முறையே பாடினராகச் சரித்திரங் கூறுவது உண்டு. ஆயின் இதற்கு முன்னூற்பிரமாணம் ஒன்றுமே இல்லை. சீகாழியினும் திருவாலிதிருநகரியினும் முறையே நடைபெற்ற சம்பந்தர்திருமங்கையார்கோயிற் றிருவிழாக்களில் அம்மூர்த்திகளின் பவனியைக்கண்டு காதலுற்ற பெண்களுக்கிரங்கித் தாயர் கூறியனவாகப் பின்னோர் பாடியனவென்றே அப்பாடல்களின் போக்கால் தோற்றுகின்றது.

யை வணங்க விரும்புவதாகத் திருவுளங்கொண்டு, தம் நெஞ்சை நோக்கி,[1] ஒருவரையுணர்த்துந் தன்மைப்பன்மையில் 'வதரிவணங்குதுமே' என்ற தொடர் பாடலிறுதிதோறும்வரப் பாடுகின்றார். அவற்றுள் ஏழாம் பாசுரம் ஈண்டு ஆராய்ச்சிக்கு உரியதாம். அது வருமாறு:—

"பப்ப வப்பர் மூத்த வாறு பாழ்ப்பது சீத்திரளை
ஒப்ப ஐக்கள் போதவுந்த வுந்தமர் காண்மின் என்று
செப்பு நேர்மென் கொங்கை நல்லார் தாஞ்சிரி யாமுன்னம்
வைப்பும் நங்கள் வாழ்வு மாகுன் வதரி வணங்குதுமே"

என்பதாம். "பப்பவப்பர் கொண்ட கிழத்தனம் இகழத்தக்கது; 'சீத்திரள்போலக் கோழைகள்சிந்த நிற்கும் உங்கள் பந்துவின் நிலையைப் பாருங்கள்' என்று மகளிர் நகையாடுதற்கு முன்பே நாம் வதரியை வணங்குவோம்" என்பது இப்பாடற்கருத்து. இதன் முதலிரண்டடிகள் "தாம் இனி அடையப்புகும் மூப்பைக்கண்டு மகளிர் இகழுங் கூற்று இது"—என்று அப்பெண்டுகள் வாய்மொழியாகக் கொண்டுமொழிந்ததே என்பது எளிதிற் புலப்படும். பப்பவப்பர் என்பது ஆழ்வாரையன்றிப் பிறரைநோக்கியதாயின், 'அப்பிறர் மூத்தபடியைக் கண்டு மகளிர் சிரிக்குமுன்பே நெஞ்சே! நாம் வதரி வணங்குவோம்' என்று பெறப்படுங் கருத்து அவர்க்கு அத்துணை ஏற்புடைத்தாகாமை காண்க. இதனால், பப்பவப்பர் என்று நாட்டார் தம்மை அழைத்து வந்தனரென்பதும், அதுபற்றியே அப்பெயரை மகளிர் கூற்றில் வைத்து ஆழ்வார் தம்மைக் குறிக்கலாயினர் என்பதும் பெறப்படுகின்றன.

இப் பப்பவப்பர் என்ற தொடர், பப்பராகிய அப்பர் என்று விரியும். அப்பர் என்பது தந்தையை மட்டுமென்றித் தெய்வங்களையும் பெரியோர்களையுங் குறிக்க முற்காலத்தே பெருக வழங்கிவந்ததென்பது நூல்களாலும் சாஸனங்

---

1. தம் திருவுள்ளத்தை விளித்து ஆழ்வார் கூறியதாக ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை கருத்தருளிச்செய்தலுங் காண்க.

களாலும் நன்கறியப்படுகின்றது. அப்பர் என்பதற்கேற்ற படி வடமொழிச் சாஸனங்களில் வழங்குஞ் சொல்—பட்டாரகர், ஸ்வாமி என்பன. இதனுல் அப்பர், பட்டாரகர், ஸ்வாமி என்ற மூன்றும் 'பப்ப' என்பதனுடன் இணைந்து ஒருபொருளே பயப்பவை என்பது உணரலாம்.[1] எனவே, திருமங்கைமன்னன் தமக்கு வழங்குவதாகக் குறிப்பிடும் 'பப்பவப்பர்' என்பது, பப்ப பட்டாரகர் அல்லது பப்ப ஸ்வாமி[2] என்ற வடதொடரின் தமிழ்ப்பெயர்ப்பே என்பதுவிளங்கத் தடையில்லை.[3]

பல்லவர்களுள்ளே பரமபாகவதர்களான அரசர் சிலர் **பப்ப பட்டாரக பாதபக்த**[4]—என்றிவ்வாறு விசேடிக்கப்படுகின்றனர். 'பப்பபட்டாரகருடைய பாதங்களில் பக்தியுடைய' (இன்னர்) என்பது இத்தொடரின் பொருள். இதனினின்றும், அரசர்க்கு ஞானசாரியராய் விளங்கிய பெரியோர்சிலர்க்கு இப்பெயர் முன்பு வழங்கிவந்ததென்

1. காட்கரையப்பன் (திருவாய்மொழி), திருக்காட்கரை பட்டாரகர் (T. A. S. iii, 161) எனத் திருமாலுக்கும், அஞ்சையப்பன் (தேவாரம்), திருநந்திக்கரைபட்டாரகா (T. A. S. iii, 206) எனச் சிவபிரானுக்கும், அப்பர் அப்பமூர்த்தி, ஸ்ரீ முகுந்தோத்தம பட்டாரகர் (T. A. S. iii, 44) என வைதிகசமயப் பெரியோர்க்கும், தர்ம பூஷண பட்டாரகர் (S.I.I. i, Vol. I. p. 159) என ஜைனமுனிவர்க்கும் அப்பர்,பட்டாரகர் என்ற இரண்டும் ஒரே பொருளுடையன வாக நூல்களினும் சாஸனங்களினும் வழங்குதல் அறியத்தக்கது. இவற்றுள் பட்டாரகர் என்பது படாரர், பழாரர் என்று திரிந்தும் வழங்கும் (T. A. S. ii, 139). 'சிவப்படாரர்' (நான்மு. 6) என்ற திருமழிசையார்வாக்கிற் கண்ட 'படாரர்' என்பது இப்பட்டாரரின் திரிபோ என்று கருதுவாருமுண்டு (History of Srī-Vaisṇavas, p. 16).

2. 'மஹாராஜா பப்பஸ்வாமி' என்று ஒரு சாஸனம் கூறும் (Ind. Ant. XV, p. 274).

3. **பப்ப** என்பது அசதியாடிக்கூறிய குறிப்புமொழி (க்ஷேபோக்தி) என்றும், அப்பர் என்பதற்குக் கிழவன் என்றும் முன்னோர் பொருள் கூறினரேனும், ஆழ்வார்காலத்து வழக்காக நமக்குத் தெரியவரும் சாஸனப்பொருள் தள்ளத்தக்கதன்றென்க.

4, Ind. Ant. Vol. XV, p. 274.

பது தெரியலாம்.[1] ஒருசாரார், பப்ப பட்டாரகர் என்பது அரசரது முன்னோரைக் குறிக்கவழங்கிய பெயராகவே கருதுவர். ராஜருஷிகளாகவும் அடியார்களாகவும் விளங்கிய அரசமுன்னோர் பலர்க்கு அப்பெயர் வழங்கியிருப்பது உண்மையே. அதுபற்றி, அவ்வழக்கு அவர்கட்கே உரியதென்பது பொருத்தமன்று. தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மனால் சிறப்பிக்கப்பெற்ற சிவபத்தரும், வேதசாஸ்திர பாரங்கதருமான யஜ்ஞபட்டர் என்ற பிராமண ஆசாரியர்க்கும் இப் 'பப்ப பட்டாரகர்' என்ற சிறப்புப்பெயர் வழங்கிய செய்தி சாஸனத்தால் தெரியவருகின்றது.[2] இதனால் அரசர்க்கு ஞானகுருவாக விளங்கிய பெரியோர்க்குப் பொதுவாகவே அப்பெயர்வழக்கு உண்டு என்பது பெறப்படும். யான் கண்ட இக்கருத்து அறிஞர்க்கெல்லாம் ஒப்பமுடியுமாயின்—திருமங்கைமன்னன் தமக்குப் 'பப்பவப்பர்' என்ற பெயர்வழக்கு உண்டென்று குறிப்பிடுவதினின்று—அரசர் வணங்கற்குரிய ஆசாரியபதத்தை, மேற்குறித்த யஜ்ஞபட்டரைப்போல இப்பெரியாரும் வகித்துவந்தவர் என்றே சொல்லலாம். இதற்கேற்ப, இவ்வாழ்வார் காலத்தவனும் திருமாலடிமையிற் சிறந்துநின்றவனுமாகிய பல்லவமல்லனை,

"பப்பபட்டாரக பாதாநுத்யாத வர்த்தமாந மஹிம்நா"

---

1. 'தைவதமாகாநின்ற பப்ப பட்டாரகரும்' என்று முதற் பரமேசுவரவர்மன்சாஸனத்து வருதலுங் காண்க. (S. I. I. Vol.i, p. 157.)

2. மூன்றாம் நந்திவர்மபல்லவனது வேலூர்ப்பாளயச் சாஸனங்களைப் பதிப்பித்த ராவ்ஸாஹிப் : ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரி அவர்கள், என் கருத்துக் கிணங்க, பப்பபட்டாரக வழக்கைப் பற்றி எழுதியுள்ள கீழ்க்குறிப்பு அடியில் வருமாறு:—"This surname (Bappa Bhaṭṭāraka) occurs in early Sanskrit charters of the Pallavas and has been translated "Lord father." Perhaps the term was one of high respect applied to spiritual preceptors, and it is not unlikely that Yajñabhaṭṭa stood in this relation to king Nandivarman III. The spiritual preceptor of Nandivarman Pallavamalla is also called Bappa-Bhaṭṭāraka in the Kāśākuḍi plates. (S. I. I. Vol. ii, P. 506 f.n.)

என்று அவன் சாஸனமொன்று கூறுகின்றது.[1] 'பப்ப பட்டாரகரது பாதங்களை இடைவிடாது தியானித்தலால் வளரும் மகிமையுடையவன்' என்பது இவ்வடதொடரின் பொருளாம். இவ்வாறு அப்பல்லவனது மகிமை மிகுதற்கு அவன் ஞானகுரு சிறந்தகாரணமாகச் சொல்லப்படுதலின், அக்குரு அவ்வேந்தன்காலத்தவராகக் கருத இடமுண்டு. இங்ஙனம் பரமபாகவதனை பல்லவனது ஞானாசாரியராய் விளங்குதற்கு உரிமையுடைய பெரியார், திருமங்கைமன்னனினும் சிறந்திருந்தவர் அக்காலத்து வேறியாவர்? அதனால், பப்பவப்பராகிய இவ்வாழ்வார் தங்காலத்து அரசர்க்கு ஞானகுருவாக விளங்கியவர் போலும் என்ற அதிசங்கை நிகழ்கின்றது. இதனுண்மை எவ்வாறாயினும், ராஜருஷிகள் பலரை 'பப்பபட்டாரக மஹாராஜா' என்று சாஸனங்கள் மிகுதியும் வழங்குகின்றமையின்,[2] அரசராய்த் துறவு பூண்ட நம் பெரியாரும் அத்தகையாருள் ஒருவராகக் கருதப்பெற்று அவர் காலத்தில் பிரபலராயிருந்தவர் என்பது, அவர் வாய்மொழிகொண்டே அறியத் தடையில்லை. ஆலிநாடரும் மங்கைவேந்தருமாகிய இவ்வாழ்வார் இந்திரனுக்கு அமைந்ததுபோன்ற அரசியற் பெருஞ்செல்வத்தில் இறைவன் தம்மையும் வைத்துள்ள நிலைமையை—

"வெந்திறற் களிறும் வேலைவா யமுதும்
விண்ணொடு விண்ணவர்க் கரசும்
இந்திரற் கருளி யெமக்குமீந் தருளும்
எந்தையெம் மடிகளெம் பெருமான்"

என்று பாராட்டிக் கூறியுள்ளார்; ஆதலின், இப்பெரியாரை 'ராஜருஷி' என்னச் சிறிதும் தடையில்லை என்க.

இனி, திருமங்கைமன்னன் மாமல்லபுரம், மாவலிபுரம் என்று வழங்கப்பெறும் திருக்கடன்மல்லைத் தலசயனத்தைப் பற்றிய தம் இரண்டாந்திருப்பதிகத்தில்—

1. S. I. I. Vol. ii, p. 350, line, 78—Kāśākuḍi Plates of Nandivarman.
2. Ind. Ant. Vol. xv, p. 274.

"பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோ
டிணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்விசும்பிற்
கணங்களியங் குமல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே"

என்ற பாசுரத்தே, கடன்மல்லையில் திருமால் சிவபிரானுடன் சேரக்கோயில்கொண்டுள்ளமையைச் சிறப்பித்தல் காணலாம். மாமல்லபுரத்துக் கடற்கரைத் திருமால்கோயிலின் உள்ளிடமாக "க்ஷத்ரியசிகாமணிப் பல்லவேச்வரம், இராஜசிம்ம பல்லவேச்வரம்" எனப் பெயரிய சிவாலயங்களிரண்டு அமைந்திருந்த செய்தி, அக்கோயிற்பக்கங்களைச் சோதித்தபோது கண்ட பழையசோழசாஸனங்களினின்று தெரியவருவதென்றும், 'க்ஷத்ரியசிகாமணி, இராஜசிம்மன்' என்பன இரண்டாம் நரசிம்மவர்மன் (கி. பி. 690—710) கொண்டிருந்த பெயர்களாதலின் அவ்விருசிவாலயங்களும் அவனால் நிருமிக்கப் பிரதிஷ்டிக்கப்பட்டு அவன்பெயர் பெற்றனவாதல்வேண்டும் என்றும் சாஸனவறிஞர் கருதலாயினர்.[1] இக்கருத்து ஏற்புடையதென்னத் தடையில்லை. இவ்வாறு 7-ஆம் நூற்றாண்டிறுதியிற் பல்லவன் பிரதிஷ்டித்த சிவமூர்த்தத்தோடு திருமால் ஆங்குக் கோயில் கொண்டுள்ளதனையே—"பிஞ்ஞகனோ டிணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்" என்று திருமங்கைமன்னன் பாடுதல் அறியத்தக்கது. இத்திருமால்கோயில், ஆங்குச் சிவாலயங்களெடுத்த இராஜசிம்மன் காலத்துக்கும் முன்பே உள்ளதாகும். அப்பல்லவனது ஆஸ்தானத்து விளங்கியவரென்று தெரியவரும் மகாகவியான தண்டியாசிரியர் தாம் இயற்றிய அவந்திசுந்தரிகதையின் தொடக்கத்தே, மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிற் பள்ளிகொண்டருளிய திருமால் மூர்த்தத்தின் மணிக்கட்டொன்று பின்னமுற்றதைச் செப்பனிட்ட சிற்பியின் விருப்பப்படி, அவனுடன் ஆங்குச் சென்று தரிசித்தபோது, அப்பெருமானது திருவடிகளைக் கடலலைகள் மோதியலம்பும்படி மூர்த்தமிருந்த நிலைமை

1. Ep. Rep. No. 961 of 1913, pp. 88—9.

யைச் சிறப்பிப்பதோடு, அவ்வாறு மோதிய அலையொன்றால் அப்போதலர்ந்த செந்தாமரை யொன்று அப்பெருமான் திருவடிகளில் வீழ்த்தப்பட்டதென்றும், அம்மலர் வீழ்ந்ததும் அஃது ஒரு வித்யாதர உருவமாகமாறிப் பரமனை வணங்கி விண்ணுலகைநோக்கிப் படர்ந்ததைத் தம் கண்ணாரக்கண்டு களித்ததாகவும் கூறுகின்றார்.[1] இவ்வாறு அலைமோதும்படி திருமால்சந்நிதி அமைந்திருந்த பண்டைநிலைமை அத்தண்டி அவந்திசுந்தரிகதை பாடியபின்பு மாறிவிட்டது. அதன் காரணம் —அப்புலவர்காலத்துப் பல்லவனும் பரம சைவனுமான இரண்டாம் நரசிம்மவன்மன் என்ற இராஜசிம்மனால் அத்திருமால்சந்நிதிக்கு முன்புறமாகச் சிவாலயமொன்றுகட்டிப் பிரதிஷ்டிக்கப்பட்டதே ஆகும். அதனால் அக்காலமுதற் கடலலைகள் சிவாலயத்தில் மோதுவதன்றி அவ்வாலயத்தின் பின்புறத்துள்ள திருமால் மூர்த்தத்தைத் தொடுவதற்கு இடமில்லையாயிற்று. ஆகவே, அச்சிவாலயங் கட்டப்பட்டதற்குமுன் பள்ளிகொண்டருளிய பெருமானின் திருவடிகள் அலைமோதும்படி இருந்த நிலையையே மகாகவியான தண்டி பாடலாயினர் என்பது தெளிவாதல் காணலாம். அத்திருமால்மூர்த்தத்தின் மணிக்கட்டொன்று பின்னமுற்றதைச் சிற்பியொருவன் நன்கு செப்பனிட்டான் என்பதனாலும், அம்மூர்த்தம் பல்லவராற் பிரதிஷ்டிக்கப்பட்டது என்ற குறிப்புத் தண்டியின்வாக்கில் இன்மையாலும் மாமல்லபுரத்துக் கடற்கரைப் பெருமாள் மிகப் புராதனமூர்த்தியே என்றுகொள்ளத் தடையில்லை என்க.

மாமல்லபுரம் ஆழ்வார்கள்காலத்துக்கு முன்பே பரதேசமரக்கலங்கள் இயங்கும் பட்டினமாய்க் கடல்வளம்பெற்றிருந்ததென்பது முன்னரே விளக்கப்பட்டது (பக்-30). டாக்டர். தூப்ராயில்துரையும் கோபிநாதராயரவர்களும் கரு

1. 'பாரவி தண்டிகளின் காலம்' என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீ. எ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி அவர்கள், பீ. ஏ., எழுதிய அரிய வியாசங் காண்க (Quarterly Journal of the Mythic Society, Vol. xiii, pp. 674-79)

தியவாறு, இது மாமல்லனென முதல்நரசிம்மவன்மனால் தன் பெயரிட்டுப் புதிதாக உண்டாக்கப்பட்ட நகரம் அன்றென்பதும், சங்ககாலத்தே இத்துறைமுகப்பட்டினம் பிரபலம் பெற்றிருந்ததென்பதும் நாம் நன்கறியத்தக்கன. தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பித்துப் பாடிய பெரும்பாணாற்றுப் படையுள், பெரும்பாணனைத் திரையனிடம் ஆற்றுப்படுப்போன்—"தொண்டைமானாடு வழிப்போக்கரை வருத்தும் கொடியோரை உடையதன்று ; அதனால் விரும்பியவாறு எங்கும் இனிது தங்கி நீ செல்லல்கூடும்" என்று தொடங்கி, அந்நாட்டின் பலபகுதிகளையுஞ் கூறிவிட்டுப் பின்—

"நீர்ப்பெயற் றெல்லை போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
* * * *
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
* * * *
பட்டின மருங்கி னசையின் முட்டில்
* * * *
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவுநீ ரழுவத் தோடு கலங்கரையும்
துறைபிறக் கொழியப் போகி" (பெரும்பாண். 319—51)

என்று கடற்கரைப் பட்டினமொன்றைப்பற்றி வருணித்துக் கூறுஞ் செய்தியைக் காணலாம். மேற்காட்டிய அடிகளில்—"நீர்ப்பெயற்று" என்ற ஊரினெல்லையுள் மேல்புலத்துக் குதிரைகள் வடபுலத்துப் பண்டங்கள் இவற்றைக் கொணரும் மரக்கலங்கள் சூழ்ந்த துறைகளைக் கொண்டதும், மிகவுயர்ந்த பண்டசாலைகளுடன் செல்வர்களான பரதர் வாழும் மாடத்தெருக்களை உடையதுமான பட்டின

மருங்குள்ள சிறப்பும், அங்கே தேவருலகுக்கு ஒரு முட்டுக் கோல் போன்றதும், தன்னிடஞ் சார்த்திய ஏணியால் ஏறற்கரிய தலையினையுடையதுமாகிய வேயாமாடத்தில் துறையறியாது செல்லும் மரக்கலங்களை அழைக்கும் **கலங்கரை விளக்கம்** உள்ள சிறப்பும் மிகவழகாகக் கூறப்படுதல் காணலாம். ஆகவே, முசிறி, கொற்கை, புகார் என்ற சேரசோழ பாண்டிய நாடுகளின் துறைமுகங்கள்போலத் தொண்டை நாட்டுக்குச் சிறந்ததாய்ச் சங்கநாளில் விளங்கிய பட்டினம் இந் **நீர்ப்பெயற்று** என்பது பெறப்படும். இத்துறைமுகம் யாதெனின், அது கடன்மல்லையேயன்றிப் பிறிதில்லை என்க. இந்நீர்ப்பெயற்றுக்குப்பின் உத்தேசத்தலமான கச்சிப்பதியையே பெரும்பாணாற்றுப்படை முடிவாகக் கூறுதலின், இந்நகரினின்று அக்கச்சியைச் சார்தல் எளிதென்பதே பாடியவர் கருத்தாதலுங் காண்க. கச்சியைத் தலைநகரமாகக் கொண்ட பல்லவர்கள் கப்பற்படையுடன் சென்று ஈழத்தைக் கைப்பற்றியதும் பிறவும் இத்துறைமுகவழியாகவே என்பர் சரித்திரவறிஞர். பல்லவர்காலத்து மட்டுமன்றிச் சோழராட்சியிலும் இத்துறைமுகம் பெருமை பெற்றிருந்ததேயாகும்.[1] பெரும்பாணாற்றுப்படை கூறுமாறு கலங்கரை விளக்கத்துடன் (Light-House) "எல்லாக் கப்பல்களுக்கும் ஒரு தரையெல்லை ஸ்தானமாக" இன்றும் இப்பட்டினம் உள்ளமை அறியத்தக்கது. இனி,

"நீர்ப்பெயற் றெல்லைபோகிப்...பட்டின மருங்கி னசையின்"

என்பதற்கு—'நீர்ப்பெயற்றின் எல்லைக்குட் சென்று பட்டின மருங்கை அடையின்' என்பது பொருளாம். நீர்ப்பெயற்று என்பது பட்டினத்தின் வேறுபட்ட ஊராயின்

---

1. "நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால், ஆடு நீள்கொடி மாடமா மல்லையே யனைய" (பெரியபு. திருக்குறிப்புத். 41) எனத் தொண்டைநாட்டுக் கடற்கரையூர்களுள்ளே மாமல்லபுரம் சிறப்புற்றிருந்த செய்தியைச் சேக்கிழார் கூறுதலுங் காண்க.

அப்பட்டினப் பெயர் இன்னதென்பதைப் பாடியோர் குறி யாமற் போகார். சிறுபாணாற்றுப்படையினும்,

" மணிநீர் வைப்பின் மதிலோடு பெயரிய
பனிநீர் படுவிற் பட்டினம் படரின் " (152—3)

என, எயிற்பட்டினம் என்ற கடற்கரையூரை அதன் பரி யாயத்தால் மதிலொடுபெயரிய...பட்டினம் என்று நல்லூர் நத்தத்தனார் குறிப்பிடுதலும் ஈண்டு ஒப்பிடத்தக்கதாம். ஆகவே, நீர்ப்பெயற்று என்பது கடற்கரையூரைக் குறிப்ப தென்பதும், புகாரின் ஒரு பகுதியான பட்டினப்பாக்கம் போல அந்நீர்ப் பெயற்றின் கடற்கரைப்பகுதி தனியே திரைவளம்பெற்றிருந்த தென்பதும் பெறப்படக்கூடியன. 'நீர்ப்பெயற்று' என்பதற்கு—'நீரின்வளம் பெய்தலையுடை யது' என்று பொருள்கொள்ளலாம். கடன்மல்லை என்ற பெயரும் இப்பொருட்டே; "கலங்க ளியங்கு மல்லைக் கடன் மல்லை" என்றார் திருமங்கைமன்னனும். இனி, நீர்ப்பெயர்த்து என்ற சிறந்தபாடமும் மகாமகோபாத்யாய ஐயரவர்களாற் கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளது; 'நீரின்பெயரை உடை யது' என்பது இதன்பொருள். ஈண்டு நீர் - கடல் (பிங் கலந்தை); இதனை—

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" (பட்டினப்பாலை, 185)

"நீரொலித் தன்ன நிறைவேற் றானையொடு" (மதுரைக்காஞ்சி, 369)

என்பவற்றாலும் அறிக. 'நீரின் பெயருடையது' எனவே கடன்மல்லை என்பது குறிப்பிக்கப்பட்டபடியாம். ஊர் முதலியவற்றை அவற்றின் பரியாயப்பெயர்களாற் குறிப் பிடுவது பண்டையோர் கொண்ட முறையாகும். இச் செய்தி :—

1. வஞ்சிமாநகரை :--"பொற்கொடிப்பெயர்ப்படூஉம் பொன்னகர்" (மணிமே. 26-92; 28-101) என்றும்,

2. காவிரிப்பூம்பட்டினத்தை:—'கவேரகன்னிப் பெய ரொடு விளங்கிய மூதூர்' (மணி, 95-52) என்றும்,

3. எயிற்பட்டினத்தை :—'மதிலொடு பெயரிய பட் டினம்' (சிறுபாண். 152-3) என்றும்,

4. கிரவுஞ்சகிரியை :—'குருகுபெயர்க் குன்றம்' (சிலப். 24. 'சரவண') என்றும்,

5. வீட்டின் உத்தரத்தை :—'நாளொடு பெயரிய விழுமரம்' (நெடுநல். 22) என்றும்,

6. இராசான்னம் என்ற நெல்லை[1] :—'பறவைப் பெயர்ப்படு வத்தம்' (பெரும்பாண். 305) என்றும்—

இவ்வாறே முன்னோர் பலரும் வழங்குமாற்றால் அறியப் படும். இவற்றுள், நீர்ப்பெயர்த்தென்று கூறிய ஆசிரி யரே இராசான்னத்தின் பரியாயத்தைக் கூறியுள்ளமுறை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இராசான்னம் என்பதனுள், அன்னம் என்பதனை மட்டும் பறவை என்பதனாற் குறிப் பிட்டுப்போந்த அப்புலவர் இராசபதத்துக்குப் பரியாயங் கூறாமையால், ஒரு தொடர்ப்பெயரை அதன் ஏகதேசம் பற்றி வேறுவகையாற் குறிப்பிடுவதும் அவர்க்கியல்பு என் பது நன்கு புலப்படத்தடையில்லை. அம்முறையே, கடல் மல்லை என்பதனுள் கடல் என்பதற்குமட்டும் பரியாயச் சொல்கொண்டு, 'நீர்ப் பெயர்த்து' என்பதனால் அக்கடற் கரையூரை உருத்திரங்கண்ணனார் குறிப்பிட்டனர் என்று கொள்வதே ஏற்கும் என்க. இவ்வூரின் கடற்கரையல்லாத பகுதி—புகாரின் மருங்கூர்ப்பட்டினம் போல—அந்தணர் போன்ற உயர்குடிமக்கள் வாழ்ந்துவந்த இடம் என்பது—

1. இவ்வகை நெல் சோணாடு முதலிய பிரதேசங்களில் வழங்குகின்றது. உயர்ந்த சாதிச் செந்நெல்லாகிய இதனை 'ராஜ நாலு' என்பர் ஆந்திரர்.

" இரைதேர் மணிச்சிரல்......
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையத் தோன்றும்
நீர்ப் பெயர்த்து" (பெரும்பாண். 313—19)

என்று அவ்வூர் சிறப்பிக்கப்படுதலால் தெளியப்படும்.

இனி, மாமல்லபுரத்தைக் **கடன்மல்லைத் தலசயனம்** என்று திருமங்கைமன்னன் இரண்டு திருப்பதிகங்களாற் பாடுகின்றார். ஆனால் அவ்வூர்க் கடற்கரைக் கோயிலிற் கண்டெடுக்கப்பட்டனவும் முதல் இராஜராஜன் காலத்தனவுமான சாஸனங்களில்—

"நகர மாமல்லபுரத்து ஜலசயனதேவர் தெற்கில் திருநந்தவனத்தே இருக்க"

"இந்நகரத்து ஜலசயனத்து க்ஷத்ரிய சிகாமணிப் பல்லவீசுவரத்துத் தேவரும், ராஜஸிம்ம பல்லவீசுவரத்துத் தேவரும் பள்ளி கொண்டருளிய தேவரும் உடைய பட்டாரத்து"

(S. I. I. Vol. i, pp. 64, 67)

எனவருந் தொடர்களினின்று, 900-வருஷங்கட்கு முன்பு அக்கடற்கரைக் கோயில் 'ஜலசயனம்' என்றே வழங்கப் பெற்றிருந்த செய்தி தெரியலாம். மேற்காட்டிய இரண்டாந் தொடருள் 'பள்ளிகொண்டருளிய தேவரும்' என்றது ஆங்குக் கிடந்ததிருக்கோலம் உடையரான திருமால்மூர்த்தத்தையாம். நீர்ப்பக்கமாகத் திருமால் சயனங்கொண்டமையின் **ஜலசயனம்** என்று அக்கடற்கரைக் கோயிற்கு முன்னோர் பெயர் வழங்கியிருந்தனர் என்றும், அக்கோயிலின் முன்புறமாகவும் சார்பாகவும் 7-ம் நூற்றாண்டிறுதியில் இரண்டாம்

நரசிம்மவன்மனால் புதியவாய்க் கட்டப்பட்ட சிவாலயங்களும் ஜலசயனத்தைச் சார்ந்தனவாகவே பிற்பட்ட சோழர் காலத்தும் வழங்குப்பெற்றிருந்தன என்றும் கொள்ளத்தகும். இனி, கடற்கரையல்லாத நகரத்தே கிடந்த திருக்கோலம் உடையரான திருமாலின்கோயில் வேறொன்றும் மாமல்லபுரத்து உள்ளது. இதுவும் அக்கடற்கரைக் கோயில்போலவே பழைமையானதென்பது, மேற்குறித்த இராஜராஜன் மகன் இராஜேந்திரசோழன் என்று கூறப்படும் பரகேசரிவர்மன் காலத்துச் சாஸனம் அக்கோயிலிற் காணப்படுதலினின்று தெளிவாகின்றது.[1] "தலசயனப்புறமான தையூர்"[2] என்றுள்ள சாஸனத்தொடரால்[3] அக்கோயிலடியாக மாமல்லபுரம் 'தலசயனம்' என்றே முன்பு அழைக்கப்பட்டமை தெரியலாம். தரையிடமாகத் திருமால் சயனம் உண்மைபற்றியும் சலசயனத்தின் வேறுபிரித்துக் காட்டவேண்டியும் அக்கோயில் தலசயனம் எனப்பட்டதாதல் வேண்டும். ஆகவே, **தலசயனம் சலசயனம்** என்ற இரண்டுகோயில்கள் திருமாற்குப் பழைமையாகவே மாமல்லபுரத்திற் சிறப்புற்றிருந்தன என்பது பெறப்படுகிறது. இவற்றினின்று, திருமங்கைமன்னன் கடன்மல்லையைப்பற்றிப் பாடிய பதிகங்களிரண்டனுள் **முன்பதிகம்—தலசயனத்தைப் பற்றியது** என்றும், கடற்கரைக் கோயிலைப்பற்றிய பாசுரம் உள்ள **பின்பதிகம்—சலசயனத்தைப் பற்றியது**[3] என்றும், பிற்காலத்தில் இரண்டுபதிகங்க

---

1. The Inscriptions of Madras Presidency, Cg, No. 8I, B.

2. S. T. T. Vol. iii, p. 356.

3. சோணாட்டுச் சிறுபுலியூரைச் சலசயனத்தலமாகத் திருமங்கைமன்னன் பாடுதலும், பாண்டிநாட்டுத் திருப்புத்தூர்க்கோயிலைச் 'சலசயனம்' என்று பழைய பாண்டியசாஸனம் (Ep. Rep. 131, of 1908.) கூறுதலும் ஈண்டு அறியத்தக்கன. திருமாலின்சயனங்கள்:—சலசயனம், தலசயனம், புஜங்கசயனம், உத்யோகசயனம்

ளுமே தலசயனத்திருமாலைப்பற்றியனவாகக் கருதப்பட்டுப் பாடமாறலாயிற்று என்றும் நாம் ஊகிக்க இடம் ஏற்படுகின்றது. இனி, ஊரினகத்துள்ள கோயிலடியாகத் **தலசயனம்** என்ற பெயர் அவ்வூர்க்கே வழங்கியதுபோலக் கடற்கரைக் கோயிலடியாகச் **சலசயனம்** என்றபெயர் அக்கடன்மல்லைக்கு முன்பு வழங்கியிருத்தலுங் கூடியதேயாகும். அவ்வாறாயின் 'நீர்ப்பெயர்த்து' என்று உருத்திரங்கண்ணனார் குறித்தது அச்சலசயனம் என்ற பெயரைக் கருத்துட்கொண்டே என்று சொல்லலாகும்.[1] எங்ஙனமாயினும், சங்கநூலுட்கண்ட 'நீர்ப்பெயர்த்து' என்பது, கடன்மல்லையின் பழம் பெயரென்பதில் தடையில்லை என்க.[2] இவற்றால், கடன்மல்லை சங்ககாலத்து விளங்கிய பழைய பட்டினமே என்பதும், அப்பட்டினத்துள்ள தலசயனம் சலசயனம் என்ற திருமால் கோயில்கள் இரண்டனையும் திருமங்கைமன்னன் பாடிய வராவர் என்பதும், 7-ம் நூற்றாண்டிறுதியிற் பல்லவனாற் புதிதாக எடுக்கப்பட்ட சிவாலயமொன்றைத் தம்பதிகத்துட்

---

வீரசயனம், போகசயனம், தர்ப்பசயனம், பத்ரசயனம், மாணிக்க சயனம், உத்தானசயனம் எனப் பலவகையாகத் தெரிகின்றன. "மலர்ச்சயனம் சலசயனந் தோற்சயன மாதி, பழிப்பில் பதினைந் தாகுஞ் சயனம்" எனத் திவாகரர் (திவா. 18, 67) பதினைந்து சயனங் கூறுவர்.

1. இப்பகுதியை நான் படித்துக்காட்டியபோது, "மஹாவித்வான் : ஸ்ரீ ரா. இராகவையங்கார்ஸ்வாமி 'நீர்ப்பாயற்றலை' என்பது பழம்பாடமாயின், அது ஜலசயனம் என்பதற்கு முழுப்பரியாயமாக அமைந்து சிறப்புறும்" என்று கூறிய அரியகருத்து ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

2. திருநீர்மலை போன்ற ஊர்கள் கடற்கரைக்கு நெடுந்தூரத்துள்ளமையால், நீர்ப்பெயர்த்தெல்லையில் பட்டினமுள்ளதாகக் கூறும் புலவர் கூற்றுக்கு அவை ஏற்புடையவாகாமை கண்டுகொள்க.

குறிப்பிடுதலின், அப்பெரியார் அக்காலத்துக்குப் பின்பு விளங்கியவர் என்பதும் தெளிவாதல் கண்டுகொள்க.

திருமங்கைமன்னன், பரமவைஷ்ணவர்களாய்த் தந்தையும் மகனுமாக நெடுங்காலம் ஆண்ட நந்தி தந்தி என்ற பல்லவரிருவர் காலங்களினும் விளங்கியவராதல் வேண்டும் என்பதற்கு வேண்டிய காரணங்கள் மேலே கூறப்பட்டன (பக். 108—112). ஒருசிலர் தந்திவர்மன் சைவமதச் சார்புடையவன் என்பதற்கு அவன் பெயரால் வழங்கும் சிவாலயம் சிவமூர்த்தங்களைச் சான்று காட்டுவர்.[1] பழைய அரசர் பெரும்பாலாரும் வைதிகசமயங்களுள் ஏதனைத் தழுவியவராயினும், அதுபற்றிப் பிற்காலத்து வேந்தர்சிலர் போலப் பிற வைதிகசமயக்கடவுளரிடத்து வெறுப்புக் கொள்ளாது, அவர்க்குக் கோயிலெடுத்தும் வழிபட்டும் வந்தவர்களே ஆவர். கோச்செங்கணான் மகேந்திரவன்மன் முதலியோர் இத்தகையோராதல் காண்க. வைதிகரிடமட்டுமன்று: அவைதிகரான சைன பௌத்தர்கள்பாலும் அம்முறையையே கொண்டொழுகியவராவர். சிவபாதசேகரன் எனப்பட்ட முதலிராஜராஜசோழன் பௌத்தவிஹாரத்தை அபிமானித்து ஆதரித்ததும், அவன் சகோதரி குந்தவை சைனப்பள்ளிகட்டிப்[2] போற்றியதும் இதற்குச் சான்றுகளாம். ஆகவே, சைவச்சார்புடையவேந்தர் திருமால்கோயில் முதலியன நிருமித்துவணங்கலும், வைணவச்சார்புடைய வேந்தர் சிவாலயமுதலியன கட்டிவழிபடலும் முற்காலத்தே சிறிதும் புதுமையானவை அல்ல. ஆயினும், அத்தகையோருட்சிலர் இன்னகடவுளைத் தம் வழிபடுதெய்வமாகக் கொண்டு விசேடபக்திபுரிந்துவந்தவர் என்பதனை நன்கறிய இடமுண்டு. அஃதாவது—பல்லவருள்ளே சிம்மவிஷ்ணு, இரண்டாம் நந்திவன்மன், நிருபதுங்கன் போன்றவரைப்

1. Ep. Rep. of 1910 p. 81; தமிழ்வரலாறு, பக். 75.

2. குந்தவையால் பிரதிஷ்டிக்கப்பட்டது, வட ஆர்க்காடு ஜில்லாவில் திருமலை (வைகைமலை) யிலுள்ள ஜினலயமாகும். (Insc. of the Madras Presidency, NA. 383).

பரமபாகவதர்களென்றும், முதலாம் மகேந்திரவன்மன், இரண்டாம் நரசிம்மவன்மன், மூன்றும் நந்திவன்மன்[1] போன்றவரைப் பரமசைவர்களென்றும், பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையனைப் 'பரமவைஷ்ணவன்' என்றும், சோழன் முதலாம் இராஜராஜனைப் பரமசைவனென்றும் சாஸனங்கள் சிறப்பாகக்கூறுவன கொண்டு[2] அன்னோர் தழுவியிருந்த சமயம் இன்னவென்று கொள்ளத் தடையில்லை என்க. அம்முறையில், நந்திவன்மனைச் சிவபத்தன் என்று கூறாமல் 'திருமால்பால் திடபத்திகொண்டவன்' என்று சாஸனஞ் சிறப்பித்தலால்,[3] அஃது அவனது சமயக்கோட்பாட்டை நன்குபுலப்படுத்தக் கூடியதென்றே சொல்லத்தக்கது.

திருமங்கைமன்னன் நாகபட்டினத்துப் பௌத்தப் பள்ளியொன்றில் இருந்த பொற்படிமத்தை உளவறிந்து களவிற்கைப்பற்றி அதுகொண்டு திருவரங்கத் திருமதில் கட்டினார் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கடார (Burma) வேந்தனை ஸ்ரீமாற விஜயோத்துங்கவர்மனால் நாகபட்டினத்தில் 'சூடாமணி பத்ம விஹாரம்' என்ற பௌத்தப்பள்ளி ஒன்று கட்

---

1. பல்லவமல்லனைப்பற்றிய தண்டந்தோட்டச் சாஸனத்தை (S.I.I. ii, No. 99) மூன்றுநந்திவன்மனது என்று மாறிக்கருதி, அந்நந்தியை வைஷ்ணவனென்றும், திருமங்கையார் அவனையே பாடியவர் என்றும் சிலர் எழுதியிருப்பது தவறென்க.

2. 'பக்தியாராதிதவிஷ்ணு:' (விஷ்ணுவைத் தன்பத்தியால் மகிழ்விப்பவன்) என்று ஸிம்மவிஷ்ணுவும் (S.I.I. Vol. ii, p. 366, lines, 12, 13) "அச்சுதனைத் தன் ஹ்ருதயஸந்நிஹிதமாக உடையவன்" 'முகுந்தனைத் தவிர வேறொருவரையும் வணங்கியறியாத முடியுடையவன்' என்று இரண்டாம் நந்திவன்மனை பல்லவமல்லனும் (S. I. I. ii, p. 520) 'முகுந்தன் பாதங்களை எப்போதும் சிரசில் தரிப்பவன்' என்று நிருபதுங்கவர்மனும் (S. I. I. ii, p. 507) சாஸனங்களிற் சிறப்பிக்கப்படுதல் காண்க. முதல் மகேந்திரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராஜசிங்கன், மூன்றுநந்தி இவர்களைச் சிவபத்தர்களாகச் சாஸனங்கள் கூறுதல் மேலே பலவிடங்களினுங் குறிக்கப்பட்டது.

3. S. I. I, Vol. ii, No. 98, p. 515.

டப்பட்டதென்றும், அதற்கு முதலிராஜராஜசோழனால் கி. பி. 1008-ம் வருஷம் ஆனைமங்கலம் என்ற கிராமமொன்று தானமளிக்கப்பட்டதென்றும் சாஸனத்தால் அறியப்படுகின்றன[1]. இச்செய்திகளைக் கொண்டு, அவ்விஹாரத்திருந்த பௌத்தவிக்கிரகமே திருமங்கையார் கைப்பற்றியதாகவேண்டும் எனவும், எனவே அவ்வடியார்காலம் 11-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டதாகவேண்டும் எனவும் கருதுவாரும் உளர். இப் பௌத்தப்பள்ளியைப் பற்றி நமக்கு முதன்முதல் தெரிவிப்பது, அவ்விராஜராஜசோழன் மகன் முதலிராஜேந்திரன் காலத்தே உண்டான சாஸனமே. அதனால், 1013-முதல் 1045-வரை ஆண்ட அவ் இராஜேந்திரன் காலத்தில், அந் விஹாரம் நன்னிலையில் இருந்ததென்பது விளங்கும். ஸ்ரீமந்-நாதமுனிகளுக்குத் திருப்பேரனாரான ஸ்ரீஆளவந்தார் வைஷ்ணவாசாரியத்தலைமை வகித்து விளங்கியது இக்காலமேயாம். ஆகவே, முற்கூறிய கொள்கைப்படி கொண்டால், திருமங்கைமன்னன் அவ்வாளவந்தார்க்கும் பின்பிருந்தவர் என்றே கொள்ள நேரும். ஆயின், இதனிலும் அசங்கதமான கொள்கை பிறிதில்லை என்க. திருமங்கைமன்னன் களவுத்தொழிலிற் பேர்போனவர் என்றும், அத்தொழிற்றிறமை காட்டிப் பௌத்தப்படிமத்தைக் கவர்ந்தவரென்றும் கூறப்படும் கதைகளினுண்மையே ஆராய்ச்சிக்கு உரியதாக உள்ளது. ஆழ்வார்—"அலைநீருலகுக் கருளேபுரியும், காரார் புயற்கைக் கலிகன்றி" என்றும் பிறவாறும் தம்மைபற்றிக் கூறியவற்றுடன் அக்கதைகள் மாறுபடுதலை மேலே விளக்கினேன். அவற்றை மெய்யாகவே கொள்ளினும், அப்படிமம் இருந்த நாகபட்டினத்துப் பௌத்தப்பள்ளி 8-ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதொன்று என்று கருதத்தக்கதேயன்றி, 11-ம் நூற்றாண்டினதாகக்கொள்ளச் சிறிதும் இடமில்லை என்பது திண்ணம். அக்கரைநாட்டுப் பௌத்தவேந்தனொருவன் தமிழ்நாட்டில்

---

1. The Large Leiden Grant—Tamil and Sanscrit Inscriptions, No. 30, pp. 204—24

விஹாரமொன்று கட்டுதற்கு நாகபட்டினத்தைக் குறிப்பிட்டதனால், அது பௌத்தர்கட்குச் சிறந்த தலம் என்பது பெறப்படும். அவ்வாறே நாகபட்டினத்தைப் பற்றிய பழைய வழக்கும் உண்டு. அதனால், வேறு பௌத்தப்பள்ளிகளும் அவ்வூரில் முன்பே இருந்திருத்தல் வேண்டும் என்றும், அவையாவும் சிதைவுற்ற பிற்காலத்தே கடாரவேந்தனால் தன்பெயரிட்டுப் புதிய விஹாரமொன்று ஆங்குக் கட்டி முடிக்கப்பட்டதென்றும் கொள்வதே நன்கு பொருந்துவதென உணர்க.

இவ்வாறு, எவ்வகையானும் 8-ம் நூற்றாண்டே திருமங்கை மன்னனுக்கு ஏற்புடைக்காலமாதல் தெளியலாம். இந்நூற்றாண்டு, திருமாலடியாரான பெரியோர்களும் அரசரும் சிறந்துவிளங்கிய காலவிசேடம் என்பது பல்லிடங்களிலும் என்னாற் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதான 7-ம் நூற்றாண்டில் சைனபௌத்தமதங்கள் அரசராதரவால் அடைந்திருந்த உயர்நிலைமை இக்காலத்தில் முற்றும் ஒழிந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. தம் நிலைமையை உயர்த்துவதில் ஊக்கமும் உழைப்பும் அம்மதத்தவர்களிடம் குறையாதிருந்ததோடு, வைதிகசமயத்திடத்தும் அதன் தெய்வங்களிடத்தும் இயல்பாக அவர்கட்கிருந்த வெறுப்புப் பின்னும் பெருகியிருந்ததென்றும் சொல்லலாம். எட்டாநூற்றாண்டுத் தமிழ்வேந்தர்கள் வைதிகச்சார்புடையரேயாயினும், அதுபற்றிப் புறச்சமயத்தாரது மதப்பிரசாரக முயற்சியைத் தடைப்படுத்துங் கருத்துக் கொண்டிருந்தவர் அல்லர். எல்லாமதத்தாரையும் ஒப்பநாடி அவர்களது உரிமைகளையும் அறங்களையும் காத்தளிப்பதிற் பழைய அரசர் பெரும்பாலாரும் பெருநோக்குடையவர்களே. அதனால் வைதிகசமயத்தவருடன் வாதங்கள் நடத்தித் தம் கொள்கைகளைச் சைனபௌத்தர்கள் பரப்பக்கொண்ட முயற்சிக்கு யாதொரு தடையும் நிகழ்ந்ததில்லை என்னலாம். 7-ம் நூற்றாண்டிலிருந்த சமணசமயத்தின் ஆதிக்கத்தை நிலைகுலையச் செய்த அப்பர் சம்பந்தமூர்த்திகட்கு அரைநூற்

றாண்டின் பின்விளங்கியவராக மேற்குறிப்பிட்டுப் போந்த சுந்தரமூர்த்திநாயனார்:—

"நமணநந்தியுங் கருமவீரனுந் தருமசேனனு மென்றிவர்
குமணமாமலைக் குன்றுபோனின்று தங்கள்கூறையொன் றின்றியே
ஞமணஞாஞண ஞாணஞோணமென் றோதியாரையும் நாணிலா
அமணராற்பழிப் புடையரோநமக் கடிகளாகிய வடிகளே"
(தேவா. பொது. "நமக்கடிகளாகியவடிகள்", 9)

"கரிய மனச்சமண் காடியாடு கழுக்களால்
எரிய வசவுணுந் தன்மையோ...எம்பிரானுக்கே"
(ஷை, 'முடிப்பதுகங்கை', 9)

என்று தங்காலத்தே தலைமை பெற்றிருந்த சமணமுனிவர் சிலரையும், அவர்கள் வைதிகக் கடவுளரைப்பற்றி இகழ்வுரைகூறி வந்ததையுங் குறிப்பிடுதல் காணலாம். இவ்வாறே அச்சுந்தரமூர்த்திகள் காலத்தவரான திருமங்கை மன்னன்—

"பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே"
(பெ. தி. 2, 6, 5)

"தருக்கினாற் சமண்செய்து சோறுதண் டயிரினாற்
றிரளை மிடற்றிடை நெருக்குவார்" (ஷை. 2, 1, 7)

"தெருவிற்றிரி சிறுநோன்பியர் செஞ்சோற்றொடு கஞ்சி
மருவிப்பிரிந் தவர்வாய்மொழி மதியாதுவந்
தடைவீர்" (ஷை, 7, 9, 2)

"வெள்ளியார் பிண்டியார் போதியா ரென்றிவ ரோதுகின்ற
கள்ளநூல் தன்னையுங் கருமமன் றென்றுயக்
கருதினையேல்" (ஷை, 9,7, 9)

"வுந்திக்கு மற்றவர்க்கு மாசுடம்பில் வல்லமணர்
தமக்கு மல்லேன்" (ஷை, 7, 4, 5)

என்றும்; இவ்வாழ்வார் காலத்தவராகக் குருபரம்பரைகள் கூறுந் தொண்டரடிப்பொடிகள்—

"புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாங்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்"

"வெறுப்பொடு சமணமிண்டர் விதியில்சாக்கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள்பேசிப் போவதே நோயதாகில்"
(திருமாலை. 8, 7)

என்றும் எட்டாநூற்றாண்டில் அப்புறச் சமயிகள் கொண்டிருந்த மனநிலைமையையும் மதப்பிரசாரக முயற்சிகளையுங் கூறிச்செல்லுதல் காண்க. பழங்காலத்தில் சைனர்கள் மிகுதியுந் தங்கிவாழ்ந்த மலைகள் எட்டாகும். அவற்றை—

" பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

என்னும் பழைய வெண்பாவான்[1] அறிக. " வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாங், கெண்பெருங் குன்றத் திருந்த முனிவரர் " என்பர். இவற்றுள் இருங்குன்று என்பது திருமாலிருஞ்சோலை என்ற அழகர்மலையாகும். " இருங் குன்றத் தடியுறை யியைகென " என்பது பரிபாடல் (15, 16). திருமங்கைமன்னன் காலத்திலும் சைனபௌத்தர்கள் அழகர் திருமலையில் வசித்துவந்தனர் என்பதும், அம் மலையில் அநாதியாகவே திருக்கோயில்கொண்டருளிய திருமாலைப்பற்றி அன்னோர் வாய்க்குவந்தன பேசிப் போந்தன ரென்பதும்—

" புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவு முகந்திட்
டெந்தைபெம் மானு ரிமையவர் தலைவர்
எண்ணிமுன் னிடங்கொண்ட கோயில் "
(பெ. தி. 9, 8, 9)

என்று இப்பெரியார் திருமாலிருஞ்சோலைப் பதிகத்துக் கூறுதலால் தெரிகின்றது. அழகர் திருமலையில் சைனரும் பௌத்தரும் ஆழ்வார்கட்கு முன்பே வசித்து வந்தவர்கள் என்பது அம்மலைக்குகைகளில் அமைந்துள்ள "ப்ராஹ்மி"

---

1. திருவாலவாயுடையார் புராணம், குறிப்புரை, பக். 288 (முதற்பதிப்பு.).

சாஸனங்களாலும், பிற சைனசாஸனங்களாலும் நன்கு விளங்குவன[1].

இனித் திருமங்கைமன்னன் தமக்குமுன்னும் தம் காலத்தும் விளங்கிய அரசர் சிலருடைய அரிய செயல்களைப்பற்றிக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. அரசர்க்கரசனும் பரம பாகவதனுமான தொண்டைவேந்தனொருவனுடன் திருமால் ஏழு நாழிகையளவும் எழுந்தருளியிருந்து, திருமந்திரப்பொருளை அவற்கு உபதேசித்தருளினர் என்பதனை—

> "துளங்கு நீண்முடி யரசர்தங் குரிசில்
> தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்
> குளங்கொ ளன்பினோ டின்னருள் சுரந்தங்
> கோடு நாழிகை யேழுட னிருப்ப
> வளங்கோள் மந்திர மற்றவற் கருளிச்
> செய்த வாறடி யேனறிந் துலக
> மளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
> அணிபொழிற்றிரு வரங்கத்தம் மானே" (5, 8, 9)

என்ற பாசுரத்தால் இவ்வாழ்வார் கூறுகின்றார். இப் பாட்டிற் கண்ட தொண்டை மன்னவன், பல்லவவேந்தனும் பரமபாகவதனுமான சிம்மவிஷ்ணுவேனும் இரண்டாம் பரமேச்சுரவர்மனேனும் ஆதல் வேண்டும். இவ்வேந்தனையன்றி வேறு பல்லவனொருவனும் தில்லைச்[2] சித்திரகூடத்துத்

1. அழகர்மலையில் சாஸனங்களுடன் உள்ள இக்குகைகள் 'பஞ்சபாண்டவர் படுகை' என்று வழங்குகின்றன. (Ep. Rep. 70—79 of 1910, p. 80)

2. சித்திரகூடம் - சிற்றம்பலத்தின் பக்கத்துள்ள திருமால் கோயில். "சித்திரகூடந் தெற்றியம்பலம்" என்பர் திவாகர நிகண்டுடையார். தெற்றியம்பலம் - மேடையிடமாயமைந்த கோயில் [தெற்றி - திண்ணை ; அம்பலம் - கோயில்]. திருந்தெற்றியம்பலம் எனத் திருமாற்கு வேறோர் கோயிலும் சோணாட்டுள்ளமை காண்க. தில்லைக் கோயிலுள் தரையிடமாகச் சிவபிரானுக்கும் மேட்டிடமாகத் திருமாலுக்கும் முறையே சிற்றம்பலம் தெற்றியம்பலங்கள் பழைமையாகவே உள்ளன என்பதும், அவ்விரண்டும் அந்தணர் அரசர் முதலியோரால் ஒப்பப் போற்றப்பட்டன என்பதும்

திருமாற்குப் பல திருப்பணிகளுஞ் செய்து பணிந்த செய்தியை—

> " பைம்பொன்னு முத்து மணியுங் கொணர்ந்து
> படைமன்ன வன்பல் லவர்கோன் பணிந்த
> செம்பொன்மணி மாடங்கள் சூழ்கின்ற தில்லைச்
> திருச்சித் திரகூடஞ் சென்றுசேர் மின்களே" (3,2,3)

என்று கூறுவர், இவ்வாழ்வார். 'படைமன்னவன் பணிந்த' என்பதனால் அவ்வரசன் வெற்றியுடன் வந்தவன் என்பதும், அவன் சமர்ப்பித்த அரும்பொருள்களில் முத்துங் கூறப் படுதலால், முத்துக்குரியனான பாண்டியனை அவன் போரில் தோற்பித்தவன் என்பதும் பெறப்படும். இத்தென்னாட்டு வெற்றி பெற்றவன் திருமாலடியனான பல்லவமல்லனாதல் வேண்டும்; "பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்" என்று இவனையே பொதுப்படப் பல்லவன் என்று வேறு திருப்பதிகத்தும் இவ்வாழ்வார் சிறப்பித்தல் ஒப்பிடத்தக்கது. சித்திரகூடத்துத் திருமால் தில்லைவா ழந்தணர்களால் நாளும் விதிப்படி ஆராதிக்கப்பெற்றுப் போற்றப்பட்டவர் என்பது—

> " மூவா யிரநான் மறையாளர் நாளும்
> முறையால் வணங்க வணங்காய சோதி
> தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
> திருச்சித் திரகூடஞ் சென்றுசேர் மின்களே" (3,2,8)

என்ற இப்பெரியார் திருவாக்கால் விளங்கும். தில்லை மூவா யிரவர் இவ்வாறு திருமாலடியாராய் வழிபடுந் திறத்தை—

> " தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
> அந்தணர்க ளொருமூவா யிரவ ரேத்த
> அணிமணியா சனத்திருந்த வம்மான் றானே " (10, 2)

---

தேவார திவ்யப்பிரபந்தங்களால் நன்கறியப்படும். " வாங்கிடந் தான் தில்லை யம்பல மூன்றிலம் மாயவனே " (திருக்கோவை. 86) என்று வாதவூரடிகள் புனைந்து கூறியதும், பேராசிரியர் 'இன்னும் வாங்கிடக்கின்றானாதலின்' என்று அவ்வடிக் கெழுதிய குறிப்புரை யும் அச்சித்திரகூடமாகிய தெற்றியம்பலத்தின் பழைமைக்கு வேறு சான்றாதலுங் காண்க.

என்று குலசேகரப் பெருமாளும் கூறியருளுதல் காண்க. இதனால், சிவனடியார்களால் முற்படச் சிறப்பிக்கப்பெற்ற "தில்லைவாழந்தணர்" [1] பண்டைக்காலத்தே 'அரனதிகம் உலகளந்த அரியதிகம்' என்ற பிளவுபட்ட கொள்கையின ராகாது 'திருமாலுக்கடிமைசெய்' என்ற முதுமொழியின் படி ஒழுகிய பெரியோர் என்பது நன்கு பெறப்படும்.

திருமங்கைமன்னன் சோழன் செங்கணானைத் தம் திரு நறையூர்த் திருப்பதிகத்தில் பலபடப் பாராட்டுவர். இச் சோழன் ஐந்தா நூற்றாண்டையடுத்து விளங்கியவன் என்பது மேலே கூறப்பட்டது.[2] கழுமலம், திருப்போர்ப்புறம்[3] என்ற களங்களிலே சேரன் கணைக்கா லிரும்பொறையோடு இச்செங்கணான் போர்புரிந்து அச்சேரனைச் சிறைபிடித்த வன் என்பதும், பொய்கையார் என்ற தெய்வப்புலவர் இவ னது போர்வெற்றியைப் புகழ்ந்து பாடி அச்சேரனைச் சிறைமீட்டன ரென்பதும் புறநானூறு களவழி நாற்பது முதலிய சங்கநூல்களால் நன்கறிந்தவை. முற்பிறவியிலே இவன் சிலந்தியாயிருந்து திருவானைக்காச் சிவபிரானை வழி பட்ட சிறப்பால், சோழராசனாய்ப் பிறந்து அப்பிரானுக்குப் பல மாடக்கோயில்கள் எடுத்துப் பெருமைபெற்றவ னென்ப தும், அதனால் நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராக நன்குமதிக்கப்பட்டவன் என்பதும் தேவாரமுதலிய சைவத் திருமுறைகளால் தெரியலாம். இவன் பிறந்தநாள் இரே

---

1. தில்லைவாழந்தணர் சிவனடியார் வரிசையில் முதற்கண் வைத்துப் போற்றப்படுதலைத் "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" எனச் சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருத்தொண்டத் தொகையில் தொடங்குதலாலும், பிற சைவத்திருமுறைகளாலும் அறிக.

2. இந்நூல், பக். 42, கீழ்க்குறிப்பு.

3. 'திருப்பேர்ப்புறம்' என்பது நேர்பாடம் போலும். திருப் பேர் என்பது 'அப்பக்குடத்தான்' என வழங்கும் சோணாட்டுத் திரு மால் திருப்பதியாம்.

வதி என்பர் முத்தொள்ளாயிரமுடையார்.[1] சோழன் கரிகாலனுக்குப் பின் ஆட்சிபுரிந்தவன் இச்செங்கணான் என்பதும், நல்லடிக்கோன்[2] என்ற நன்மகன் இவனுக்குப்பிறந்து விளங்கினன் என்பதும் சாஸனங்களால் அறியப்படுகின்றன. இவன் பிறப்பு முதலிய பிறவரலாறுகளைப் பெரியபுராணம், திருவானைக்காப்புராணம் முதலிய பின்னூல்களிற் கண்டு கொள்க. இங்ஙனம் காணப்பட்ட வரலாறுகளினும் வேறான செய்திகள் சில இச்செங்கணானைப் பற்றித் திருமங்கை மன்னன் கூறுதல் கண்டு அறியத்தக்கது:—

"வெங்கண்மா களிறுந்தி வெண்ணி யேற்ற
விறன்மன்னர் திறலழிய வெம்மா வுய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"
(பெ. தி. 6, 6, 4)

"பாராள ரவரிவரென் றழுந்தை யேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே" (ஷை. 4, 6, 4)

எனத் திருநறையூர்ப்பதிகத்து ஆழ்வார் கூறுவனவற்றால், வெண்ணி,[3] அழுந்தை[4] என்ற போர்க்களங்களிலே இச்சோழன் அடைந்த வெற்றித்திறம் இற்றென விளங்கும்.

---

1. "அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர், மந்தாம் போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை, இலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்றோ, சிலம்பிதன் கூடிழந்த வாறு" (தொல். பொருளதி. 91, நச். உரை.) என்பதனால் அறிக.

2. Ambil Plates of Sundara-Chola—Ep. Ind. Vol. XV, Verse, 13, p. 60.

3. இது கோயில் வெண்ணி (கோயிலுண்ணி) என வழங்கும் சோணாட்டூர்.

4. அழுந்தை - திருவழுந்தூர்; தேரழுந்தூர் என்பது இப்போதை வழக்கு.

விளந்தை வேள் என்ற சிற்றரசனொருவன், செங்கணனுக்குப் பெரும்பகைவனா யிருந்தனன் என்றும், அவனைப் போரொன்றிலே தன் வேலைச் செலுத்தி உயிர்தொலைத்துப் பின் முத்தமிழ்நாட்டுக்குந் தனியரசன் தானேயாய் உலகமாண்டனன் இச்சோழன் என்றும்—

"மின்னாடு வேலேந்து விளந்தை வேளை[1]
 விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
 திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

(பெ. தி. 6, 6, 6)

என்ற தொடர்களால் ஆழ்வார் தெரிவித்தல் அறியத்தக்கது. விளந்தை என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளயத்தை யடுத்துக் கோட்டை முதலிய பழைய சின்னங்களுடன் இன்றும் உள்ளதோர் ஊராம். மேற்குறித்த போர்களிலே செங்கணான் வெற்றிபெறுதல் வேண்டித் திருநறையூர்த் திருமால் அவற்குத் தெய்வவாளொன்று உதவினர் என்பர் முன்னோர்.[2] இச்சோழன் முன்பிறவியிற் சிலந்தியாய்ப் பிறந்து [3]திருவானைக்காவிலுள்ள சிவலிங்கத்துக்குத் தன் நூலாலிழைத்துவந்த மேல்விதானத்திருப்பணியை அழித்துவந்த யானை நுழையாவண்ணம் சிவபிரானுக்கு மாடக்கோயில் பல கட்டி வழிபட்டவன் என்பது தேவார முதலியவற்றால் அறியப்படும். இங்ஙனம் இவன் கட்டிய சிவாலயங்கள் எழுபது என்று திருமங்கைமன்னன் தொகைப்படுத்துக் கூறுதல் அறியத்தக்கது. இதனை—

---

1. 'விளைந்தவேளை' என்று இப்போது வழங்கும் பாடம், அது 'விளந்தைவேளை' என்று திருத்திக்கொள்ளற்குரியது.

2, பெரிய திருமொழி, 6, 6, 3-ம் பாசுர வியாக்யானம்.

3. "சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து, உலந்தவ ணிறந்த போதே கோச்செங்க ணானுமாகச், கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கை வீரட்டனாரே" (தேவா. குறுக்கை. அப். 4).

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"
(பெ. தி. 6, 6, 8)

என்பதனால் அறிக. இவ்வாறு செங்கணான் செய்த சிவன் கோயில்களாகத் தேவாரத்தால் அறியப்படுவன திருவானைக்கா, அம்பர், நன்னிலம், வைகன் மாடக்கோயில் என்பனவாம்.[1] சோழமண்டலத்தின் கூறுகளாக அமைந்த ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சிவாலயம் இச்செங்கணானாற் கட்டப்பட்ட தென்பர் சேக்கிழார்.[2] இங்ஙனம் சிவ தொண்டினைச் சிறப்பப்புரிந்த இச்சோழன் முடிவில் திருநறையூர்த் திருமாலுக் கடியனாய்ச் சிறப்புற்றான் என்று திருமங்கைமன்னன் பாசுரப்போக்குக் கேற்பக் கருத்து உரைப்பர் முன்னோர்.[3] இவற்றால் இச்செங்கணான் வரலாறுகள் ஆழ்வார்கள் காலத்தே பிரசித்தமாக வழங்கிவந்த தென்பது தெரியலாகும்.

இனி, திருமங்கைமன்னன் பாடியருளிய தொடர்கள் சில அவர்காலத்தனவாகிய சாஸனவாக்கியங்களோடு பெரிதும் ஒற்றுமைப்பட்டிருத்தற்குச் சில உதாரணங்கள் காட்டுவேன். அவை வருமாறு:—

---

1. "அம்பர்மாநகர்க், குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே" (தேவா. அம்பர். சம். 1), "கோச் செங்கணான் செய் கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் (ஷை. நன்னில. சுந். 11), "வைகன் மேற்றிசைச் செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலே" (ஷை, வைகன்மாட. சம். 4)—எனக் காண்க.

2. "செங்கணான், அந்தமில்சீர்ச் சோணாட்டி லகனாடு தோறு மணியார், சந்திரசேகர னமரும் தானங்கள் பலசமைத்தான்" (பெரியபு. கோச்செங்கட். 14).

3. ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை முதலியோர் வியாக்கியானங் காண்க.

பல்லவமல்லன் "சமுத்திரகோஷம்" என்னும் பெயருடைய கடுமுகவாத்யத்தைத் தனக்குச் சிறப்பாகவுடையனாயிருந்தவன் என்றும், அதனைச் சளுக்கியனான இரண்டாம் விக்கிரமாதித்தன் (733—746) அப்பல்லவனுடன் நடத்திய போரிற் கைப்பற்றினான் என்றும் கேந்தூர்ச் சாஸனங் கூறுகின்றது.[1] இவ்வாத்தியத்தைக் குறிக்கும் அச்சாஸனவாக்கியமாவது—

"கடுமுகவாதித்ர ஸமுத்திரகோஷாபிதான"

என்பது. இது, திருமங்கை மன்னன் அப்பல்லவனை விசேடிக்குமிடத்து—

"கடல்போன் முழங்குங் குரற்கடுவாய்ப் பறையுடைப்
பல்லவர்கோன்" (பெ. தி. 2, 10, 9)

என்று பாடுதலுடன் ஒப்பிடற்குரியது. கடுமுகவாதித்ரம்—கடுவாய்ப்பறை. கடுவாய்ப்பறை பிறர்க்கும்[2] பொதுவாகக் கூடுமேனும், கடல் முழக்கம்போன்ற ஒலியுடைமையால் 'ஸமுத்திரகோஷம்' எனப் பெயர்பெற்ற முரசம் பல்லவமல்லனுக்கே உரியதென்பார், 'கடல்போன் முழங்குங் குரற் கடுவாய்ப்பறையுடைப் பல்லவர்கோன்' என அதன் பெயர்ப் பொருள்விளங்கக் கூறலாயினர் நம்பெரியார் எனவுணர்க. இனி, பல்லவமல்லனை அவன் சாஸனம்—

"ப்ரணதாவநீபதிம் மகுடமாலிகாலீட சரணாரவிந்த :"

என்று விசேடிக்கின்றது. "வணங்கும் மன்னரது முடிமாலைகளால் தழுவப்பெற்ற பாததாமரைகளை உடையவன்" என்பது இதன் பொருளாம். இச்சாஸன வாக்கியத்துடன்-

"மன்னன் தொண்டையர்கோன் வணங்குநீண்முடிமாலை
வயிரமேகன்" (பெ. தி. 2, 8, 13)

---

1. Ep. Ind. Vol. IX, No. 29, P. C. 205 ; S. I. I. III, 146.

2. கடுவாய்ப்பறை, பல்லவமல்லன் பேரன் மூன்றாம் நந்திக்கும் உரியதாக நந்திக்கலம்பகம் கூறும் (5, 6.).

என்ற திருமங்கைமன்னன் வாக்கு ஒப்பிடத்தக்கது. வயிர மேகன் தந்திதுர்க்கனுயினும் அவன் பேரன் தந்திவர்மனு யினும், அக்காலத்து வழங்கிய சாஸனவாக்கியப் பொருளை உட்கொண்டே, சொற்சுருங்கப் பாடி அப்பொருள் பெற வைத்தனர் இவ்வாழ்வார் என்பது பெறப்படத்தடையில்லை.

இனி, 'இருக்கெசுச் சாம வேத நாண்மலர்'[1] என்ற பெரியாழ்வார் அருளிச்செயலின்படி அப்பெயர்களுடன் விளங்கிய வேதம் மூன்றனுள் முதலிரண்டும் முறையே பவுழியம், தைத்திரியம் எனவும் ஆழ்வார்கள் காலத்து வழக்குப் பெற்றிருந்தன என்பது—

" சந்தோகன் பவுழியனைந் தழலோம்பு தைத்திரியன்
சாமவேதி " (பெ.தி. 5, 5, 9)

" சந்தோகா பௌழியா தைத்திரியா சாமவேதியனே "
(ஷை, 7, 7 ,2)

என்ற திருமங்கைமன்னன் திருவாக்குக்களால் அறியப்படு கின்றது. இவை பண்டைவழக்கே என்பது, திவாகர நிகண்டுடையார்—

" இருக்கு முதல்வேதம் பௌடிக மெனப்படும்."
" இரண்டாம் வேதந் தைத்திரிய மென்ப"
(ஒலிபற்றிய. தொ. 75,6)

என்று கூறுதலால் அறியலாகும். பிங்கலநிகண்டினும் இவ்வாறே அவற்றின் பெயர் கூறப்பட்டுள்ளன. 8, 9-ஆம் நூற்றுண்டுச் சாஸனங்களும் பவிழிய சூத்திரம்,[2] பவிழிய சரணம், தைத்ரிய சரணம்[3] என அவ்வேதங்களை வழங்கு தல் அறியத்தக்கது. திருமங்கை மன்னன் கூறியவற்றுள் சந் தோகன் என்பது சாந்தோக்கிய சாமமறிந்தவன் என்னும் பொருளது; சாந்தோக்கிய சாமம்[4] தலவகார சாமம்[5] என்ப,

---

1. திவ். பெரியாழ். திருமொழி, 5, 1, 6.
2. S. I. I. vol. ii, p. 328; vol. iii, p. 370.
3. T. A. S. vol. i. p. 9.
4. Ep. Rep. No. ii, 1906.
5. Ibid. 76. of 1914.

பவுழியம் என்பது இருக்குவேதத்தினை; பல இருக்குக்களை யுடைமையின் பஹ்வ்ருச்யம் என்று அவ்வேதம் பெயர் பெறும் என்பர். அதுவே தமிழில் பஹ்ழியம், பௌழியம், பௌடியம், பௌடிகம் எனவும் திரிந்து வழங்கலாயிற்று. தைத்திரியம் என்பது கிருஷ்ணயசுர்வேத சாகைகளுள் ஒன்றும். இப்பகுதி தென்னாட்டிற் பயிற்சி மிகுதியுடைமையின், இதுவே எசுர்வேதமாக அக்காலத்துக் கருதப் பட்டதாகவேண்டும். இவ்வாறு இருக்கு எசுக்களுக்கு ஆழ்வார் கூறும் பெயர்கள் பண்டை நூல்வழக்கோடும் சாஸனவழக்கோடும் பெரிதும் ஏற்புடையவாமாறு கண்டு கொள்க.[1]

பல்லவமல்லனது சிறப்புப்பெயர்களுள்ளே "கலிடமர்த்தந:" என்பதும் ஒன்றாக உதயேந்திர சாஸனங் கூறுகின்றது.[2] அப்பல்லவன் காலமுழுதினும் விளங்கியவர் திருமங்கைமன்னன் என்பதை மேலே விளக்கியுளேன். தங்காலத்தே அரசாட்சியில் நிலைபெற்றிருந்தவன் அவ் வேந்தனே என்பதைப் 'பார்மன்னு பல்லவர்கோன்' என்று பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் இவர் குறிப்பிடுதலுங் காண்க. இங்ஙனம் தங்காலத்து விளங்கிய பேரரசன்

1. தொல்காப்பியப் பாயிரவுரையுள் நச்சினார்க்கினியர் (நான் மறையாவன) "தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாம வேதமுமாம்; இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாருமுளர் ; அது பொருந்தாது ; இவர் (தொல்காப்பியர்) நூல்செய்தபின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்குகூறாக இவற்றைச் செய்தாராதலின்" என்றெழுதினர். கலித்தொகைக் கடவுள்வாழ்த்துப் பாட்டுரையினும் இவ்வாறே இவர் கூறுதல் காண்க. இங்ஙனம் இவர் எழுதிச் செல்லுதற்கு யாதொரு பிரமாணமும் கிடைத்திலது என்பர் வடநூலார். தலவகாரம் என்று இவர் கூறியது, சாமவேதசாகைகளுள் ஒன்றும்; தலவகார சாமம், (Ep. Rep. No. ii, 1097) தலவகாரசரணம் (T. A. S. vol. i, p. 9) என்ற சாஸன வழக்கும் காண்க.

2. S. I. I. vol. ii, p. 367, line, 29.

பெற்றிருந்த பெயரினையே சிற்றரசரான இவ்வாழ்வார் "கலிகன்றி" எனத் தம் கௌரவநாமமாகத் தரித்தனரோ என்று கருதவும் இடமுண்டு. கலிகன்றி என்பது கலியின் வலிமையை ஒடுக்குபவர் என்ற பொருளுடையதாய்க் 'கலி பல மர்த்தந:' என்ற பெயருடன் ஒத்ததாதல் காண்க. இவ்வாறே வழுதிவளநாடரான சடகோபர்க்கு வழங்கிய மாறன் பராங்குசன் என்ற நாமங்கள், அக்காலத்தரசன் பெயர்களே என்பதை அவ்வாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்து விளக்குவேன்.

திவ்யசூரிசரிதத்தில் திருமாலடியவளான குமுதவல்லி என்ற கன்னியை அடையும்பொருட்டுப் "பரகாலர் தாம் கொண்டிருந்த சைவத்தன்மையை நீக்கி ஒப்பற்ற வைஷ்ணவத்தன்மையை அடைந்து" பின் அக்கன்னியை மணம் புரிந்து கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது.[1] இஃது ஏனைய நூல்களிற் காணப்படாத புதுச்செய்தியேயாம். ஆயின், இதற்கு ஒருகுறிப்பும் அவர்திருவாக்கிற் காணப் படவில்லை.

'எந்தைதந்தை தம்மா னென்றென் றெமரேழ் எழளவும்,
வந்துநின்ற தொண்டர்" (பெ. தி. 4, 9, 9)
"எந்தாதை தாதை யப்பா லெழுவர்
பழவடிமை வந்தார்" (ஷை, 7, 2, 6)
"எம்மானு மெம்மனையு மென்னைப்பெற் றொழிந்ததற்பின்
அம்மானு மம்மனையு மடியேனுக் காகிநின்ற...சுடரே"
(ஷை, 7, 2, 3)

என்று பரம்பரையாகத் திருமாலுக்கடிமையுற்ற தம் குலச் சிறப்பையும், தம் பிறவி வைஷ்ணவத் தன்மையையும் ஆழ்வார் தெளிவாகக் கூறுதலால், திவ்யசூரிசரிதக்கூற்றின் உண்மை நம்மனோரால் அறிதற்கரிதே என்க.

திருமங்கைமன்னன் புத்தரை வென்று தம் திருநகரிக்கு எழுந்தருளுவதைச் சிவனடியாரான ஞானசம்பந்த

1. திவ்யசூரிசரிதம்—தமிழ்மொழிபெயர்ப்பு, பக். 61 (ஹரி சமயதிவாகர பத்திரிகைப் பதிப்பு.)

மூர்த்திகள் அறிந்து தம்மூரான சீகாழியில் அவரை எதிர்கொள்ள, அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் மரியாதைகள் செய்துகொண்டனரென்றும், தம்மூர்க்குள் ஆழ்வாரை வருமாறு விரும்பிய சம்பந்தர்க்கு, 'திருமால் திருப்பதியல்லாதவிடத்துத் தாம் செல்வதில்லை' என்று ஆழ்வார் கூற, சீகாழியில் முன்பு இராமபிரான் சந்நிதியொன்றிருந்து அவைதிகர்களாற் பின்பு பாழாக்கப்பட்டதென்றும், அதனுட் கோயில்கொண்டிருந்த திருவுருவம் அடியாரொருவரால் தம் மாளிகையில் ஏகாந்தமாக ஆராதிக்கப்பெற்று வருகின்றது என்றும் சம்பந்தமூர்த்திகள் தெரிவிக்க, ஆழ்வார் அவருடன் அவ்வடியார்மாளிகை சென்று அப்பிரானைத் தரிசித்துப் பதிகமொன்று அருளிச்செய்தனரென்றும், அது கேட்ட சம்பந்தர் மகிழ்வுற்று, அத்திருமாலை முன்போலவே கோயிலிற் பிரதிஷ்டிக்கும்படி தம்மடியார்க்கு ஆணையிட அவ்வாறே காழிச் சீராமவிண்ணகரம் புதிய பிரதிஷ்டை பெற்றுச் சிறப்புற்றதென்றும் திவ்யசூரி சரிதம் கூறுகின்றது.[1] சம்பந்தர்க்கும் ஆழ்வார்க்கும் வாதம் நடந்ததாகப் பிற குருபரம்பரைகள் கூறும் செய்தியினும் இச்சரிதக்கூறு, மிக அடுத்த ஊர்களில் வாழ்ந்து விளங்கிய அவ்வடியார்கட்கு ஏற்புடையதென்றே சொல்லலாம். திருமங்கைமன்னன் 8-ம் நூற்றுண்டவரே யாதலின், சம்பந்த மூர்த்திகளும் அக்காலத்தவரே என்பதற்குத் தக்க சான்றுகள் உண்டாயின், திவ்யசூரிசரிதங் கூறும் இவ்வரலாறு பெரிதும் பொருந்தத் தடையில்லையாம். இனி, இவ்வாழ்வார் தம் சிறிய திருமடலில்—

“ வாரார் வனமுலை வாசவ தத்தையென்
றியாரானுஞ் சொல்லப் படுவா ளவளுந்தன்
பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோட் டளைக்காலன் பின்போனாள்”

என்ற கண்ணிகளால் வாசவதத்தையின் வரலாறு கூறுவர். இப்பெண்மணி வச்சநாட்டரசனை உதயனனைற் காதலிக்

1. திவ்ய சரிதம், பக். 140—41.

கப்பட்டு மணம்புரியப்பெற்ற பெருந்தேவியாவள், உதயனன் என்பான், அருச்சுனன் புதல்வனான அபிமன்னியு தொடங்கி இருபத்தைந்தாந் தலைமுறையிற்பிறந்த பெருந்தகையரசன். வாசவதத்தை, சிறைப்பட்டிருந்த அவ்வுதயனனைக் காதலித்து உபாயத்தால் அவனைச் சிறைவிடுத்து உடன்சென்று அவனைமணந்துவாழ்ந்த சரிதவிரிவை, குணாட்டியரது பிருகத்கதையின் வழிவந்த வடநூல்கள் பலவற்றாலும், பெருங்கதை முதலிய தமிழ் நூல்களாலும் நன்கறியலாகும்.

இனி, திருமங்கைமன்னனது திருமடல்களைப்பற்றி ஒன்று கூறுதற்குண்டு. ‘மடலூர்தல்’ என்பது, தான் காதலித்த பெண்ணை அடையப் பெறாதவிடத்து ஆடவர் நிகழ்த்தும் பிராயோபவேசம் அல்லது தற்கொலைமுறைகளுள் ஒன்றாம். இது, பழையதமிழ்மக்கள் கையாண்ட வழக்கு என்பதை யான் “தொல்காப்பியப் பொருளதிகாரவாராய்ச்சி” நூலுள் (பக். 31—33) நன்குவிளக்கியுள்ளேன். இங்ஙனம் மடலூர்தலென்பது, ஆடவர் மட்டுஞ் செய்தற்குரியதேயன்றிப் பெண்டிர் எந்நிலையிலுஞ் செய்யத்தக்கதன்று என்று தொல்காப்பியர் விதிப்பர். ஆயின், திருமங்கை மன்னன் தாமருளிய மடல்களிலே பெண்ணொருத்தி திருமாலைக் காமுற்று மடலூர்வதாகப் பாடினராதலால் அதற்குப் போக்கென்னையெனின்—அப்பெண் மடலேறியதாகக் கூறாது ‘ஏறுவேன்’ என்ற துணையேயாதலின் அமையும் என்பர் முன்னோர். பன்னிருபாட்டியலுடையார்—மகளிர் மடலேறார் என்றும், ஆனாற் கடவுளரைத் தலைவராகவைத்துப் பாடுமிடத்து அவர் மடலேறுவதாகக் கூறப்படும் என்றும் மடற்கிலக்கணம் வகுப்பர் (241—46 சூத்திரங்கள்). இதனாற் பெண்ணொருத்தி மடலேறுவதாக ஆழ்வார் பாடியது, அப்பாட்டியல் முறைக்குப் பெரிதும் பொருந்துவதென்னலாம். மகளிர்க்கு மடலேறும் வழக்கில்லை என்பதைத் திருமங்கைமன்னனே பெரிய திருமடலில்—

......................காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றுநாம் மானோக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்''

எனப் பெண்ணின் கூற்றில் வைத்துப் பாடுதலும் ஈண்டு நோக்கத்தக்கது. இனித் திருமங்கை மன்னன் தம் திருப்பதிகங்களின் முடிவுகளிலே—

'இருங்கட லுலக மாண்டுவெண் குடைக்கீழ்
இமையவ ராகுவர் தாமே'
'வங்க மாகடல் வையங்கா வலராகி
வானுல காள்வாரே'
'முடிகொண்டு முடிமனர்தம்
முதல்வர்முத லாவாரே'
'தேர்மன்னரா யொலிமா கடல்சூழ்
செழுநீருல காண்டு திகழ்வர்களே.'

என்று இவ்வாறே 26-இடங்கட்குமேல் பதிகங்கற்பார் பெறும் பயன்கூறிச் செல்வர். இங்ஙனம் பலசுருதி கூறு முறை பிற ஆழ்வார்களிடம் அருகியே காணப்படும். திருமங்கையார்மட்டும் அரசர்கள்செல்வத்தை அடுத்தடுத்து இவ்வகை எடுத்துமொழிவது—தங்காலத்துப் பேரரசரான பல்லவர் அடைந்திருந்த பெருநிலை, அன்னோர் திருமாலைப் பூசித்துப்பெற்ற பேறே என்பதைப் பிறர்க்கு அறிவுறுத்தி, 'அத்தகைய பெரும்பதவி தம்பதிகம் பாடுவாரும் அடைக' என்று திருவுள்ளங் கொண்டென்றே சொல்லலாம். திருமாற் கடிமைசெய்வார் அவனமிசமான திருவுடை மன்னராகத் தடையில்லை என்பது இவர் உள்ளக் கருத்தென்க.[1] முன்பு யான் குறித்துப் போந்தபடி, 'பப்ப பட்டாரகர்' என்று இவ்வாழ்வாரைத் தங்காலத்து வேந்தரும், அவ்

1. 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' என்பது திருவாய்மொழி.

வேந்தராது ஸ்ரீ வைஷ்ணவத்திருவை இவ்வாழ்வாரும் பாராட்டிச் சிறப்பிப்பது அவர்கள் காலநிலைமைக்குப் பெரிதும் ஏற்புடைத்தாதல் அறியத்தக்கது.

இனித் திருமங்கைமன்னனுக்குப் பரகாலன், கலியன், கலிகன்றி, அரட்டமுக்கி என்பன திருநாமங்கள் என்பது அவர் பாசுரங்களினின்று தெரியலாகும். பரகாலன் என்பதற்குப் பகையரசர்க்கு யமன் போன்றவன் என்பது பொருள். கலியன் என்பது தானைத்தலைவன், படைவீரன் என்ற பொருளுடைத்து.

"மானவர் வீரர்... ஆன கலியர், தானைத் தறுகணாளர் பெயரே" என்பது திவாகரம்.[1] அருண்மாரியாகிய நம் கலியனைப் போலவே, முதற்பராந்தக சோழனது சேனைபதியொருவன் அருணீதி கலியன்[2] என்ற பெயர் பெற்றிருத்தல் இங்கு ஒப்பிடத்தக்கது. இதனாலும் திருமங்கை மன்னன் பேரரசற்கு மகாசாமந்தராக இருந்தவரென்பது தெள்ளிதாம். இனிக் கலிகன்றி என்பதன் பொருள் மேலே விளக்கப்பட்டது. 'கலித்வம்ஸ:' 'கலிவைரி' என்பன இதன் வடமொழிப் பெயர்ப்பாக நூல்கள் கூறும். அரட்டமுக்கி என்பதற்குக் குறும்பரசர்களை ஒடுக்குபவன் என்பது பொருளாம். [அரட்டு—குறும்பு.]

'அரட்டடக்கிதன் ஞருரடைமினே.'[3]

என திருநாவுக்கரசரும் இதனையொத்த தொடரை வழங்குதல் காண்க. 'அரட்டமுக்கிதாசன்'[4] எனப் பின்னோர் பெயர் பூண்டிருத்தல், அக்காலத்திருந்த ஆழ்வார் பெயர்வழக்கின் மிகுதியைக் குறிப்பிக்கின்றது.

பெரியாழ்வார் திருமகளாரான ஸ்ரீ கோதைப் பிராட்டியை அழகிய மணவாளன் திருமணம்புரிந்து தம் பெரும்

1. மக்கட் பெயர்த்தொகுதி—சூத். 108.

2. Inscriptions of the Madras Presidency, Tj. No. 1580.

3. தேவாரம், திருவாரூர்த் திருக்குறுந்தொகை, அப். 5.

4. S.I.I. Vol. iii, pp. 80, 84.

பரிவாரங்களுடன் திருவரங்கம் நோக்கிச்செல்லும் இடை வழியில், மங்கைகாவலர் அவர்களை வழிமறித்து வாள்வலி யால் அப்பெருமானிடமிருந்து திருமந்திரோபதேசம் பெற் றனர் என்ற வரலாறு திவ்யசூரிசரிதத்துக் கூறப்படுகின் றது.[1] இதனால், பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும் விளங்கிய காலமே இவ்வாழ்வார்க்கும் உரியதாமென முன் னோர் கருதிவந்தமை தெளிவாம். பின்பெழுந்த சரித்திர நூல்கள், இப்பெரியார் எல்லா ஆழ்வார்கட்கும் பிற்பட்ட வர் என்று கூறுகின்றன. ஏனையடியார்களாற் பாடப்பெறாத திவ்யதேசங்கள் பல இவரால் மங்களாசாஸனஞ் செய்யப் பெற்றிருத்தலே இவர் பிற்பட்டிருந்தவர் என்பதற்குச் சான்றென்று கூறுவாருமுண்டு. ஆழ்வார்களிற் பலரை ஒரு காலத்தவராகவே திவ்யசூரிசரிதம் தெளிவாக்கூறுதலின் அவர்கள் பரமபதம்பெற்ற பின்பும் வாழ்ந்தருளியவர் திரு மங்கைமன்னன் என்றே, மேற்குறித்த சரித்திரவேறுபாடு களை நாம் இணைத்துக்கொள்ளத் தகும். அஃதாவது— முன்னர்க் கூறிப்போந்தவாறு, 8-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அவதரித்து, அந்நூற்றாண்டிறுதியில் திரு நாடலங்கரித்தவர் இவ்வாழ்வார் என்பதாம்.

திருமங்கையாரது திருவாக்கு முழுதும், 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ் விய' அமுத கவிகளாகவே திகழ்தல் காணலாம். "செந் திறத்த தமிழோசை" யின்பமும் ஆற்றொழுக்கான போக்கு முடையவாய் மிளிர்வன, இவர் பாசுரங்கள். 'இருந்தமிழ் நூற்புலவன்'[2] என்று தம்மைக் கூறிக்கொண்டவாறே, கல் விக்கடலனையவர் இப்பெரியார் என்னத் தடையில்லை. இச் சிறப்புப்பற்றியே—'கலைப்பெருமாள்' 'நாவீறன்' என்ற திரு நாமங்களால் இவ்வாழ்வாரைச் சிறப்பிக்கலாயினர் முன் னோர் என்க. ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியரான இராமாநுஜ முனிவரரை —'குறையற் கலைப்பெருமான், ஒலிமிக்க

---

1. திவ்யசூரி சரிதம், பக். 121—124
2. பெரிய திருமொழி, 1, 7, 10.

பாடலை யுண்டு தன்னுள்ளந் தடித்ததனால், வலிமிக்க சீயம்' [1] என்று அவர்காலத்தான்றோர் புகழ்வரெனின், இப்பெரியாரது வாக்கின்பெருமை நம்மனோரால் மதிப்பிடவல்லதோ? அம்முனிவர்க்குப் பின் பரமாசாரியபதம் வகித்தவரும், ஆழ்வார் திருவாக்குக்களின் அருமை பெருமைகளையெல்லாம் உலகிற்கு வியாக்கியான ரூபமாக வெளியிட்டருளியவருமான ஸ்ரீ பராசரபட்டர் ஏனையாழ்வாரினும் இப்பெரியாரிடமே பெரிதும் ஈடுபாடுடையரெனின்,[2] வேறு யாம் கூறற்குரியது யாது? பட்டரின் திருத்தந்தையாரும் ஸ்ரீராமாநுஜரது பிரதமசிஷ்யருமான கூரத்தாழ்வான் இவ்வாழ்வாரைப்பற்றி அருளிய அழகிய தனியனைக் கூறி இப்பெரியார்வரலாற்றை இவ்வளவில் நிறுத்துகின்றேன்:—

"நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதந் தமிழநன் னூற்றுறைகள்
அஞ்சுக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே"

1. இராமாநுச நூற்றந்தாதி, 88.

2. பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம் (பெ. தி. 6,3,4.)

ஸ்ரீ:

# தொண்டரடிப்பொடியாழ்வார்.

சோணாட்டில் காவிரிக்கரையிலுள்ள மண்டங்குடி[1] என்ற ஊரிலே புரச்சூடரான பிராமணோத்தமர் குலத்தில் அவதரித்து ஸ்ரீ விப்பிர நாராயணர் என்ற திருநாமமுடையராய் வாழ்ந்த இப்பெரியார் திருவரங்கத்தில் துளசித்திரு நந்தவனம் வைத்துவளர்த்து அந்நகரத் தெய்ப்பெருமானுக்குத் திருமாலைத்தொண்டு புரிந்துவந்தவர் என்றும், அக்காலத்தே தேவதாசியொருத்தியின் மோகத்தில் இவர் மூழ்கும்படி நேரத் திருவரங்கமுடையான் இவரை அந்நாதலினின்று நீக்கி உய்யக்கொண்டருளினர் என்றும் வழங்கும் சரித்திரம் மிகப்பிரபலமானதாகும். இவர் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்கள் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்பன.

இப்பெரியார்வரலாறு, இவர் அருளிச்செயல்களினும் குறிப்பிடப்படுகின்றது. சிற்றின்பத்தே மூழ்கிக்கிடந்த தம்மைத் திருவரங்கப்பெருமான் தம் நிர்ஹேதுக பரமகிருபையால் உய்யக்கொண்டருளிய செய்தியை—

"சூதனாய்க் கள்வ னாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்க ணென்னும் வலையிற்பட் டழுந்து வேனைப்
போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்க மன்றே"

(திருமாலை, 16)

"மெய்யெலாம் போக விட்டு விரிகுழ லாரிற் பட்டுப்
பொய்யெலாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன்" (ஷை 33)

---

1. தஞ்சாவூர்ஜில்லாவில் உள்ளது. (I. M. P. Tj. 1405.) இந்தக் கிராமம் எழுநூறு பிராமணர்களை உடையதாயிருந்ததென்று திவ்யசூரிசரிதம் கூறும். (பக். 42).

என்பவற்றாலும், தாம் துளவுத்தொண்டு புரிந்துவந்தவர் என்பதனை—

"துளவத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி" (டை.45)

"தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடி" (திருப்பள்ளி. 10).

என்பவற்றாலும் இப்பெரியாரே கூறிக்கொள்ளுதல் காண்க. இவர்காலத்தே அணியரங்கன் திருமுற்றத்தை யோகிகளான பரமபாகவதர்கள் பலர் அலங்கரித்து வந்தனர் என்பது—

"மேம்பொருள் போக விட்டு மெய்ம்மையை மிகவு ணர்ந்து
ஆம்பரி சறிந்து கொண்டே யைம்புல னகத்த டக்கிக்
காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்து வாழும்
சோம்பரை யுகத்தி போலுஞ் சூழ்புன லரங்கத் தானே"

என நிந்தாஸ்துதியாக இவர் பாடுதலால் அறியலாம். இவர் காலத்தே சமணரும் சாக்கியரும், வைதிகரையும் அவர் வழிபடும் கடவுளரையும் தாங்கமுடியாவண்ணம் இகழ்ந்து தம் மதப்பிரசாரஞ் செய்து வரலாயினர் என்பது—

"புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாங்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்ப ரோதான்
தலையறுப் புண்டுஞ் சாவேன் சத்தியங் காண்மி னையா
சிலையினு லிலங்கை செற்ற தேவனே தேவ னவான்"

"வெறுப்பொடு சமண முண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள் பேசிப் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகிற் கூடுமேற் றலையை யாங்கே
அறுப்பதே கருமங் கண்டா யரங்கமா நகரு ளானே"

என்ற பாசுரங்களினின்று தெரியவருகின்றது. இவற்றால் திருமால்பால் இப்பெரியார்க்கிருந்த பத்தித்திறம் இத்தகையதென்பது விளங்கும். மிக உயர்குலத்தோரும் மிகத் தாழ்குலத்தோருமான திருமாலடியார்பலர் திருவரங்கப் பெருமான் திருமுன்றிலில் சாதி வேற்றுமையற ஒருங்கு குழுமி, ஒருவரையொருவர் தெய்வசமானராகக் கருதி வழிபட்டுவந்தனர் என்பதும், அக்குழுவினருள் அத்தகைய வேற்றுமை பாராட்டுதல் பெரியதோர் அபசாரமும் இழுக்குமாகக் கருதப்பட்டுவந்த தென்பதும்—

"பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப் பேதிமார்கள்!
இழிகுலத் தவர்க ளேனு மெம்மடி யார்க ளாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மி னென்றுநின் னோடு மொக்க
வழிபட வருளி னய்போன்ம் மதிட்டிரு வரங்கத் தானே"
(திருமாலை. 42)

"அமரவோ ரங்க மாறும் வேதமோர் நான்கு மோதித்
தமர்களிற் றலைவ ராய சாதியந் தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்ப ராகி னொடிப்பதோ ரளவி னங்கே
அவர்கடாம் புலையர் போலு மரங்கமா நகரு ளானே" (ஷை 43.)

என்ற இவர் அருளிச்செயல்களால் நன்கறியப்படும். சாதிச் சிறப்பினும் ஞானச்சிறப்பை இத்துணையாக மதித்த உயர் குலத்துத் திருமாலடியாருள் இப்பெரியாரினும் சிறந்தார் வேறிலர் என்னலாம்.

இனி, திருமங்கைமன்னன் திருவரங்கப் பெருநகரின் சுற்றுத்திருமதிலையும் சிகரங்களையும் பெருஞ்செலவிட்டுக் கட்டுவித்துவந்த காலத்தே—" ஸ்ரீ தொண்டரடிப்பொடி யாழ்வார் பெரிய பெருமாளுக்குத் திருமாலை சேர்க்கிற இடம் நேர்பட அவ்விடத்தைத் தப்பியொதுங்கத் திருமதில் கட்டுவித்தருளத் தொண்டரடிப்பொடிகள் பார்த்தருளித் திருவுள்ள முகந்து, தாம் திருமாலை தொய்கிற ஆயுதத்துக்கு **அருள்மாரி** என்ற இவருடைய திருநாமஞ் சாத்திப் பிரீத ராயருளினார்"[1] என்ற வரலாறு குருபரம்பரைகளிற் கூறப் படுகின்றது. இச்செய்தியால் திருமங்கையாரும், தொண் டரடிப்பொடிகளும் ஒருகாலத்தவர் என்பது பெறப்படும். ஆழ்வார்களெல்லாம் ஒருகாலத்தவராகத் திவ்ய சூரிசரிதம் குறிப்பிடும் செய்தியோடு, இஃது ஒருபுடை ஒத்திருத்தல் அறியத்தக்கது. அன்றியும், மேலே கூறிய வாறு, 8-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தே திருமங்கை யார் சுந்தரமூர்த்திகள் நாட்களில் சமணர்முதலிய புறச்சம யிகள் வைதிகசமயக் கடவுளரை இகழ்ந்துவந்த செய்தியைத் தொண்டரடிப்பொடிகளும் கூறுவது, அன்னோரெல்லாம்

1. ஸ்ரீ பின்பழகியசீயர் ஆறுயிரப்படி குருபரம்பரை, பக். 55.

ஒத்தகாலத்தவரே என்பதை உணர்த்துவதெனலாம். தொண்டரடிப்பொடிகள் அருளிய திருமாலையின் 17-ஆம் பாசுரத்தே—

"சுரும்பமர் சோலை சூழ்ந்த வரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டென் கண்ணிணை களிக்கு மாறே"

எனவரும் பின்னிரண்டடிகள், திருமங்கைமன்னன் அருளிய திருக்குறுந்தாண்டகத்து 12-ஆம் பாசுரத்தின் பின்னடிகளாகச் சிறிதும் வேறுபாடின்றியிருத்தல் கண்டு ஒப்பிடத்தக்கது. இது முன்னோர் மொழியையும் பொருளையும் பொன்னேபோற் போற்றிக்கொண்டதாகும்.

ஸ்ரீ:

# திருப்பாணாழ்வார்.

இவ்வாழ்வார் சோழராசதானியாகிய உறையூரிலே அந்திம குலமான பாணவமிசத்தில் அவதரித் தருளியவர். இப்பெரியார் காவிரியின் தென்கரையோரத்தே திருவரங்க முடையரான பெரியபெருமாளிடத்தே பரமபக்தியுடைய ராய் அப்பிரானையே தியானித்து நின்றுகொண்டு, அப்பெரு மான்மேல் செவிக்கினிய பாடல்களை நாளும் யாழிலமைத் துப்பாடி உருகிவந்தனரென்றும், கருணாமிருதமான இவரது கானங்களைச் செவிமடுத்துவந்த சேஷசாயியான அவ்வெம் பெருமான் அப்பெரியாரைத் தமக்கு அந்தரங்கராகச் செய்துகொள்ள விரும்பித் தம் திருமுற்றத்தடியார்குழுவில் ஒருவரான லோகசாரங்கமுனிவர்க்கு 'நம் பேரடியானை பாணனை நெகிழ நினையாதே நம்பக்கல் அழைத்துவருக' என்று கனவில் ஆணையிட்டருள, அவ்வாறே அம்முனிவர் சென்று நதிக்கரையில் வழக்கம்போல் நின்றுருகும் பாண ரை வலிந்தெடுத்துத் தம் தோளிற் கொண்டுவந்து அரங்க முடையான் திருமுன்பு நிறுத்தினர் என்றும், அப்போது அழகிய மணவாளனான அப்பெருமானைத் திருவடிமுதல் திரு முடிகாறும் அனுபவித்த பாண்பெருமாள், அவ்வனுபவமிகு தியால் தமக்குண்டான பரவசநிலையை "அமலனாதி பிரான்" என்று தொடங்கும் பத்துப்பாசுரங்களால் உலகத்தார்க்கு வெளியிட்டருளி, முடிவில் அத்திருமால் திருவடிகளில் ஐக் கியமாயினர் என்றும் குருபரம்பரைகளில் வைபவங் கூறப் பட்டுளது.

இவ்வரலாறு தவிர இவ்வாழ்வார் காலநிலையாகத் தெரி யக்கூடிய செய்தி வேறில்லை. இவர் திருவரங்கச் செல்வரை நேரில் அனுபவிக்க நேர்ந்தபோது—

" அமல னாதிபிரா னடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்
* * * *
கமலபாதம்வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே"
" அணியரங்கன் என்னமுதினைக் கண்டகண்கள்
மற்றொன்றினைக் காணாவே"

என்று பாடிய பாசுரங்கள் பத்தும், இவரது உருக்கமும் உண்மையுமான அடிமைத்திறத்தை விளக்கவல்லன. 'குளித்து மூன்றனலையோம்புங் குறிக்கொளந்தணமை'க்குரிய தொண்டரடிப்பொடிகள், மேலே காட்டியவாறு—

" இழிகுலத் தவர்களேனு மெம்மடி யார்களாகில்......
நின்னோடு மொக்க வழிபட வருளினாய்போன்ம்"
" தமர்களைப் பழிப்பராகி, லவர்கடாம் புலையர்போலும்"

என்று பாடுதல், முனிவாகனராய்ச் சென்று அணியரங்க முடையானை அனுபவித்த இப்பாண்பெருமாள்[1] போன்ற பேரடியாரைத் திருவுளத்துக்கொண்டு போலும் என்று கருதக்கூடியதாம். திவ்யசூரிசரிதமும் இவ்வடியாரை ஏனையாழ்வார் காலத்தவராகவே கூறுதல் இங்கு அறியத்தகும்.

---

1. திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற சிவனடியார், திருவாலவாய் திருவாரூர்க் கோயில்களின் வாயில்களில் நின்றுபாட, அவரைச் சிவபிரான் தம் திருமுன்பு அழைத்துக் கொண்ட செய்தி பெரியபுராணத்துக் கூறப்படுதல், இப்பாண்பெருமாள் வரலாற்றுடன் ஒப்பிடற்பாலது.

ஸ்ரீ:

# குலசேகரப்பெருமாள்.

---

இவ்வாழ்வார் சேரநாட்டை ஆட்சிபுரிந்துவந்த வேந்தர் பெருந்தகை என்றும், திருமால்பத்தி தலைசிறக்கப்பெற்று அதனால் அப்பெருமானையும் அவனடியார்களையும் பெரிதும் ஆராதித்துப் போந்தவரென்றும், திருவரங்கத்துத் திருமால்பாற் பெருகிய காதலுடையராய் அப்பிரானைத் தரிசித்து அவன் திருமுற்றத்தடியார்குழாத்து வாழ்தலையே விரும்பி உலகவாழ்வில் நசையற்றிருந்தவ ரென்றும், இவரது உலகப் பற்றின்மைக்குக் காரணமானவர் திருமாலடியார்களே என்று அவர்கள்பால் அரசர்க்கு வெறுப்புண்டாக்க கருதி, அரண்மனையிற் களவுபோன அரதனமாலை யொன்றைக் கவர்ந்தவர் அவ்வடியாரே என்று அமைச்சர்கள் சார்த்திய பழியை இவ்வாழ்வார் 'பரமனடியார் ஒருபோதும் அது செய்யார்' என்று பாம்புக்குடத்திற் கையிட்டுச் சூளுறவு செய்து அவ்வடியார பெருமையை நிலைநாட்டினர் என்றும், இராமபிரானது திவ்வியசரிதமே செவிக்கினிய செஞ்சொல்லாய் மடுத்தனுபவித்துக்கொண்டு அப்பிரானிடம் விசேடப் பிரதிபத்தி புரிந்துவந்தவர் இவர் என்றும், பின் தம்பெரு வாழ்வில் வெறுப்புமிகுதியுடையராய் அரசுதுறந்து அணியரங்கன் திருமுற்றத்தை அடைந்து, அந்நகர்ப் பெருமானையும் ஆங்குள்ள அவனது தொண்டர்குழாத்தையும் கண்டு களித்து அவ்வடியாருள் ஒருவராக விளங்கித் திருநாடலங்கரித்தவர் என்றும் இவரது வைபவம் கூறப்பட்டுள்ளது.

" ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே"

என்று, ஸ்ரீமந் நாதமுனிகளின் பிரசிஷ்யரான மணக்கால் நம்பிகள் திருவாக்கும் இவ்வாழ்வார் வரலாற்றைச் சுருங்கக் கூறுதல் காண்க.

இவ் வேந்தர்பெருந்தகை அருளிச்செய்த திவ்யப் பிரபந்தம் 105-பாசுரங்கள் கொண்ட **பெருமாள்திருமொழி** என்பது. இத்திருமொழியுள்—தாம் க்ஷத்திரியவருணத்தைச் சார்ந்தவர்[1] எனவும், கொங்குநாட்டின் வேந்தர்[2] எனவும், கொல்லி என்ற தலைநகரையுடையர்[3] எனவும்—தம் குலம் நாடு நகர்களை இப்பெரியார் கூறுவர். இவர் காலத்தே பரமபாகவதர்களான தொண்டர்பெருங்குழாம் அணியரங்கன் திருமுற்றத்தை அலங்கரித்து விளங்கியது[4] என்பதும், அக்குழுவினர் அரங்கநகரினின்று தமிழ்நாடெங்குஞ் சஞ்சரித்தவராய், உத்தமமான வைஷ்ணவதர்மங்களை உலகமறிய உபதேசித்து யாவரையும் அடியராக்கி வந்தனரென்பதும்—

“ ஆறு போல்வருங் கண்ண நீர்கொண்
டரங்கன் கோயிற் றிருமுற்றஞ்
சேறுசெய்யுந் தொண்டர்” (2, 3)

“ ஆதியந்த மனந்த மற்புத மான வானவர் தம்பிரான்
பாதமாமலர் சூடும் பத்தி யிலாத பாவிக ளுய்ந்திடத்
தீதில் நன்னெறி காட்டி யெங்குந் திரிந்த ரங்கனெம் மானுக்கே
காதல் செய்தொண்டர்க் கெப்பி றப்பினுங் காதல் செய்யுமென்
னெஞ்சமே” (2,6)

என்ற இவர் பாசுரங்களால் வெளியாகின்றன. வைஷ்ணவ தர்மமான பிரபத்திமார்க்கத்தைத் “தீதில் நன்னெறி” என

---

1. ‘எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே தாலேலோ’ (பெருமாள் திருமொழி, 8, 3)

9. ‘கொங்கர்கோன் குலசேகரன்’ (ஷை, 3, 9)

3. ‘கொல்லிநகர்க் கிறை’ (ஷை, 6, 10) ‘கொல்லிகாவலன்’ (ஷை, 2, 10)

4. “ அணியரங்கன் றிருமுற்றத் தடியார்தங்கள், இன்பமிகு பெருங்குழுவு கண்டியானு மிசைந்துடனே யென்றுகொலோ விருக்குநாளே “ (1, 10)

இப்பெரியார் இருமுறை வழங்குதல்[1] இங்கறியத்தக்கது. இத்தகைய உத்தமதர்மத்தை நாடெங்கும் பரப்பிவந்த அவ் வடியார் குழாத்துள் தாமுங்கூடி ஆடிப்பாடி அரங்களித்து நிற்கும் நிலையையன்றி அரசவின்பத்தே தமக்குச் சிறிதும் பற்றின்மையைப் பல பாடல்களாலும் வெளியிடுவர் இப் பெரியார். அப்பாசுரமொன்றனுள்—

" ஆடிப் பாடி யரங்க வோவென்
றழைக்குந் தொண்டரடிப் பொடி
ஆட நாம்பெறிற் கங்கை நீர்குடைந்
தாடும் வேட்கையென் னாவதே " (2, 2)

என்ற அடிகளிலே, தொண்டரடிப்பொடி என்ற தொடரை இவர் ஆளுதல் இங்குக் குறிப்பிடத்தகும். இதனினின்று தொண்டரடிப்பொடியாழ்வாரைத் தம் திருவுள்ளத்துக் கொண்டு இத்தொடரை வழங்கினரோ இப்பெரியார் என்ற சங்கை தோற்றுகின்றது. இஃதன்றேல், குலசேகரப் பெருமாள் வழங்கியதொடரை விப்பிர நாராயணரான அப் பெரியார் தம் தாஸ்யநாமமாகத் தரித்தனரெனல் வேண்டும். ஆனால், அணியரங்கன்திருமுற்றத் தடியார்குழுவில் தொண் டரடிப்பொடிகளும் ஒருவராயிருத்தலையும், அக் குழுவின் பெருமைகளையே தம் திருமொழி இரண்டாம்பதிகத் தினும் பிறவிடங்களினும் இவ்வாழ்வார் பலபடச் சிறப்பித் தலையும் நோக்குமிடத்து, முற்கூறிய கருத்தே ஏற்புடைய தாகின்றது. எங்ஙனமாயினும், திவ்யசூரிசரிதங் கூறுமாறு திருமங்கையார், தொண்டரடிப்பொடிகள், குலசேகரப் பெருமாள் என்ற மூன்று திருநாமங்களும் சமகாலத்தவர் களே என்று நாம் ஒருதலையாக கருதத் தடையில்லை. இனி, திருமங்கை மன்னன்—

" பரனே பஞ்சவன் பூழியன் சோழன்
பார்மன்னர் மன்னர் தாம்பணிந்தேத்தும், வரனே"

என்று, தங்காலத்திருந்த தமிழ்ப்பேரரசர்கள் திருமாலடிய ராகவிருந்த செய்தி குறித்தலை மேலே விளக்கியுள்ளேன்

1. 'நீதில்நன்னெறி நிற்கவல்லாது செய், நீதியார்' (3, 5)

(பக். 132-4). இவருள்ளே, பூழியன் என்பான் சேரனாவன். இங்ஙனம் பேரடியாராகத் திருமங்கையார்நாளில் விளங்கிய சேரர்பெருந்தகை, இக்குலசேகரப்பெருமாள் என்றே மேற்கூறியவற்றாற்கொள்ளக்கூடிய தன்றோ? எனவே, 8-ம் நூற்றாண்டே இவ்வாழ்வார்க்கும் ஏற்புடைய தென்னத் தடையில்லை என்க. இக்கொள்கையை வலியுறுத்த மற்றொரு சிறந்தசான்றும் உண்டு.

திருமங்கையாரும் சுந்தரமூர்த்திகளும் ஒருகாலத்தவராகவேண்டும் என்பதற்குரிய காரணங்கள் மேலே என்னாற் காட்டப்பட்டுள்ளன. அம்மூர்த்திகள் சிவனடிமைத்திறத்துச் சிறந்துநின்றகாலத்தே, கேரளவேந்தரான சேரமான் பெருமாணாயனார் விளங்கியவர் என்பது பெரியபுராண வரலாறாகும். சேரர்குடியில் உதித்துப் பெருமாக்கோதையார் என்ற பெயர்பெற்றிருந்த இவர், திருவஞ்சைக்களத்துச் சிவபிரான்பால் வைத்த பத்தி மிகுதியால் ஆங்குச் சிவதொண்டு புரிந்து வந்தனர் என்றும், அக்காலத்துச் சேரநாட்டை ஆட்சிபுரிந்துவந்த பொறையன் ஆகிய சேரன் உலகப்பற்றற்றுத் தன் அரசாட்சியைத் துறந்து தவம்பூண்டனன் என்றும், அதனால் ஆட்சி செய்தற்குரியாரை அமைச்சர் ஆராய்ந்து, முடிவில் அஞ்சைக்களத்து வாழ்ந்துவந்த பெருமாக் கோதையாரை அழைத்துவந்து முடிசூட்ட, அவர் நீதிவழுவாது அரசியலை நிகழ்த்திவந்தனர் என்றும்,[1] இச்சேரர் தம்மாட்சியிறுதியில் சுந்தரமூர்த்திகளுடன் அளவளாவி, அவருடன் சேர்ந்து கயிலைசென்றனர் என்றும் சேக்கிழார் தம் நூலுட்பாடுதல் பலரும் அறிந்தது. இவ்வரலாறுகளுள், சேரமான் பெருமாளுக்கு முன்பு ஆட்சி புரிந்த கேரளவேந்தன் தன்னரசு துறந்து தவசியாயினன் என்ற செய்தியே இங்குச் சிறப்பாகக் குறிக்கொண்டு நோக்கத்தக்கது. இது பற்றிய சேக்கிழார்பாடல் அடியில்வருமாறு:—

1. பெரிய புராணம்—சேரமான் பெருமாணாயனார் புராணம் 1-முதல் 16-வரையுள்ள செய்யுட்களை நோக்குக.

"நீரின் மலிந்த கடல்கழி நெடுமால் வரையின் கொடிமதில்சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற் பொறையனெனும்
காரின் மலிந்த கொடைநிழன்மேற் கவிக்குங் கொற்றக் குடை
தாரின் மலிந்த புயத்தரசன் றரணி நீத்துத் தவஞ் [நிழற்கீழ்த்
[சார்ந்தான்"

எனக் காண்க. சுந்தரமூர்த்திகளும் சேரமான் பெருமாளும் 8-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவர் என முன்னரே குறிப்பிட்டுள்ளேன் (பக். 135-7). எனவே, அச்சேரமானுக்குமுன் ஆட்சிபுரிந்து அரசு துறந்த பொறையனும் அக்காலத்தவனே என்பது சொல்லவேண்டுவதன்று. இங்ஙனம் 'தரணிநீத்துத் தவஞ்சார்ந்தவ' ராகக் கூறப்பட்ட சேரவேந்தர், மேற்குறித்தபடி, அதுவே காலத்தவராகவும் தம்மரசு துறந்தவராகவும் தெளியப்பட்ட இக் குலசேகரப் பெருமாள் என்றே நாம் கொள்ளத் தடையென்னை? இப்பெருமாள், தம் திருமொழியின் 2, 3-ஆம் திருப்பதிகங்களிலே—

"கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்தே
இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்"

"வானாளு மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தங்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்"

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந் தன்னொடுங் கூடுவ தில்லையான்"

என்று இவ்வாறே தம் துறவுநிலையைப் பலவிடங்களினும் பாடியருளுதல் அறியத்தக்கது. அரசுதுறந்த சேரவேந்தைச் சிவனடியாராகச் சிறப்பியாது 'அரசன் தரணிநீத்துத் தவஞ்சார்ந்தான்' என்று பொதுப்படவே சேக்கிழார் கூறிச் செல்லுதலும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. இவற்றால், சேரமான்பெருமாளுக்கு முன்பு ஆட்சிபுரிந்தவர் நம் குலசேகரப்பெருமாளே என்று கருதற்குப் பெரிதும் பொருத்தமுண்மை கண்டுகொள்க. இவ்வாழ்வார் தம் குமாரர்க்குப் பட்டங்கட்டிவிட்டுத் துறவு பூண்டனர் என்று திவ்ய சூரி சரிதமுதலியவை கூறும். பின் பட்டமெய்துதற்கு உரிமையுடைமையால் சேரமான்பெருமாளே புத்திரராக இவ்வாறு

உபூசரித்துக் கூறப்பட்டனர் என்று நாம் கொள்ளற்பாலது. இங்ஙனமன்றேல், திவ்யசூரிசரித வரலாற்றுக்கு இயையப் பெரியபுராணச்செய்தியை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். எங்ஙனமாயினும், தரணிநீத்துத் தவஞ் சார்ந்தவராகச் சேக்கிழார் கூறும் பொறையன் (=சேரன்) செய்தி, தம் அரச வின்பத்தை நீத்து அணியரங்கன் திருமுற்றத்தையடைந்து பிரபத்திநிஷ்டையிற்சிறந்த தபோதனராய் விளங்கிய இவ் வாழ்வார் வரலாற்றின் வேறன்று என்றே தோற்றுகின்றது.

குலசேகரப்பெருமாள் தம்மைக் 'கொங்கர்கோன்' என்றும் 'கொல்லிநகர்க் கிறை' என்றும் கூறிக்கொள்ளுதல் மேலே அறியப்பட்டது. இத்தொடர்களால் கொங்குநாடு இவரது ஆட்சிக்குள்ளடங்கிய தேச மென்பதும், கொல்லி நகரென்பது அந்நாட்டுள் விளங்கிய இவ்வரசரது தலைமை நகரம் என்பதும் நன்குபெறப்படும். சேரநாடு என்பது சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களும், குடகு மலையாள தேசங்களும் ஏறக்குறைய அடங்கியதாய்ச் சங்ககால முதலே சேரர்க்கு உரிமையாக நின்ற பிரதேசமாம். இக் காலமுழுதும் சேரரது இராசதானியாக விளங்கிய நகரம் கருவூரேயாம். கொல்லிமலைப்பக்கத்ததும் ஆன்பொருநை என்ற ஆம்பிராவதிநதியின் கரைக்கண்ணதுமாகிய இப்பேரூரையே பண்டைநூல்கள் யாவும் வஞ்சிமாநகர் என்று கூறுவன. சேரர் தலைநகர் இதுவே என்பது, யான் எழுதி வெளியிட்ட "சேரன்—செங்குட்டுவன்" சரித்திரத்தாலும், மகாவித்வான் ஸ்ரீ. உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமியால் போராராய்ச்சிகாட்டி எழுதப்பெற்ற "வஞ்சிமாநகர்" என்ற தனிநூலாலும் வெள்ளிடைமலைபோல் விளக்கமாம்[1].

1. இந்நூல் வெளிவந்தபின், கருவூரே பழையவஞ்சி என்ற கொள்கைபற்றி ஐயங்காரவர்கள் தம் நுணுகிய ஆராய்ச்சியிற் கண்டுள்ள பிரமாணங்கள் பலவாகும். அவற்றையெல்லாம் ஒருங்கு தொகுத்து வஞ்சிமாநகரின் இரண்டாந்தொகுதியாக எழுதி வெளியிட அவர்கள் கருதியுள்ளார்கள்,

இவற்றை நன்காராயாதே ஒருசிலர் மலையாளக்கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரையே பழையவஞ்சி என்று கருதி விடாப்பிடியாக எழுதிவருவன யாவும், முன்னூல்வழக்கோடும் ஆராய்ச்சிமுறையோடும் முற்றும் மாறுபட்டன என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இங்ஙனம் கருவூரைத் தலைநகராகக்கொண்ட சேரமண்டலத்துள், அவ்வூரைத் தன்னுட்பெற்றுள்ள கொங்குநாடு ஒரு சிறந்தபகுதி என்பது சொல்லாதே அமையும். இதுபற்றியே 'கொங்கர் கோமான்' என்பதைச் சேரன்பெயர்களுள் ஒன்றாக நிகண்டு முதலியவை வழங்கலாயின. 'கொங்கரை யட்ட களத்து' 'வஞ்சிக்கோவட்டகளத்து' எனக் கொங்குநாடும் வஞ்சிநகரும் சேரர்க்குச் சிறப்புடையனவாகப் பொய்கையார் கூறுதலும்[1] இக்கருத்துப்பற்றியே என்க. 'தென்னுடன் குடகொங்கன் சோழன்' என்றார், திருமங்கைமன்னனும். இங்ஙனம் தலைநகராக விளங்கிய கொங்குநாட்டுக் கருவூரின் நிலைமை பிற்காலத்தே மாறலாயிற்று. சங்ககாலத்துக்குப் பின்னர் அஃதாவது 7-ஆம் நூற்றாண்டுமுதலாக, ஆற்றல்மிக்கிருந்த பாண்டியராற் கொங்கு பலமுறை படையெடுக்கப்படவும், அதன்கணுள்ள தலைநகர் சிலசமயங்களில் அவ்வரசர் கைவசப்படவும் நேர்ந்தன.[2] அக்காலமுதற்றான் சேரவேந்தர்

---

1. களவழி நாற்பது, 14, 39.

2. 7-ஆம் நூற்றாண்டிலே சம்பந்தமூர்த்திகளால் திருத்திப் பணிகொள்ளப் பெற்ற நெடுமாறன், கொங்குநாட்டிற் சேரனுடன் பலபோர்கள் நடத்தி அதன் பகுதியைக் கைப்பற்றியவன் என்பது இறையனார் களவியலுரை, வேள்விகுடிச் சாஸனங்களால் அறியப்படும். இவ்வாறே, அப்பாண்டியன் மகன் கோச்சடையனைக் 'கொங்கர் கோமான்' என்றும், அவன் மகன் மாறவர்மனை 'வஞ்சி மதில் புதுக்கியவன்' என்றும், அவன் மகன் நெடுஞ்சடையனைக் 'கொங்கபூமி யடிப்படுத்தவன்' என்றும் வேள்விகுடி சீவரமங்கலச் செப்பேடுகள் கூறுதலும், சேரர், பல்லவருதவியால் தம்தலைநகரான கருவூரை ஒருகால் மீட்கமுயன்ற செய்தியை—'உலகுடை மன்னவன் தென்னவனைக் கன்னிமாமதில் சூழ் கருவூர் வெருவ...வென்றான்' என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுதலும் கண்டுகொள்க.

தம் பழைய தலைநகரையே முற்றும் நம்பியிராமல், மேல் கடற்பக்கத்துள்ள மகோதை என்ற கொடுங்கோளூரினுந் தங்கி ஆட்சிபுரிந்தவராதல் வேண்டும். இக்கடற்கரையூர் மேற்றேயத்து யவனமரக்கலங்கள் மிளகுமுதலிய பண்டங் களை ஏற்றி வியாபாரஞ்செய்துவந்த பழந்துறைமுகமும், சுள்ளி என்ற நதிப்பக்கத்ததுமான முசிறிரின் ஸ்தானத்தில் தோன்றிய பட்டினமாகும். சோழர்க்குக் காவிரிப்பூம் பட்டினமும் பாண்டியர்க்குக் கொற்கையும்போலச் சேரர்க் குக் கருவூரை அடுத்த பேரூர் இதுவேயெனலாம். கொடுங் கோளூரைக் கருவூரென்றேனும், கருவூரைக் கடற்கரைப் பட்டினமென்றேனும் முன்னோரும் பின்னோரும் யாண்டும் வழங்கக் காணாமையின், கருவூராகிய வஞ்சி சேரரது உண் ணாட்டுத் தலைநகரென்பதும், மகோதையாகிய கொடுங் கோளூர் அவரது துறைமுகநகரம் என்பதுமே தெளிவா மென்க. பாண்டிய சோழரது ஆதிக்கம் பெருகிநின்ற பிற் காலத்தே, முற்கூறியவாறு கொங்குநாடுங் கருவூரும் சேர ரால் முற்றும் கைவிடப்படவே, கடன்மலைநாடான மலை யாளமே கேரளபூமியாகவும், அதன் துறைமுகமான இக் கொடுங்கோளூரே சேரரது தனித்தலைநகராகவும் ஆயின. அன்றியும் ஆதித் தலைநகர்க்கு வழங்கிய வஞ்சியென்ற சிறப்புப் பெயர், இப்பட்டினத்துக்கும் பிற்பட வழங்கியது.[1] இங்ஙனம் முற்றும் மாறிநின்ற காலத்திலன்றிக் கருவூ ருங் கொடுங்கோளூருமாகிய இரண்டு தலைநகரங்களையுங் கொண்டு சேரவேந்தர் ஆண்டுவந்த கால விசேடமே நம் குலசேகரர்க்கு உரியதெனலாம். மேற்கூறியவாறு 8-ஆம் நூற்றாண்டினரென்று தெளியப்பட்ட இவ்வாழ்வார் கடன் மலைநாடான மலையாளப்பிரதேச மொன்றனையே ஆண்டுவந்த கேரளவேந்தராயின் தமக்கு அந்நாட்டுத் தொடர்புண்மை யைத் தவறாது குறிப்பித்தற்கு உரியரன்றோ? அங்ஙனம்

1. சேரமான்பெருமாணாயனார் புராணத்திற் கொடுங்கோ ளூரை வஞ்சியென்று சேக்கிழார் குறித்துள்ளமையும், அதுபற்றி அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரப் பதிகவுரையுள் இக்கொடுங் கோளூரையே வஞ்சியாக அறுதியிட்டதுங் கண்டுகொள்க.

ஒரு குறிப்பும் அவர்வாக்கில் இல்லாமையோடு, "கொங்கர் கோன்" "கொல்லிநகர்க் கிறை" என்றே அவர் தம்மைக் கூறிக் கொள்ளுதலின், கொங்கு நாட்டை உட்கொண்ட பழைய சேரமண்டல முழுமைக்கும் அவர் தனியரசரா யிருந்தவர் என்பதும், அக் கொங்குநாட்டுக் கொல்லிமலைப் பக்கத்தே தம் தலைநகரை உடையராயிருந்தவர் என்பதும் நன்குபெறப்படக்கூடியன.

ஆழ்வார் கூறும் கொல்லிநகர் என்பது பழைய தலை நகரான கருவூர் என்றே கொள்ளல் கூடும்; கொல்லிமலை யைத் தன் பக்கத்துக்கொண்ட நகரைக் கொல்லிநகர் எனல் ஏற்புடைத்தாதல் காண்க. கொல்லிமலைக்குங் கருவூர்க்கும் நெருங்கிய தொடர்புண்மையை—

"குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்" (புறப். வெண். 10,1)

"கொல்லிப், பொருவாய்மலரொடு பசும்பிடி மகிழ்ந்து...
ஒடுங்கீ ரோதி யொண்ணுத லணிகொள...
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்" (பதிற்றுப். 81)

என்ற முன்னோர் கூற்றுக்களால் உய்த்தறியலாகும்[1]. இஃ தன்றேல் கொல்லிமலையைச் சார்ந்து அரணவலி பெற்றி ருந்த ஊரொன்றே குலசேகரரது தலைநகரெனல் வேண்டும். கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாடு கொல்லிக் கூற்றம் என முன்னோரால் வழங்கப்பெற்றுளது. இக் கூற்றத்தில் தம் தாயாதியரான அதிகமான்கட்கு உரியவா யிருந்த [2]மலையரண்களைச் சேரர் ஒருகாற் கைப்பற்றியவர்

1. 'வஞ்சிமாநகர்' என்ற, நூலுள், 143-5-பக்கங்களிலே இத் தொடர்களின் உள்ளீடான கருத்துக்களை மகாவித்வான் ஐயங்கா ரவர்கள் நன்கு விளக்கியிருத்தல் காண்க.

2. "அதிகனவ னணித்தாக, ஓங்கெயில்சூழ் மலையரணத் துள்ளுறைவான்" (பெரியபு. புகழ்ச்சோழ. 17) என, கருவூர்க்கு அணித்தாகக் கடிய மலையரண் பெற்றிருந்த கொல்லிமலையின் இயல்பைச் சேக்கிழார்குறிப்பிடுதலுங் காண்க.

என்பது சங்கச் செய்யுட்களால்[1] நன்கறியப்படுதலின், ஆழ்வார்க்குரிய கொல்லிநகரும் அவற்றுள் ஒன்றாகக் கொள்ளத் தரும். 'கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக் கோன்' என்று இவ்வாழ்வாரே பாடுதலின், தம் தலைநகர் 'கொல்லி' என்னும் பெயர்பெற்றிருந்தமை வெளியாம். குறுந்தொகையின் 34-ஆம் செய்யுள் பாடியவர் **கொல்லிக் கண்ணன்** என்ற பெயர்பெற்ற புலவராவர். இப்பெயரினின்று கொல்லியென்ற ஊரொன்று பழைமையாகவே உண்டென்பது தெரியவருதலின், குலசேகராழ்வார் காலத்தில் சேரராஜதானியாக இக்கொல்லி அல்லது கொல்லிநகர், அப்பெயர் பெற்ற மலையிடை அமைந்திருத்தல் கூடியதேயாம். கொல்லிமலையின் உள்ளிடமான ஊர்கள் பிறர் எளிதிற் செல்லக்கூடாத அரணுடையன என்பது இக்காலத்தவரும் நன்கறிவர். இத்தகைய மலையரணுள்ள ஊரொன்று பிற்பட்ட சேரவேந்தரால் தம் தலைநகராகக் கொள்ளப்பட்டதற்கு, குலசேகரர்காலத்தோ அவர் முன்னோர்காலத்தோ பாண்டியர் போன்றவரது படையெடுப்புக்களாற் கருவூர் பலமுறை தாக்கப்பெற்றுக் கைவசப்படுத்தப்பட்டதே காரணமாக வேண்டும்.[2]

ஒருசிலர் ஆழ்வார் தலைநகரான இக்கொல்லிநகர் மேலைக்கடற்கரையிலுள்ள கொல்லம் என்று கருதுவர். அக் கொல்லம் பழைய சேரராஜதானியாக இருந்தது என்பதற்

1. இங்ஙனம் கைப்பற்றிய சேரன், தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறை என்பான்; "கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப், பல்வேற்றுனை யதிகமானொ, டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று" என இவனைப்பற்றிக் கூறப்படுதல் காண்க (பதிற்றுப். 8-ம் பத்துப் பதிகம்). தகடூர் யாத்திரை என்ற பழைய நூலும் இச்சேரன்போரைச் சிறப்பிப்பதாகும்.

2. சங்ககாளினும் பகையரசராற் கருவூர் தாக்கப்பட அதனாற் சேரர் தம் தலைநகரைக் கடற்கரைப்பக்கத்து மாற்றியதுண்டு. ஆய் அண்டிரன் 'கொங்கரைக் குடகடலோட்டியவன்' என்று புறநானூறு (130) குறிப்பிடுதல் காண்க (கொங்கர்-சேரர்).

கும், அதற்குக் கொல்லி என்ற பெயர்வழக்குண்டு என்பதற்கும் யாதோராதாரமும் இன்மையால் அவர் கொள்கை போலியே என்க. 'குரக்கேணிக் கொல்லம்' என முன்பு வழங்கப்பெற்ற அந்நகரம், இப்போது 'ஸிரியன்—கிறிஸ்தவர்' எனப்படுவோரின் ஆதி முன்னோரான வியாபாரியொருவரால் 825-ம் ஆண்டில் உண்டாக்கப்பட்டு அவர்க்குரிமையாகக் கேரளாதிபதியால் நீரோட்டிக் கொடுக்கப் பெற்றதென்பதும், அந்நகரந் தோன்றிய காலந்தொட்டு வழங்குவதே கொல்லமாண்டு என்பதும்—

"இந்நகரங் கண்டு[1] நீரேற்ற மருவான் சபீர் ஈசோ"

... (T. A. S. ii 80, 82,)

"கொல்லந் தோன்றி......(இன்ன) யாண்டு"

(Ibid. 44, 73,)

என வரும் சாஸனத் தொடர்களால் தெளிவாக அறியப்பட்டவை.[2] அதனால் பிற்பட்டுத் தோன்றிய கொல்லத்தை முற்பட்டவரான இவ்வாழ்வார்க்கு உரியதாக்குதல் அசங்கதமே என்க. எனவே, மேற்கூறியவாறு கருவூர் அல்லது கொல்லி என்ற நகர்க்கு அரசர் என்பதே 'கொல்லி நகர்க்கிறை' என்பதற்குப் பொருளாதல் கண்டுகொள்க.

இவ்வாறு இவ்வாழ்வார் உண்ணாட்டுத் தலைநகரில் இருந்து ஆட்சிநடத்தியவரே யாயினும், இவர் மரபினரான யுவராசர்களும் பிரதிநிதிகளும் கொடுங்கோளூரில் வாழ்ந்து சேரநாட்டின் பகுதியை ஆண்டுவந்திருத்தல் கூடியதேயாம். உறையூர்ச் சோழர்குலத்தோர் புகாரையும், மதுரைப் பாண்டியர்மரபினர் கொற்கையையும் இராஜஸ்தலங்களாகக்கொண்டு இவ்வாறே ஆட்சிபுரிந்துவந்தமையும் ஒப்பிடத்தக்கது. இவற்றால், கொடுங்கோளூர்க்கு மிகவணித்தா

---

1. இந்நகரங் கண்டு என்பதற்கு, இந்நகரத்தை உண்டாக்கி என்பது பொருள்; 'திருநகரங் கண்ட படலம்' என்ப (பரஞ். திருவிளையாடல்).

2. T. A. S. Vol. ii 72-3.

யுள்ள திருவஞ்சைக்களத்தில் வாழ்ந்துவந்த சேரமான் பெருமாள், குலசேகரர் அரசுதுறந்தபின் பட்டம்பெற்றுத் தமக்கு விருப்பமுள்ள கொடுங்கோளூரையே தலைநகராகக் கொண்டு கொங்குநாடு உட்பட்ட சேரமண்டலமுழுமையும் ஆண்டுவந்தனர் என்று கொள்வதே மிகவும் பொருத்தமாகின்றது. 10-ஆம் நூற்றாண்டினனாகத் தெரியும் வீரநாராயண வீரகேரளன் என்ற சேரன்காலத்தும் கொங்குநாட்டின் பகுதி சேரவேந்தர்க்கு உரியதாயிருந்த செய்தி சாஸனத்தால் அறியப்படுதலின்[1] குலசேகராழ்வார் சேரமான் பெருமாளுமனுர் காலங்களில் அவ்வுரிமையாட்சி அவர்க்கிருந்ததென்பதில் ஐயமில்லை என்க.

"ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர்கொங்கு வைகாவூர்நன் ஞடதில்
ஆவி நன்குடி வாழ்வான
தேவர்கள் பெருமாளே" (திருப்புகழ்)

எனச் சேரமான்பெருமாளுக்கு உரிமையுடையனவாகவே கொங்கின் பிரிவான வைகாவூர்நாட்டையும் ஆவிநன்குடியையும் அருணகிரிநாதர் பாடுதலும் இங்கறியத்தக்கது. இதனுல் 15-ஆம் நூற்றாண்டுவரை சேரதேசமாகவே கொங்கு நாடு கருதப்பட்டுவந்தமை தெளிவாதல் காண்க.

கொல்லிநகர்க்கிறையான நம் குலசேகரப்பெருமாள் கடன்மலைநாடான மலையாளதேசத்துக்கும் அரசராயினும், அந்நாட்டுப்பரிசயம் மிகுதியும் உடையவரல்லர்போலவே தோற்றுகின்றுர். பரிசயமுள்ளவராயின், அந்நாட்டுத் திருமால் திருப்பதிகளையெல்லாம் விடாது பாடவேண்டியவரன்றோ? அங்ஙனம் பாடாததோடு, திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லைத்திருச்சித்திரகூடம் போன்ற சோணுட்டுத் தலங்களையே இவர் அபிமானித்திருத்தலின், கீழ்நாடே இவரது பழக்கத்துக்குப் பெரிதும் உரியதாயிருந்ததென்றும் தோற்றுகின்றது. வித்துவக்கோடு என்ற பெயருடன்

1. Ep. Rep. 706 of 1905.

மலைநாட்டில் இன்றும் உள்ள திருப்பதி குலசேகராழ்வாராற் பாடப்பெற்றுள்ளதே எனிற் கூறுவேன். ஆழ்வார் பாடிய வித்துவக்கோடு மலைநாட்டதே யாயின், தென் பாண்டிநாட்டவராய் அம்மலையாளத் திருப்பதிகளை யெல்லாம் விடாதுபாடிய நம்மாழ்வார் இவ்வித்துவக்கோட்டை மட்டும் அடியோடு மறந்து சென்றதற்கும், வித்துவக் கோட்டைப் பாடிய இவ்வாழ்வார் மற்ற மலையாளத் திருப்பதிகளை முற்றும் மறந்ததற்கும் காரண மென்னை? மலைநாட்டை அடுத்திருந்தவரால் அறிந்தபிமானிக்கப்பெற்ற அதன் பழந்திருப்பதிகள் அந்நாடாண்ட அடியாரான அரசரால் அபிமானிக்கப்படாமற் போனது வியப்புக்கு உரியதேயன்றோ? ஆகவே, குலசேகராழ்வார்க்குப் பரிசயமுள்ளதும் நம்மாழ்வார்க்குப் பரிசயமில்லாததுமான பிரதேசத்துள்ளதே, பெருமாள் திருமொழியிற் பாடப்பெற்ற வித்துவக்கோடு—என்று கொண்டாலன்றி மேற்கூறிய கேள்விக்கு ஏற்ற சமாதானங்காண்டல் அரிதாகும்.

இனி, வித்துவக்கோடு எனப் பெயரிய திருப்பதி, குலசேகரர்க்குரிய கொல்லிநகர்ப்பக்கத்தினும் ஒன்று உள்ளதாகத் தெரியவருமாயின், அதுவே அப்பெரியாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது என்று எளிதிற் கருதக்கூடியதன்றோ? மகாவித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்கார் ஸ்வாமி என்னிடம் இதுபற்றிக் கூறிய அரிய செய்தி யொன்று ஈண்டு யான் வெளியிடற்குரியது. அஃதாவது—"சேரரது பழந்தலைநகரான கருவூரிலே ஆன்பொருநை நதிக்கரையில் திருமால் திருக்கோயில்கொண்டுள்ள பகுதிக்கு வித்துவக்கோடு என்ற பெயர்வழக்குண்டு என்பது. அக்கோயிலைச் சூழப் பிராமணர்வாழுந் தெருக்களை **வித்துவக்கோட் டக் கிரகாரம்** என்று அப்பக்கத்தார் இன்றும் வழங்கி வருவதால் விளக்கமாகின்றது" என்பதேயாம். ஆகவே, தம் பழைய தலைநகரிற் கோயில்கொண்ட திருமாலே, குலசேகரப்பெருமாளால் மிகவுருக்கமும் இனிமையும் பெருகப் பாடப்பெற்ற மூர்த்தி என்பது வெள்ளிடைமலையாகும் என்க. கருவூரின் இப்பகுதி வித்துவக்கோடு எனப் பெயர்

பெற்றதற்குப் பொருத்தமுமுண்டு. வஞ்சியாகிய இப்பெருநகரின் எயிற்புறவிருக்கையில் தேவாலயங்களும் பௌத்த சைனப் பள்ளிகளும் கல்வியறி வொழுக்கங்கள் நிரம்பிய அறிஞர்வா ழிடங்களும் முற்காலத்தே விளங்கியிருந்தன என்பது, மணிமேகலை—வஞ்சிமாநகர்புக்க காதையால் தெரியலாம். பிக்குணியான மணிமேகலை, சமயக்கணக்கர் பலரை நேரிற்கண்டு அவ்வவர் கொள்கைகளை உசாவியறிந்த கருவூர்ப் பகுதி இதுவேயாம். திருமால்கோயிலை யுடைய இவ் வித்துவக்கோடும், தேவாலயங்க ளுடையதாக மணிமேகலை குறித்த அவ்வெயிற்புறவிருக்கைகளில் ஒன்றென்னத் தடையில்லை. வித்துவக்கோடு என்பதற்கு, "வித்துவான்கள் வாழும் நீர்க்கரை" என்பது பொருள்; [கோடு[1]—நீர்க்கரை]. கடற்கரையிலுள்ள முசிரியை (=கொடுங்கோளூரை) 'முயிரிக்கோடு' என்று சாஸனம் வழங்குதலுங் காண்க.[2]

"தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கை" (72-6)

எனச் சாத்தனார் இவ் எயிற்புறவிருக்கையைச் சிறப்பித்தலினின்று, வஞ்சியில் தேவகுலங்களுடன் அறிஞர்க்கெல்லாம் வாழ்விடமாக விளங்கியது இப்பகுதியே என்றும், அதுபற்றியே இது வித்துவக்கோடு என்னும் பெயர்பெறலாயிற்று என்றும் கருதற்குரியன. "விண்டோய் மதில்புடை சூழ் வித்துவக்கோடு" என்று குலசேகரப்பெருமாள் அருளிய தொடராலும் வஞ்சியின் எயிற்புறவிருக்கையில் உள்ளதே அத்தலமென்பது புலனும். இங்கே கோயில்கொண்

1. "குளவளாக், கோடின்றி நீர்நிறைந் தற்று" என்பது குறள் (553); 'குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற் போலும்' என்பது இதன் பொருள்.

2. Inscriptions of the Madras Presidency, p. 1691.

டருளுந் திருமாலே 'ஆடக மாடத் தரவணைத் துயின்றோன்' என இளங்கோவடிகளாற் சிறப்பிக்கப்பெற்ற பழைய மூர்த்தியாவர். இதனைச் 'சேரன்-செங்குட்டுவன்' சரித்திரத்துள் 'வஞ்சிமாநகர்' என்ற பகுதியில் நன்கு விளக்கியுள்ளேன். குலசேகராழ்வார் அருளிய வித்துவக்கோட்டுப் பதிகத்தை ஊன்றிநோக்குமிடத்து, அத்தலத் தெம்பெருமானை ஒருநாளேனும் பிரிந்து தரியாதவர் இப்பெரியார் என்பது நன்கு விளங்கக்கூடியது.

"தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தா லீன்றதாய் யகற்றிடினு மற்றவடன்
அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே"
"வித்துவக்கோட் டம்மானீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலேன்"

என்றும், 'நீ கொண்டாளா யாகிலும்' 'மீளாத் துயர்தரினும்' 'வெந்துயர் வீட்டாவிடினும்' என்றும் இவ்வாறே இவ்வாழ்வார் கூறுவனவற்றால், ஏதோ ஓர் இடையீடு உண்டாக அதனால் தம் நித்தியவழிபாட்டுக்குரிய அவ்வெம்பெருமானைப் பிரியநேரவே, அதனை ஆற்றாது புலம்பியுருகுகின்றார் இவர் என்றே தோற்றுகின்றது. அவ்விடையூறு தம் பழம் பகைவரான பாண்டியரது படையெடுப்புக்களால் ஒருகால் கருவூர்க்கு நேர்ந்திருத்தல் கூடும். கொங்குநாடு பாண்டியர் கைவசப்பட்டிருந்த செய்திபற்றி முன்பு பல விடங்களினுங் குறிப்பிட்டுள்ளேன். ஆழ்வாரது துயரநிலைக்குக் காரணம் எதுவாயினும், வித்துவக்கோட்டுப் பாசுரங்களினின்றும் இவர் நாளுந்தவறாது வழிபட்டு வந்த மூர்த்தி அத்தலத்தெம்பெருமானே என்னத் தடை யில்லையாம். ஆகவே, கொங்கு நாட்டில் இவர் தலைநகர்ப்பக்கத்து விளங்கியதே அத்தலம் என்பது ஐயமின்றிப் பெறப்படுதல் காண்க. இதுபற்றிப் போலும் "கொங்குங் குடந்தையும்... எங்குந்திரிந்து விளையாடு மென்மகன்" என்று பெரியாழ்வார்—கொங்குநாடும் திருமால் திருப்பதிகளுடைய

தேயெனக்குறிப்பிட்டருளியதூஉ மென்க. இவற்றால், கொல்லிகாவலரான இப்பெரியார் பாடிய வித்துவக்கோடு அப் பெயருடன் இப்போதுள்ள மலையாளத்தூர் அன் றென்பதே முடிவாகின்றது. அதனால் அம்மலையாளத்தூர், சேரவேந்தர் தம் பழைய தலைநகரான கருவூர்வஞ்சியைக் கைவிட்டுக் கொடுங்கோளூரை அவ்வஞ்சிநிலையிற் கொண்டு ஆட்சிபுரிய நேர்ந்த பிற்காலத்தே, அப்பழைய தலைநகர்த் திருமாலையும் தாம் ஆளும்பிரதேசத்தே புதியதாகப் பிர திஷ்டித்து, வித்துவக்கோடு என்ற பழம்பெயரை அதற்கு வழங்கி அபிமானித்துவந்த தலமாகவே கருதத்தகும் என்க.

இவ்வாழ்வார் அவதரித்தருளிய நகரம், மேலைக் கடற் கரையிலுள்ள **கோழிக்கூடு** [1] என்று திவ்வியசூரி சரிதமும், **கோல்லிநகர்** என்று பின்பழகியசீயர் குருபரம்பரையும், **வஞ்சிக்களம்** என்று வேறு பெரியார்பாடல்களுங் [2] கூறு கின்றன. திவ்யசூரிசரிதங் கூறும் கோழிக்கூடு என்பது மட்டும் வேறுபாடுடையதாகத் தோன்றினும், கொல்லி நகரமும் வஞ்சிக்களமும் ஒன்றாகவே கூறவியலும். வஞ்சி யாகிய தானம் என்றும், கொல்லிமலைப் பக்கத்து நகர் என் றும் உறுப்புப் பொருள்களாய்க் கருவூர்க்குங் கொல்லிக்கும் அவ்விரண்டு பெயர்களும் ஏற்புடையவாதல் காண்க. வஞ் சிக்களம் என்பதை அஞ்சைக்களம் எனத் தேவாரப்பாடல் பெயர்களும் பெற்ற சிவதலத்துடன் சிலர் இயைபுபடுத்தல் பொருத்தமற்ற தென்க. இனி இவ்வாழ்வார் தம்மை—

"கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்" (3, 10)

---

1. ,குக்குட கூடஸம்' என்பது அந்நூல் கூறும் வட மொழிப் பெயர்.

2. "பொன்புரையும் வேற்குலசே கரனே மாசிப், புனர் பூசத் தெழில்வஞ்சிக் களத்திற் றோன்றி" என ஸ்ரீமத்-வேதாந்த தேசிகனும் (தேசிகப் பிரபந்தம்), "எண்டிசையும், ஏத்துங் குலசே கரனூ ரெனவுரைப்பர், வாய்த்ததிரு வஞ்சிக் களம்" என ஸ்ரீ வர வர முனிகளும் (உபதேச ரத்தினமாலை) அருளிச்செய்தல் காண்க.

"கொல்லி நகர்க்கிறை கூடற்கோன்
குலசேகரன்" (6, 10)
"கோழியர்கோன் கொடைக் குலசேகரன் (9, 11; 10, 11)

எனக் கூறிக்கொள்ளுதல் காணலாம். இதனால், கூடல் (மதுரை), கோழி (உறையூர்) வேந்தர்களுடன் தொடர்புடையவர் இச்சேரர்பெருந்தகை என்பது பெறப்படும். சேரமன்னர், சோழபாண்டியர் நாடுகளையும் தம்முடையனவாகக் கூறிக்கொள்வதுண்டு என்பது சங்கநூல்களால்[1] அறியப்படுதலின், இவ்வாழ்வாரும் அம்முறையில் தம்மைப் புனைந்து கூறிக்கொண்டவர் போலும்—என்று கருதுவாரு முண்டு. இவ்வாறு ஆழ்வார் கூற்றுப் புனைந்துரைகளே என்பதற்குத் தக்ககாரணம் ஒன்றும் அவர் கூறாமையால் அக்கருத்து ஏற்கத்தக்கதன்றாம். அதனால், ஏதோ சோழபாண்டியர்தொடர்பு தமக்கு உண்மைபற்றியே ஆழ்வார் கூடல்நாயகன் கோழியர்கோன் என்று தம்மைக் கூறலாயினர் என்றே தோற்றுகின்றது. ஆயின் அத்தொடர்பு யாது—என்பது இனி ஆராய்தற்குரியதாம்.

கொங்குநாடாண்ட சேரவரசர்வரலாறுகளில் ஒருசில இப்போது நமக்குத் தெரியவருகின்றன. கோயம்புத்தூர் சேலம் பிரதேசங்களினும் பிறவிடங்களினும் 10-ம் நூற்றாண்டுமுதற் காணப்படும் இச் சேரர்சாஸனங்களால், இவருட் சிலர் 'சோழன்' என்றும், சிலர் 'பாண்டியன்' என்றும் சிறப்புப்பெயருடையராயிருந்தனர் என்பது தெரியலாம். வீரசோழன்[2] என்பான் முதற்பராந்தக சோழன்

1. "புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை...கொல்லிபொருந" என்பது அவர் காட்டிய மேற்கோள் (பதிற்றுப். 73).

2. இவன் முன்னோருள் மணிகுட்டுவன் என்பவனொருவன் நாமக்கல் சாஸனத்திற் காணப்படுதல், சேரன்-செங்குட்டுவனை நினைப்பூட்டுகின்றது. (Ep. Rep. No. 29 of 1906; Ind. Ant. Vol. ix, pp. 47—50).

3. சேலம் ஜில்லா வெள்ளாற்றுச் சாஸனம் (Ep. Rep. 657 of 1905).

காலத்தே அவன் கீழ்ப்பட்டிருந்த சேரவேந்தனுவன். இவ்வாறே வீரபாண்டியதேவன் என்ற கேரளவரசன் 'பாண்டியன்' என்ற பட்டப் பெயரோடு இராசகேசரிவர்மன்[1] என்ற சோழர்க்குரிய சிறப்புப்பெயரையுந் தரித்திருந்தான். இவற்றினின்று, கொங்கரசர், சோழ பாண்டிய மரபுகளோடு தொடர்புடையராயிருந்தவர் என்பது பெறப்படுகின்றது. இதற்கேற்ப, முதலாம் ஆதித்தன் காலத்தவனுன கோக்கண்டன் இரவி, வீரநாராயணன் என்ற சேரர் தம்மைச் சந்திராதித்த குலத்தவர்[2] என்று கூறிக்கொள்ளுதல் குறிப்பிடற் பாலது. இதற்குப் பாண்டியரது சந்திரவமிசமும் சோழரது சூரியவமிசமும் ஆகிய இருபெரு மரபினையுஞ் சார்ந்தவர் என்பது பொருளாகும். ஆகவே, கொங்குநாடாண்ட சேரர், பாண்டியசோழ மரபினரென்பதே தெளிவாதல் காண்க. இச் சந்திராதித்தகுலம் மருமக்கட்டாயமுறையில் கேரளப்பெண்களை மணந்து வந்த தந்தையர்வழியாக இச்சேரர்க்கு வந்ததாகவேண்டும். அன்றேல், பாண்டியசோழ வமிசங்களினின்று சேரர் ஓரோர் காலத்தே தெரிந்தெடுக்கப்பட்ட செய்தி கேரளவரலாறுகளால் அறியப்படுதலின், அம்முறையில் இம்மரபு அமைந்ததாயினும் ஆம். எவ்வகையினும், 'கூடல் நாயகன், கோழிக்கோன்' என்று ஆழ்வார் கூறுகின்றவை, பாண்டியசோழ நாடாட்சியில் தமக்கிருந்த தலைமைபற்றியன என்பதினும் அவ்விருவர்மரபுடனும் தம் குலத்தவர்க்கிருந்த தொடர்புபற்றியன என்று கொள்ளுதலே பெரிதும் பொருத்தமெனலாம்.[3] சளுக்கியவமிசத்தவனுப்ச் சோழகுலத்துப் பக்க

1. 1. Ep. Rep. 544, 546.

2. கோயம்புத்தூர்ஜில்லா, வெள்ளலூர்ச் சாஸனம (Ep. Rep. 147 of 1910; Ep. Ind. iii, pp. 79—82).

3. "எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே" (பெருமாள் திரு. 8.3) என்று இவ்வாழ்வார அருளியதனுள், 'எங்கள்குலம்' என்பதற்குப் பொதுவாக க்ஷத்ரியவருணம் என்று பொருள் கூறப்படுமாயினும், சிறப்பாகச் சூரியவமிசம் என்று பொருள்கோடலும் இயைபாதல் காண்க.

முதற் குலோத்துங்கன் அவ்விருமரபினர்க்கும் ஒரேபுதல்வனாயிருந்தமையால் அவன் தந்தைவகையார் சந்திரகுலத்தவனாகவும், தாய்வகையர் சூரியகுலத்தவனாகவும் அவனைப் பாராட்டலாயினர் என்பது—

" திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றும்
செய்யபரி திக்குழவி யையனிவ னென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே "

எனச் செயங்கொண்டார் [1] பரணியில் அழகுபெறப் பாடுதலால் அறியலாம். அத்தகைய நிலைமையே குலசேகரரும் கொண்டனராதல் வேண்டும். இனி, 9-ஆம் நூற்றாண்டில் ஆதித்த சோழனுக்கு நட்பினனாயிருந்தவனும், கொங்கு நாடுட்படச் சேரமண்டலத்தை ஆட்சிபுரிந்தவனுமான கோக்கண்டன் இரவி என்ற சேரவேந்தனையும் சந்திராதித்த குலத்தவனென்று சாஸனங் கூறுதலின், அவனுக்கு ஒன்றரை நூற்றாண்டுகட்குமுன் சோழபாண்டியத் தொடர்புடையராயும், கொங்கர்கோனுமாயிருந்த நம் குலசேகரப்பெருமாளை, அவன் முன்னோருள் ஒருவராகவே கொள்வது பெரிதும் ஏற்புடைத்தாதல் கண்டுகொள்க.

இனி, குலசேகராழ்வார், வடமொழியில் சுலோகரூபமாயமைந்த முகுந்தமாலை என்ற துதிநூலையும் இயற்றியவர் என்று கூறப்படுகிறது. அந்நூல் இறுதிச்சுலோகத்தின் முற்பகுதி, தமிழ்நாட்டார் பாடப்படி, அடியில் வருமாறு:—

" யஸ்ய ப்ரியௌ ச்ருதிதரௌ கவிலோக வீரௌ
மித்ரே த்விஜன்மவர பத்ம சராவ பூதாம் [2] "

---

1. கலிங்கத்துப்பரணி, அவதாரம், 7.

2. " யாவரொருவர்(குலசேகரர்)க்கு வேதவித்துக்களாயும், கவிகளுக்குள் தலைவராயும், பிராமண சிரேஷ்டர்களாயும் உள்ள பத்மன், சரன் என்னும் இருவர் அன்பார்ந்த நண்பினராயிருந்தனரோ " என்பது இதன் பொருள்.

இதனால், பத்மன், சரன் என்ற அந்தணக் கவிசிரேஷ்டர் இருவர் குலசேகரர்க்கு அன்புமிக்க நண்பினராக இருந்தவர் என்பது புலப்படும். இனி, மலையாளநாட்டிலுள்ள அச்சுப்பிரதிகளில் "மித்ரே த்விஜன்மவர சிவாவபூதாம்" என்று பாடங் காணப்படுகின்றதென்றும், ஆனால் அந்நாட்டிலே உரையுடனுள்ள முகுந்தமாலைப் பிரதிகளில்—

"யஸ்ய ப்ரியௌ ச்ருதிதரௌ ரவிலோக வீரௌ
மித்ரே த்விஜன்மவர பாரசவாவபூதாம்"

என்ற பாடமும், (நம்பூரிப்) பிராமணரான ரவி என்பாரும் (வாரியப்) பாரசவரான லோகவீரன் என்பாருமாகிய வித்வான்கள் இருவர் குலசேகரர்க்குப் பெரு நண்பினரானவர் என்ற கருத்தமைந்த பொருளுங் காணப்படுகின்றன என்றும், குலசேகரர் என்ற கேரளவேந்தரை 'யுதிஷ்டிர விஜயம்' என்ற தம் நூன்முகப்பிற் புகழும் வாசுதேவர் என்ற கவி தம்மை 'ரவிபூ' என்று—தாமியற்றிய 'திரிபுரதகனம்' என்ற வேறு நூலில்—கூறுவதனாலும், 'ரவிபூ' என்பதற்கு ரவிபுத்திரரான வாசுதேவர் என்று—அத்திரிபுரதகன உரையாசிரியரும் 13-ம் நூற்றாண்டினருமான—நீலகண்டர் பொருள் குறித்திருப்பதனாலும், 'ரவி' என்பவர்க்குப் புத்திரரே வாசுதேவர் என்பது தெளிவாமென்றும், அதனால் அந்த ரவியே குலசேகரர் காலத்தவராய் அவரால் முகுந்தமாலையிற் கூறப்பட்டவராதல் வேண்டும் என்றும், ஆகவே குலசேகராழ்வார் காலம் அப்பெயர்பெற்ற கேரளவேந்தர் விளங்கிய 9-ஆம் நூற்றாண்டின் முற்பாதியேயாம் என்றும் திருவனந்தபுரஸம்ஸ்தானம் சிலாசாஸன அத்யக்ஷரான ஸ்ரீமாந் இராமநாத ஐயரவர்கள் கூறுகின்றார்கள்.[1] இவர்கள் ஆராய்ச்சி பெரிதும் அருமையுடையதே யாகும். ஆயினும் இதன் முடிவை ஒருதலையாகத் துணியக்கூடவில்லை. முகுந்தமாலைக்குத் தமிழ்நாட்டினும் வழக்குமிகுதியுண்டு. 'கவிலோகவீரௌ' என்பதும், 'பத்மசராவபூதாம்' என்பதுமே இங்கெல்லாம்

1. T. A. S. Vol. v, pp. 109—11.

வழங்கும் பாடங்கள். இதனால், மலையாளநாட்டிலுந் தமிழ் நாட்டிலும் வழங்கும் அவ்விருவகைப் பாடங்களுள் எது ஆழ்வார் காலத்தது என்பது தெளியப்படாத நிலையில் ஐயரவர்கள் கருத்து ஏற்கக்கூடியதன்று. ஒருகால் மலையாளப்பாடமே உண்மையுடையதாகக் கொள்ளினும், அதனால் முகுந்தமாலை இயற்றியவர் குலசேகரர் என்பது பெறப்படுமேயன்றிக் குலசேகராழ்வாரே அக்குலசேகரர் என்பது தெளிவாக வழியில்லை. ஆழ்வார் அருளியதே முகுந்தமாலை என்ற கொள்கையில் ஸம்ப்ரதாயஸ்தரான பெரியோர் பலர்க்கு ஐயப்பாடு பெரிதுமுண்டு. அன்னோர் ஐயுறுதற்குரிய காரணம் அடியில் வருமாறு :—முகுந்தமாலை ஆழ்வார் அருளிச்செயலாயின், பெருமாள் திருமொழியைப் பாடியதாகக் கூறும் பழையநூலான திவ்யசூரிசரிதம் அம்மாலையையுங் குறிப்பிடாமற்போகா தென்பது திண்ணம். குலசேகரர் நட்பினரைப்பற்றி முகுந்தமாலை கூறும் முக்கியமான செய்தியையும் அந்நூல் கூறியதில்லை. இவைபோயினும், திவ்யப்பிரபந்த முதலியவற்றின் வியாக்கியானங்களிலே கூரத்தாழ்வான் பட்டர் முதலிய பெரியோர் திருவாக்குக்கள் உதாரிக்[கப்படு]மாறு ஆளப்படுஞ் சிறப்பும், கோயில்முதலிய சந்நிதிகளிலே விசேஷ சமயங்களில் ஓதப்பெறும் பெருமையும் இம்முகுந்தமாலையும் [பெ]ற்றிருத்தல் வேண்டுமன்றோ? அவை யொன்றுமே இந்நூலுக்கு இல்லாமையால், சம்பிரதாய நூல்களுள்ளே அம்மாலை சேர்ந்ததன்று என்பதே முன்னோர் கருத்தாகத் தோன்றுகின்றது[1]' என்பதேயாம். ஆகவே, பண்டிதரும் திருமலடியாரும் குலசேகரர் என்ற பெயருடையாருமாய்ப் பிற்காலத்து விளங்கிய கேரளவேந்தரொருவரால் அருளிச் செய்யப்பட்டதே அம் முகுந்தமாலை என்பது பொருத்தமென்க. அவ்வேந்

1. காஞ்சீபுரத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கிரந்தங்களில் வல்லவராக விளங்கும் வித்வான் ஸ்ரீ: உ.ப. வே. அண்ணங்கராசாரியஸ்வாமி எழுதி வெளியிட்டுள்ள முகுந்தமாலைத் தமிழ் வியாக்யானபீடிகை பார்க்க.

தர்க்கு ஐயரவர்கள் குறித்த 9-ஆம் நூற்றாண்டு ஸ்ரீமந் நாத முனிகள் காலத்தோடு நெருங்கியதாதலால், குலசேகராழ்வார்க்கும் அதனையே கொள்ளுதல் ஆழ்வார் ஆசாரியர் என்று வேறுபடுத்தப்பட்டு வழங்கும் பிரபல வரலாறுகளோடு பெரிதும் மாறுபடுதலும் அறியத்தக்கது. இவற்றால் முகுந்தமாலை பாடிய குலசேகரர், குலசேகராழ்வார்க்குப் பின் அவர் வழித்தோன்றலான திருமாலடியார் எனக் கொள்வதே, மேலேகூறிப்போந்த ஆழ்வார் செய்திகளோடு பெரிதும் ஏற்புடையது என உணர்ந்துகொள்க.

குலசேகரப் பெருமாள் தம் திருமொழி 7—ஆம் பதிகத்தின் இறுதிப் பாசுரத்தே—

> " மல்லை மாநகர்க் கிறையவன் றன்னை
> வான்செ லுத்திவந் தீங்கணை மாயத்
> தெல்லையில் பிள்ளை செய்வன காணுத்
> தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் "

என்று அருளிச்செய்தனர். இவ்வடிகட்குக் காலஞ்சென்ற ஸ்ரீ கோபிநாதராயர் அவர்கள்—'குலசேகர பூபதியானவர் மல்லைமாநகர்(கடன்மல்லை)க்கு ராஜாவாகிற பல்லவனைப் போரிற்கொன்று விண்ணுடு புகவிட்டுப் போர்க்களத்தினின்றும் போந்து இங்குள்ள மாயத்தோடு கூடிய பிள்ளையாகிய கண்ணனைக் கண்டு' என்று பொருளும், இதனால் பல்லவமல்லன் மகனை நந்திவர்மனைக் குலசேகரர் போரிற் கொன்றவராதல் வேண்டும் என்ற கருத்துங் கொண்டு தம் ஸ்ரீவைஷ்ணவசரித்திரத்துள் எழுதியுள்ளார்.[1] இது பொருளாலும் சந்தர்ப்பத்தாலும் சிறிதும் பொருத்தமற்றதாகும். கண்ணபிரானைத் தன் திருவயிறு வாய்க்கப் பெற்றும், கஞ்சனுக்கு அஞ்சிக் கோகுலத்து ஒளித்து வளர்ந்த அப்பிரானது பாலசரிதைகளைக் கண்டு களிக்கும் பாக்கியம் பெறாத தேவகி, தன் திருக்குமரன் கம்ஸவதம் செய்துவிட்டுத் தன்னிடம் வரக்கண்டுருகி, அப்பெருமா

1. The History of Śrī-Vaisṇavas, p. 22.

னது இளமைச்செய்திகளை நினைந்து ஒவ்வொன்றாக எடுத்துக்கூறிப் புலம்பியதை ஆழ்வார் கொண்டுமொழிவனவற்றுள் இஃது இறுதிப் பாட்டாகும். இதற்கு—மல்லரையும் அவரையேவிய (மதுரை)மாநகர்க் கரசனை கஞ்சனையும் வீரசுவர்க்கம் அடையச்செய்துவிட்டு, தன்பால் வந்த கண்ணன் செயல்களைக் கண்டு தேவகி புலம்பியதை " என்பதே நேர்பொருளாகும். மேற்பாசுரங்களிற் கூறிப்போந்த தேவகி புலம்பல் இன்னது பற்றியது என்பதனை விளக்குவதற்காகவே ஆழ்வார் இவ்வாறு விசேடித்துக் கூறுகின்றார் என்பது நோக்குவார்க்கு எளிதின் விளங்கும். மல்லரையும் கஞ்சனையும் ஒரே சந்தர்ப்பத்தில் கண்ணன் கொன்ற செய்தியை—

" மல்லையட்டு...கஞ்சனுக்கு நஞ்சானானை " (பெ. தி. 2, 10, 7)
" மல்லடர்த்துக் கஞ்சனைக் காய்ந்தான் " (ஷை, 6, 7, 5)
" மல்லொடு கஞ்சனுந் துஞ்சவென்ற " (ஷை, 11, 2, 3)

என்று திருமங்கைமன்னனும் இவ்வாறே அருளிச்செய்தல் காண்க. 'பல்லவனைப் போரிற் கொன்று திரும்பிவந்து கண்ணனைக் கண்டு குலசேகரர் தேவகி புலம்பலைக் கூறினர்' என்பது இவ்வடிகளின் கருத்தாயின், அப் போர்ச்செயற்குப் பின் தேவகிபுலம்பலை ஆழ்வார் பாடுதற்குப் பொருத்த மேனும், அத்தேவகி புலம்பல் இன்னது பற்றியது என்பதேனும் பெறப்படாமையால், அவ்வுரை போலியே என்பது தெளிவு. மேற்பாசுரங்களிற் கூறப்பட்ட கண்ணன்செய்திகளின் தொடர்பாலும், இப்பாசுரத்தின்முதலில் 'மல்லை' என வருவதனாலும் 'மாநகர்' என்பது வடமதுரை என்பது நன்கு விளங்குதலின், மாநகர்க்கிறையவன் என்பான் கஞ்சனே என்பது பெறப்படத் தடையில்லையாம். இனி, 'வளம் பொருந்திய மாநகர்' என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானப்படியும் பொருள்கொள்ளுதல் பொருந்தும். மல்லை - வளம்; 'மல்லைமா முந்நீர்' என்றார் திருமங்கைமன்னனும்.[1]

1. பெரியதிருமொழி, 4, 3, 6; 8, 6, 4.

ஸ்ரீரங்கவரலாறு கூறும் "கோயிலொழுகு" என்ற சரித்திர நூலிலே இவ்வாழ்வார் வரலாறாகக் காணப்படுஞ் செய்தி அடியில் வருமாறு:— "கல்யப்தம் 50—வருஷத்துக்கு மேல், குலசேகரப் பெருமாள் சேர சோழ பாண்டிய மண்டலங்களுக்குப் பிரபுவாய், உறையூர் மதுரை கொல்லி நகர்களிலே திருமாளிகை கட்டி ராஜ்யபாரம் பண்ணுகிற நாளையிலே, நீளாம்சையான தம்முடைய புத்திரி சோழவல்லியை அழகிய மணவாளப்பெருமாளுக்குத் திருமணம் புணர்ப்பித்துத் தம்முடைய ஸ்வத்தையும் ஸ்திரீதனமாகப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, மூன்றாம் ஆவரணத்தின் தென்மேற்கிலே சேனை வென்றான் திருமண்டபமுங் கட்டி அந்தத் திருச்சுற்று ஜீர்ணோத்தாரணம் பண்ணுகையில், அந்தத் திருவீதிக்குக் "குலசேகரன் திருவீதி" என்று பெயராயிற்று"—என்பதே. இதனுள், தம் கன்னியை அரங்கமுடையானுக்கு அளித்த வரலாறு, திவ்யசூரிசரிதத்தும் கூறப்பட்டுள்ளமை அறியத்தக்கது. இங்ஙனம் திருமால்பத்தியின் மேலீட்டால் தம் அரசு துறந்து, எம்பெருமானிடம் உள்ளுருகி நூறு இன்றமிழ்ப்பாசுரங்களை உலகுய்யவருளிய இவ்வாழ்வார் தென்பாண்டிநாட்டிலே பிரமதேசம்-மன்னார் கோயிலிலே[1] தன்னடிச் சோதிக் கெழுந்தருளினார் என்று கூறுவர்.

64950

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

1. இவ்வூர், திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரந் தாலுகாவில் உள்ளது. குலசேகரப்பெருமாள் கோயில் ஒன்று இங்குண்டு.

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 13 | 32 | வஞ்சிமாகர் | வஞ்சிமாநகர் |
| 17 | 20 | இடைச்செருகளென் | இடைச்செருகலென் |
| 22 | 13 | 825 | 824 |
| 24 | 7 | 10-ம் | 11-ம் |
| 25 | 28 | கந்சியுட் | கச்சியுட் |
| 53 | 30 | சுந்தரமூர்த்திகள் | திருநாவுக்கரசர் |
| 55 | 30 | திருப்பல் | ௸ |
| 55 | 33 | ,, | ௸ |
| 60 | 15 | 830—867 | 730—767 |
| 63 | 5 | ஆஞ்ஞப்தி | ஆஞ்ஞப்தி |
| 77 | 6 | தனக்குரிய | தமக்குரிய |
| 95 | 27 | கச்சியை | தம்பதியை |
| 96 | 2. | அதூ துக்க | அது தூக்க |
| 97 | 14 | திருவலி | திருவாலி |
| 163 | 3 | பஹ்றவ்ருச்யம் | பஹ்றவ்ருசம் |
| 168 | 23 | என | எனத் |